# தப்பித்தே தீருவேன்

இந்திரா சௌந்தர்ராஜன்

திருமகள் நிலையம்
55, வெங்கட் நாராயணா சாலை,
தி.நகர், சென்னை-600 017.

முதற்பதிப்பு : மார்ச் 1997
உரிமை : ஆசிரியருக்கு

24180
4097938

THAPITHEY THEERUVEAN
By: INDIRA SOUNDARRAJAN
First Edition : March. 1997

Printed White Printing. 11.6 kg.
Binding Duplex Board

விலை : ரூ. 46-00

திருமகள் நிலையம்
55, வெங்கட் நாராயணா சாலை,
தி. நகர், சென்னை 600 017.
போன் : 4342899, Fax : 91-44-4341559

அச்சிட்டோர் :
ஸ்ரீ ராஜேஸ்வரி பிரிண்டிங் ஒர்க்ஸ்
12, கஜபதி தெரு, சென்னை-5.

OK

# பதிப்புரை

'தப்பித்தே திருவேன்'

'மண்ணில் மனிதர்கள்'

'ஜீவா என் ஜீவா'—இந்த மூன்றும் சந்திக்கும் திரிவேணி சங்கமமே இந்த நூல்.

படைப்பாளி இந்திரா சௌந்தர்ராஜன் ஒரு படைப்பாளியாக இல்லாமல் ஒரு போராளியாகவே மாறி இருக்கிறார். அவரது எழுதுகோல் ஏ.கே. 47 தான். அய்யமே இல்லை. ஏதோ ஒரு விடுதலைக்கு வித்திடுவதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

பக்கங்கள் ஒவ்வொன்றிலும் சூரிய ஒளி.

அவர், தமது எண்ணங்களைப் பதியம் போட்டு நடவு செய்திருக்கும் பாங்கிற்கு ஒரேயொரு பாராட்டுப் போதாது.

மாலை நேரத் தாமரைக் குளத்தில் பட்டு மேனி தழுவும் தென்றலைப் போன்ற சுகமான நடை.

அடுத்து என்ன... அடுத்து என்ன... என்று ஆர்வத்தைத் தூண்டும் அற்புத ஜாலம்! 'ஐயோ முடித்து விட்டாரே... இன்னும் கொஞ்சம் எழுதியிருக்கக் கூடாதா?' என்ற ஏக்கத்தைத் தரும் எழுத்து உத்தி!

இந்த மூன்றிலும் இந்திரா சௌந்தர்ராஜனை முழுமையாக முகர்கின்ற ஆனந்தம்!

எழுதுபவர்களிடம் ஏதேனும் ஒரு நோக்கம் இருக்க வேண்டும் அது, இவரிடம் நிரம்பவே இருக்கின்றது.

'தப்பித்தே தீருவேன்'—என்று தப்பிற்கு மேல் தப்புச் செய்து வரும் சம்பத்திற்கு அந்தத் தண்டனை வேண்டியது தான். ஆனால், சந்தர்ப்ப வசத்தால் அவனுக்குக் கழுத்தை நீட்டிய காயத்திரிக்குமா அப்படியொரு ஆயுள் தண்டனை...?

'மண்ணில் மனிதர்கள்' — ஒரு மகத்தான காவியம். யாருக்குக் கிடைக்கும்...? செருப்புத் தைக்கும் சங்கிலிக்குக் கிடைக்கிறது அப்படியொரு அதிர்ஷ்டம். அவனைப் பிராமணப் பெண் அகிலா மணந்து கொள்வதும், அவன் எம். எல். ஏ. வாவதும் தீமைகளை எதிர்த்து நிற்பதும்... சரியான புரட்சி...!

பக்கங்களைப் புரட்டும் போது நெஞ்சைப் 'பக்பக்' என்று அடிக்க வைப்பது 'ஜீவா என் ஜீவா' தான்! இரவில் படித்தால் இருதயமே நின்றாலும் நின்று விடும்.

ஜீவா—பட்டநாயக்கர் பரம்பரையின் ஒரே வாரிசு. இறந்து போய் மறுபிறவி எடுத்து, உமா என்கிற கல்லூரி மாணவியாக உலா வந்து, புயலாய்ச் சீறிப் புல்லர்களை எதிர்த்துப் போர்க்குரல் எழுப்பும் போது நம் உடம்பே புல்லரித்துப் போகிறது. பாராட்ட வேண்டிய படைப்பு.

ஆம், காயத்ரி—அகிலா—உமா என்ற பெண் பாத்திரங்கள் மூன்றுமே தியாகத் திருவுருவங்கள் தான். இவைகள் தீவட்டியைக் கையிலேந்தி ஆணாதிக்கக் கொடுமைகளிலிருந்து, அனைத்துக் கொடுமைகளையும் சுட்டெரிக்க முயல்வதை இந்த நாவல்களில் முழுமையாகக் காண முடிகிறது.

நாங்கள் படித்து விட்டோம். நீங்களும் படித்து உங்கள் அனுபவத்தைச் சொல்லுங்களேன்...!

—பதிப்பகத்தார்

சென்னை மாவட்ட கிளை நூலகம்
24180
4097938
கொளத்தூர், சென்னை-99.

# தப்பித்தே தீருவேன்

## 1

தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தார் மித்ரா!

ஐம்பது வயது தொழிலதிபர்.

கலர் கலராய் 'மாருதி, அம்பாஸடர், வாக்ஸ் ஹால்' என்று ஜாதிக்கு ஒரு கார் வைத்திருந்தவர்.

வீதிக்கு ஒரு வைப்பாட்டி இருந்ததாகவும் பேச்சு!

நாக்கு வெளித்தொங்க, போட்டிருக்கும் கோட், சூட்டைக்கூட கழட்டியிராத அவசரத்தோடு கழுத்துக்கு அவர் சுருக்கு மாட்டிக் கொள்ள அவரைப் பொருத்த வரையில் நிறைய காரணங்கள் ஒரு காலத்தில் இருந்தன.

அதாவது கோர்ட் அவரைப் பாப்பர் என்று அறிவிக்கும் முன்பு...

மஞ்சள் கடிதத்தைக் காட்டி கடன்காரர்களை எல்லாம ஜெயித்து கௌரவம் போய்விட்ட போதிலும் உயிருக்கு பங்கமில்லாமல் ஒரு வாடகை வீட்டில் வாழத்

தொடங்கியவர் திடீரென்று எதனால் இப்படிச் செய்து கொண்டு விட்டார்?

கால் மாட்டில் அழுது கொண்டிருக்கும் மகள் வித்யாவுக்கும் காரணம் புரியவில்லை. வாசல் படியருகே போலீசுக்காகக் காத்திருக்கும் மகன் சம்பத்குமாருக்கும் காரணம் புரியவில்லை.

கேவிக் கேவி அழுததில் கண் மூக்கு எல்லாம் வீங்கி தனக்கு இன்னும் சாவு வரவில்லையே என்று துடித்தபடி இருக்கும் மித்ராவின் மனைவி சரஸ்வதிக்கும் காரணம் புரியவில்லை.

சுற்றிலும் சொந்த பந்தங்கள் சேர்ந்து விட்டார்கள்.

கடனைக் கொடுத்து ஏமாந்துவிட்ட கடன்காரர்களும் சேர்ந்து விட்டார்கள்.

அந்த வாடகை வீட்டின் பின்புறமாய் அவ்வளவாய் வளர்ந்திராத வேப்ப மரக்கிளை ஒன்றில் வீசும் காற்றில் மெலிதாக ஆடும் அவரது சடலத்தைப் பார்க்கப் பார்க்க எல்லோருக்கும் வியப்பு.

''இவர் வாழ்ந்த வாழ்க்கைக்கு இப்படி ஒரு முடிவு வந்திருக்குன்னா, அதை என்னாலே நினைச்சே பார்க்க முடியலையே...''

''கைராசின்னா அப்படி ஒரு கைராசி. ஆனா, இப்படித் தூக்குல தொங்கணும்ங்கறது இவர் ராசிபோல இருக்கு...''

கூட்டத்திடம் ஸ்லாகிப்பு.

''ஏம்ப்பா சம்பத்...என்னப்பா ஆச்சு?'' ஒருவர் அவர் மகனை நெருங்கிக் கேட்கிறார்.



''எனக்கு ஒண்ணுமே தெரியலை சார்...அப்பா தூக்குல தொங்கற அளவுக்குக் கோழை கிடையாது சார்...''

''அப்ப எப்படி இப்படி நடந்துச்சு?''

''அதான் சொல்றேன்ல...என்னால புரிஞ்சுக்கவே முடியலை. நேத்துகூட நல்லாதான் இருந்தார். எப்படியும் சம்பாதிச்சு பழைய செல்வாக்கை அடைஞ்சே தீருவேன். வாங்கின கடனை கட்டியே தீருவேன்னு உறுதியாகச் சொன்னார் சார்...''

''எங்கிட்டகூட அப்படிச் சொன்னவர்தானே மிஸ்டர் மித்ரா.''

''அட நீங்க வேற...ஒரு காசா, இரண்டு காசா...? பல லட்சத்துக்கு மஞ்சக் கடுதாசி கொடுத்தவராச்சே. மனசு வெதும்பி இந்த முடிவுக்கு வந்துருக்கலாம்.''

—எல்லோரும் ஆயாசித்துக் கொள்ளும்போது புழுதிக் கவளத்தோடும், ஆம்புலன்ஸ் ஒன்றோடும் வீட்டு முன் வந்து நின்றது போலீஸ் ஜீப்.

பரிச்சயம் மிகுந்த இன்ஸ்பெக்டர் ருத்ரா கேப்பைக் கழட்டியபடி இறங்குகிறார்.

மித்ராவுக்கு மிக நெருங்கிய நண்பர்.

தன் மகனையே அவர் மகள் வித்யாவுக்கு தந்து சம்பந்தியாக்கிக் கொள்ளும் விருப்பத்தில் இருந்தவர்.

இறங்கின வேகத்தில் வீட்டு பின்பக்கத்தை அடைந்து தொங்கும் மித்ராவைப் பார்த்து லேசாகக் கலங்கி தலையை தொங்கப் போட்டுக் கொண்டார்.

சம்பத் நெருங்கி அவரை சமீபத்து நின்று கொண்டான்.

ரகுல் கம்ம பேசினான்.

''அப்பா இப்படிச் செய்வார்னு எதிர்பார்க்கலை அங்கிள்...''

ருத்ரா அதைக் கேட்டபடியே சுற்றிலும் நோட்ட மிட்டார். மரத்தைப் பார்த்தார். சுலபமாக ஏற முடிந்த மரம். கயிறு தொங்கும் கிளை மட்டும் சற்று உயரத்தில் இருந்தது. ஏறி அதில் கயிற்றை வளைத்துக் கட்டி பின் கீழே இறங்கி வந்து ஒரு ஸ்டூலைப் போட்டு ஏறி கயிற்றில் கழுத்தை மாட்டிக்கொண்டு தொங்கிச் சாக நிறைய திட்டமிடுதலும் பொறுமையும் தேவை என்று தோன்றியது.

'தற்கொலை முடிவிற்கு வந்தவர்கள் பதட்டத்திலும், வேகத்திலும்தான் இருப்பார்கள். இப்படி திட்டமிட்டு சாக வேண்டிய பொறுமை இருக்காதே?' போலீஸ் மூளையில் கேள்வியின் சின்ன மின்னல்.

அதற்குத் தோதாக பக்கமாக ஒரு பாழடைந்த கிணறு சாக நினைப்பவர்களுக்கு முதல் தரமான இடம் போய் எட்டிப் பார்த்தார்.

முடிந்தமட்டும் பூமியை ஆழப்படுத்தியும் நீரில்லாத கொடுமையோடு செடி கொடி முளைப்போடு 'ஹோ' வென்று முகம் காட்டியது கிணறு.

சாக வேண்டும் என்று மித்ரா விரும்பியிருந்தால் இந்தக் கிணற்றில்கூட குதித்திருக்கலாம். ஊகங்கள் ருத்ராவிடம் ஊர்வலம் போக ஆரம்பித்தது.

''அங்கிள்...'' சம்பத்தின் அழைப்பு, சம்பத்தைப் பார்க்கிறார் ருத்ரா,

''அப்பாவையும் போஸ்ட்மார்ட்டம் பண்ணணுமா?'' அவன் கேள்வியில் வேண்டாமே என்னும் கெஞ்சல். ருத்ராவிடம் துணிச்சல்.



''சம்பத் போஸ்ட் மார்ட்டம் பற்றி அப்புறம் சிந்திக்கலாம். இது எப்படி ஆச்சு? மித்ரா தைரியமான ஆளாச்சேப்பா...''

''எல்லாரும் அதையேதான் சொல்றாங்க. ஆனா, இப்படி தொங்கறத பார்த்துட்டுமா சொல்லணும்?''

''நீ என்ன சொல்றே...இது தற்கொலைன்னா?''

''யெஸ்...இதுதற்கொலைதாங்கறது என் யூகம்.''

சம்பத்தின் குரல் ருத்ராவை குழப்பியது. கூடவே கொலையோ என்கிற சந்தேகம் திரும்ப தலைகாட்டியது.

''அங்கிள்...உங்க டுட்டியை ப்ளீஸ் வேகமா செய்யுங்க. அப்பாவை இப்படி எவ்வளவு நேரத்துக்குப் பாக்கறது?''

சோகம் சம்பத் குரலில் வாய்க்கால் உடைப்பாய் தலை காட்டியது.

கூட வந்த போலீஸ்காரர்களைப் பார்த்தார் ருத்ரா.

அவர்கள் புரிந்து கொண்டு பாடியை நெருங்கி அவரைக் கீழே இறக்கி கிடத்தினார்கள். கயிறை பத்திரப்படுத்திக் கொண்டார்கள்.

ருத்ரா குனிந்து மித்ராவின் கழுத்தைக் கவனித்தார்.

அது நெறித்த நெறிப்பில் கழுத்துப் பகுதியே பச்சை வளையம் போட்ட மாதிரி உருமாறியிருந்தது.

எம்பிக் கொண்ட தோள்பட்டை சகஜமாகக் கீழிறங்கிட மறுத்தது.

ஸ்ட்ரெச்சர் வந்தது. மித்ரா உடல் அதில் ஏறியது.

''அவரை அறுத்து கூறுபோடப் போறாங்களா... ஐயோ வேண்டாமே'' அலறிக் கொண்டு ஓடிவந்தாள் மித்ராவின் மனைவி.

உங்களுக்குத் தெரிந்தவன் என்பதற்காக சட்டத்தை மீறி சகாயம் செய்ய என்னால் முடியாது என்பது போன்ற பார்வை ருத்ராவிடம்.

ஆம்புலன்சில் ஏறிக் கொண்டது ஸ்ட்ரெச்சர்.

ஆட்டக்காரிகளின் மார்புபோல குலுங்கி ஓட ஆரம்பித்தது.

பின் தொடர்ந்தது போலீஸ் ஜீப்.

ஜீப்பில் சம்பத சோகமாக உட்கார்ந்திருந்தான்.

## 2

வீட்டு வாசலில் கூட்டம் மெல்லக் கலைந்திருந்தது. முணுமுணுப்புகள் கரைந்திருந்தன. பொழுதுகூட சன்னமான வெளிச்சம். வானத்தில் இலேசான மோடம்.

வீட்டில் மித்ராவின் படத்துக்குக் கீழே எரியும் விளக்கு பக்கத்தில் அவர் மனைவி சரஸ்வதி சோர்ந்து உட்கார்ந்திருக்கச் சுற்றிலும் சொந்தங்களின் கூட்டம்.

மகன் வித்யா அம்மாவுக்கு சமீபத்தில் விசும்பி விசும்பி அழுது கொண்டிருந்தான்.

''கவலைப்படாதே... அப்பா உடம்பை நல்லபடி கொடுத்துடுவாங்க.''

''எப்படிக் கொடுத்தா என்ன...எழுந்திரிச்சா வரப் போறாரு?''

''எட்டு ஊருக்குத் தைரியம் சொல்வாரே மனுஷன். இப்படியா செய்துக்குவாரு? வியாபாரத்துல நஷ்டம்



லராம இருந்திருந்தா இந்த பொண்ணுதான் இப்படி அழுவுமா? இவருக்குத்தான் இப்படி கதி வருமா?''

கூட்டம் விடாமல் பிரஸ்தாபிக்கும் சமயம், வீட்டு வாசல்படியருகே புதிதாக இரண்டு பேர்.

பார்க்க, சேரிவாசிகளைப் போன்ற தோற்றம்.

ஒருவனுக்கு வயது நாற்பது இருக்கும். ஏத்திக்கட்டிய லுங்கியும், முண்டா பனியனுமாய் காது மடலில் செருகியிருக்கும் பீடிசகிதம் ஆவாரம் புதரின் அடர்த்தியில் இருக்கும் தனது தலையை சொறிந்தபடி நிற்கிறான்.

அருகில் நிற்கும் சிறுவனுக்கு. இருந்தால் பத்து வயதிருக்கலாம். அழுது அழுது கன்னம் வீங்கி உழுது போட்ட நிலம் மாதிரி இருக்கிறான்.

கிழிந்த அரை டிராயர்...

வத்தலான திறந்த மார்பு..

அதிகமாய் அழுக்குத் தொடர்பு...

''அழுவறத நிறுத்துடா பரதேசி... இங்க யாருகிட்ட அந்த சீட்டை வித்தே...?''

பெரியவனின் கேள்வி முன் அந்தப் பொடியன் பார்வை வீட்டைத் துழாவுகிறது.

அதற்குள் அவன் பின் மண்டையில் ஓங்கி ஒரு அடி விழுகிறது.

''சொல்லுன்றேன்ல...'' குரல் சுடுரிக்கிறது. அவனிடம் அழுகை அதிகமாகப் பீறிட வீட்டை அவர்களைத் திரும்பிப் பார்க்க...

''யாருப்பா அது... சாவு விழுந்த வீட்ல வந்து கலாட்டா பண்ணிக்கிட்டு...?''- ஒரு சொந்தக்காரர் கேள்வியோடு வெளியே வருகிறார்.

''யாரா...? அம்பது லட்ச ரூபாயை அலாக்கா பறி கொடுத்தவன் சாமி... வவுத்தெரிச்சலோட வந்திருக் கேன்'' அவன் அவரை பார்த்துப் பெரிதாகக் கத்தினான்.

''என்னப்பா உளர்றே?''

''உங்களுக்கு அப்புறம் பதிலைச் சொல்றேன்...'' என்றவன் அந்த பொடியனை மறுபார்வை பார்க்கவும், அவன் கை போட்டோவில் தென்பட்ட மித்ராவை நோக்கி நீண்டிருந்தது.

''ஆளு யாருடான்னு கேட்டா, போட்டோவை காட்றையேடா சோமாரி...'' அவன் கடுரித்தான்.

''போட்டோவுல இருக்கற ஆளுகிட்டதான் நைனா, நான் சீட்ட வித்தேன். பத்து சீட்டுக்கு பத்து ரூவா கொடுத்தாரு. அத்த வாங்கிட்டுத்தான் 'மன்னன்' படம் பாக்கப் போனேன்...''

''நல்லா சொல்றா...''

''சத்யமா!'' - அந்தச் சிறுவனின் சத்தியத்தைத் தொடர்ந்து, அவன் பார்வை படத்தில் இருக்கும் மித்ரா மேல் ஓடியது.

''என்னா சார் இது... இந்த ஆளு படத்துக்கு மாலை யெல்லாம் போட்ருக்குது. அவர் இன்னா பரலோகம் பூட்டாரா?''

''ஏய், யார் நீ? கேட்ட கேள்விக்குப் பதிலைச் சொல் லாம சீட்டு, லட்சம்னுகிட்டு...'' மித்ராவின் உறவினர் இந்த முறை எக்கச்சக்கமாகக் குழம்பிக் கத்த வித்யா எழுந்து கொண்டாள்.

சரஸ்வதி ஏறெடுத்துப் பார்த்து விழிநீரை வழிக்கிறாள்.



''சார் சார்... என் கேள்விக்கு நீ மொதல்ல பதிலைச் சொல்லு போட்டாக்காரர் செத்துட்டாரா?''

''ஆமா... உனக்கு என்ன வேணும்?''

''ஐயோ சார்... நான் உப்பு விக்க போனா மழை பெய்யுது... மாவு விக்கப் போனா காத்தடிக்குதே.''

''புலம்பாம விஷயத்துக்கு வா...''

''சார் நான் ஒரு ரிக்ஷாக்காரன் சார். லாட்டரி சீட்டுன்னா எனக்கு உசிரு. பத்து ரூவா சம்பாரிச்சா எட்டு ரூவாக்கு சீட்டு வாங்குவேன் சார்...''

''சரி, அதுக்கென்ன இப்போ...?''

''அப்படி வாங்குன ஒரு சீட்டுக்கு ஐம்பது லட்சம் விழுந்திருக்கு சார். பம்பர் பிரைசு!''

''நல்லது. அதுக்கெதுக்கு ஒப்பாரி வைக்கறே...?''

''சீட்டு என்கிட்ட இல்லையே சார். இந்த படுபாவி எனக்கு தெரியாம களவாண்டு இந்தப் போட்டோவுல இருக்கறவர்கிட்ட வித்துபுட்டு மன்னன் படம் பாக்க போய் என்னை இப்போ இப்படி பிச்சைக்காரனா புலம்ப விட்டுட்டானே சார்...''

அவர் அதைக் கேட்டு விக்கித்துப் போனார். வித்யா யோசிக்க ஆரம்பித்தாள். சரஸ்வதியின் முகத்தில் சலன ரேகை.

''நெஜமாவாய்யா சொல்றே?''

''நான் கும்பிட்ற ஆணை முனியப்பன் மேல சத்யமா சொல்றேன் சார்...''

''நீ யார் மேல வேணும்னாலும் சத்தியம் பண்ணு. ஆனா, அதை வாங்குனதா சொன்ன நபர் தூக்குப்

போட்டு செத்துட்டாரேய்யா. அதுவும் கடன் தொல்லை தாங்காம...''

''என்னய்யா சொல்றீங்க நீங்க...ஒரு காசா, இரண்டு காசா ஐம்பது லட்சங்க...செத்து போனவர் வீட்ல எங்கை யாவது வெச்சுருக்கலாம், தேடிப்பாருங்க சார்...''

அவன் கூக்குரலைக் கேட்ட வித்யா உடனேயே உள்ளே ஓடினாள். கை நிறைய லாட்டரிச் சீட்டோடு வந்தாள்.

''இதோ...பாருங்க...'' வித்யா காட்ட, அவன் பளபள விழியோடு வாங்கிப் பார்த்தான். சொந்தங்களின் கூட்டமும் வெறித்தது.

எண்ணி ஒன்பது சீட்டு இருந்தது முக்கியமான அந்த பரிசு விழுந்த சீட்டைக் காணோம்!

''ஐயா, முக்கியமான பரிசு விழுந்த அந்தச் சீட்டைக் காணேங்களே...'' அவன் பதறினான்.

''அப்படியே இது. இங்க வேற எங்காவது இருந் தாலும் ஒனக்கு காலணா கிடையாது...''-சொந்தக்காரர் புதிதாக தெம்பு வந்தமாதிரி வாய் திறந்தார்.

''ஐயா என்ன சொல்றீங்க?''-அவன் பதறினான்.

''உன் மகன் சீட்டை வித்துட்டான். வித்துட்ட சீட்டை வாங்கன யாரோ அவங்களுக்குத் தான்யா அது சொந்தம்...''

செத்த வீட்டில் சோக அலைக்கு நடுவே புதிதாக ஒரு பரபரப்பு மெல்ல பரவுவதை எல்லோராலும் உணர முடிந்தது. சரஸ்வதி எழுந்து வந்தாள்.

''ஐம்பது லட்சம் விழுந்திருந்தா நாங்க ஏம்ப்பா இப்படி இருக்கோம் இருக்கிற மன உளைச்சல் போதாதா



நீ வேற புதுசா குழப்ப வந்துட்டே...''-கண்ணீரோடு கேவினாள்.

அவன் திக்குமுக்காடத் தொடங்கினான்.

''நான் சீட்டைத் திருட்டுக் கொடுத்தவன். மவனே திருடி வித்தாலும் திருட்டு திருட்டுதான் நான் இதைச் சும்மா விடமாட்டேன், நான்தான் சீட்டு வாங்குனேங்கற துக்கு சீட்டை வித்த நபர் சாட்சி. அவங்க சொல்லித்தான் எனக்குப் பரிசு விழுந்ததே தெரியும். மூணு நாளா உங்க வீட்டைத் தேடி அலையறேன்யா...செத்துப் போன ஐய்யாவை என் மகனுக்கு நல்லா தெரியும். வெறும் கையால ஷூவுக்கு பாலீஷ்லாம் போட்டு தினமும் காசு வாங்குவான். அந்த பரிச்சயத்துலதான் என்கிட்ட சீட்டை திருடி வித்துருக்கான். ஒன்பது சீட்டு இருக்கறப்போ ஒரு சீட்டு மட்டும் எங்க போயிரும்? நான் இதை உடப்போற தில்லை. இப்பவே போறேன் போலீஸ் ஸ்டேஷனுக்கு...''

அந்த ரிக்ஷாக்காரன் ஆவேசமாகக் கிளம்பினான். 'இது என்னடா புதுச்சிக்கல்' சரஸ்வதி தலையில் அடித்துக் கொண்டு அழுதாள்.

வீதியில் இருவரும் புழுதி பறக்க அந்தப் பக்கம் நடக்க வும் இந்தப் பக்கம் சம்பத் போலீஸ் ஜீப்பில் வந்து இறங்கி னான். ''அம்மா உன்கிட்ட சில கையெழுத்து வேணும்...'' என்றபடி அவளை நெருங்கினான்.

''டெத் சர்டிபிகேட், மார்ச்சவரி கிளியரென்ஸ் ரிப்போர்ட்டுன்னு நிறைய விஷயங்கள் வாங்க வேண்டி யிருக்கு. அப்பாவோட எல்.ஐ.சி. பணத்துக்கும் நீதா னேம்மா வாரிசு. இந்த சந்தர்ப்பத்துல புத்திசாலித்தனமா பதட்டப்படாம நடந்து காரியத்தை சாதிச்சுக்கணும். ருத்ரா அங்கிள் கைட் பண்ணிக்கிட்டு இருக்கார்...''

—என்றபடி சில காகிதங்களை நீட்டினபோது வித்யா மெல்ல அந்த லாட்டரிச் சீட்டு விஷயத்தை ஞாபகப்

படுத்தினாள். வந்து கத்திவிட்டுப் போன அந்த ரிக்ஷாக்காரனைப்பற்றி சொன்னாள்.

அதைக் கேட்ட சம்பத்திடம் ஆச்சரியம் கலந்த கலவரம்.

## 3

ருத்ராவின் டேபிள் மேல் மித்ரா மார்ச்சுவரி ரிப்போர்ட். மித்ராவின் உடம்பை சுடுகாட்டில் புதைத்துவிட்டு அடித்துப்போட்டது போன்ற சோகத்தோடு வந்து எதிரே நிற்கும் சம்பத் எதிரே ஃபைலைத் திறக்கிறார் ருத்ரா.

''சம்பத் மனசை திடப்படுத்திக்கோ. உன் அப்பா தற்கொலை செய்துக்கலை. அவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்...'' ருத்ராவின் பதிலால் விதிர்த்துப் போனான் சம்பத்.

''நெஜமாவா?''

''ஆமா...உன் அப்பா சாகறதுக்கு மூந்தி என்கூட பேசினார்.''

''உங்க கூடயா?''

''ஆமா... டெலிபோன்ல என்னைக் காண்டாக்ட் டண்ணி சந்தோஷமா பேசினார். 'ருத்ரா இன்னிக்கு நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன். காரணத்தை நேர்ல சொல்றேன். பாப்பர் மித்ரா இனிமே பாப்புலர் மித்ராவா ஆகப்போறேன். பழைய செல்வாக்கை எனக்கு ஆண்டவன் திரும்பக் கொடுக்கப் போறான்'' அப்படின்னார்.



''என்னால நம்ப முடியலையே அங்கிள்...

''அவர் எனக்குப் போன் செய்ததற்குப் பிறகு ஏதோ நடக்கக் கூடாதது நடந்துருக்கு. அந்த மர்மம்தான் என்னன்னு தெரியலை...''

''என்ன அங்கிள். என்னென்னவோ சொல்றீங்க ''

''ஆமா... சம்திங் ராங்!''

''அங்கிள் நீங்க ராங்குன்னு சொல்லும்போது எனக்கு ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வருது...''

சோகச் சூழ்நிலையிலும் சம்பத் முகத்தில் சோபியம் விளக்கெரிந்தது.

''வாட் ஈஸ் தட்?''

''அப்பா செத்த அன்னிக்கு பாடி மார்ச்சுவரியில இருக்கும் போது, யாரோ ஒரு ரிக்ஷாக்காரன் என் வீட்டுக்கு வந்து லாட்டரி சீட்டு, ஐம்பது லட்சம்னு கத்தி கூப்பாடு போட்டுருக்கான்...''

''யார் அந்த ரிக்ஷாக்காரன்?'' ருத்ரா இமையை மூடி தந்த மட்டும் விரித்தபடி கேட்டார்.

''தெரியலை... ஆனா அவனை என் வீட்ல எல்லோருக்கும் நல்லா அடையாளம் தெரியும்...''

''அப்படீன்னா சிடி ரிக்ஷாக்காரன் அவ்வளவு பேரையும் புடிச்சு ஒரு பரேடே நடத்திடறேன். அவனைப் பிடிச்சா ஒருவேளை இந்த மர்மத்தோட முடிச்சு மெல்ல அவிழலாம். ஆமா அவன் எதுக்கு வந்தான். என்ன கூப்பாடு போட்டான். விபரமா சொல்லேன்.''

''எனக்குத் தெரியாது. நீங்க அம்மாகிட்டேயும் தங்கைகிட்டேயும் கேட்டா சொல்வாங்க.''

''அப்படின்னா உடனே கிளம்பு.''

இருவரும் கிளம்பினார்கள். ருத்ராவின் புதிய யமஹாவின் பின்பக்கமாக சம்பத் தொற்றிக் கொள்ள கம்பீரமாக அதைக் கொண்டு காற்றைக் கிழித்தார் ருத்ரா.

நடந்ததை, பார்த்ததை, காதில் விழுந்ததை அம்மாவும் பெண்ணும் அச்சுப்பிசகாமல் சொல்லி முடிக்கவும் ருத்ராவின் முகத்தில் வியப்புப் புயல்.

''அப்பா அடிக்கடி லாட்டரிச் சீட்டு வாங்குவாரு. இந்த லாட்டரிதான் என் கடனைத் தீர்க்கணும் என் மானத்தைக் காப்பாத்தணும்னு எப்பப் பார் சொல்வாரு!''

இன்னிக்குக்கூட பத்து ரூபாய்க்குச் சீட்டு வாங்கினேன்னு சொன்னப்போ ஏன்ப்பா இப்படிக் காசை கரியாக்கறீங்கன்னு நான் கூட சப்தம் போட்டேன்...'' தங்கை வித்யாவின் குரலில் தெளிவான விவரிப்பு.

''அப்பா பத்து ரூபாய்க்கு சீட்டு வாங்கியிருக்கார். அதாவது பத்து ரூபாய்க்கு பத்து சீட்டு...'' ருத்ரா அழுத்தம் கொடுத்து கேட்டதை வித்யாவின் சங்குக் கழுத்து ஆமோதிக்கிறது.

''ஆனா, ஒன்பது சீட்டுதான் அவர் சட்டைப் பாக்கெட்ல இருந்தது.''

''அப்பப் பரிசு விழுந்த சீட்டு மிஸ்ஸிங்...''

''அப்படித்தான் தோணுது.''

''அப்படின்னா, அந்த சீட்டு எங்கே. அதை அவர் என்ன பண்ணாருன்னு கண்டுபிடிக்கணும். அந்த சீட்டுக்குப் பரிசு விழுந்த சந்தோஷத்துலதான் என் கஷ்டம் எல்லாம் தீரப்போகுது. நான் இனி பாப்பர் மித்ரா இல்லை. பாப்புலர் மித்ரான்னு அவர் சொல்லியிருக்கணும்னு நான் நினைக்கிறேன்.''



''இருக்கலாம் அங்கிள். அப்படிப் பரிசு விழுந்திருந்தா அப்பா எங்ககிட்ட சொல்லியிருப்பாரே? ஏன் சொல்லலைன்னு தெரியலையே...''

''அவர் யார்கிட்டயும் சொல்லலை. அப்படிச் சொல்லாம இருந்ததுக்கும் ஏதோ பெரிய காரணம் இருக்கணும் எல்லாத்துக்கும் அந்த ரிக்ஷாக்காரனைப் பிடிச்சா தெரிஞ்சிடும்...'' ருத்ரா பேசிக் கொண்டே போன சமயம் வாசல் பக்கம் போஸ்ட்மேன் தலை தெரிந்தது. அவரது சைக்கிள் பெல் வித்யாவை வாசலுக்கு அழைத்தது. போஸ்ட்மேன் நீட்டிய கடிதம் ஒன்றை வாங்கியவளுக்கு தலையும் புரியவில்லை. காலும் புரியவில்லை.

கடிதம், இறந்துபோன மித்ரா முகவரிக்கு வந்திருந்தது. அனுப்பியவர் முகவரி இல்லாமல் விஷயம் சீரியஸாகவே குழப்பியது.

**'என்ன மிஸ்டர் மித்ரா...சீட்டோட வந்து பாக்கறதா சொல்லிட்டு இதுவரைக்கும் வராமலே இருக்கீங்களே...? நீங்க எப்ப சீட்டோட எங்களை வந்து பாக்கப் போறீங்க...? உங்க கேஷ் ஐம்பது லட்சமும் ரெடியா இருக்கு. ஆக்சுவலா நீங்க கவர்மென்ட்ல சீட்டை ஒப்படைச்சா, டேக்ஸ் போக நாப்பது லட்சம்கூட வராது. ஏதோ உங்களோட நல்ல நேரம், கறுப்பை வெளுப்பாக்க நாங்க இவ்வளவு தூரம் இறங்கி வர்றோம். நல்லபடியா பயன்படுத்திக்கிட்டு வாழ்க்கையில் சந்தோஷமா இருக்கிற வழியைப் பாருங்க, சீக்கிரமா வாங்க.**

இப்படிக்கு,
பாபுவுக்காக பார்த்திபன்

வித்யா கடிதத்தைப் படித்துவிட்டு குழம்பவும் சம்பத் அதை வாங்கிப் படித்துவிட்டு தானும் குழம்பியபடி அதை ருத்ரா எதிரே நீட்டினான். ருத்ரா படித்துவிட்டு

ஆழ்ந்த சிந்தனையில் கடலுக்குள் விழுந்த நங்கூரம்போல மூழ்கிப்போனார்.

''என்ன அங்கிள் இதெல்லாம்...யார் இந்த பார்த்தி பன்னு தெரியலையே...?'' சம்பத் வாய்விட்டுப் புலம்பி னான்.

சரஸ்வதி புடவைத் தலைப்பில் வாயை மூடிக் கொண்டு பெரிதாகக் கேவி அழத் தொடங்கினாள்.

''என்னவெல்லாமோ நடந்திருக்கு. நாங்க வாழ்ந்த வாழ்க்கைக்கு, நடக்கிற எதுவும் நல்லதாவே தெரியலை. சிங்கம்போல இருந்தவரையும் கொன்னு தற்கொலைன்னு நினைக்க வெச்சுருக்காங்களே...அவங்க உருப்படுவாங் களா?''

அவன் புலம்பலை வித்யா கட்டுப்படுத்தப் பார்த் தாள். முடியவில்லை.

''அம்மா கொஞ்சம் சும்மா இரும்மா. சும்மா இரு.''

''என்னத்தடி சும்மா இருக்கறது. வியாபாரம்தான் மூழ்கிப்போய் வீதிக்கு வந்தோம். அப்பகூட மானத்தை உங்கப்பா இழக்கலைடி. கடனை அடைக்காம சாக மாட்டேன்னு சபதம் போட்டாருடி. யாரையும் அவர் சல்லிக் காசுக்குக்கூட ஏமாத்த நினைக்கலை.

ஆனா, மடிமேல அம்பது லட்சம்னு லட்சுமி வந்து விழுந்ததும் இப்ப அவரும்போய், அந்தச் சீட்டும்பணமும் என்ன ஆச்சுன்னு தெரியாம புலம்ப வெச்சிட்டாரே. எப்படிடி என்னால சும்மா இருக்க முடியும்?''

ருத்ராவிடம் குழப்பம் நீங்கினது போன்ற முகபாவம். புலம்பும் சரஸ்வதியை ஆறுதலாகப் பார்த்தவர், ''அந்த சீட்டும் பணமும் எங்கேயும் போக நான்விட மாட்டேன் நீங்க கவலைப்பட வேண்டாம்'' என்றார்.



சரஸ்வதியம்மா அதைக்கேட்டு லேசான பெருமூச்சு விட்டார்.

# 4

பெரியகடைத் தெருவின் மையத்தில் பளீரிடும் சோடியம் விளக்கு வெளிச்சத்தில் பரபரப்பாக தென்பட் டது அந்த லாட்டரி சீட்டு விற்பனை நிலையம்.

கடைக்கு வெளியே நடிகை ஸ்ரீதேவியின் கண்ணடிக் கும் ஒரு தினுசான படம். கடையைக் கடந்து செல்லும் எவரையும் ஒரு பார்வை பார்க்க வைத்து 'ஒரு சீட்டுவாங் கினால் என்ன' என்கிற சபலத்தை உண்டாக்கும் அந்த படத்துக்குக் கீழே 'இம்மாத பம்பர் குலுக்கலில் எங்கள் விற்பனையில் முதல் பரிசு ஐம்பது லட்சம் என்னும் பளீரி டும் விளம்பரம்.

இதுவரை முதல் பரிசாகவே பதினைந்து கோடிகளை வாங்கித் தந்த ஏஜெண்டின் நிறுவனம் என்னும் உதிரி விளம்பரங்கள் வேறு...

கடையில் கூட்டம் கூடி ஏறிக் கொண்டிருந்தது. லாட்டரி என்பது இந்திய மக்கள் வாழ்வில் இரண்டறக் கலந்துவிட்ட ஒரு அம்சம் என்கிற மாதிரி தோன்றியது.

கடையின் வாசலில் இப்பொழுது திடீர் பரபரப்பு.

தனது யமஹாவில் ருத்ரா இறங்கிக் கொண்டிருந் தார். படுமிடுக்கான தோரணையோடும் காக்கி உடுப் போடும் தென்படும் கச்சிதமான அந்தப் போலீஸ் மனித

னைப் பார்த்த மாத்திரத்தில் கடை மனிதர்களிடம் பரபரப்பு...

''வாங்க சார்...குட்மார்னிங் சார்...'' குழைவான அழைப்பு ஒவ்வொருவரிடமும்...

ருத்ராவின் விழிகளில் கழுகு பறந்தது. கடையை அது டெசிமல் சுத்தமாக அளந்தது

''கடையோட ஓனர் யார்'' என்கிற கேள்விக்கு ஒரு வழுக்கைத் தலை மனிதர் முன்னாலே வந்தார்.

''என்கொயரி இருக்கு மிஸ்டர்...''

''உள்ளே வாங்க சார்.'' ருத்ராவின் கேள்வியைத் தொடர்ந்து அவரிடமிருந்து அழைப்பு. இருவரும் கடையின் உட்புறத்துக் கண்ணாடி அறையில் அடங்கினார்கள்.

''ஐம்பது லட்சம் பரிசு விழுந்திருக்குன்னு கேள்விப்பட்டேன்.''

''ஆமாம் சார்...ஏதோ கடவுளோட அனுக்ரகம்!''

''நீங்க வித்த சீட்டுதானா? கன்ஃபர்ம் பண்ணிட்டீங்களா?''

''அதுல என்ன சார் சந்தேகம்...?''

''ஆமா சீட்டை யாருக்கு வித்தீங்கன்னு தெரியுமா?''

''எங்க கடையில நாப்பது பேர் வேலை பாக்கறாங்க. அதுல டேனியல்னு ஒரு பையன். பெரியார் பஸ் ஸ்டாண்டுல வெச்சு ஒருத்தர்கிட்ட வித்துருக்கான். அவரைத் தேடிக்கிட்டிருக்கோம் சார்...''

''அப்ப வித்தது யாருக்குன்னு துல்லியமா தெரியாது?''



''கடையில விக்கற சீட்டுக்குத்தான் அட்ரஸ் கேட்டு வாங்கறது வழக்கம். வழியில பசங்க கூவி விக்கற சீட்டுல அது சாத்தியமில்லை சார்.''

''இப்ப அந்த டேனியலை நான் பாக்க முடியுமா?''

''பஸ் ஸ்டாண்டுலதான் சார் திரிஞ்சிகிட்டிருப்பான். அவன் வித்த சீட்டுக்கு அம்பது லட்சம் விழுந்த குஷியில இருக்கான். பார்ட்டி மாட்டுனா பய எங்கியோ போயிடுவான்.''

''எங்கியோன்னா?''

''பரிசு விழுந்தவங்க நிச்சயம் ஏதாவது ஒரு நல்ல தொகை அன்பளிப்பா தருவாங்க. நாங்களும் ஊக்க போனஸா பணம் தருவோம். இன்னிக்குக் கூட நூறு ரூபா தந்து தட்டிக் கொடுத்தோம். ஆமா எதுக்குக் கேக்கறீங்க...''

''காரணமாதான். பரிசு விழுந்த சீட்டை யார் பேங்க்ல ஹேண்ட் ஓவர் பண்ணினாலும் முதல் தகவல் நீங்கள் எங்களுக்குத்தான் தரணும். அதை வாங்குனது யாருங்குறதுல சிக்கல் ஏற்பட்டிருக்கு...''

''அப்படியா சார்...அதான் பரிசு விழுந்து மூணு நாளகியும் சீட்டுக்கு உரியவங்களை நாங்க இன்னும் பாக்கலை. சாதாரணமா இந்த மாதிரி பெரிய பரிசெல்லாம் விழுந்தா அவங்களை நாங்க முதல்ல கண்டுபிடிச்சு போட்டோவெல்லாம் எடுத்துடுவோம். இந்தத் தடவை ஏண்டா இழுத்தடிக்குதுன்னு தெரியாம இருந்தேன். இப்ப புரிஞ்சு போச்சு...''

''நான் இப்ப அந்த டேனியலைப் பார்க்கணுமே...''

''நீங்க பஸ் ஸ்டாண்ட் பக்கம் போனா பாக்கலாம். நான் வேணும்னா வந்து அடையாளம் காட்டவா?''

''ப்ளீஸ்...''

''அந்த வழுக்கை மீசை மனிதர் ருத்ராவின் யமஹாவில் பவ்யமாக தொற்றிக்கொள்ள ருத்ரா வாகனத்தை லாவகமாக இயக்க இரவின் பரபரப்பான ஜன நடமாட்டத்தை அந்த வாகனம் குடையத் தொடங்கியது.

''டேனியல் கிட்ட என்ன சார் கேக்கணும்?''

''சீட்டை யார்கிட்ட வித்தார்னு...''

''நாங்ககூட கேட்டுப் பார்த்தோம். அன்னிக்கு நல்ல கிராக்கிங்களே அம்புடலை. எல்லாம் இந்த ரிக்ஷா மிதிக்கறவங்க தினக்கூலிங்கதான்னு சொன்னான். ஆனா, ஆளைப் பார்த்தா அடையாளம் சொல்லுவேன்னு சொன்னான்.''

''வெரிகுட் அதுதான் எனக்கு வேணும்.''

ருத்ராவிடம் ஏதோ ஒரு மர்மம் பிடிபட்ட மாதிரி பாவனை.

டேனியல்.

இந்த இருபது வயது இளைஞனைப் பார்த்தால் அந்தக் கால 'அவன் ஒரு தொடர்கதை' கமலஹாசனைப் பார்க்கிற மாதிரி இருக்கும். ஆனால், அத்தனை பளிச் சென்ற இல்லாமல் மேனி முழுக்க வெய்யிலில் லாட்டரிச் சீட்டை அலைந்து திரிந்து விற்கும் தீய்ந்த கறுப்பு நிறத்தைப் பார்க்கலாம்.

பெரும்பாலும் லுங்கி, பனியன்தான் இவனது ராஜ உடை. கணேஷ் பீடி இவனது ஆத்ம நண்பன். நெஞ்சு கமற இழுத்து மூக்கின் வழியாக கரி என்ஜின் போல புகை விட்டு 'ப்ருச்ச்' என்று அடிக்கடி எச்சில் துப்பியபடி கை வசம் லாட்டரிச் சீட்டோடு வளைய வருவதில் கில்லாடி

குறிப்பாகப் பெண்கள் பக்கம் அதிகம் சுற்றுவான்.

லாட்டரி ஆசை இல்லாதவர்களிடம் கூட சீட்டுக் கட்டு போல சீட்டை விரித்துப் பிடித்து 'ஒரு ரூவாய்க்கு



அம்பது லட்சம்; குபேர சம்பத்து. குபீர்னு வரப் போகுது...' என்று திகிடு தம்பாக டயலாக் பேசி விற்றுக் காட்டுவதில் சூரன்.

இதுநாள் வரை அவ்வளவாக தண்ணி அடிக்காதவன் இன்று ஐம்பது லட்ச ரூபாய்க்கான சீட்டை விற்ற குஷியில் ஒரு பேக் பைப்பரின் குவாட்டர் அளவு திரவத்தைத் தனக்குள் இறக்கிய போதையில் உலகம் பிறந்தது எனக்காக என்று பாடியபடி நடந்த போதுதான், நடக்கக் கூடாத அந்தச் சம்பவம் நடந்து விட்டது.

வேகமாக வந்த ஒரு காரின் இடப்பக்க ஹெட்லைட் ரத்தச் சிவப்பாகி ஒளியையே மறைக்கும் வண்ணம் டேனியலைப் பிளாட்பாரம் ஒன்றில் தூக்கி எறிந்து விட்டு போயிருந்தது.

எறிந்த வேகத்தில் சிட்டாகப் பறந்தும் விட்டது.

ரத்தச் சகதியில் நெடுநேரம் பிளாட்ஃபாரத்தில் துடித்த டேனியலின் கையும் காலும் சடல உறைப்பின் துடிப்பை நிறுத்திய மிகச் சரியான வினாடியில்தான், ருத்ரா தன் யமஹாவை விட்டு அங்கே இறங்கினார்.

''என்ன கூட்டம்?''

''ஆக்சிடெண்ட் சார். ஆள் அவுட்!''

எட்டிப் பார்த்த ருத்ராவின் முகம் சுணங்கிக் கொள்ள வழுக்கைத் தலை மீசை மனிதர் 'சார் இவன்தான் டேனியல்' என்று கத்த ''ஓரமாதான் சார் போய்கிட்டிருந்தான். கார்க்காரன் மேலதான் தப்பு...'' என்று கூட்டத்தில் ஒருவர் சொன்ன போது ருத்ராவிடம் லேசான ஸ்தம்பிப்பு!

# 5

"இது. திட்டமிட்ட கொலை... எனக்குச் சந்தேகமே இல்லை."

-ஸ்டேஷனில் ருத்ரா புலம்பும் போது சம்பத் அருகில் இருந்தான்

"எப்படி அங்கிள்?" - கேட்டான்.

"நாளைக்கு சீட்டை சப்மிட் பண்ணப் போற நபர் டெஃபனட்டா அதை வாங்கின நபரா இருக்க முடியாது. டேனியல் அதை ஊர்ஜிதப்படுத்தலாம். அதனாலதான் டேனியலை ஒழிச்சுக் கட்டிட்டாங்க." - ருத்ரா சொன்ன போது சுவர் கடிகாரத்திடம் கூட ஆமோதிப்பாய் சப்தம்!

"அப்ப, டேனியலைக் கொன்னவங்க தான் அப்பாவையும் கொன்னுருக்கணும். அப்படித்தானே அங்கிள்."

"நிச்சயமா?"

"அந்த குரூப் அப்பாவைக் கொன்னு அப்பா கிட்ட இருந்து சீட்டை திருடி இருக்காங்களா?"

"இருக்கலாம்..."

"அப்படின்னா, அப்பா பேருக்கு பார்த்திபன்றவர் எழுதின கடிதம்?"

"யெஸ்...அதோட பின் புலத்தையும் கொஞ்சம் ஆராயணும். அதை என் டிபார்ட்மென்ட் பார்த்துக்கும்."

"அங்கிள்... அந்த ரிக்ஷாக்காரன் விஷயம்?"

"இன்னிக்கு அது என்னான்னு பார்த்துடுவோம்..."



"அங்கிள், அந்த ரிக்ஷாக்காரன் லாட்டரிச் சீட்டை டேனியல் கிட்ட வாங்கி இருப்பான்னு நம்பறீங்களா?"

"ஏன் அப்படிக் கேக்கறே?"

"அவன் வாங்கின சீட்டை அவன் மகன் திருடி வித்துட்டாங்கறதும், அதை அப்பா வாங்கினார்ங்கறதும் நம்பற மாதிரி இல்லை. அப்பா எப்பவும் இல்லீகலா எதையும் வாங்க மாட்டார். அந்த ரிக்ஷாக்காரன் பையன்கிட்ட எல்லாம் அப்பா சீட்டு வாங்கியிருக்க சந்தர்ப்பமில்லை."

"அப்ப... உங்க அப்பாகிட்ட அந்த பரிசு விழாத ஒன்பது சீட்டு எப்படி வந்தது?"

ருத்ராவின் இந்தக் கேள்வி முன் சம்பத் இலேசாகத் திணறினான்.

"அப்படின்னா, அப்பா சீட்டை வாங்கியிருக்கார். அவர்கிட்ட இருந்து பரிசு விழுந்த சீட்டை யாரோ திருடிக்கிட்டு போய் இருக்காங்கன்னு ஊர்ஜிதப்படுத்திக்க வேண்டியிருக்கு."

"கொன்னுட்டு திருடிக்கிட்டு போய் இருக்காங்கன்னு சொல்லு..."

"அப்பாவுக்குதான் பரிசு விழுந்ததுங்கறது அவங்களுக்கு எப்படித் தெரியும்...?"

"உங்க அப்பா, ஏதோ காரணத்துக்காக அவங்ககிட்ட மட்டும் போய் சொல்லியிருக்கணும்..."

"என்ன காரணமா இருக்க முடியும்?"

"பார்த்திபன்கிறவன் எழுதின கடிதப்படி பார்த்தா, பரிசு விழுந்த லாட்டரிச் சீட்டை உன்னோட அப்பா அந்த க்ரூப்கிட்ட ஒப்படைச்சு இம்மீடியட்டா பணம் வாங்கிக்க நினைச்சிருக்கணும்.

அதாவது, பார்த்திபன் க்ரூப்புக்கு இந்த மாதிரி பரிசு விழுந்த லாட்டரி சீட்டெல்லாம் அல்வா மாதிரி விஷயங்கள். அவங்ககிட்ட கோடிக்கணக்கல இருக்கற கறுப்புப் பணத்தை வெள்ளையா மாத்திக்க கிடைக்கற சந்தர்ப்பங்கன்னு சொல்லலாம்.

இந்த மாதிரி நபர்களை, பரிசு விழுந்ததே வெளிய தெரியாம உங்கப்பா யூஸ் பண்ணிக்கப் பார்த்திருக்கலாம்.''

''வெளிய தெரிஞ்சா அப்பாவுக்கு என்ன நஷ்டம்?'

''திரும்பவும் மித்ராவுக்குப் பணம் கிடைச்சிடிச்சுன்னு தெரிஞ்சா கடன்காரர்கள் வந்து சூழ்ந்துக்கலாம். யாருக்குப் பணம் கொடுக்கறதுன்னு தெரியாம உங்கப்பா தவிக்க நேரிடலாம்.

வெளிய யாருக்குமே தெர்யாம அபூர்வமா அதிர்ஷ்டத்தால வந்த பணத்தைக் கொண்டு திரும்பவும் பழைய பணக்கார வாழ்க்கைக்கு ஓசைப்படாம திரும்ப உங்கப்பா முடிவெடுத்திருக்கலாம். வியாபாரத்துல ஈடுபட ஆசைப்பட்டிருக்கலாம்...இப்படியே எவ்வளவோ நினைக்க இடமிருக்கே?''

''இல்லை அங்கிள்... அப்பாவுக்கு திரும்பவும் பணக்காரனா ஆகணும், பழைய அந்தஸ்தை மீட்கணும்கறதெல்லாம் குறிக்கோள் கிடையாது. கடனை அடைச்சுட்டு நல்ல பெயர் எடுக்கணும்கறது மட்டும்தான் குறிக்கோள். ஆகையால லாட்டரி விழுந்த மறுநிமிஷம் அப்பா அதை உலகத்துக்குச் சந்தோஷமா சொல்லத்தான் ஆசைப்பட்டிருப்பார்...''

—இருவரின் வாதப் பிரதி வாதத்திலும் மிகவும் முரண்பட்ட யூகங்கள். நடுவே அநியாயமான டேனியலின் சந்தேகத்துக் கிடமான மரணம்



ருத்ரா நெடுநேரம் எதுவும் பேசவில்லை. போலீஸ் புத்தி. இனி அதிகம் பேசாதே என்பது போல் அவரைக் கட்டிப் போடத் தொடங்கியது.

''என்ன அங்கிள்...என் கருத்துக்குப் பதிலே இல்லியே உங்ககிட்ட...''

ருத்ராவிடம் தீர்க்கமான பார்வை. பின்னர் உதட்டில் அசைவு.

''உன் கருத்துப்படி பார்த்தா உன் அப்பா பரிசு விழுந்திருக்கறது தெரிஞ்ச மறுநிமிஷம் அதை உலகத்துக்குச் சந்தோஷமா தெரியப்படுத்தத்தான் ஆசைப்பட்டிருப்பார்...அப்படித்தானே?''

''யெஸ்...அதனாலதான் உங்களுக்குப் போன் பண்ணி பாப்பர் மித்ரா, இனிமே பாப்புலர் மித்ரான்னு சொல்லியிருக்கார்.

''அப்படியே வெச்சுப்போம்...இந்த பார்த்திபன் க்ரூப் எப்படி உள்ள நுழைஞ்சது? கறுப்புப் பணத்தை வெளுப்பாக்கிக்க உங்கப்பாகிட்ட ஒரு பேரம் ஏன் செய்தது?''

''எனக்கு அதுதான் புரியலை அங்கிள்?'

''பொறு...லாட்டரி சீட்டு யார்கிட்ட இருந்தாலும் அவங்க பேங்க்ல புரொட்யூஸ் பண்ணித்தானே தீரணும்? அப்படி அவங்க புரொட்யூஸ் பண்ணட்டும். அப்பத்தான் மற்ற முடிச்சுகள் தானா அவிழும்.''

ருத்ராவோடு சேர்ந்து கொண்டு சம்பத்தும் ஆவலாக சீட்டை யார் புரொட்யூஸ் செய்யப் போகிறார்கள் என்பதை அறிய ஆவலானான்.

''யார் சப்மிட் பண்ணினாலும் இந்த ரிக்ஷாக்காரன் அப்ப குறுக்க நுழைஞ்சு, என் சீட்டுன்னு கத்துவான். அதுவும் நடக்கும் இல்லியா, அங்கிள்?''

''நிச்சயமா...ஆனா அன்னிக்கு உன் வீட்டு வாசல்ல நின்று கத்தினவன், இப்பவே போலீசுக்குப் போறேன்னு சொன்னவன் இந்த நிமிஷம் வரை தன் லாட்டரி விஷயமா போலீசை போய் பார்த்து புகார் பண்ணாததை நினைச்சா, ஆச்சரியமாத்தான் இருக்கு...''

ருத்ரா ஆச்சரியப்பட்டபோது மணி சுமார் ஐந்து இருக்கும். அவருக்குப் பக்கத்து டெலிபோன், பேசிய போதும் ருத்ரா என்பதுபோல சிணுங்கி அவரை அழைத்தது. காதைக் கொடுத்தார்.

''ஐயா போலீஸ் ஸ்டேஷங்களா?'' யாரோ நடுங்கும் குரலில் கேட்பது காதில் பாய்கிறது.

''யெஸ்...என்ன விஷயப்?''

''ஐயா, நாங்க அண்ணா காலனி குப்பத்தைச் சேந்தவங்க பேசறோங்க. இங்க எங்க குப்பத்து சாக்கடையில இரண்டு பொணம் மெதந்துகிட்டிருக்குங்க. நாத்தம் சகிக்க முடியலைங்க.''

அதைக்கேட்ட மறுகணம், ருத்ராவின் ரத்த ஓட்டத்தில் முதல் கியரிலிருந்து நான்காவது கியருக்கு மாறிய மாதிரி ஒருவேகம்.

''கரெக்டா இடத்தைச் சொல்லுய்யா. உன் பேர் என்ன?'' பலமான குரலுக்கு மாறியவர் காதில் இப்பொழுது ரொய்ய்ங் என்னும் டெலிபோனின் சீதனமான சப்தம் மட்டுமே விழுந்தது. மறுமுனையில் பேசியவர் போனை பயந்துபோய் வைத்து விட்டிருந்தார்.

ருத்ராவுக்குப் புரிந்து போனது போனை வைத்து விட்டு, திரும்பினவரை சம்பத் கூர்மையாகப் பார்த்தான் பார்வையே என்ன என்று கேட்டது.

''சம்பத் நீ கிளம்பு. எனக்கு ஒரு அவசர வேலை'' என்றார்.



''என்ன அங்கிள்?''

''யாரோ இரண்டு பேர் டெட் பாடி, ஒரு சாக்கடையில மெதக்குதாம்...''

''எங்க?''

''அண்ணா காலனி குப்பம்...''

''அப்படின்னா நீங்க புறப்படுங்க. நான் அப்புறம் பாக்கறேன். பியூர்லி இது உங்க டூட்டி விஷயம்.''

சம்பத் விவேகமாக நழுவிக் கொண்டது ருத்ராவுக்கு மிகப் பிடித்துப் போனது.

சம்பத் எவ்வளவோ இழந்துவிட்டான்.

முதலில் அலங்காரமான பணக்கார வாழ்வு...

அடுத்து பாசத்திற்குரிய அப்பா மித்ரா...

எல்லாமே அவன் வரையில் விலை மதிப்பில்லாத விஷயங்கள். நூறு ரூபாய் தொலைந்து போனாலே தாடி வளர்த்து சோகமாகி வானம் பார்த்து வாழ்க்கை வெறுப்பவர்கள் நடுவில் சம்பத் எதாலும் துளிக்கூட தளரவேயில்லை.

அந்த தைரியம் அவருக்கு மிக பிடித்திருந்தது.

தன் மகளை அவனுக்குத் தந்து மருமகனாக்கிக் கொள்ளும் நினைப்பை இப்பொழுது ஒருமுறை வலுவுடன் நினைத்துப் பார்த்தார்.

அது மித்ராவுக்கு செய்யும் மகத்தான அஞ்சலியாக இருக்கும் என்றுகூட பட்டது.

ஆனால் மித்ரா இப்படிக் குழப்பபடியாகவா செத்து வைப்பார்?

அவர் சாவு மட்டுமா குழப்படி...? அந்த லாட்டரிச் சீட்டு ஐம்பது லட்சம், பார்த்திபன் என்பவர் எழுதிய கடிதம், டேனியலின் சாவு என்று வரிசையாக தொடர்பே தெரியாமல் தொடர்பு கொண்டிருக்கும் விஷயங்கள் கூடத்தான் குழப்படி...

இது ஒரு சவாலான கேஸ்தான்...நினைவுகளை ஒரு ஓரமாக குவித்து விட்டு சாக்கடையில் செத்துக்கிடக்கும் அந்த இரண்டு உடம்பு தொடர்பான கேஸைக் கவனிக்க தயாரானது அவர் முனைப்பு.

சில கான்ஸ்டபிள்கள் சகிதம் அந்த ஸ்டேஷனை விட்டு அதன் நிமித்தம் அந்த ஜீப் கிளம்பியும் போனது.

# 6

அண்ணா காலனி குப்பம்!

சுகாதாரம் வீசை என்ன விலை? என்று கேட்கும் வீதிகள். அதில் ஆயிரம் மேடுகள் பள்ளங்கள். பள்ளங்களில் தேங்கிக் கிடக்கும் மழைநீர். அந்த மழைநீரில் காகிதக் கப்பல்விடும் கிழிந்த டிராயர் கறுப்புச் சிறுவர்கள்.

ஊடே வலிந்து மிதிக்கும் சில ரிக்ஷாக்காரர்கள். எங்கள் ஜாகை இங்கேதான் என்பது போல் அவர்களிடம் முக பாவங்கள்...

டீக்கடைகள்...

அதில் இடைவிடாத சினிமாப் பாடல்கள்...

ஒதுங்கி ஒதுங்கி வளையும் தெருவில் எங்களுக்கும் உரிமை உண்டு எனத் திரியும் பன்றிகள்...



மூக்கைப் பிடித்துக் கொண்டுகூட நடக்க முடியாத அந்தச் சூழ்நிலையில் ஒரு குறிப்பிட்ட எல்லையோடு ஜீப் நின்று போக, ருத்ராவும் போலீஸ் பட்டாளமும் மடமட வென்று இறங்கிக் கொள்கிறது.

உடனேயே கூட்டம் சேர்ந்து விட்டது.

''எங்கய்யா பொணம் மெதக்குது?''-ஒரு கான்ஸ்டபிள் ஒருவரைப் பார்த்துக் கேட்க அவர் கையை ஒரு பக்கமாக காட்டுகிறார்

''வா. வந்து காட்டு...''-கான்ஸ்டபிளிடம் அழைப்பு.

''ஐயா எனக்கு சோலி இருக்குங்க. நீங்க வேற யாரை யாவது...''-அந்த நபர் மிடறு விழுங்குகிறார்.

''வாய்யான்னா...'' - அறையாத குறையாகச் சட்டையை பிடித்துக் கான்ஸ்டபிள் இழுக்க அவர் முன்னால் நடக்கிறார்.

யாரோ உருவிப் போட்ட நிரோத் பலூன் ஒன்றை ஒரு சிறுவன் ஊதியபடி வேடிக்கை பார்க்கிறான்.

''இந்தியா திருந்த ரொம்ப நாளாகும்...''-என்கிற முணுமுணுப்பு ஒரு போலீஸ்காரரிடம்.

ருத்ரா மௌனமாக சூழ்நிலையைக் கிரகித்தபடி நடக்கிறார். குப்பத்தின் சகதித் தெருக்களில் தமிழ்நாடு அரசின் போலீஸ் ஷூக்களில் சகதித் திப்பிகள்கூட ஒட்ட அஞ்சுகின்றன.

திடீரென்று ஓரிடத்தில் நாற்றம் குடலைப் பிரட்டியது. குப்பத்தின் கழிவு நீர் அவ்வளவும் பள்ளம் போன்ற ஒரு குட்டையில் தேங்கிச் சாக்கடையாக உருமாறி முடிந்த எல்லைவரை வளைந்து வளைந்து ஓடப் பார்த்த ஒரு வளைவில் பாலம் ஒன்று. அதன் கீழே பிணங்கள்!

பாலத்திட்டின் மேல் சிறுவர்கள், பெரியவர்கள் என்று வேடிக்கை பார்க்கும் ஒரு கூட்டம்.

போலீஸ் கூட்டம் பார்த்த அவர்கள்-சப்தம் கேட்ட காக்கைக் கூட்டம் போல சிருட்டென்று விலகி ஒதுங்கிக் கொள்ள, கர்ச்சீப்பால் மூக்கை மூடிக்கொண்டு நெருங்கிச் சென்று பாலத்திட்டின் மேல் ஏறி கீழே பார்வையை விட்டார் ருத்ரா.

முதுகைக் காண்பித்தபடி மிதக்கும் இரண்டு பிணங்கள். ஒன்றுக்கு வயது நாற்பது இருக்கலாம். இன்னொரு பிணத்திற்குப் பதினைந்து வயதுகூட மதிக்க முடியாது.

போலீஸ் வேகமானது.

வரவழைக்கப்பட்ட ஸ்வீப்பர்கள் இரண்டு பேர் சாக்கடைச் சகதியில் இறங்கி பிணங்களின் கால்களைப் பிடித்து இழுத்தபடி கரை வரை வந்து மிகுந்த சங்கடத்தோடு அந்த உடல்களைத் தூக்கிக் கரையில் மல்லாக்க கிடத்திவிட்டு நெற்றி வியர்வையை வழித்து விட்டுக் கொண்டபோது, வெறித்தபடி வேடிக்கைப் பார்க்கும் கூட்டத்தில் சிலரிடம் பலமான முணுமுணுப்பு.

''ஹேய்...இது நம்ம மாரிமுத்துல்ல...!''

''ஆமா, ரிக்ஷாக்காரன் மாரிமுத்து. அவன் மகன் மாணிக்கம்!''

'லாட்டரியில அம்பது லட்சம் விழுந்துருக்க. இனிமே நான் மகாராஜன்னு தண்டோரா போட்டுக்கிட்டு திரிஞ்ச பய, இப்படி இங்க செத்துக் கிடக்கறானே...''

''அட அவன் மகனுமில்ல செத்துக் கிடக்கறான்!''

—கூட்டம் பேசப் பேச ருத்ராவிடம் திகைப்பான திகைப்பு. அவர் முகத்தில் கழுகின் பாய்ச்சல்.



பைக்கை மரத்தடியில் நிறுத்திவிட்டு சோர்வாக வீட்டின் உள்ளே நுழைகிறான் சம்பத். சோகத்தை மாத நாவல் ஒன்றில் மறக்க முயற்சிக்கும் வித்யா நிமிர்ந்து சம்பத்தைப் பார்க்கிறாள்.

அடுப்படியிலிருந்து சரஸ்வதியும் எட்டிப் பார்க்கிறாள். ''அண்ணே, கேஸ் விஷயம் எந்த மட்டும் இருக்கு...?''-வித்யாவிடம் ஆவலான கேள்வி.

''ஒரே குழப்பம் வித்யா...ருத்ரா அங்கிள்கூட ரொம்ப குழம்பி இருக்காரு.''

''லாட்டரிச் சீட்டு கிடைச்சிருச்சா...அது யார்கிட்ட இருக்கு?''

''தெரியலை...தெரியவேனாங்குது...''

''அந்த பணம் நமக்குக் கிடைச்சுடும் தானே?''-சரஸ்வதி கேட்டபடி சமையல் கட்டிலிருந்து வெளிப்படுகிறாள்.

''அப்பாவே போயிட்டார். இனிமே பணம்தான் வந்து நம்மளை தாங்கப் போகுதோ?'' - வித்யாவிடம் சலிப்பு.

''அப்பா சாவுக்குக் காரணமே பணம்தானே... அவரைத்தான் காப்பாத்த முடியலை. பணத்தையாவது காப்பாத்துவோம்.''

-சரஸ்வதியின் பேச்சு சம்பத்தை இலேசாகக் கசக்கியது. ''கொஞ்சம் நான் அதை எல்லாம் மறந்து இருக்கப் பிரியப்படறேன். வாயை மூடிக்கிட்டு சும்மா இருங்க...''-சம்பத் இலேசாக இரைந்து விட்டு மாடி ஏறுகிறான்.

ஈஸி சேரில் மல்லாந்து வீழ்கிறான்.

தாடையில் ஒரு வார மழிக்காத முடி.

விரல்களால் வருடியபடி யோசிக்கிறான்.

தலைக்கு மேலே சைத்தானின் சுழற்சி

அது சிந்தும் காற்றை மீறி உடம்பில் வியர்வை.

பக்கமாய் சுவரில் புகைப்படத்தில் மித்ரா.

அவரைப் பார்க்கும் போது கண்களில் நீர் திரையிடுகிறது.

வெளியே காலிங்பெல்லை யாரோ அழுத்தும் சப்தம்.

வித்யா போய் கதவைத் திறக்கிறாள். வெளியே போஸ்ட்மேன்.

அவர் கைவசம் ஒரு கடிதம். மித்ராவின் மனைவி சரஸ்வதியின் பெயருக்கு வந்திருந்தது. ''அம்மா உனக்கு லெட்டர்...'' என்றபடி வித்யா ஆவலாகக் கடிதத்தைப் பிரித்தாள். சம்பத்தும் சப்தம் கேட்டு இறங்கி வந்தான். கடிதத்தை வித்யாவிடம் இருந்து பிடுங்கி படிக்க ஆரம்பித்தான்.

''திருமதி மித்ரா அவர்களுக்கு!

வணக்கம்.

உங்கள் கணவர் தற்கொலை செய்து கொண்டு விட்டார் என்பதைத் தெரிந்து கொண்டோம். எங்கள் ஆழ்ந்த அனுதாபங்கள் அவர் இல்லா விட்டால் பரவாயில்லை. அந்த விழுந்த பரிசுச் சீட்டை நீங்கள்கூட ஓசைப்படாமல் எங்களிடம் ஒப்படைக்கலாம். அவரிடம் தருவதாகச் சொன்ன தொகையை நாங்கள் உங்களுக்குத் தந்து விடுகிறோம். இந்த நல்ல சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள். இன்னும் உங்களுக்காக இரண்டு நாட்கள் தவணை தருகிறோம்.



சோகத்தில் இருக்கும் உங்களுக்கு இந்தத் தகவல் இனிப்பாக இருக்கும் என்று நம்புகிறோம். இந்தக் கடிதத்தைத் தவறாகப் புரிந்து கொண்டு சீட்டை அரசாங்கம் வசமே ஒப்படைத்தாலும் எங்களுக்கு கவலையில்லை. அநியாயமாக நீங்கள் வரிகட்டி நஷ்டப்பட வேண்டாம் என்ற நல்ல எண்ணத்தில் இதை எழுதுகிறோம்.

அதன் பிறகு உங்கள் இஷ்டம்.

இப்படிக்கு,
பாபாவுக்காக பார்த்திபன்.

கடிதத்தைப் படித்து முடித்த சம்பத்தின் கண்களில் விவரிக்க முடியாத விரிவு.

''என்னண்ணே இது...நாமென்னமோ சீட்டை கைல வெச்சுகிட்டு நிக்கற மாதிரி இப்படி எழுதியிருக்காங்க யாரு இந்த பார்த்திபன்?''

வித்யாதான் கேட்கிறாள். பக்கத்தில் அசமந்தமாய் சரஸ்வதி.

''டேய் என்னடா இதெல்லாம்?''-அவளும் தன் பங்கிற்கு புலம்பத் தொடங்குகிறாள்.

''அப்பா தற்கொலை செய்து கிட்டார்னு ஊர் நினைச்சுகிட்டிருக்கிற விஷயம் கூட இவங்களுக்குத் தெரிஞ்சுருக்கே அப்படின்னா இந்த பார்த்திபன் நம்ம குடும்பத்தைக் கண்காணிச்சுகிட்டே இருக்கான் போல இருக்கு...''-சம்பத்திடம் கவலை நிரம்பும் முணுமுணுப்பு.

''அண்ணே, அப்பா சாவு தற்கொலையில்லை, கொலைன்னு வெளில தெரியாதா?''

''தெரியாது...தெரியக் கூடாதுங்கறது ருத்ரா அங்க்கிள் உத்தரவு. அதனாலதான் பத்திரிகைல செய்தி கூட வரலை.

''ஏன் தெரியக் கூடாது?''

''சீட்டைத் திருடி அப்பாவைக் கொன்றுக்காங்க. அப்படி செய்த கொலை நமக்குத் தெரியாதுன்னு நினைச்சுக்கிட்டிருக்காங்க. நாம தற்கொலைன்னு நம்பினாதான் கொன்ன நபர் சீட்டை தைரியமா பேங்க்ல புரொட்யூஸ் பண்ணுவான். இல்லேன்னா 'மாட்டிக்கு வோம். சில்லங்கம் வரும்னு' புரொட்யூஸ் பண்ணவே மாட்டான்.''

''சீட்டைத் திருடிகிட்டு அப்பாவைக் கொன்னுருந்தா இப்படி எதுக்கு லட்டர் வருது. இந்த லட்டர் படி பார்த்கா, லாட்டரி சீட்டு நம்மகிட்ட இருக்கற மாதிரியும் நாம என்ன பண்றதுன்னு தெரியாம முழிச்சிகிட்டிருக்கிற மாதிரியுமில்ல படுது...''

''நல்ல கேள்வி வித்யா. எனக்கும் அதுதான் புரியலை, ஒரு வேளை, சீட்டைத் திருட முயற்சி நடந்திருக்கும் போது அப்பா இறந்துட்டாரோ?''

''நான் அப்படிதான் நினைக்கறேன். லாட்டரிச் சீட்டை அப்பா எங்கியாவது பத்திரமா வெச்சிருக் கணும்...''

—வித்யாவின் கருத்தை சரஸ்வதி கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

''அப்படித்தான் இருக்கும்...அப்படித்தான் இருக்கும். நல்லா தேடிப்பாருங்க.மகமாயி... அந்தச் சீட்டு எங்கையும் போயிடக் கூடாது. அது இங்கையே எங்கையாவது இருந்து, எங்க வாழ்க்கைல விளக்கேத்தி வைக்கணும்...''



-சரஸ்வதியின் அந்தப் புலம்பல் சம்பத்தைக் கிள்ளியது. ''அம்மா பணம் பணம்னு ஏன் கிடந்து அலைமோதறே. அப்பாவை விட பணம் பெரிசா?''

''இப்போதைக்கு பணம் தான்டா நமக்கு எல்லாம். உன் தங்கைக்குக் கல்யாணம் பண்ணனும், நீ நல்ல தொழில் பண்ணனும். நம்ம பழைய வாழ்க்கைல பாதி அளவுக்காவது நாம திரும்பணும். இதெல்லாம் நடந்தா தான்டா நமக்கு வாழ்க்கை அதுக்குப் பணம்தான் முதல் தேவை.

''சரி சரி கத்தாதே... தேடிப் பார்க்கலாம். நான் இப்பவே ருத்ரா அங்கிளுக்கு இந்த லட்டர் சம்பந்தமா தகவல் தரேன்...''

சம்பத் சட்டையை மாட்டிக் கொண்டு வெளியே கிளம்ப ஆயத்தமானான். சரஸ்வதி பெரிதாக முன்னால் வந்து மறித்தாள்.

''எதுக்குடா?''

''அம்மா இந்தக் கேஸ்ல அவர் நமக்காக நாயா அலைஞ்சுகிட்டு இருக்காரும்மா. அவர்கிட்ட ஒவ்வொரு விஷயத்தையும் சொல்றதுதான் நமக்கு நல்லது.''

' சொல்லாதே... இனிமே எதையும் சொல்லாதே...'' -சரஸ்வதி தீர்க்கமாகப் பேசினாள்.

''அம்மா, என்ன பேசறே நீ?''

'ஆமா...இனிமே நீ எதையும் சொல்லாதே. நீ எதைச் சொன்னாலும் உன் அப்பா எழுந்து வந்திடப் போற தில்லை...''

''எல்லாமே பிறகுதான்...முதல்ல சீட்டைத் தேடு. சீட்டு கிடைச்சி அதை, இந்த பார்த்திபன் கிட்டையே கொடுப்போம். பணத்தை வாங்குவோம். மத்த விஷயங் களைப் பிறகு பேசிக்கலாம்...''

சம்பத்தின் பார்வை சரஸ்வதியை பெரிதாக பிராண்டத் தொடங்கியது. அம்மாவின் மறுபக்கத்தில் இப்படிக் கூட ஆசைப்புயல் வீசுமா? ஆச்சரியம்தான்... அவன் மாய்ந்து போய் அவளையே பார்த்தான்.

''அம்மா சொல்றதும் சரிதான் அண்ணே... நாம முதல்ல சீட்டைத் தேடுவோம். அது கிடைக்கட்டும்-பிறகு மத்த விஷயங்களைப் பார்த்துக்கலாம்...''-வித்யாவும் ஒத்து ஊதினான்.

''பைத்தியங்களா...''-சம்பத் கத்தத் தொடங்கினான்.

''உங்களுக்கெல்லாம் காசு ஆசை பிடிச்சிடுச்சு. அதான் கொஞ்சம் கூட யோசிக்காமப் பேசறீங்க. அப்படியே சீட்டு நம்ம கிட்ட இருந்தாலும், அது என்னோடதுன்னு சொல்லிக்கிட்டு ஒரு ரிக்ஷாக்காரன் வந்து கத்திட்டுப் போனானே ஞாபகம் இருக்கா? அவன் நம்பளை சும்மா விடமாட்டான். லாட்டரிச் சீட்டை நேரிடையா வாங்கினவன் அவன்தான். அவன் பையன் திருடி வித்த சீட்டைத்தான் நம்ம அப்பா வாங்கி யிருக்காரு...''

''அதுக்கு என்ன அத்தாட்சி இருக்கு? அவன் பொய் சொல்றான்னு சொல்வோம். மீறிச் சமாளிக்க முடியாம போனா, அவனுக்கும் கொஞ்சம் பங்கைக் கொடுத்துத் தொலைப்போம்...''

-வித்யாவின் இந்தத் தீர்மானம் ஒரு விதத்தில் சம்பத்தை போட்டு கலக்கியே விட்டது.

''நீங்க அந்தச் சீட்டையும் பரிசையும் விட்றதில லைன்னு தீர்மானிச்சுட்டீங்களா?''

''பேச நேரமில்லை. போய்த் தேடுங்க. நானும் தேட றேன்...''



சரஸ்வதி கட்டளையாகப் பேசிவிட்டு-சுவாமி படம் ஒன்றின் எதிரே போய் கைகூப்பினாள். பின்னர் பெட்டிப் படுக்கை என்று துழாவ ஆரம்பித்தாள்.

சம்பத்திடம் ஆச்சர்யமான ஆச்சர்யப்.

கைவசம் அந்த பார்த்திபனின் கடிதம்.

அதைப் பார்த்த போது அவனையும் அறியாமல் சிரிப்பு வந்தது. அதே சமயம் வாசல் பக்கம் யமாஹாவின் சிக் சிக் ஓசை... எட்டிப் பார்த்த சரஸ்வதியின் முகத்தில் எள் வெடித்துக் கொண்டிருந்தது. ருத்ரா உள்ளே நுழைந்து கொண்டிருந்தார்!

# 7

''வாங்க அங்கிள்...'' மரியாதையாக வரவேற்று ஒரு நாற்காலியைக் காட்டி உட்காரச் சொன்னான் சம்பத்.

ருத்ராவின் முகம் வாட்டிய சப்பாத்திபோல் வதங்கி இருந்தது. கண்களில் குழப்பத்தின் கொப்பளிப்பு.

வேகமாக அவர் எதிரே பார்த்திபனின் கடிதத்தை மடித்து சட்டைப்பையில் வைத்துக் கொண்டான்.

ருத்ரா அதை எல்லாம் கவனித்தாரா, இல்லையா என்பதே தெரியவில்லை.

''ஏன் அங்கிள் ஒரு மாதிரி இருக்கீங்க?''-சம்பத்திடம் நைச்சியமான துவக்கம்.

ருத்ரா உடனே அவனை ஏறெடுத்தார்.

''அந்த ரிக்ஷாக்காரன் கிடைச்சிட்டாம்பா...'' என்றார் படக்கென்று. சம்பத் அதைக் கேட்டு திடுக்கிட்டு

நின்றான். அவனைப் போல பல மடங்கு திடுக்கிட்டு கண் களை அகட்டி விரித்தார்கள் சரஸ்வதியும் வித்யாவும்...

ருத்ராவுக்கு அவர்கள் போக்கு ஆச்சரியத்தைத் தந்தது.

'இவர்கள் முகம் ஏன் இப்படி அறைபட்ட மாதிரி ஆகிறது?' அவர் கேள்விக்குள் நுழையும் சமயம் சம்பத் திடம் இலேசான திணறல். பார்த்திபன் கடிதம் பாக்கெட் டில் அவனைக் குழப்பியது.

கடிதத்தை ருத்ராவிடம் காட்டி வழக்கம் போல செயல்படலாமா, இல்லை அம்மாவும் தங்கையும் ஆசைப் பட்டபடி ஓசைப்படாமல்...

—அவன் நினைப்பு ரயில் பெட்டி போல் நீண்டு வளைய பாக்கெட்டில் பிதுங்கலாகத் தெரிந்த கடிதத்தை ருத்ராவும் பார்த்து விட்டார்.

''அது என்ன லெட்டர் சம்பத்?''-கேட்டும் விட்டார். இதற்கு மேல் மௌனம் சாதிப்பது சரியல்ல என்பதுபோல அந்தக் கடிதத்தை எடுத்து மௌனமாக அவர் எதிரே நீட்டினான் சம்பத்.

நிதானமாகப் படித்த ருத்ராவிடம் மேலும் குழப்பத் தின் பரிமாணம்.

''இந்தக் கடிதப்படி பார்த்தா சீட்டு அப்பாகிட்ட தான் இருந்திருக்கு. அந்த சீட்டுக்காக கொன்னவங்க கைக்கு அது இன்னும் போய் சேரலை. சீட்டைக் கேட்டு கூட இந்தக் கோலை நடந்துருக்கலாம், இல்லியா அங்கிள்...''

சம்பத் அவருக்கு தன் யூகத்தை எடுத்துக் கொடுத் தான். சரஸ்வதி அவனை முறைத்துப் பார்த்தாள். ''சண்டாளா...சொல்ல வேண்டாம் என்ற தகவலைச்



சொல்லி விட்டாயே...'' என்பது போல் பார்த்து மனதுக்குள் சபித்தாள்.

ருத்ராவிடம் நெடுநேரம் மௌனம். ''ஏன் அங்கிள் பேச மாட்டேங்கிறீங்க?''

''இந்த லாட்டரிச் சீட்டு விஷயத்துல இன்னும் எத்தனை எத்தனை திருப்பங்களோ தெரியலை...'' என்றார்.

''நீங்க என்ன சொல்றீங்க அங்கிள்.''

''ரிக்ஷாக்காரன் கிடைச்சுட்டான்னு சொன்னேன் இல்லியா? அவன் உயிரோட கிடைக்கலைப்பா, பிணமா தான் கிடைச்சிருக்கான்...கொலை செய்யப் பட்டிருக் கான்...''

ருத்ராவின் அந்தத் தகவல் சம்பத்தை வாய் பிளக்க விட்டது. சரஸ்வதியிடம் மட்டும் அப்பாடா என்கிற பெருமூச்சு...

சரஸ்வதியின் அந்தப் போக்கு ருத்ராவுக்கு பெரிய ஆச்சரியமாக இருந்தது. கணவனை இழந்து கண்ணில் சோகத்தைக் காட்டியபடி ஒரு துரும்பாக இளைத்து இயங்கித் திரியவே சக்தியற்ற நிலையில் இருக்க வேண்டிய வளிடம் ஆயிரம் படபடப்பு. பார்வையில் ஏதோ மூடி மறைக்கும் உணர்வு.

'என்ன அங்கிள் சொல்றீங்க... ரிக்ஷாக்காரன் கொலை செய்யப் பட்டிருக்கான்?'' அதிர்ச்சியிலிருந்து மீண்டும் சம்பத்தின் முன் ருத்ராவின் சிரம் களைப் போடு அசைகிறது.

''யெஸ்... அன்னிக்கு உங்க வீட்ல சத்தம் போட்டுட்டு போனவனை வழியிலேயே யாரோ தீர்த்துக் கட்டி சாக்கடையில போட்டுட்டு போயிருக்காங்க...''

''ஸ்டேஷன்ல உங்களுக்கு வந்த போன்... அதாவது அந்த அண்ணா காலனி குப்பம் சாக்கடைப் பிணம் இவங்கதானா?''

''இவங்களேதான்...''

- இருவரும் பேசும் சமயம் சரஸ்வதியும் வித்யாவும் தங்கள் தேடும் படலத்தைத் தொடங்கி விட்டிருந்தனர்.

''அம்மா லைன் க்ளியர்...போட்டிக்கு வருவான்னு நினைச்சுக்கிட்டிருந்த ரிக்ஷாக்காரனும் அவுட்...''—தேடும்போது வித்யா சரஸ்வதியின் காதோரமாகக் கிசுகிசுக்கிறாள்.

''எல்லாம் அந்த சாமி செயல்...'' சரஸ்வதியிடம் முணுமுணுப்பு.

''ஆனா...சாகற யாரும் இயற்கையா சாகலை. கொல்லப்பட்டுகிட்டே வர்றாங்க. முதல்ல அப்பா...

அடுத்து அந்த டேனியல்...

மூணாவது ரிக்ஷாக்காரன்...

எனக்கு நினைச்சாலே லேசா பயமா இருக்கு. இதத னைக்கும் சீட்டு எங்க இருக்குன்னும் தெரியலை. பணமும் மாத்திகைக்கு வரலை. அம்மா மர்மமா என்னமோ நடக்குதும்மா...''

வித்யா விரிவாகப் பேசவும் முதல் முறையாக சரஸ்வதியின் இதயம் கூட பயந்து துடிக்கத் தொடங்கியது.

''ஆமாம்மா...நீ சொல்றதை யோசிச்சுப் பார்க்கும் போதுதான் தெரியுது. என்னமோ நடக்குது...''—பண ஆசை உதிர்ந்து பயம் அவள் மென்னியில் மெல்ல ஏறத் தொடங்கியது.



''சீட்டு என்னமோ நம்மகிட்டதான் இருக்கறமாதிரி இந்த பார்த்திபன்கறவன் வேற லெட்டர் போட்டுகிட்டிருக்கான். அம்மா யாரும்மா, இந்த பார்த்திபன்?''

வித்யா கேட்ட கேள்வியைத்தான் ஹாலில் ருத்ராவிடம் சம்பத் கேட்டுக் கொண்டிருந்தான்.

''அங்கிள், இனி கொஞ்சமும் தாமதிக்காம இந்த பார்த்திபனை கண்டு பிடிக்கணும். யார் இந்த பார்த்திபன்?''

அவன் கேள்விக்குப் பதிலாக ருத்ரா கடிதத்தின் தபால் முத்திரையை ஊன்றிப் பார்த்தார். கடிதத்தில் திருப்பரங்குன்றம் முத்திரை!

''லெட்டர் திருப்பரங்குன்றத்துல போஸ்ட் செய்யப்பட்டிருக்கு... உங்கப்பாவுக்கு அங்க யாரும் பழக்கம் உண்டா?'' ருத்ராவின் கேள்விக்கு தடவத் தொடங்கின சம்பத், மூளைச் செல்களில் திருப்பரங்குன்றம் குறித்து யோசித்து களைத்ததுதான் மிச்சம்.

''அப்பா கிருத்திகைக்குக் கிருத்திகை திருப்பரங்குன்றம் போவார். அங்க பாஸ்கர பாபுங்கற காண்ட்ராக்டரும் அப்பா கூட சேர்ந்துக்குவார்... ஒரு தடவை அப்பா பாஸ்கர பாபு கொடுத்தார்னு சொல்லி பஞ்சாமிர்தம் கொண்டுகிட்டு வந்து கொடுத்தார்... நல்லா ஞாபகம் இருக்கு.''

பேச்சோடு உள்ளே நுழைந்தாள் வித்யா. ருத்ரா அவளை ஆச்சரியத்தோடு கவனித்தார். இலேசான ஒரு நன்றிப்பார்வை. உதட்டில் 'பாஸ்கரபாபு' என்கிற முணுமுணுப்பு. இரண்டொரு தடவை அதை சொல்லிச் சொல்லி பார்த்த போது அதற்குள் 'பாபா' என்ற சப்தம் தூக்கலாக ஒலிக்கவும் கண்களில் வினக்கெரிந்தது ருத்ராவிடம்.

''பாஸ்கரபாபு... யெஸ்! பாஸ்கரபாபுதான் பாபா... அவன்தான் பாபாவா இருக்கணும்...''- உற்சாகமாகக் கத்தினார்.

''அங்கிள் பாஸ்கரபாபுதான் பாபான்னே வெச்சுப் போம். அவனை இப்போ நாம பாத்து என்ன ஆகப் போகுது? சீட்டு இருந்தா சப்மிட் பண்ணு, நான் பணம் தரேன்னு சொல்லியிருக்கான்... இதுல இருந்தே சீட்டு அவன்கிட்ட இல்லைன்னு தெரிய வருது. சீட்டு எங்க யார் கிட்ட இருக்கும்னும் தெரியலை.

இந்த நிலையில பாபாவைப் பார்த்து ஆகப் போற விஷயம் என்ன?''

வித்யாதான் அத்தனை அணு சுத்தமாக கேட்டாள். ருத்ராவிடம் அதை கேட்க இலேசான சிரிப்பு.

''உங்கப்பாவுக்குப் பரிசு விழுந்த விஷயம் பாபா வுக்குத் தெரிஞ்சிருக்கு. எப்படித் தெரிஞ்சது? உங்கப்பா சொல்லியா இல்லை வேற ஆள் மூலமாவாங்கறது பாபாவை பார்த்தா தான் தெரியும்...

அது மட்டுமல்ல சீட்டு, பாபாகிட்ட இல்லைன்னா சீட்டு தொடர்பான நபர்கள் வரிசையா ஏன் சாகணும்?

முதல்ல உங்கப்பா... அடுத்து சாட்சி டேனியல்... மூணாவது சீட்டை நான்தான் வாங்கினேன்னு கத்திய ரிக்ஷாக்காரன்...

இவங்களை யார் கொலை செய்தாங்க?

ஒரு பக்கம் வரிசையா கொலைகள் - மறுபக்கம் சீட்டு தன்கிட்ட இல்லை; இங்கதான் எங்கியோ இருக்குன்னு நம்மளை ஏமாத்த இந்த மாதிரி கடிதம் இதெல்லாமே அந்த பாபாவோட செயல்தாம்மா...



உங்கப்பா சீட்டைக் கொடுத்து பணத்தை வாங்க போயிருக்கணும். சீட்டை வாங்கிகிட்டு பணத்தைக் கொடுக்காம கொன்னுருக்கணும். கொன்ன மனிதரை சாமர்த்தியமா உங்க வீட்டு தோட்டத்துக்கே கொண்டு வந்து தூக்கில போட்டுட்டாங்க...

அது மட்டுமில்லை அன்னிக்கே சீட்டு என்னுதுன்னு சப்தம் போட்ட ரிக்ஷாக்காரனையும் கவனிச்சு கொன் னுட்டாங்க. தான் சீட்டை புரொட்யூஸ் பண்ணும்போது இந்த டேனியல், நான் இவங்களுக்கு விக்கலைன்னு ஒரு வேளை சொல்லிட்டா என்ன பண்றதுன்னு நினைச்சு காரை ஏற்றி அவனையும் கொன்னுட்டாங்க.

இதுதான் நடந்திருக்கு.'' ருத்ராவின் விவரிப்பில் சம்பத் உறைந்தே போய்விட்டான்.

''நடந்த எதையும் போலீஸ் இன்னும் கொலைன்னு சொல்லி பேப்பர்களுக்கு தகவல் தரலை. அப்படி தகவல் தந்தா அது லாட்டரி சீட்டுக்கான கொலைன்னு தெரிய வந்துடும். சீட்டு யார்கிட்ட இருந்தாலும் புரொட்யூஸ் பண்ணும் போது மாட்டிக்க வேண்டி வந்துடும்னு பண்ணாம விட்டுடலாம். அதனாலதான் நாங்க பத்திரிகைகளுக்குச் சொல்லலை. அதே சமயம் எல்லா பேங்க் மேனேஜர்க்கும் தகவல் தந்துட்டோம்...''

''அப்படின்னா சீட்டு பாபாகிட்டதான் இருக்குன்னு சொல்றீங்களா?''

''யெஸ்... எனக்குச் சந்தேகமே இல்லை. ஒருவாரம் பார்ப்போம். நாம் செய்த கொலைகள் எந்த மாதிரி போலீஸால யோசிக்கப்படுதுன்னு கவனிப்போம். லாட்டரிச் சீட்டு சம்பந்தமா யோசிக்கப்படாம கொலை நடந்ததே எதுக்குன்னு தெரியாம போலீஸ் மண்டையை பிச்சிக்குதுன்னு கவனிப்போம். அப்படிச் செய்தா

டிக்கட்டை பேங்க்ல சப்மிட் பண்ணலாம்னு அவர் தெனைச்சுருக்கலாம்...''

''அப்படின்னா அந்த சீட்டை இன்னும் இரண்டு நாள்ள பாபா பேங்க்குல சப்மிட் பண்ணனும் அப்படித் தானே?''

''நிச்சயமா... யார் கிட்ட இருந்தாலும், சீட்டு முடங்கிடக்கூடாதுன்னு நாங்க கவனமாக நடந்துகிட்டதுக்கான பலன் இரண்டு நாள்ல தெரிஞ்சுடும்.''

''ஆல் த பெஸ்ட் அங்கிள். ஆமா, பாபா யார்ங்கறது இப்போதானே நான் சொல்லி தெரிய வந்துருக்கு. எப்படி முன்கூட்டியே இப்படி பிளானிங்கா நியூஸை பத்திரிகைகளுக்கு தராம விட்டீங்க. ''வித்யாதான் கேட்டாள்.

''பாபா வேணும்னா யாருன்னு எனக்குத் தெரியாம இருந்திருக்கலாம். ஆனா ஒரு எக்ஸ்தான் இதை எல்லாம் செய்யணும்னு தான் நினைச்சது சரியாப் போயிடிச்சு, இப்ப, அந்த எக்ஸ் பாபாதான்னு நாம் நம்பறேன்.''

ருத்ராவிடம் ஒரு புதிய தெளிவு. குழப்பம் விலகி வெளிச்சம் பரவுகின்ற மாதிரி உணர்வு.

எல்லோரிடமும் ஆச்சரிய தோற்றுதல்.

''பாஸ்கர பாபுங்கற பாபு மாட்டிக்கிட்டியா?''

# 8

ஸ்டேஷன் வாதநாராயண மரத்திற்கு அந்தக் காக்கை வந்து சேர்ந்தபோது மணி பத்து இருக்கும்.



ஏதோ ஒரு அடிதடி வழக்குக்காக இரண்டு பேர் கான்ஸ்டபிள் ஒருவரிடம் மாட்டிக் கொண்டு விழித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் ஆளுக்கு ஆள் ஐம்பது நூறாக அழுத கணக்கைப் போட்டுப் பார்த்து ஸ்டேஷனுக்கு. வெளியே வந்து தோள் மேல் கை போட்டு ஸ்னேகமாகச் சிரித்தும் கொண்டனர்.

லஞ்சம் அழுத பிறகு தங்களுக்கு வந்த ஞானத்தை நினைத்துப் பார்த்தும், கோர்ட்டுக்குப் போகாமல் இடை வழியிலேயே மனம் மாறி சமரசத்துக்கு வந்து விட்டதையும் பார்த்தபோது அவர்களுக்கே அவர்களை எண்ணிச் சிரிப்பு வந்தது.

இருவரையும் ஸ்னேகமாக பார்த்த கான்ஸ்டபிளிடம் அதிர்ச்சி...

''என்னய்யா சமரசமா போயிட்டீங்க?''

''உங்களுக்கு அம்பது ரூபாயும், நூறு ரூபாயும் அப்பப்போ அழுவறத விட இது பெட்டரா பட்டிச்சு. சாட்சிக்காரன் காலை விட சண்டைக்காரன் காலே மேல்னு சும்மாவா சொல்லியிருக்காங்க.''

கேள்வி கேட்டுவிட்டு வழக்கு வாபஸ் என்று எழுதியும் கொடுத்து விட்டு வெளியேறினர்.

லஞ்சத்தால் இப்படியும் ஒரு ஞானமா?

வாதா மரத்து காக்கையிடம் ஆச்சரியம்...

அப்பொழுதுதான் ருத்ரா நுழைந்தார்.

மிகத் தெளிவாக உற்சாகமாகத் தெரிந்தார்.

மனம் முழுக்க பாஸ்கரபாபுவை பற்றியே எண்ணம்.

டேபிளில் வந்து அமர்ந்தபோது பாஸ்கரபாபு பற்றிய ஃபைல் காத்திருந்தது.

அதில் அவரது ஏற்பாட்டின்படி துப்பறியப்பட்ட தகவல்கள்.

பாஸ்கர பாபுவின் ஜாதகமே அதில் இருந்தது.

ஏறத்தாழ ஐம்பது வயதுத் தொழிலதிபர். செங்கல், வெல்லம், வெங்காயம் என்று, ஜடப்பொருள் உயிர்ப் பொருள் என சகல வியாபாரத்திலும் மனிதர் ஈடுபட்டி ருப்பது தெரிந்தது.

திருப்பரங்குன்றம் வட்டாரத்திலேயே மிகப் பெரிய மனிதராக அனேக தர்ம காரியங்களை எல்லாம் செய்பவ ராக ஃபைல் அவரைப் பற்றிய செய்தியைச் சொன்னது

விரைவில் அரசியலில் குதித்து எம்.எல்.ஏ. ஆக இருப்பதாக சிவப்புக் கட்டத்தில் ஒரு செய்தி ருத்ராவைக் கிள்ளியது.

கூடவே பாஸ்கர பாபுவின் ஒரு புகைப்படம் படத்தில் சுவரோடு கூட்டுறவுத் துறை மந்திரியும் மாலையும் கழுத்துமாகச் சிரிக்கிறார்.

நான் இலேசுப்பட்ட மனிதனில்லை என்பதுபோல பாஸ்கர பாபுவின் இதழ்க் கடையிலும் துளி புன்னகை.

சந்திர வழுக்கை...

சக்கை மீசை

கதர் ஜிப்பா வேட்டி

கூப்பியிருக்கும் கைவிரல்களில் நவரத்ன மோதிரம்.

அகண்ட மேம்பாலம் போன்ற நெற்றி.

அதில் பிறைக் கீற்று போல குங்குமம்.

புகைப்பட பாஸ்கரபாபு ருத்ராவை இலேசாக மிரட்டுகிறார். வில்லத்தனத்தை பாஸ்கரபாபுவிடம்



பொருத்திப் பார்க்கிறது ருத்ராவின் மனது, பொருந்துவ தாக உள் மனது சொல்கிறது.

அப்பொழுது எதிர்பாராத விதமாக திருப்பரங் குன்றம் எஸ் ஐ. ரகுநாத பெருமாளே அங்கு வர ருத்ரா விடம் பிரத்யேக உற்சாகம்.

''வாங்க ரகு...உங்க ஊர் வருங்கால எம்.எல்.ஏ. பற்றிதான் யோசிச்சுக்கிட்டிருக்கேன்.''

''யார் பாஸ்கரபாபு பத்தியா?''-ரகுநாத பெருமாள் சட்டென்று அப்படிக் கேட்டதில் ருத்ராவிடம் இலேசான அதிர்ச்சி.

''எக்ஸாக்ட்லி ரகுநாத்...என் கேள்வியை எப்படி இவ்வளவு கரெக்டா புரிஞ்சுகிட்டு பதில் சொன்னீங்க?''

''நான் மட்டுமில்லை ருத்ரா...என் ஏரியாவுல யார் கிட்ட நீங்க கேட்டாலும், அவங்க இந்த பதிலை யோசிக்காம சொல்வாங்க. ஏன்னா, பாஸ்கரபாபு அவ்வளவு ஃபேமஸ்.''

''உங்க அனுபவத்துல பாஸ்கரபாபு எப்படி?''

''ஏன் கேக்கறீங்க ருத்ரா?''

''காரணமாகத்தான் ரகுநாத். பாஸ்கரபாபு ஒரு பெரிய கிரிமினலா என் வரையில் விஸ்வரூபம் எடுத்து கிட்டிருக்கார்.''

''ஆச்சரியமாயிருக்கே எப்படி?''

''சாரி, நான் இப்ப காரண காரியங்களைச் சொல்ல முடியாது. மூணு கொலைல அவருக்குத் தொடர்பு இருக் கிறதா நான் சந்தேகிக்கிறேன்.''

''இம்பாஸிபிள்!'' டேபிளைக் குத்தியபடி எழுந்திருந் தார் ரகுநாத பெருமாள்.

24180
4097938

''நீங்க ஏன் டென்ஷனாகறீங்க, ரகுநாத்?''

''எனக்குத் தெரிஞ்சு கொலை செய்ய சந்தர்ப்பம் கிடைச்சும் அவருடைய பிரதான எதிரிகளைக் கொல்லாம என்கிட்ட ஒப்படைச்சு சட்டம் தந்த தண்டனையை மட்டும் வாங்கித் தந்தவர் அவர்...

அவர் மனசு வைச்சிருந்தா எவ்வளவோ கொலைகளை மிக சாமர்த்தியமா பண்ணிட்டு தப்பிச்சிருக்கவும் முடியும். ஆனா பாபா அப்படிப்பட்ட மனுஷரில்லை.''

''பாபாவா?''

''யெஸ்... அவரை சுருக்கமா அப்படித்தான் மரியாதையா கூப்பிடறாங்க!''

''பாபாவை தெரிஞ்ச உங்களுக்கு பார்த்திபனையும் தெரிஞ்சிருக்கணுமே...''

''யெஸ்...ஐ நோ வெரி வெல். பார்த்திபன் பாபாவோட ரைட் ஹேண்ட்...''

''அப்படின்னா என் யூகம் சரி மிஸ்டர் ரகுநாத். பாபா ஒரு சாமர்த்தியமான கொலைகாரர்...''

''திரும்பவும் சொல்கிறேன் ருத்ரா. அவசரப்படாதீங்க. பாபா விஷயத்துல அவசரப்பட்டா அது உங்க எதிர்காலத்தை ரொம்பவும் பாதிக்கும்.''

''என்ன...அவரோட அரசியல் சாவகாசமும், பணமும் என்னை தண்ணியில்லாத காட்டுக்கு மாற்றும், அவ்வளவுதானே?''

''நோ...நோ...இந்த மாதிரி அசட்டு தைரியம் வேண்டாம். நெஜமாலுமே பாபா ரொம்ப நல்ல மனுஷர். அதனால சொல்றேன்.''

''ஒருவேளை நீங்க அவர்கிட்ட கைநீட்டிட்டீங்களோ?''



—ருத்ராவின் அந்தக் கேள்வி ரகுநாத்தை பலமாகவே கிறியது.

''ஸ்டாப் இட் ருத்ரா. என்னைப்போல நீங்களும் ஒரு பொறுப்புள்ள போலீஸ் அதிகாரி. பொய்யான யூகங்களால் பலி ஆகிவிடக் கூடாதுங்கற சென்ஸ்ல நான் சொன்னதை நீங்க தப்பா புரிஞ்சுகிட்டீங்க. உங்க கேஸ்ல நீங்க பாபாகிட்டே நெருங்கிப் பாருங்க. நான் சொன்னதைப் புரிஞ்சிப்பீங்க...''

—ரகுநாத்தின் அந்தக் கோபமான பேச்சின் முன் நெடுநேரம் வரை ருத்ரா எதையும் பேசவில்லை. பின்னர் அந்த மௌனத்தில் இருந்து மெல்ல விடுபட்டு பாபாவுக்காக பார்த்திபன், மித்ராவுக்கு எழுதிய முதல் கடிதத்தைத் தூக்கி ரகுநாத் எதிரே விரித்தார்.

அதைப் படித்த ரகுநாத் முகத்தில் ஓட்டாஞ்சில் விழுந்த நீர்ப்பரப்பு போல சலனம்.

''ஆமா யார் இந்த மித்ரா?'' பின்னர் அவரிடம் சன்னமான குரலில் கேள்வி.

''முன்னாள் கோடீஸ்வரர். சாகும்போது ஒரு பாப்பர்,''-ருத்ராவின் தீர்க்கமான பதில்.

''செத்துட்டாரா?''

''யெஸ்...சாதாரணமா சாகலை. கழுத்தை நெறிச்சுக் கொலை செய்யப்பட்டிருக்கார்.''

''உங்க யூகப்படி அதுக்கான காரணம்?''

''ஐம்பது லட்ச ரூபாய் பரிசு விழுந்த ஒரு லாட்டரிச் சீட்டுதான்.''

''எப்படி?''

''மித்ரா கிட்டே இருந்த ஒரு லாட்டரிச் சீட்டுக்கு ஐம்பது லட்சம் பரிசு விழுந்திருக்கு. சீட்டை கவர்மென்ட்ல புரொட்யூஸ் பண்ணினா வரிபாக்கி போக நாற்பது நாற்பத்தி இரண்டுலட்சம்கூட தேறுமாங்கறது சந்தேகம். பாபாவோ ஐம்பது லட்சம் அப்படியே தருவதா சொல்லி மித்ராவைக் கூப்பிட்டு சீட்டை வாங்கிக்கிட்டு பணம் தராம கொன்னுட்டார்.''

''இதுல பாபாவுக்கு என்ன லாபம்?''

''தன் கிட்ட இருக்கற கறுப்புப் பணத்தை வெளுரா பாக்கிக்க முடியுமே. லெட்டர்லையே அதை ஜாடையா சொல்லியிருக்காரே தெரியலையா?''

—ருத்ராவின் அந்த மடக்கலில் ரகுநாத் நெடுநேரம் எதுவுமே பேச முடியவில்லை.

''என்ன ரகுநாத் பேச்சைக் காணோம்...பாபாவுக்காக பெரிசா வக்காலத்து வாங்கினீங்களே...''-ருத்ராவிடம் கிள்ளல்.

ரகுநாத் முகம் அதைக் கேட்டு இளக்காரமான புன்னகையோடு நிமிர்கிறது. ருத்ராவுக்கும் அதைப் பார்க்க ஆச்சரியம். ''இப்பவும் சொலறேன் ருத்ரா. பாபா நல்ல மனுஷன்தான். இந்த லெட்டர் ஏதோ ஃப்ராடு.''

''எப்படிச் சொல்றீங்க ரகுநாத்.''

'ஐம்பது லட்சத்துக்கெல்லாம் ஒரு கொலைல ஈடுபட்ற சீப்பான ஆள் கிடையாது பாபா. அடுத்து எந்த கொலைகாரனும் ஒரு கொலையை செய்துட்டு இப்படி அகபபட்டுக்கற மாதிரி லெட்டர்லாம் போட்டு எங்கப்பன் குதிருக்குள்ற இல்லைங்கற மாதிரி காட்டிக்க மாட்டான்.



அப்படியே பாபா உங்க கணக்குப்படி கொலை செய்ய ஆசைப்பட்டிருந்தா, தன் ஆட்களை விட்டு நேர்லையே மித்ராவை அழைச்சுகிட்டுதான் வரச் சொல்லியிருப்பார் லெட்டர்லாம் போடமாட்டார்.''

பொட்டில் அறைந்த மாதிரி பேசிய ரகுநாத பெருமாளை ருத்ரா தீர்க்கமாகப் பார்க்கிறார்.

அழுத்தம் திருத்தமான அந்த பேச்சு அவரை வெகுவாக யோசிக்க வைக்கிறது. வாஸ்தவம்தான் என்பது போல எண்ண வைக்கிறது. ''உங்களுக்குச் சந்தேகம் இருந்தா இப்பவே என்கூட பாபாவை பார்க்க வாங்க. எல்லாமே கிளியராயிடும்''

ரகுநாத பெருமாள் அழைத்தபோது டெலிபோன் சிணுங்கியது.

காதைக் கொடுத்தவர் முகத்தில் ஆச்சரிய ரேகையின் மின்னல் ஓட்டம்.

''வாட் ஹேப்பண்ட்?'' ரகுநாத பெருமாள் கேட்கிறார்.

''அந்த ஐம்பது லட்ச ரூபா லாட்டரிச் சீட்டை காயத்திரிங்கற ஒருசின்ன பொண்ணு தன்சீட்டு, தனக்குப் பரிசு விழு திருக்குன்னு பேங்கில புரொட்யூஸ் பண்ணியிருக்கானாம். பேங்க் மேனேஜர் போன் பண்ணி சொல்லியிருக்கார்.''

''உங்க யூகப்படி பாபாகிட்டசீட்டு இருந்தா அவரோ அவரை சார்ந்தவங்களோ தானே புரொட்யூஸ் பண்ணியிருக்கணும். அதுக்காகதானே கேஸை பத்தி ஓபனா டிஸ்கஸ் பண்ணாம, பிரஸ்நியூஸ் ஆக்காம இருந்தீங்க.

ஆனா, இப்ப யாரோ ஒரு சின்ன பொண்ணுன்னு சொல்றீங்க...

உங்க இன்வெஸ்டிகேஷன்ல எங்கேயோ தப்பு நடந்திருக்கு. அதை என்னன்னு கவனியுங்க''

—பேசின ரகுநாத பெருமாள் எழுந்து கொண்டார். ருத்ராவின் பார்வை அவரைக் கெஞ்சலாகப் பார்த்தது. பாதாளத்தில் நழுவிக் கொண்டிருப்பவரை போல அவரைக் காட்டியது. ''கொஞ்சம் நில்லுங்க'' என்று கை காட்டியது.

## 9

இந்தியன் பாங்க்!

புதிய மூன்று மாடிக் கட்டிடத்தின் மைய அடுக்கில் சதுரம் சதுரமாகப் பலகைப் பிரிவுகள். ஒவ்வொரு சதுரப் பிரிவிலும் ஒருமனித உடல் தாங்கும் ஃபேனின் காற்றுச் சுழற்சி போதாமல் வியர்வை நெளிசலோடு, ஃபைல்களை நகர்த்திக் கொண்டிருக்க அங்குமிங்குமாக வாடிக்கையாளர் கூட்டம்.

காஷ் கவுண்டரில் ரூபாய் நோட்டுக்களோடு லட்சக் கணக்கில் 'கபடி கபடி' ஆடிக் கொண்டிருந்தார் கேஷியர்

அருகில் மேனேஜர் அறை.

உள்ளே காயத்ரி! கூடவே அவளது மாமா சிவானந்தம்.

'காயத்ரி...'

இருபது வயசு இளமை உடம்பு. முழுக்க பாண்டி விளையாடிக் கொண்டிருந்தது. பால்கோவாவைக் கிளறிக்



கொட்டின மாதிரி இடுப்பு மடிப்பில் பெண்மையின் சப்பு கொட்டும் ரசனை.

பிரேசியரை வெளிக்காட்டும் ரவிக்கை.

கழுத்துச் சங்கிலி கர்வத்தோடு மாராப்பின் மேல் உரசியபடி கிடந்தது.

முகத்தில் படித்த களை. கூடவே ஐம்பது லட்சம் விழுந்த அபார சந்தோஷம். ஒரு பக்கமாய் வகிடெடுத்து வாரிய இடுப்பைத் தொட்ட கூந்தல் பின்னல். இடுப்புக்குக் கீழே முன் பின்னாய் பாந்தமான சதைக்கட்டு. மொத்தத்தில் பிரம்மன் சீரியஸான கவனத்தில் படைத்த மாதிரி ஒரு உடற்கட்டு!

மொத்தத்தில் காயத்ரியிடம் ஸ்ரீதேவிகளும், கௌதமிகளும் முகாம் போட்டிருந்தார்கள்.

ஆனால் காயத்ரியின் கண்களில் கொப்பளிக்கும் கோபம். காரணம் மேனேஜருக்கும் நன்றாகவே தெரிந்திருந்தது. அவள் லாட்டரிச் சீட்டோடு வந்து ஒருமணி நேரத்துக்கும் மேலாகி விட்டது. மேனேஜர் அவளை துளிகூட பொருட்படுத்தாமல் சீட்டை மட்டும் வாங்கி வைத்துக் கொண்டு பேசாமலிருந்தார்.

''ஏன் சார் எங்களை இப்படி உட்கார வைச்சுகிட்டு இருக்கீங்க? ஐம்பது லட்ச ரூபாய் சீட்டை நான் சப்மிட் பண்ணியிருக்கேன். ஒரு வவுச்சர் இல்ல, ரெசிப்ட் இல்ல... எங்களுக்கும் அடுத்து என்ன பண்றதுன்னு தெரியலை...''

காயத்ரி இலேசாகப் புலம்பியபோது கண்ணாடிக் கதவு திறக்கப்படும் சப்தம். திரும்பிப் பார்த்தபோது ருத்ரா. கூடவே ரகுநாத பெருமாள்!

மேனேஜருக்கு உயிர் வந்த மாதிரி ஒரு உணர்வு.

''வாங்க இன்ஸ்பெக்டர்... ப்ளீஸ் கம்! இவங்கதான் சீட்டை சப்மிட் பண்ணின காயத்ரி.''

அவர் உள்ளே நுழைந்த மறு வினாடியே அறிமுகத்தை முடித்து வைத்தார் மேனேஜர்.

காயத்ரியிடம் அதிர்ச்சி. அதை கண்களில் கச்சிதமாகக் காண்பித்தாள். மாமா சிவானந்தம் கூட பதட்டப் பட்டார்.

''என்ன சார் இது... எதுக்கு போலீஸ் எல்லாம் வந்துருக்கு?'' கேட்டார்.

''ஒண்ணும் இல்ல... இந்த லாட்டரிச் சீட்டு விஷயமா ஒரு சின்ன என்கொயரி...''-ருத்ராவே ஆரம்பித்தார்.

''என்ன என்கொயரி?''-இது சிவானந்தம்.

''அதெல்லாம் அப்புறம். முதல்ல நாம மிஸ்டர் மித்ரா பத்தி பேசுவோமே.''

''யார் மித்ரா?''- சிவானந்தம் குழப்பத்துடன் கேட்டார்.

''மித்ராவை தெரியாது. உங்க நண்பர் சார்! அவர் எங்களுக்கு லெட்டர் எழுதிட்டுதான் செத்துருக்கார்.'' ருத்ரா ஒரு தினுசாக பேசுவது நிச்சயமாக இருவருக்குமே புரியவில்லை.

''யார் மித்ரா... என்ன லெட்டர்?''-நிஜமாலுமே அறியாமை கண்ணில் மின்ன காயத்ரி கேட்டாள். ரகுநாத பெருமாளின் பார்வை அதை அழகாகவே பதிவெடுத்தது.

உள்ளொன்றும் வெளியொன்றும் என்றால் அதைக் கச்சிதமாக காட்டும் உறுப்பான அவளது கண், எனக்கு நடிக்கத் தெரியாது என்பதுபோல் நிஜமாலுமே தெரியாத விஷயத்தைக் காட்டியது.



ரகுநாத பெருமாளிடம் திருப்தி. அதை தனது போலீஸ் பாஷையில் ருத்ராவிடம் தெரிவிக்க ருத்ராவுக்கும் புரிந்து போனது.

''சரி உங்களுக்கு மித்ராவை தெரியாம போகட்டும். ஆமா, இந்த லாட்டரிச் சீட்டை எங்கம்மா வாங்கனே?', நேரடியாக விஷயத்துக்கு வந்தார்.

''பெரியார் பஸ் ஸ்டாண்டுல... ஒரு விடலைப் பையன் கிட்டே!''

''எப்போ?''

''ஊருக்கு போக பஸ்சுல உட்கார்ந்திருந்தப்போ!''

''எந்த ஊருக்கு?''

''எனக்குச் சொந்த ஊர் சேலம். சேலம் போக உட்கார்ந்திருந்தப்போ...''

''சரி பரிசு விழுந்து ரொம்ப நாளாச்சே... இவ்வளவு நாள் என்ன பண்ணினே?''

''எனக்கு பரிசு விழுந்த விஷயமே இப்பத்தான் தெரியும்?''

''இப்பன்னா?''

''இன்னிக்குக் காலைல...''

''அதெப்படி... சீட்டு வாங்கத் தெரியும். ஆனா அதுக்கு பரிசு விழுந்திருக்கா இல்லையான்னு பாக்கத் தெரியாதா?''

''நோ... நான் ஊரில இல்லை. டெல்லி போயிருந்தேன். நேத்துதான் வந்தேன்...''

''எதுக்கு டெல்லிக்குப் போனீங்க?''

''நீங்க எதுக்கு இதையெல்லாம் கேக்கறீங்க?''

''இந்த சீட்டுக்காக சில விபரீத சம்பவங்கள் நடந்துருக்கு...''

ஏன்...இந்தச் சீட்டை வித்த விடலைப் பையனே இப்ப உயிரோட இல்லை.''

''நிஜமாவா சார்?''

''பொய் பேச நாங்க இங்க வரலை...''

''நானும் பொய் சொல்லலை சார். இது நான் வாங்கின சீட்டுதான். சத்தியமா நீங்க சொல்ற எதுவும் எனக்குத் தெரியாது...''

—காயத்ரியிடம் கண்ணில் நீர் கட்டி விட்டது.

நெடுநேரம் அங்கே அவர்களிடம் பேச்சே இல்லை. காயத்ரி பெரிதாக விசும்ப ஆரம்பித்து விட்டாள்.

''ஓ...கே... நாளைக்கு திரும்ப சந்திக்கிறேன்'' என்று நிமிர்ந்த ருத்ரா மேனேஜரை பார்த்தார்.

''அந்த லாட்டரி சீட்டை ஃபார்வர்ட் பண்ண வேண்டாம். கீப் பேங்க் கஸ்டடி நௌ...பி கேர்ஃபுல்! பத்திரிகைகளுக்கும் தகவல் தெரிய வேண்டாம்'' என்றார்.

மேனேஜர் தலை கோவில் மாடாகியது.

—காயத்ரியும், சிவானந்தமும் ருத்ராவுடன் கிளம்பினர். வெளியே நிற்கும் ஜீப்பில் ஏறிக் கொண்டனர்.

''உங்களை உங்க வீட்லையே ட்ராப் பண்றேன். ஆமா எப்ப சேலம் போனீங்க?'' ஜீப் கிளம்பும் போது கேட்டார்.



''பத்து நாள் இருக்கும்!''

''தெளிவா தேதிய சொல்லி சொல்லணும்...''

''எட்டாம் தேதி காலைல...''

''எந்த பஸ்ல!''

''அண்ணா''ல?

''டெல்லிக்கு எதுக்குப் போனீங்க?''

''இன்டர்வியூவுக்கு! ஃபுட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியாவில் இண்டர்வியூ...''

இதற்குள் வீடு வந்து விட்டது. அவர்கள் இறங்கிக் கொண்டனர். நடுத்தரமான வீடு.

''உங்க அப்பா அம்மா...'' இறங்கும்போது கேட்ட கேள்விக்கு காயத்ரியிடம் நடுக்கமான குரலில் பதில்.

''அவங்க ரொம்ப வயசானவங்க. உள்ற இருக்காங்க.''

''கூடப் பிறந்தவங்க எத்தனை பேர்?''

''ஒரே ஒரு அண்ணன்!''

''அண்ணன் இப்ப எங்கே?''

''அது ஒரு தண்ணி வண்டி. எங்கையாவது பார்ல குடிச்சிபிட்டு கிடப்பான்.''

அதற்குமேல் ருத்ரா எதையும் கேட்கவில்லை. ஜீப்பைக் கிளப்பிக் கொண்டு பறக்க ஆரம்பித்தார்.

அருகில் அமர்ந்திருக்கும் ரகுநாத பெருமாளிடம் ஒரு அசாத்ய அழுத்தம்.

''என்ன ரகு பேச்சையே காணோம்?''

''உங்களை நினைச்சா சிரிப்பு வருது ருத்ரா...'' இப்படித்தான் ஆரம்பித்தார் ரகு

''ஏன்...என் நிலை அவ்வளவு மோசமாவா இருக்கு?''

''ஆமா...முதல்ல பாபாவைச் சந்தேகப்பட்டீங்க. இப்ப காயத்ரி! இந்த பொண்ணோ துளிக்கூட பொய் சொல்ற மாதிரி இல்லை.

சேலம் போனது, டெல்லி போனதெல்லாம் உண்மைன்னா இதுசொல்றதும் உண்மைதான்...''

''சரி இந்த பெண் சொல்றது உண்மைன்னே வெச்சுப் போம். இந்த லாட்டரி விஷயமா நாலு கொலை நடந்துருக்கே. அது எப்படி?''

''நாலும் மொதல்ல கொலைதானே?''

''யெஸ்...ஐ ஹேவ் நோ டவுட்.''

''மித்ரா அப்படின்னா எப்படிக் கொலை செய்யப் பட்டிருந்தார்.''

''குரல்வளையில நிறைய கீறல்கள். எலும்பு முறிவு தூக்குல தொங்குனா அப்படி நடக்கிறது அபூர்வம்.''

''அதாவது அபூர்வமா நிஜமாலுமே தற்கொலை செய்துள்ள நபர்களுக்கு இப்படி எலும்பு முறிவு ஏற்பட லாம் இல்லியா?''

''சில கேஸ்ல இப்படி நடந்திருக்கு...''

''சரி அடுத்து டேனியல் சாவு?''

''கார் மேலே ஏறி இறந்துருக்கான். பியூர்லி பிளேண்ட் ஆக்சிடெண்ட்.''

''நீங்க நேர்ல, பார்த்தீங்களா?''

''தோ... கூட்டத்தில பேசிக்கிட்டாங்க.''



''இன்னும் ரிப்போர்ட் வரலை. வந்தா தெரியும். ஆனா அதுவும் சாவுதான். தற்கொலை செய்துக்கிறவன் சாக்கடையில் போய் விழமாட்டான்.''

''அவசரப்படாதீங்க ருத்ரா... ரிக்ஷாக்காரன் கொலை செய்யப்பட்டான்னே வெச்சுப்போம். அதை வேற யாராவது வேறு எதுக்காவது கூட செய்திருக் கலாம். லாட்டரிச் சீட்டுக்காகத்தான் இந்த கொலைன்னா இந்த காயத்ரி தான் எல்லா கொலைகளையும் செய்திருக் கணும். இந்தப் பொண்ணை பார்த்தா கொலை செய்யற மூஞ்சி மாதிரியா தெரியது?''

''அப்படின்னா, நீங்கள் என்ன சொல்றீங்க?''

''மித்ரா தற்கொலைதான் செய்து கிட்டிருக்கார்.''

டேனியலுக்கும் விபத்துதான் காரணம்.

லாட்டரிச் சீட்டுக்கும் மித்ரா ஃபேமலிக்கும் சம்பந்தமே இல்லை. ரிக்ஷாக்காரன் சாவுக்குக் கூட யாரோ தான் காரணம்...''

''அப்ப அந்த பாபாவுக்காக பார்த்திபன் எழுதின கடிதம், மித்ரா வீட்ல மீதி இருந்த ஒன்பது லாட்டரிச் சீட்டெலாம்...?''

''மித்ரா சாவை வெச்சு யாரோ செய்த குழப்பம்.''

''யாரோ எதுக்குக் குழப்பம் விளைவிக்கணும்?''

''அவரால எவ்வளவோ பேருக்கு லட்சக்கணக்குல கடன் கொடுத்த வகையில நஷ்டம் ஏற்பட்டிருக்கு. வெறுத்து போய் இப்படி ஒருவகை சாடிஸ மனப்பான்மை மையில செய்திருக்கான்.

''இதனால அவங்களுக்கென்ன லாபம்?''

''இப்படி மண்டையை பிய்ச்சிகிட்டு அலையறீங்களே அதைப் பார்க்க ஒரு சந்தோஷம்தான். மித்ரா குடும்பத்துக்கு இப்ப பண ஆசை ஏற்பட்டிருக்கு பாருங்க! இனி பணமோ, சீட்டோ நமக்கு சொந்தம் இல்லேங்கறது தெரிய வரும்போது ஒரு வெறுப்பு ஏற்படுமில்லியா... இந்த வெறுப்பு ஏற்படணும்னு நினைச்சுருக்கலாம்.''

''எல்லாம் சரி...அப்படி வெறுப்பு ஏற்படுத்த குழப்பம் ஏற்படுத்த நினைக்கிறவங்களுக்கு பாபா பேர் எப்படிக் கிடைச்சது? ஏன் அவர் பேரை பயன்படுத்தணும்?''

''ரொம்ப சிம்பிள்...ஒரு பெரிய பணக்காரன் அந்த ஆள்.கறுப்புப் பணம் நிறைய இருக்க சந்தர்ப்பம் இருக்கு. இப்படிக் கடிதம் எழுதின நபருக்கு மித்ரா மட்டும் எதிரி இல்லை. பாபாவும்தான் எதிரி. ஆகையால அந்த ஆள் பெயரை பயன்படுத்திக் குட்டையை குழப்ப பார்த்திருக்கலாம்.''

—ரகுநாத் எல்லா சந்தேகங்களுக்கும் பொட்டில் அடித்த மாதிரி பதில் சொல்லிக் கொண்டு வந்தார்.

ஜீப்பும் ஸ்டேஷனுக்கு வந்து விட்டிருந்தது.

வாதாமரத்தில் இன்னமும் காக்கை எழுந்து போயிருக்கவில்லை. அரட்டலாக வந்து நின்ற ஜீப்பை அது வெறிக்கிறது.

ரகுநாத பெருமாளும், ருத்ராவும் இறங்கி உள்ளே செல்கின்றனர்.

அதிசயமாக அங்கே சம்பத் காத்திருந்தான்!



# 10

ருத்ராவும் ரகுநாத பெருமாளும் உள்ளே நுழைவதைக் கண்டு எழுந்து கொண்டான்.

''எப்ப வந்தே சம்பத்?'' ருத்ரா கேட்டபடி உட்காருகிறார்.

''ஒரு அரைமணி நேரம் ஆகுது அங்கிள்...''

''என்ன விஷயம்?''

''கேஸ் விஷயம் என்ன ஆச்சுன்னு தெரிஞ்சுக்கத்தான் வந்தேன். அந்த பாபா பற்றி ஏதாவது தகவல்...''

ரகுநாத பெருமாள் அதைக்கேட்டு சம்பத்தை ஊன்றிப் பார்த்தார்.

''சம்பத்...இந்த கேஸ்ல ஏற்பட்டிருக்கிற டர்னிங்கை மிஸ்டர் ரகுநாத பெருமாள் உனக்குச் சொல்லுவார்.'' என்றார் ருத்ரா.

''யார் அங்கிள் இவர்?''

' திருப்பரங்குன்றம் இன்ஸ்பெக்டர் இவர். பாபா பற்றி நல்லா தெரிஞ்சவர்.

உடனடியாக சம்பத் பார்வை ரகுநாத பெருமாள் பக்கம் திரும்பியது.

''மிஸ்டர் சம்பத். அந்த லாட்டரிச் சீட்டை பேங்க்ல காயத்திரின்னு ஒரு பொண்ணு சப்மிட் பண்ணியிருக்கா. அவதான் நிஜமாலுமே அதை வாங்கினவ...'' ரகுநாத பெருமாளின் பதிலில் சம்பத் முகம் வெளிறியது.

''என்ன சார். இது புதுக்கதை?'' சோர்வாகவும் திடுக்கிட்டும் கேட்டான்.

''புதுக்கதை இல்லை; மிஸ்டர் நிஜக்கதை.''

''அப்ப, எங்கப்பா கொலை...அந்த லாட்டரிச்சீட்டு வித்தவன் கொலை...ரிக்ஷாக்காரன் கொலை எல்லாம்...'

''எதுவுமே கொலை இல்லை. தற்செயலான மரணங்கள்.''

''தற்செயலான மரணங்களா... நீங்கதானே கொலைன்னு சொன்னது...''

''ஐ ஆம் சாரி...கொலை மாதிரி தெரிஞ்ச மரணங்கள் அவை. இந்த காயத்திரியை மட்டும் நாங்க சந்திக்கலைன்னா அப்படித்தான் நினைச்சுருப்போம்...''

''என்ன சார் இது...பாபா போட்ட கடிதம் எல்லாம் பொய்யா? ரிக்ஷாக்காரன் வீட்டு வாசல்ல, செத்த வீடுன்னும் கூட பாக்காம கத்திட்டு போனதும் பொய்யா...?''

''அப்படித்தான் எடுத்துக்கணும். வேற வழி இல்லை. இந்த கேஸ்ல எல்லோருமே அநாவசியமா சந்தேகப்பட்டுட்டோம். தேவை இல்லாம குழம்பிட்டோம். நல்ல வேளை எல்லாம் நமக்குள்ளேயே வெச்சுகிட்டு செயல்பட்டது நல்லதா போச்சு. பேப்பர் நியூஸா வந்திருந்தா ரொம்பக் கஷ்டம்.

இப்ப நாம வந்திருக்கிற முடிவை கேலி செய்து டிபார்ட்மெண்ட் மானத்தையே வாங்கியிருப்பாங்க.''

ரகுநாத பெருமாள் பேசப் பேச சம்பத்துக்கு இருட்டிக் கொண்டு வந்தது.

''ஆமா, அந்த காயத்ரி இந்த கொலைகளைச் செய்திருக்க மாட்டான்னு எதை வெச்சு நம்பறீங்க.''



''அவங்க ஊர்லையே இல்லை. டெல்லி போயிருந்துருக்காங்க...''

''ஆர் யூ ஷ்யூர்?''

''நிச்சயமா...அவங்க இண்டர்வியூவிற்குப் போனது நிஜமா, டெல்லி போனது நிஜமான்னு விசாரிக்க தொடங்கியிருக்கோம். இன்னும் சில மணி நேரங்கள்ள தகவல் வந்துரும். வந்துட்டா, எல்லாமே க்ளியரா யிடும்.''

ரகுநாத பெருமாள் பேசப்பேச ருத்ராவிற்குள் கூச்சம் பெருகிக் . கொண்டே போனது. இந்தக் கேஸைப் பொருத்தமட்டில் தான் ஏமாந்து விட்டதில் வருத்தம் மார்புக் கூட்டை உருட்டியது.

குனிந்த தலையை நிமிர்த்த முடியவில்லை.

சம்பத் சோகமாக எழுந்து கொண்டான்.

''அப்ப, நான் வரேன் சார்...'' என்றான். அங்கிள் என்கிற அழைப்புக்கு என்ன வந்தது? ருத்ரா அதிர்ந்து போய் நிமிர்ந்து பார்த்தார். அவன் வெளியேறிக் கொண்டிருந்தான்.

''ருத்ரா இனி அவசரப்படாதீங்க...கேஸ் விஷயமா இப்படிச் சம்பந்தப்பட்டவங்க கிட்டையே மனசுவிட்டு எதையும் பேசாதீங்க. உங்களோட இந்த நிலைக்கு நீங்க எல்லா என்கொயரியையும் மித்ரா ஃபேமிலியில ஓபனா செஞ்சதுதான் காரணம்—

இது நிச்சயமா நல்ல போலீஸ்தனம் இல்லை...''

-ரகுநாத பெருமாளின் அட்வைஸ் ருத்ராவை ஒரு இடி இடித்தது.

அப்பொழுது பார்த்து டெலிபோனின் அழைப்பு.

மறுமுனையில் ஜங்ஷன் புக்கிங் கிளார்க் பேசினார்.

''சார்... காயத்ரிங்கற பேசஞ்சர் டெல்லி போக ரிசர்வ் பண்ணியிருந்துருக்காங்க. ரிடர்ன் ஜெர்னி ரிசர் வேஷன் கூட மெட்ராஸ் சென்ட்ரல்ல கன்ஃபார்ம் ஆகியிருக்கு...''

காயத்ரியின் சந்தேகம் பற்றிய ஒரு தகவல் ஓவர். அடுத்த அரைமணியில் டெல்லி போலீசிடம் இருந்து தகவல்.

''ஃபுட்கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியாவில் காயத்திரி இண்டர்வியூ அட்டெண்ட் செய்தது நிஜம், அது மட்டுமில்லை... அந்த ஜாப்பும் அவர்களுக்குக் கிடைத்து அவர் டெல்லிவாசியாகப் போகிறார்!''

-ரகுநாத பெருமாள் ருத்ராவை படு மிடுக்காகப் பார்த்தார்.

''மிஸ்டர் ருத்ரா... காயத்ரியை இனி அவங்க பாதையில போக விடுங்க. பேங்க் மேனேஜருக்கும் தகவல் தந்துடுங்க. மறக்காம பத்திரிகைகளுக்கும் தகவல் தாங்க, இப்படி நீங்க குழம்பினது நம்ம டாப் லெவலுக்கு தெரிஞ்சா உங்களை இன் எபீசியன்ஸியா ஃபீல் பண்ணுவாங்க.''

பேசி விட்டு கிளம்பிப் போனார். ருத்ராவால் பதிலுக்கு எதுவுமே பேச முடியவில்லை.

மித்ரா வீட்டில் சோகக்களை... சரஸ்வதியும் வித்யாவும் மோட்டுவளை வெறிக்க ஒருவர் மேல் ஒருவர் சரிந்திருந்தார்கள்.

ஊஞ்சலில் சம்பத்.



அது எலித்தனமாகக் கத்தியபடி இலேசாக ஆடிக் கொண்டிருந்தது. 'க்ரீச்...க்ரீச்...க்ரீச்... ''எவ்வளவு நடந்துருக்கு... எல்லாமே தற்செயலாமே. இதை செத்த அன்னிக்கே சொல்லியிருக்கலாமே நம்மளை சோகப்பட வெச்சு, ஆசைப்பட வெச்சு இந்த மனுஷர் என்னமா தண்ணி காட்டிட்டாரு...'' - சரஸ்வதி புலம்புகிறாள்.

''பணம் வந்துடிச்சு. நாம திரும்ப பழைய வாழ்க்கைக்குத் திரும்பிடலாம்னு நம்பினேன். இப்படி ஆயிடிச்சே.'' - இது வித்யாவின் ஆலாபனை

''சரி...சரி இனி அந்தப் பேச்சை விடுங்க. நடக்கப் போறதைப் பத்தி யோசிப்போம். இந்தப் பணம் இல்லைன்னா என்ன? சம்பாதிக்க எவ்வளவோ வழி... சம்பாதிப்போம்...'' - சம்பத் கேர்பமாக ஆனால் ஒரு அர்த்தத்தோடு கத்தினான்.

''உன்னால மாசம் எவ்வளவு சம்பாதிக்க முடியும். ஒரு இரண்டாயிரம்... இல்லேன்னா மூவாயிரம்... அவ்வளவுதான். இனி நாம நினைச்சாலும் கார், பங்களான்னு பழைய வாழ்க்கைக்குத் திரும்ப முடியாது.'' - வித்யாவும் பதிலுக்குக் கத்தினாள்.

''அதுக்கு என்ன பண்றது. என் பேச்சை அப்பா கேட்டிருந்தா இந்த கதி வந்திருக்குமா? நான் எந்த பிசினஸ் எல்லாம் செய்ய வேண்டாம்னு சொன்னேனோ அதை எல்லாம் அப்பா செய்தார். என் பேச்சை எங்க கேட்டார். இன்னிக்கு அவரும் இல்லை. பணமும் இல்லை. நமக்கும் இந்த கதி...''

''சரிடா...அதைப் பத்தி பேசி என்ன புண்ணியம். இனி நடக்க வேண்டியதைக் கவனி.''

சரஸ்வதியின் கருத்துக்கு சுவர் கடிகாரமும் இழைந்து கொடுத்தது.

அடுத்து...?

அடுத்து...?

சம்பத்திடம் கேள்வி உள்ளுக்குள்ளேயே ஒரு தீர்க்கம் ஏதோ ஒரு முடிவிற்கு வந்த மாதிரி எழுந்துகொண்டான்.

அன்றைய தினசரியில் காயத்ரி முதல் பக்கத்திலேயே தெரிந்தாள் ஏஜெண்ட் ஆளுயர மாலை போட்டு விட்டு பக்கத்தில் பல்லைக் காட்டியபடி போஸ் கொடுத்துக் கொண்டிருந்தார்.

செய்தித்தாளை காயத்ரியும் பார்த்துவிட்டு புளகாங்கிதப்பட்டுப் போனாள். பக்கத்தில் அவள் அண்ணன். மிதமான போதையில் தங்கையை ஆசை ஆசையாக விவரித்தபடி நின்று கொண்டிருந்தான்.

சற்று தள்ளி அவள் தாயும் தந்தையும் படுக்கையில் சந்தோஷம் பிடிபடாமல் புரண்டு கொண்டிருந்தார்கள்.

அக்கம்பக்கம் எல்லாம் வந்து சென்ற வண்ணம் இருந்தது.

''அம்மாடி... நீ பூர்வ ஜென்மத்துல, குபேரனுக்கு சேவை செஞ்சிருக்க போல இருக்கு. அதான் இந்த ஜென்மத்துல இப்படி அதிர்ஷ்டம் பிச்சுகிட்டு அடிச்சிருக்கு...'' பக்கத்து வீட்டு அம்மாளின் வர்ணனை காயத்ரியை சிந்திக்க வைத்து சிரிக்க வைத்தது

''அம்மாடி... நீ அதிர்ஷ்ட தேவதை!''- இது இன்னொருவர். 'நானா? அதிர்ஷ்ட தேவதையா?'— காயத்ரி தனக்குதானே கேட்டுக் கொண்டு சிரிக்கிறாள். அண்ணனை நன்றியோடு பார்க்கிறாள்.

''அண்ணே, எல்லா பெயரும் உனக்குத்தான்'' என்று சொல்லாமல் சொல்லுகிறாள். அதே வேளையில்



அவனைத் தனியாக அழைத்துச் சென்று காதோரமாகக் கேட்கிறாள்.

''அண்ணே நிஜத்தை சொல்லு. இந்த லாட்டரி சீட்டு உனக்கு எப்படி கிடைச்சது? எங்க கிடைச்சது? நீ சொல்லிக் கொடுத்த மாதிரி நான் நடிச்சு ஊரையும் நம்ப வெச்சாச்சு. பணமும் மாத்தி வரப் போகுது. ஆனா போலீஸ் என்னைப் பிடுங்கி எடுத்திடுச்சி தெரியுமா? நீ ஏதோ ஃபிராடு பண்ணியிருக்கே. நான் உண்மையைச் சொல்லி உன்னை மாட்டி விட நினைக்கலை—

ஒழுங்கா இப்பவாவது என்கிட்ட உண்மையைச் சொல்லு...''

திருநாவுக்கரசு என்னும் அவள் அண்ணன் முழித்த முழிப்பில் ஆந்தை தோற்கும் போலத் தோன்றியது.

# 11

திருநாவுக்கரசின் அந்த ஆந்தை முழிப்பு காயத்ரியை எரிச்சல் படுத்தியது.

''கேக்கறேன்ல... சொல்லுண்ணே! இந்த லாட்டரிச் சீட்டு எங்க எப்படி கிடைச்சுது? நீ நிச்சயம் பஸ் ஸ்டாண்டுல என்ன சேலம் அனுப்பினப்ப வாங்கலை... சொல்லு...''

காயத்ரியின் இடுக்கிப் பிடியில் திருநாவுக்கரசிடம் திணறல் கூடிக் கொண்டே போனது. ஒரு கட்டத்தில் கோபமாக அது உருமாறியது.

''காயத்ரி... யாரையும் ஏமாத்தலை! எங்கேயும் திருடலை என்னை நம்பு...'' என்றான்.

''இல்லை, நீ பொய் சொல்றே...''

''யெஸ், நான் பொய் சொல்றேன். ஆனா அதனால யாருக்கும் எந்த நஷ்டமும் கிடையாது.''

''நஷ்டம் இல்லைன்னா போலீஸ் எதுக்குக் குடையணும்?''

''சொல்றேன்... சொல்றேன்...'' - திருநாவுக்கரசிடம் ஆசுவாசம் விரல்களால் தாடை முடிகளிடம் வருடல்.

''உனக்கு நான் ஒரு மாப்பிள்ளை பார்த்திருக்கேன்னு சொன்னேன்ல...?'' அழுத்தமான கேள்வி.

''ஆமா, அதுக்கென்ன இப்ப...?''

''அவங்க ரொம்ப பெரிய இடம்...''

''இருக்கட்டும். இந்த சீட்டுக்கும் அதுக்கும் என்ன சம்பந்தம்?''

''நீயும் அந்தஸ்த்துல பெரிசா தெரிஞ்சாதான் அந்த இடத்தோட ஈடு கொடுக்க முடியும்? '

''எல்லாம் சரி அண்ணே... சீட்டு யாருது அதைச் சொல்லு.''

''பையனோட அப்பாவோடது...!''

''எந்தப் பையனோட அப்பாவோடது?''

''உனக்கு நான் பார்த்திருக்கற மாப்பிள்ளைப் பையனோட அப்பாவோடது...''

''அப்படின்னா அவருக்குத்தானே சொந்தம் இந்த பணம். உன் கைக்கு எப்படி வந்தது?''

''அவர் இப்ப இல்லை இறந்துட்டார்!''

''இறந்துட்டாரா?'



''ஆமா...அவர் பெரிய பணக்காரர். ஆனா பிசினஸ்ல நொடிஞ்சு போய் எல்லா சொத்தையும் இழந்து கடன்காரங்களுக்கு மஞ்சக் கடிதாசி கொடுக்கற நிலைக்கு போயிட்டார். போயிட்டார் என்ன மஞ்சக் கடுதாசி கொடுத்தாச்சு! அப்பதான் அவர் வாங்கின லாட்டரி சீட்டுக்கு இந்த பரிசு விழுந்தது.

பரிசு விழுந்தது வெளிய தெரிஞ்சா கடன் கொடுத்தவங்க சுத்தி வளைச்சிடுவாங்கன்னு பயந்தார். அப்பறம் காலணா மிஞ்சாது. தன் குடும்பத்துல இருக்கறவங்களுக்கு பரிசு விழுந்ததா சொன்னாலும்கூட அவரால் தப்பிக்க முடியாத நிலை.

அப்பதான் அவருக்கு சீட்டை வருங்கால மருமகளான உன்கிட்ட ஒப்படைக்கற ஐடியா தோணிச்சு. நீயோ டெல்லி போயிட்டே. என்கிட்ட வந்து சீட்டை கொடுத்து விஷயத்தை சொன்னார். என்னாலையும் எல்லாத்தையும் புரிஞ்சுக்க முடிஞ்சது. இந்த விஷயம் அந்த மாப்பிள்ளை பையனுக்குக் கூடத் தெரியாது. இதுதான் விஷயம்!''

திருநாவுக்கரசின் விளக்கம் காயத்ரியை குண்டுகட்டாக கட்டிப் போட்டது.

''அண்ணே நீ சொல்றதெல்லாம் நிஜமா?'' என்று கேட்டு ஊர்ஜிதப் படுத்திக் கொண்டாள்.

''உன் வாழ்க்கை சம்பந்தப்பட்ட விஷயம்மா...நான் பொய் சொல்வேனா?''

''அது சரி...அவர் எப்படிச் செத்தார்?''

''தூக்கு மாட்டிக்கிட்டு!''

''தூக்கு மாட்டிக்கிட்டா?''

"ஆமாம்மா...மானம் போறமாதிரி ஒரு கடன்காரன் கத்திட்டான்; தாங்க முடியலை. அதான்னு நினைக்கிறேன்."

திருநாவுக்கரசின் விளக்கத்தில் காயத்திரியிடம் உறைவு தொடர்ந்தது. 'சுவர்க் கடிகாரத்தின் க்ளக்... க்ளக் சப்தம்' சுவற்று பல்லியின் சப்தமில்லாத ஓட்டம், வீதியில் பொறி வண்டிக்காரனின் மணி ஓசை...கட்டிலில் வயதான பெற்றோர்களின் ஆஸ்த்துமா சுவாசம், டாய்லெட்டில் தேய்ந்த பைப்பிலிருந்து துளித் துளியாய் கசியும் நீரின் சப்தம்...' எல்லாமே துல்லியமாகக் காயத்ரியின் காதுகளில் விழுந்தாலும் அவளால் அவைகளை உணர முடியவில்லை. நெடுநேரம் கழித்து வாய் திறந்தாள்

"ஆமா, போலீஸ் எதுக்கு வந்தாங்க?"

"மித்ராங்கற அந்த மனிதரோட சாவுக்கு இந்த லாட்டரிச்சீட்டு ஒரு காரணமா இருக்குமோன்னு நினைச்சிருக்கலாம்..."

"தற்கொலைங்கறே...அப்புறம் எதுக்குப் போலீசுக்கு இந்த சந்தேகம்?"

"அதாம்மா போலீஸ்... அவங்களுக்கும் பொழப்பு நடக்க வேண்டாமா? நீ என்ன தொண தொணன்னு கேள்வி கேட்டுகிட்டு! நீ இப்ப ஐம்பது லட்சத்துக்கு அதிபதி கூடிய சீக்கிரம் கல்யாணமாகப் போற கல்யாணப் பொண்ணு. சந்தோஷமா இருக்கணும். அலட்டிக்கக் கூடாது.

உன்னோட அதிர்ஷ்டம்மா உனக்கு இப்படி ஒரு இடம் பணத்தோட வருது."

அதைக் கேட்டு காயத்திரி செயற்கையாக சிரித்தாள். மனதுக்குள் இனம் தெரியாத ஒரு நெருடல்.



ஸ்டேஷனில் அமைதியான சூழ்நிலை!

லாக்-அப் கைதி ஒருவன் மட்டும் அவ்வப்போது கொட்டாவி விட்டு இலேசான சப்தம் போட்டான்.

தனது ஆசனத்தில் ருத்ரா!

ஹேட்டைக் கூட கழட்டாமல் அதி தீவிர யோசனையில் இருந்தார்.

மித்ரா விஷயம் பூஜ்யமாகி விட்ட கவலையில் முகத்தில் சஞ்சல ரேகைகள்.

'சாதாரண விஷயத்தில் கூட ஊகம் பொய்க்கப் பெறாத தனது போலீஸ் புத்தி, இப்படிக் கூட ஏமாறுமா என்ன?'

மேஜைமேல் மித்ரா குறித்த ஃபைல்...

அதை டெத் ஃபைலாக் ஆக்கி ஒரு மூலையில் போட வேண்டியதுதான்!

அதற்காக வேண்டி கைகள் அதைத் தொட வேண்டி நீண்ட போது நிழல் ஒன்று கைமேல் விழ ருத்ரா ஏறிடுகிறார்.

"குட்மார்னிங் சார்!"-பளிச்சென்று சம்பத். தாடி மீசை சிரைத்து, ஹிந்திப்பட கதாநாயகன் மாதிரி லாக்டோ காலமைன் எல்லாம் பூசி, தலைக்கு கியோ கார்பின் தடவி அதை லாவகமாக வாரி, சிகப்பு செக்டு ஷர்ட்டை ஜீன்ஸில் டக் செய்தபடி மியாமி டிராட் செப்பலில் மகா பளிச்சென்று...

ருத்ராவின் புருவம் கம்பளிப் புழுவாகி நெளிகிறது. "வா சம்பத்..." என்று உதட்டில் சுரத்தில்லா அங்கீகரிப்பு சேரில் அமர்ந்தவன் நெடுநேரம் எதுவும் பேசவில்லை. ருத்ராவிடம் பேசத் தோன்றவில்லை.

''நான் இனி நடந்த எதையும் நினைக்கத் தயாரில்லை...'' சம்பத் ஆரம்பிக்கிறான். அவனே தொடர்கிறான்.

'இந்த ஊர்ல கொடி கட்டிப் பறந்த அந்த வாழ்க்கையை, வேளைக்கு ஒரு கார்ல போன அந்த சொகுசை, கடன்காரனாகி வீதிக்கு வந்த கொடுமையை, அப்பா தூக்குல தொங்கினதை, லாட்டரிச் சீட்டு, ஐம்பது லட்சம்னு லோல் பட்டதை எதையுமே நான் இனி நினைக்கத் தயாரில்லை...

நான் ஒரு பட்டதாரி. எம்.காம் பட்டதாரி! சி.ஏ. எழுதப் போறேன்! பாஸ் பண்ணி ஆடிட்டர் ஆயிடுவேன். இனி என் வாழ்க்கை லட்சியம் என் அப்பா போல பெரிய பணக்காரன் ஆறதுதான் ஆனா அதைப் பிழைக்கத் தெரியாம பிழைச்சு இழக்கறது இல்ல...''

சம்பத் பேசிக் கொண்டே போகிறான். ருத்ரா பதில் பேசாமல் கேட்டுக் கொண்டே போகிறார்.

''இனிமே நாங்க இந்த ஊர்ல இருக்க விரும்பலை. இங்க இருந்தா பழைய ஞாபகங்கள் எங்களைக் கொல்லும். ஆகையால எதாவது வெளியூருக்குப் போகலாம்னு தீர்மானிச்சுட்டோம்...''

சம்பத்தின் இந்த பேச்சு மட்டும் ருத்ராவை ஒரு இடி இடித்து நிமிர்த்தியது.

''வாட் ஷிப்டிங்கா?''-தினமாகக் கேட்டார்.

''யெஸ்...அதை சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தேன்.''

ருத்ராவிடம் இனம் புரியாத கலவரம். தன் பெண்ணைத் தந்து மாப்பிள்ளையாகவே ஆக்கிக் கொள்ளலாம் என்று நினைத்தவன் ஊரைவிட்டே போகிறேன் என்கிறானே?



''வேண்டாம் சம்பத்...''-அழுத்தமாகச் சொல்லிப் பார்த்தார். ''சாரி அங்கிள்...'' உறுதியான பதில் சம்பத்திடம்.

''சரி எந்த ஊருக்கு...வீடு பார்த்தாச்சா?''

''இல்லை...இனிதான் பார்க்கணும்.''

''பாத்துட்டு சொல்லு. நானும் பால் காய்ச்சும்போது வரேன்.''

''பாக்கலாம்...''

''என்ன பார்க்கலாம்கற...நீ என் வருங்கால மாப்பிள்ளை, மறந்துட்டுப் பேசறியா...இந்த கேஸ்ல நான் குழப்பிட்டதா என் பேர்ல கோபமா?''

''நோ...நோ...அதெல்லாம் இல்லை. ஆனா ஒரு விஷயம் இனி என்னை உங்க மாப்பிள்ளைன்னு நினைச்சு கூட பார்க்காதீங்க. எனக்கு இப்ப கல்யாணத்துல இன்ட்ரஸ்ட் இல்லை. உங்க பொண்ணுக்கு வேற நல்ல இடம் பாத்துக்குங்க. நான் வரேன்...''

பேசிவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் கிளம்பி விட்டவனை உறைந்து போய் பார்க்கிறார் ருத்ரா.

# 12

திருச்சி...

கன்டோன்மென்ட்டைச் சுற்றிய தாத்தாச்சாரி பங்களா தொகுதியில் கல்யாணப் பெண்ணைப் போன்ற அலங்காரமான அந்த வீட்டின் முன் அந்த டெம்போ நின்றது.

டெம்போவைத் தொடர்ந்து வந்த காரிலிருந்து சம்பத்தும் அவன் தாய் சரஸ்வதியும், தங்கை வித்யாவும் இறங்கினர்.

வீட்டு வாசலில் திருநாவுக்கரசு!

தாடி மீசையில்லாமல் ஜிப்பா பேண்டில் ஒரு பத்திரிகை நிருபர் மாதிரி தெரிந்தான்.

இறங்கினவர்களைப் பார்த்து கை கூப்பினான்.

வித்யாவை மட்டும் அழுத்தமாகப் பார்த்துக் கொண்டான்.

''அம்மா நான் சொல்லலை என் ஃபிரெண்ட் திருநாவுக்கரசுன்னு...அது இவன் தான்''-சம்பத் தாயிடம் அறிமுகப்படுத்தினான். இதற்குள் சாமான் செட்டுகள் இறங்கி வீட்டை ஆக்ரமிக்கத் தொடங்கி விட்டன.

சரஸ்வதி திருநாவுக்கரசை புன்னகையுடன் பார்த்து சிரித்துவிட்டு ''இந்த வீட்டுக்கு வாடகை எவ்வளோ?'' என்று கேட்டாள்.

''வாடகை இல்லை. விலைக்கே வாங்கியாச்சு?''-திருநாவுக்கரசின் பதிலில் சரஸ்வதி திகைத்தாள்.

''நீ வாங்கினதை கேக்கலைப்பா...எங்களுக்கு தான் வாடகை எவ்வளவுன்னு கேட்டேன்.'' என்று திருத்தமாகக் கேட்டாள்.

''வாங்க உள்ற போய் பேசுவோம்...''-சம்பத் டாக்சியை அனுப்பி விட்டு தாய். தங்கையை உள்ளே இழுத்துச் சென்றான்.

சின்னதும் இல்லே, பெரிதும் இல்லே ரகமாய் புதிய வீடு. புத்தம் புதிய ஃபர்னீச்சர்களோடு லஸ்தர் விளக்கெரிய 'வாங்க வாங்க' என்றது.



வித்யாவுக்கு தங்கள் பழைய மாளிகை நினைப்பு. ''இதைவிட நம்ப கோட்டூர் பங்களா பெரிசு...'' என்று மாய்ந்து போனாள்.

''பழைய நினைப்பே கூடாது...இனிமேல புது வாழ்க்கை. எல்லாமே புதுசு. வீடு, ஃபர்னிச்சர் மட்டுமில்லை. வாழப்போற வாழ்க்கைக் கூட...''

சம்பத் சொல்லும் போதே வீட்டின் பூஜை அறையிலிருந்து ஊதுவத்தி வாசம் கமழ்ந்து வந்தது.

''யாருப்பா உள்ற...ஒரே ஊதுபத்தி வாசமா இருக்கே?'' சரஸ்வதியின் கேள்வியைத் தொடர்ந்து வித்யா எட்டிப் பார்த்தாள்.

உள்ளே காயத்ரி!

தலை நிறைய பூவோடு, பட்டுப் புடவை தளதளக்க கல்யாணப் பெண் போல் காயத்ரி.

''அவ என் தங்கை...உங்க வருங்கால மருமகள்.''-பட்டென்று போட்டு உடைக்கும் தினுசில் பேசிவிட்ட திருநாவுக்கரசை அதிர்ச்சியுடன் பார்த்தாள் சரஸ்வதி.

''ஆமாம்மா...சம்பத் இனி என் மாப்பிள்ளை...''-என்று மேலும் அழுத்தம் கூட்டினான் திருநாவுக்கரசு.

சரஸ்வதியின் பார்வை சம்பத் பக்கம் சென்றது.

அவன் வெட்கத்தோடு எங்கோ பார்த்தான்.

''அண்ணே என்னண்ணே இது...ஓசைப்படாம பெரிய வேலை எல்லாம் பாத்திருக்கியே...?''-வித்யா கேட்டபடி அவனையும் காயத்ரியையும் மாறி மாறிப் பார்த்தாள்.

''உங்கப்பா எங்க குடும்ப நண்பர். எங்களுக்கு எவ்வளவோ உதவிகள் செய்தவர். அவர் இப்ப இல்லைன்னாலும் எங்களுக்கு நன்றி இல்லாம போயிடலை. அதான் சம்பத்கிட்ட நெருங்கி என் விருப்பத்தைச் சொன்னேன். சம்பத்தும் சம்மதிச்சுட்டாப்பல.''

''எங்கிட்ட மூச்சுகூட விடலையே...?''

''சஸ்பென்சா இருக்கட்டும்னுதான்.''- சம்பத்தே வாய் திறந்தான்.

''எங்களுக்கு அந்தஸ்து பெரிசில்லீங்க. பழக்கமும் பண்பும்தான் பெரிசு. அது சம்பத் கிட்டே நிறைய இருக்கு.''

திருநாவுக்கரசு வைத்த அந்த ஐஸ் கட்டியில் சரஸ்வதி நெக்குருகிப் போனாள்.

''இந்த வீடு இனிமே உங்க வீடு. என் தங்கையும் இனி உங்க பொண்ணு. நீங்க சம்மதிச்சா, வரப்போற முகூர்த்தத்துலையே கல்யாணம்.''-திருநாவுக்கரசு பேசி விட்டு பணிவாக நின்றான்.

'என்ன இது...என்னென்னவோ நடக்கிறது...'- சரஸ்வதியிடம்-ஆயாசம். வித்யாவோ வீட்டின் குளிர்ச்சியில் கரைந்து கொண்டிருந்தாள்.

''அம்மா இன்னொரு முக்கிய விஷயம். நான் எப்படி திருநாவுக்கரசுக்கு மாப்பிள்ளையோ அப்படி திருநாவுக்கரசும் நமக்கு மாப்பிள்ளை. என்னம்மா சொல்றே?''

சம்பத் இப்படி திடுதிப்பென்று கேட்ட கேள்வியால் சரஸ்வதி விக்கித்து போக, வித்யாவுக்கோ ஒன்றுமே புரியவில்லை...மலங்க மலங்க விழித்தாள்.



''அம்மா என்னம்மா சொல்றீங்க. திருநாவுக்கரசுவிற்கும் நல்ல படிப்பு இருக்கு. பணமும் இருக்கு. சொந்த தொழில் இருக்கு. சரின்னு சொல்லுங்கம்மா நாம இப்ப இருக்கற நிலைக்கு இப்படி ஒரு இடம் கிடைக்காது...''

சம்பத் போட்டு நைத்த நைப்பில் சரஸ்வதி குழைந்து போனாள்.

''அவளுக்குச் சம்மதமான்னு கேளுடா முதல்ல...'' என்றாள். வெட்கம் கலந்த அங்கீகாரச் சிரிப்பு வித்யாவிடம்.

## 13

முதல் இரவு!

சினிமாப் படங்களில் பார்த்த மாதிரியே பூக்கட்டி பழத்தட்டு பால்குவளை, ஊதுபத்தி வாசம் எல்லாம் ஆனால் தலைகுனிந்து தயங்கித் தயங்கி நடந்து வரும் மணமகளாக மட்டும் காயத்ரி இல்லை! பால் செம்புடன் வருவதற்குப் பதிலாக கையில் பிரீஃப் கேசுடன் உள்ளே நுழைகிறாள்.

சம்பத்திடம் ஆச்சரியமான ஆச்சரியம்

''என்ன காயத்ரி இது?' கேட்டவன் முன்னே அதை திறந்தாள்.

''உங்க பணம்.'' என்றாள் ஒரு வரியில்.

''என் பணமா ஏது?''

''அண்ணன் சொல்லலையா?''

''ஓ அந்த லாட்டரிச் சீட்டு விஷயமா?''

"ஆமா...இது இனி உங்க சொத்து பிடியுங்க முதல்ல."

"என்ன காயத்ரி இது. உன் சொத்து என் சொத்துன்னுகிட்டு நம்மளதுன்னு சொல்லு"

"ஊஹூம். இது உங்க சொத்துதான். எனக்கு லாட்டரிச்சீட்டு வாங்க பிடிக்காது. அதுல கிடைக்கற பணம் பரிசுப் பணம் இல்லை. வயித்தெரிச்சல் பணம்."

"என்ன சொல்றே நீ?"

"ஆமா...ஒரு ரூபா சீட்டுக்கு லட்ச ரூபாய்ங்கறதெல்லாம் அதிர்ஷ்டமில்லை அபத்தம். லட்சம் பேர் இழந்த லட்சம் ஒரு ரூபாதான் நமக்குப் பரிசா கிடைக்குது. பரிசு கிடைக்காதவன் ஐயோ போச்சேன்னு பொருமுவான். அந்த பொருமலுக்கு பேர் பரிசா?

எனக்கு வேண்டாம் இப்படிப்பட்ட பணம்."

"அப்ப ஏன் ஒத்துகிட்டு சீட்டை சப்மிட் பண்ணினே பரிசை கைநீட்டி வாங்கினே?"

"அண்ணனுக்காக. என் அண்ணனுக்காக. நீ இப்டி செய்தா நான் குடிக்கறதை நிறுத்திடறேன். திருந்தி நல்லபடி வாழறேன்னு அது சத்தியம் செய்து கொடுத்ததால..."

"ஓ.கே...ஓ.கே! உனக்கு என்னைப் பிடிச்சிருக்கா?"

"இது வரைக்கும் பிடிச்சிருக்கு. இனி எப்படியோ?"

"என்ன காயத்ரி இது. வித்யாசமா இருக்கே உன் பதில்?"

"ஆமாங்க...இந்த நாட்டுல எல்லாபெண்களும் பிடிச்சதான் கல்யாணம் பண்ணிகிறாங்க. அதுக்கப்புறமா உங்க வர்க்கத்தவங்க குடி, கூத்தி, தண்ணி, சீட்டுன்னு



அந்த பிரியத்தையே நாசப்படுத்திடறாங்க. அதனால் அப்படிச் சொன்னேன்."

"எனக்கு எந்த கெட்ட பழக்கமும் கிடையாது காயத்ரி."

"சந்தோஷம். ரொம்ப சந்தோஷம். அது தொடரணும்."

"ஆமா உனக்கு டெல்லியில ஜாப் கிடைச்சிடிச்சா?"

"உம்..."

"அப்ப பேசாம நாம அங்க போயிடுவோமா... இங்க உன் அண்ணன் என் தங்கையும் சந்தோஷமா இருக்கட்டும்."

"எனக்கு ஆட்சேபணையில்லை."

மணி பன்னிரண்டைக் கவ்வும் அந்த நடுநிசி வேளையில் பேசியதுபோதும் என்பது போல மெல்ல அவள்மேல் கை வைத்தான் சம்பத். புதிய கன்னி ஸ்பரிசம். காயத்ரிக்கு உடம்பில் சதைப் பரப்பெல்லாம் நெய்யாய் உருகுவது மாதிரி உணர்வு.

இப்பொழுது பார்த்து பஸ்ஸர் ஒலி அரவம்!

யார் இந்த ராத்திரியில்?

இடை விடாமல் அலறியது பஸ்ஸர்! வீட்டில் சரஸ்வதி கூட இல்லை. எதற்கு சின்னஞ்சிறிசுகளுக்கு இடையூறாக என்று காயத்ரியின் வீட்டுக்கு போய் விட்டிருந்தாள்.

பஸ்ஸர் ஒலி வீட்டையே கலைக்க முதலில் கதவைத் திறந்தது திருநாவுக்கரசு. பட்டு வேட்டியை எரிச்சலோடு எடுத்துக் கட்டிய படி மாடிப்படி இறங்க, சம்பத்

அதைப் பார்த்துவிட்டு அறை வாசலிலேயே நின்று கொள்ள திருநாவுக்கரசு போய் வாசற் கதவை திறந்தான்.

கதவுக்கு வெளியே ரகுநாத பெருமாள்!

அழையாத புன்னகையோடு.

அழிச்சாட்டியமான ஸ்டேண்டிங் பொசிஷனோடு...

அவரை அந்த நேரத்தில் பார்த்த திருநாவுக்கரசுக்குள் இதயம் கர்ணமடித்த மாதிரி ஒரு அவஸ்தை.

''என்ன சார் இந்த நேரத்துல?''

''எனக்கு இதுதான் நேரம். பின்ன என்ன பகல்லையா வரமுடியும்?''

''சரி சரி வாங்க உள்ற...'' இருங்க சம்பத்தை வரச் சொல்றேன். சம்பத்... சம்பத்...''

சப்தம் போய்ச் சேருமுன் கதவைச் சாத்திக் கொண்டு சம்பத்தே இறங்கி வந்தான். ரகுநாத பெருமாளைப் பார்த்து பெரிதாக கை கூப்பினான்.

''புது மாப்பிள்ளைகளுக்கு என்னோட நல் வாழ்த்துக்கள்.'' என்கிறார் ரகுநாத பெருமாள்.

''தேங்க்யூ சார்...''

''தேங்க்யூ அப்புறம். நம்ப பங்கை வெட்டிட்டா நல்லது...''

''ரெடியா இருக்கு சார்...''-என்றபடி திருநாவுக்கரசு ஒரு பிரீப்கேஸை எடுத்து வந்து விரிக்கிறான்.

பதினைந்து லட்சம் சலவை நோட்டாக பல்லை காட்டுகிறது. ரகுநாத பெருமாளின் கண்கள் அப்படியே மெர்க்குரி விளக்காகிறது.



''உங்க சர்வீஸ்ல பாக்க முடியாத பணம்.''—சம்பத்திடம் கருத்து.

''உங்க சர்வீஸ்ல கூடத்தான் என்னை மாதிரி ஒரு போலீஸ் அதிகாரியை உங்களால பார்க்க முடியாது...'' ரகுநாத பெருமாளிடம் பெருமிதமான பதில்,

''எப்படியோ... எல்லாம் நல்லபடியா முடிஞ்சு லைஃப்ல செட்டில் ஆயிட்டோம். ருத்ரா அங்கிளையும் கட்டிப் போட்டுட்டோம்.

''நீ எங்க கட்டிப் போட்டே...நான்தானே அதைச் செய்தது? அதுக்காக எப்படி எல்லாம் பேச வேண்டியதா போச்சு.

''நீங்க என்ன எங்களுக்காக மட்டுமேவா செய்தீங்க. பாபாவுக்காகவும் தானே? உங்களுக்கு பரவாயில்லை சார் இரண்டு பக்கமும் வருமானம்.''

''பொழைக்க தெரியணும். தெரியாட்டி தெரிஞ்சுக்கணும். ருத்ரா ஒரு கெட்ட மனுஷன்.''

''சார்...திரும்ப ருத்ரா கேஸை தூசு தட்டிகிட்டு திரிய மாட்டாரே?''

''திரிஞ்சாதான் என்ன? அது இனிமே உப்பு சப்பில்லாத கேஸ். விட்னஸ் பார்ட்டில் மூணு பேரும் அவுட், எங்க போய் எதை வெச்சு புரூஃப் பண்ண...?''

''இப்பதான் சார் எங்களுக்கு உயிரே வந்துருக்கு. உங்களுக்கு எங்களோட பர்சனல் தேங்க்ஸ்.''

'ஓ.கே. ஆல் த பெஸ்ட்! நீங்க போய் உங்க முதல் இரவை அனுபவிங்க. நான் கிளம்பறேன்.''

ரகுநாத பெருமாள் பீரிஃப் கேசுடன் கிளம்ப ஆயத்தமானார்.

மாடி அறை வாசலில் காயத்ரி தெரிந்தாள்...!

முறைப்பாக! மிக முறைப்பாக! !

# 14

''அந்தப் போலீஸ்காரர் எதுக்கு வந்துட்டுப் போறாரு?''

அறைக்குள் நுழைந்த சம்பத்திடம் காயத்ரி கேட்ட தோரணையே ஒரு விதமாக இருந்தது. சம்பத்துக்கும் அது புரிந்தது.

''காயத்ரி...உனக்கு சம்பந்தமில்லாத விஷயம் அது. இப்ப அதைப் பத்தி எதுக்கு பேச்சு, கமான்...''—அவன் அவள் சேலைத் தலைப்பை பிடித்து இழுத்தான்.

அவள் அவன் கையைத் தட்டி விட்டாள்.

''என் கேள்விக்கு பதில் சொல்லுங்க...'' என்றாள் விடாப்பிடியாக. சம்பத்திடம் ஒரு பெருமூச்சு. மெல்லிய சுதாரிப்பு. மனதுக்குள் குறுகுறுப்பு. காயத்ரி காசுக்கும் பணத்துக்கும் பணியாத கேரக்டர் போல் தெரிவதில் ஒரு வகைச் சலிப்பு... மோசம் போய்விடுவோமா என்கிற நினைப்பின் கணிசமான பயம்.

சகலத்தையும் கண்ணில் தேக்கியபடி அவளைப் பார்த்தான்.

''பணம் வாங்கிட்டு போக வந்தாரு'' என்றான்.



''எதுக்கு?''

''லட்டரிச் சீட்டு விஷயத்துல குழப்பம் வராம பாத்துகிட்டதுக்கு. உன்னை ருத்ரா போட்டு குடை குடைன்னு குடையாம செய்ததுக்கு.''

லஞ்சமா...?

''எப்படி வேணும்னா சொல்லிக்கோ...''

''உங்கப்பா வாங்கின சீட்டுக்கு பரிசு விழுந்திருக்கு. அவர் சீட்டை ப்ரொட்யூஸ் பண்ணினா கடன்காரர்கள் வந்து பிடுங்கி எடுத்துடுவாங்க. அதனால சீட்டு என்கிட்ட வந்தது. நான் ப்ரொட்யூஸ் பண்ணினேன் - பணமும் வந்தாச்சு. இதுல ஒரு தப்பும் இருக்கறதா தெரியலை அப்புறம் போலீசுக்கு எதுக்குப் பணம் தரணும்?''

''உனக்குப் போலீசைப் பத்தி தெரியாது. பேசாம வா!''

''எனக்கும் போலீசை தெரியும். அவங்கள்ள சிலர் அம்பது நூறுன்னு லஞ்சம் வாங்கறது உண்டு. ஆனா, இப்படி லட்சக் கணக்குல லஞ்சம்னா அதுல சம்திங் என்னமோ இருக்கு...''

காயத்ரியின் தீர்மானமான பேச்சு சம்பத்தை உறைய விட்டது. ரத்தம் ஆசிட்டான மாதிரி தோன்றியது.

தப்பித்து விட்டதாக நினைத்த நினைப்பில் பல்லி விழுந்து பிராண்டுவதாகத் தோன்றியது. மௌனமாக அவளையே வெறித்தான்.

''காயத்ரி நீ அதிகம் பேசறே...'' என்றான்.

''இல்லே... பேச வேண்டியதை தான் பேசறேன். நீங்க ஏதோ தப்பு பண்ணியிருக்கீங்க. சம்திங் ராங்.''

''நத்திங் ராங்!'' - சம்பத் கத்தினான்.

''ஏன் கோபம் வருது. நான் உங்க மனைவி. மறைக்காதீங்க. எனக்கு ஒளிவு மறைவு பிடிக்காது...''

''அதான் சொல்லிட்டேன்ல...''

அது பொய்...''

''இது நமக்கு முதல் இரவு. நீ இப்படி நடந்துக்கறது தப்பு...''

''முதல் ராத்திரியிலேயே லட்ச லட்சமா லஞ்சம் கொடுக்கறதுதான் தப்பு. பொண்டாட்டிகிட்ட பொய் சொல்றது அதை விட பெரிய தப்பு...''

''யெஸ்... நான் பொய்தான் சொல்றேன். பயங்கரமா பொய் சொல்றேன். அப்படித்தான் சொல்வேன்! பணத்துக்காக எதையும் சொல்வேன். பணம். அதுதான் உலகம். பணமிருந்தா இந்த உலகத்துல கிட்னில இருந்து கிங்க்ஸ்டம் வரை எல்லாம் வாங்கலாம்

நாங்கஅப்படி வாங்கின பரம்பரை. காத்தால வாக்ஸ் ஹால். மத்யானம் மாருதி. சாயங்காலம் செவ்ரலெட்டுன்னு வேளைக்கு ஒரு கார்ல போன குடும்பம் எங்க குடும்பம். எல்லாம் பணத்தால. அந்த பணத்தை ஓவர் தநைட் என்னோட அப்பா முட்டாள்தனமான பேராசைல தொலைச்சிட்டார்.

நான் தலையால அடிச்சிக்கிட்டேன. கேக்கலை. தொலைச்சிட்டார். தூங்கப் போகும்போது லட்சாதிபதி தூங்கி எழுந்திரிச்சா பிச்சாதிபதி. இதுதான எங்க நிலை

தண்ணில வாழ்ந்த மீன் கரைல விழுந்த மாதிரி ஆயிட்டோம். அப்பதான் அதிர்ஷ்டம் கண்ணடிச்சது லாட்டரிச் சீட்டு ருபத்துல! ஐம்பது லட்சம். தொழில் ஏமாத்தினாலும் அதிர்ஷ்டம் ஏமாத்தலை... லாட்டரி அடிக்கத் தெரிஞ்சோம் - லாட்டரியால தப்பிச்சோம். தப்பிச்சதை இழக்கவா?



முடியாது...

முடியவே முடியாது...

-உக்ரம் கொப்பளிக்க, ஆவேச துள்ளலுடன் பேசினவனை காயத்ரி வெடவெடப்புடன் பார்த்தாள்.

''ஏன் இழக்கணும். எதனால இழந்துடுவேன்னு நினைக்கறீங்க? அங்கதான் என்னவோ இருக்கு...'' என்றாள் விடாப்பிடியாக.

''காயத்ரி என்னை மறுபடியும் கொலைகாரன் ஆக்காதே...'' - சம்பத் இந்த முறை வார்த்தை தவறிவிட்டான்.

''மறுபடியும்னா... நீங்க ஏற்கனவே கொலைகாரரா?'' - காயத்ரியின் கேள்வி அவனை உடனேயே கட்டிப் போட்டது.

''நோ... நோ... நீ இனி என்கூட பேசாதே! நீ இனி என் மனைவி இல்லை. கெட் அவுட்! கெட் அவுட்!'' - பெரிதாக கத்தினான் ஹிஸ்டீரியா வந்தது போல் இருந்தது அவனைப் பார்க்க. காயத்ரிக்கு அவனது அலறலில் முகம் வெளிறிப் போனது. ரத்தம் கட்டிக் கொண்டது. அவள் உடனேயே அறையை விட்டு வெளியே போனாள். அறைக் கதவை சாத்தினான் வெளியே...

திருநாவுக்கரசின் அறைக் கதவைத் தட்டினான்.

கதவைத் திறந்த திருநாவுக்கரசை கொலை வெறிப் பார்வை பார்த்தான்.

''என்னடா உன் தங்கைச் சுத்த வேதாளமா இருக்கா? கேக்க கூடாத கேள்வியை கேக்கறா...பேசக் கூடாததை எல்லாம் பேசறா...அப்பாவி, சாது அப்படி இப்படின்னு சொன்னியே? நான் உன்னை நம்பினதும் தப்பாடா?''

சம்பத் நிற்கும் தோரணையும் பேசும் விதமும் திருநாவுக்கரசை கடுமையாகவே புரட்டியது. ''மாப்ள என்ன ஆச்சு. எதுவா இருந்தாலும் விடிஞ்சி பேசிக்கலாம்...''

சமாளிக்க பெரும்பாடு பட்டான் அவன். சம்பத் சகித்துக் கொண்டு சோர்ந்துபோய் ஹாலில் கிடந்த சோபாவில் விழுந்தான்.

அறைக்குள்ளே...

நெடுநேரம் குத்துக்காலிட்டு அமர்ந்திருந்தாள் காயத்ரி. கண்களில் உப்பு நதி. மனதுக்குள் பீதி. எவ்வளவு நேரம்தான் இப்படியே இருப்பது? பட்டுப்புடவை வியர்க்க வைத்தது.

எழுந்திருந்து அவிழ்த்து போட்டுவிட்டு நூல்புடவை ஒன்றை எடுத்துக் கட்டிக் கொண்டாள். அவிழ்த்துப் போட்ட பட்டு புடவையை மடித்து அறை பீரோவில் வைக்க அதன் டோரை திறந்தாள். கட்டுக்கட்டாக பணம், நடுவே ஒரு துப்பாக்கி. சினிமாவில் மட்டுமே வில்லன் வசம் பார்த்த சமாச்சாரம்.

இப்பொழுது அவள் வீட்டில் அவள் எதிரில்...

கூடவே ஒரு லெட்டர்.

ஆர்வத்துடன் கைகள் அதை எடுத்துப் பிரித்தன.

கடிதம் ஒன்று கீழே விழுந்தது.

எடுத்துப் பிரித்தாள்

**அன்புள்ள சம்பத்!**

**இனி நீ லாட்டரிச் சீட்டை என்வசம் ஒப்படைக்க வேண்டாம். ஒப்படைத்தால் விபரீதம் வரும். நீயோ உன் குடும்பத்தவரோ ஒப்படைத்தாலும் கடன்காரர்கள் தொல்லை வரும். போலீசுக்கும் சந்தேகம் வரும்**



**புத்திசாலித்தனமாக வேறு மார்க்கத்தைப் பற்றி யோசி. உனது குடிகார நண்பன் திருநாவுக்கரசைப் பயன்படுத்திக் கொள். அவனுக்கொரு தங்கை இருக்கிறாள் அவளைக் கொண்டு பணத்தை வாங்கப் பார். பணம் கை மீறிப் போகாமல் இருக்க அவளையே மனைவியாக்கிக் கொண்டு விடு. வேறு வழி தெரியவில்லை.**

**உனக்கு என் சார்பில் இன்ஸ்பெக்டர் ரகுநாத பெருமாள் உதவி செய்வார். அவருக்கு அவர் கேட்கும் பங்கைக் கொடுத்து விடவும்.**

**இப்படிக்கு**
**பாபாவுக்காக பார்த்திபன்.**

**பின் குறிப்பு :** உன் அப்பாவை நீயே கொன்ற விஷயமோ இல்லை டேனியலை காரை ஏற்றிக் கொன்றதோ, ரிக்ஷாக்காரனை சாராயத்தில் மூழ்க வைத்து சாக்கடையில் தள்ளிவிட்டு கொன்றதோ எதுவுமே எனது ஐடியா என்று வெளியே தெரியக்கூடாது. தெரிந்தால் உன் உயிர் உன்னிடம் தங்காது. என்ன விலை கொடுத்தாவது நீ தப்பித்தாக வேண்டும். தப்பித்து விடு. ரகுநாத பெருமாள் உதவுவார்!

கடிதத்தைப் படித்த காயத்ரிக்கு பயம் வெட்டி வெட்டி இழுக்கத் தொடங்கியது. கல்யாண அலங்காரத்தை வியர்வை கரைக்கப் பார்த்தது. உடனடியாக எதையும் யோசிக்க முடியவிலலை.

உடம்பின் உறுப்புக்கள் இரண்டு மடங்கு பாரமான மாதிரி ஒரு பிரமை. முதல் ராத்திரியிலேயே வாழ்வின் கடைசி ராத்திரியான மாதிரி ஒரு சோகம்.

'அப்பாவையே பணத்துக்காகக் கொன்ற மனிதனா இந்த சம்பத்?' கேள்வியைக் கேட்டுக் கொள்ளக்கூட அவளால் முடியவில்லை.

டைரியையும் கடிதத்தையும் எடுத்துக் கொண்டு மெல்ல எழுந்திருந்தாள். பீரோ கதவைச் சப்தமின்றி சாத்தினாள்

அறைக் கதவருகே வந்து சாவித் துவாரம் வழியாக பார்த்தாள். ஹாலின் மையத்தில் தூக்கமில்லாமல் தலைக்குமேல் சுழலும் கைத்தான் ஃபோனைப் பார்த்தபடி அலன் முறைப்பாகத் தெரிந்தான்.

கணவனாகச் சற்றுமுன் வரை தெரிந்தவன் ஒரு கொலைகாரனாகத் தெரிந்தான்.

பணத்துக்காக நாளை இவன் நமது கழுத்தைநெறிக்க மாட்டான் என்பதற்கு என்ன உத்தரவாதம்?'' கேள்விக் குள் தெளிந்தவள் டைரியை புரட்டத் தொடங்கினாள்.

ஜாக்கிரதையாக உட்பக்கம் தாழிட்டுக் கொண் டாள்

முதல் பக்கம் : 'தப்பித்தே திருவேன்!' என்று எழுதி யிருந்தான்.

அடுத்த பக்கம் புரட்டினாள்

'வசதியாக வாழத்தான் வாழ்க்கை அதற்காக நான் 'தப்பித்தே திருவேன்!'

மூன்றாவது பக்கம்...

'புத்திசாலித்தனம்தான் வாழ்க்கை. அதற்காக நான் 'தப்பித்தே திருவேன்!'

நான்காவது பக்கம்...

'முட்டாள்கள் தந்தையாக இருந்தாலும் கொல்வதில் தப்பில்லை. அப்படிக் கொன்ற நான் தப்பித்தே திருவேன்''



ஐந்தாவது பக்கம்

'லாட்டரி சீட்டை பேங்கில் வெளிப்படையாக ஒப்படைக்க துடிக்கிறார் அப்பா, அப்படிச் செய்தால் என்ன ஆவது? வரும் பணத்தில் கடனை அடைப்பேன் என்கிறார். வேண்டாம் பாபாவிடம் ஒப்படைப்போம் என்றேன் நான். கேட்கவில்லை பாபா கூட ஆசை காட்டி அப்பாவுக்குக் கடிதம் போட்டிருப்பதாக சொன் னார் ஆனால் கடிதத்தை அப்பா பார்க்குமுன் எனக்கும் அப்பாவுக்கும் வாக்குவாதம் முற்றி அது கொலையில் முடிந்து விட்டது. நல்லவேளையாக நான் கழுத்தை நெறித்தது வசதியாகப் போய்விட்டது அப்பாவை தூக்கில் ஏற்றினேன் தோட்டத்தில்... சாரி டாட்... அப்பன் பிள்ளை உறவெல்லாம் ஒரு எல்லைவரைதான் உங்களுக்குத் தவறாமல் திவசம் செய்வேன் இனி...''

ஆறாவது பக்கம்

'ருத்ரா அங்கிள் சரியான கரடி மனிதர். அப்பாவின் பிரேதத்தை ஆராய வேண்டும் என்று கழுத்தறுத்து விட்டார் இனி இவர்கள் போக்கில் தான் நான் போயாக வேண்டும். இல்லாவிட்டால் சந்தேகம்தான். சனியன், இந்த வேளை பார்த்தா பாபாவின் கடிதம் வந்து சேர வேண்டும்?

அகப்பட்டுக் கொண்டு விடுவோமோ என்றும் பயம். நடுவில் நிச்சயம் எதாவது வழி பிறக்கும் என்கிற தைரியம் எனக்கு இருக்கிறது.

லாட்டரிச் சீட்டுடன் பணத்துடன் தப்பித்தே தீர வேண்டும். இந்த லாட்டரிச் சீட்டுக்கார ரிக்ஷாக்காரன் ஒரு புதிய இடைஞ்சல். இவனையும் இன்று தீர்த்துக் கட்டியாகிவிட்டது. மூக்குமுட்ட சாராயத்தை அப்பனுக் கும் மகனுக்கும் ஊற்றி சாக்கடை வாராவதியில் தள்ளி

விட்டு தலையில் கல்லையும் தூக்கிப் போட்டாயிற்று. தேங்க் யூ பாபா!

இந்த மாதிரி எல்லாம் செய்துதான் இன்று நீங்கள் ஒரு பெரிய மனிதர். நாளைக்கு நான்! அதற்காகவே நான் 'தப்பித்தே திருவேன்!'

**ஏழாவது பக்கம்...**

ருத்ரா அங்கிள், இந்தக் கேஸில் மிகத் தீவிரமாக இருக்கிறார். லாட்டரி ஏஜெண்டை போய் குடைந்தது எனக்குத் தெரியாதா? அவன் டேனியல் பற்றி சொன்னதும் தெரியும்

எஞ்சியிருக்கும் ஒரே சாட்சி டேனியல்; நீ மட்டும் தான், உன்னையும் இன்று பாபாவின் கார் பரலோகம் அனுப்பிவிட்டது.

பாபாகூட பலே புத்திசாலி. இரண்டாவதாக ஒரு கடிதத்தைப் போட்டு சீட்டு தன் வசமில்லை என்று போலீசுக்குச் சொல்லாமல் சொல்கிறார். கூடவே எனக்கும் ஒரு கடிதம்,

நான் இனி சீட்டை சாமர்த்தியமாக வேறு யாரை யாவது கொண்டு பணமாக்கிக் கொள்ள வேண்டும்.

நம்பிக்கையான நபர் முக்கியம்.

யார் அந்த நபர் வேறு யார்? எல்லாம் தண்ணி வண்டி திருநாவுக்கரசுதான். ஒரு பாட்டில் விஸ்கிக்காக இந்தியாவையே எழுதிக் கொடுக்கும் இவன் இருக்க எனக்கு என்ன கவலை?

திருநாவுக்கரசு நீ இருப்பதால், நான் 'தப்பித்தே திருவேன்!'



**எட்டாவது பக்கம்...**

'வந்தாரய்யா ரகுநாத பெருமாள். பாபாவின் ஆத்ம தாதர். ருத்ராவை அப்படியே திசை திருப்பி விட்டார்.

பலே ஆள்! இவர் இப்படி எங்களுக்குக் காட்டும் திறமையை டிபார்ட்மென்ட்டுக்கும் காட்டினால் தமிழ் நாட்டு போலீஸை யார் ஜெயிக்க முடியும்?

ஆனால் பெருமாள் கேட்கும் தொகை ஆனாலும் அதிகம். பதினைந்து லட்சம்! பரிசுப் பணத்தில் எத்தனை பேருக்குத்தான் பங்கு தருவது? திருநாவுக்கரசு பிராந்திக் கடை வைத்துதான் பிழைத்து கொள்கிறேன், என்கிறான்.

நாளை இவன் துரோகியாக மாறலாம். குடிகாரர்களை நம்பகூடாது. இவனை நமது கட்டுப்பாட்டிலேயே வைத்திருக்க வேண்டும் ஒரே வழி... வித்யாவைக் கொடுத்து சொந்தமாக்கிக் கொள்வதுதான்.

காயத்ரியை கட்டிக்கொண்டு சொந்தமாவதும் நல்லதுக்குதான்.

ஆக, எல்லா விஷயங்களுக்காகவும் நான் 'தப்பித்தே திருவேன்''

**ஒன்பதாவது பக்கம்...**

'தப்பித்து விட்டேன். ஊர்விட்டு ஊர் கூட மாறி விட்டேன். காயத்ரி மனைவியாகப் போகிறாள். பணம் கூட மாற்றி வந்து விட்டது. போலீஸ் சரித்திரத்தில் நான் ஒரு அதிசயம் இருந்தாலும் பெருமாள் நாளை அதிசயம் அவருக்கான பணத்தை உடனே கொடுத்து அவரைப் பிடியிலேயே வைத்திருக்க வேண்டும்,

தப்பித்து விட்டேன்...

ஆஹா, நான் தப்பித்து விட்டேன்...'

'பத்தாவது பக்கத்தை காயத்ரி புரட்டும்போது சம்பத் ஓசைப்படாமல் படி ஏறி கதவை நெருங்கியிருந்தான் சாவித் துவாரம் வழியாகப் பார்த்தவனுக்கு அமிலத்தை சப்பின மாதிரி ஒரு வேதனை.

முகம் அறைபட்டு நசுங்கின மாதிரி ஆனது.

''போச்சடா...'' தலைக்கு கை போனது. இதயம் கதவிடுக்கில் அகப்பட்ட எலி மாதிரி திணறத் தொடங்கியது.

ஆனாலும் புத்திசாலித்தனம் மட்டும் செத்து விடவில்லை. இப்பொழுது கத்தக்கூடாது...கத்தவே கூடாது ...திரும்பவும் இறங்கிப்போய் சோபாவில் படுத்துக் கொண்டான். யோசிக்கத் தொடங்கினான்.

'ஐ ஆம் சாரி காயத்திரி... ஐந்தாவதாக ஒரு கொலையை நான் செய்துதான் தீரவேண்டும். உன்னை வெளியே விடாமல் அதைச் சாமர்த்தியமாகச் செய்ய வேண்டும்.

உனக்கு அல்பாயுசு என்று எனக்குத் தெரியாமல் போய்விட்டதே!

நான் இன்னும் தப்பிக்கவில்லை.

ஆனாலும் தப்பித்தே தீருவேன்!'

## 15

மணி மூன்று!

துளிக்கூட உறக்கமில்லாமல் உட்கார்ந்திருந்த காயத்ரி-பால்கனி வழியாக பட்டுப்புடவையைக் கயிறு



போல ஆக்கி இறங்கிவாசல் பக்கம் வந்து எட்டிப் பார்த்தாள்.

பிரேதம் போல் உறக்கத்தில் சம்பத்.

அவனிடம் பெருமூச்சு.

மெள்ள நடக்க ஆரம்பிக்க கொலுசு 'நான் காட்டிக் கொடுக்கவா?' என்று கேட்டு சிணுங்கியது. ஞாபகமாக கழட்டி கையில் எடுத்துக் கொண்டாள். மெதுவாக வாசல் படியிறங்கினாள். மனது ஓடச் சொன்னது...ஓட்டமும் ஆரம்பமானது!

மணி ஆறரை இருக்கும்.

அயர்ந்து விட்ட சம்பத் மெள்ள கண் விழித்தான். முதல் காரியமாக படி ஏறி அறைக் கதவைத் திறந்து பார்த்தான். படுக்கையில் காயத்ரி!

நல்ல உறக்கத்திலிருக்கும் பாவனை.

மெல்ல உள்ளே சென்று பீரோவைத் திறந்து பார்த்தான் டைரியையும், கடிதத்தையும் காணவில்லை!

கோபம், உடனேயே கண்ணில் நெருப்பை கொளுத்திப் போட்டது.

கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டான். அவளுக்குப் பக்கத்தில் போய் படுத்துக் கொண்டான். அவன் தன் அருகில் படுப்பதை அவளால் அரைக் கண்களைத் திறந்து பார்த்து உணர முடிந்தது.

'ஆண்டவனே...அடுத்து என்ன செய்யப் போகிறானோ?' பயம் மென்னியைத் திருகியது. மெல்ல கண் விழிப்பதுபோல பாவனை செய்தபடி கண் விழித்தாள். அவன் அவளையே வெறித்தான்.

''சாரி'' என்றாள் செயற்கையாக...

''எதுக்கு?''—இது அவன்.

''ராத்திரி நான் அப்படி நடந்துகிட்டதுக்கு?''

''சரி, டைரியும் லெட்டரும்''—கோபம் கலையாமல் கேட்டான்.

''கொளுத்திட்டேன்!'' உடனடி பதில் அவளிடம்.

''கொளுத்திட்டையா, ஏன்?'' திகைத்துப்போய் கேட்கிறான் அவன்.

''கொலைகாரனா இருந்தாலும் நீங்க என் புருஷன், அந்த சாட்சியங்களை நல்லவேளையா நான் பார்த்தேன். வேற யாராவது பார்த்திருந்தா?

''நீ பார்த்ததே தப்பு. போகட்டும் அதை எரிச்சு நல்ல காரியம்தான் செஞ்சே. இனியாவது நல்லவிதமா நடந்துப்பியா?''

''உங்க இஷ்டப்படி நடப்பேன். ஆனா, இனிமே இந்த மாதிரி கொலை அது இதெல்லாம் வேண்டாம்...''

''அது சூழ்நிலையைப் பொருத்தது. நீ நடந்துக் கறதைப் பொருத்தது. உன்னையே நான் கொல்லத்தான் திட்டம் போட்டேன். ஆனா நீ மனம் மாறி என்னை கொலையாளி ஆக்காம நீயும் தப்பிச்சே.''

''போதும் அந்த பேச்சு. காப்பி போட்டு எடுத்து கிட்டு வரவா?''

''அப்புறமா! இப்ப நீ படு.''-நல்லவேளை காயத்ரிக்கு சாதகமாக பஸ்ஸர் சப்தம் அலறியது. சலிப்போடு போய் கதவைத் திறந்தான்.

வெளியே ருத்ரா!

கையில் பிஸ்டல்!!



முகத்தில் சுழிச்சிரிப்பு!!!

''அங்கிள் நீங்களா?''-சம்பத்திடம் குழறல்...

''இன்ஸ்பெக்டர் நீங்களான்னு சொல்லுப்பா...''

திருத்துகிறார் ருத்ரா. படி இறங்கி வருகிறாள் காயத்ரி. அவளை நன்றியோடு பார்க்கிறது அவர் பார்வை.

''உன் மனைவி மட்டும் ராத்திரியோட ராத்திரியா சாமர்த்தியமா எனக்கு எஸ். டி டி. போன் பண்ணி விஷயத்தைச சொல்லலைன்னா லோக்கல் போலீஸ்கிட்ட இந்த டைரியையும் லெட்டரையும் சப்மிட் பண்ண லைன்னா, நீ இப்ப அஞ்சாவதா ஒரு கொலை செய் திருப்பே சம்பத். அதுக்கு நீ அவளுக்கு ஒரு தேங்க்ஸ் சொல்லு...''

—என்கிறது அவர் உதடு.

''அடிப்பாவி... உள்ள நீ என்கிட்ட நடிச்சியா? டைரியை கொளுத்திட்டதா சொன்னது பொய்யா? உனக்கு இவ்வளவு சாமர்த்தியமா?''

—அரண்டு போய் கத்தினான் சம்பத்.

''அது அவளுக்கு நான் போன்ல கொடுத்த ஐடியா. முதல்ல வீட்டுக்கு போ...அவனை பொய்யா சமாளி. உன்னைக் கொல்ல விடாம ஒரு மூணு மணி நேரம் பார்த்துக்கோ. இப்பவே ஜீப் எடுத்துகிட்டு கிளம்பி வரேன்னு சொன்னேன். வந்துட்டேன்... இப்படி நீ விட்னஸோட மாட்டணும்னுதான் அன்னிக்கு தப்பினியா சம்பத்?''

நல்லவேளை என் மகள் தப்பிச்சா!

''உன்னால அந்த ரகுநாத பெருமாளும் அல்லவா மாட்டப் போறான். இதே நேரம் பெருமாள் வீட்டையும் போலீஸ் ரவுண்ட் அப் பண்ணியிருக்கும்,''

—ருத்ரா பேசப் பேச சம்பத்துக்கு காலடியில் உலகம் நழுவியது. அவன் மனத்தின் தீவிரத்தில் 'தப்பித்தே தீருவேன்' என்கிற வெறி திரும்ப அலை பாய்ந்தது.

சுற்றிச் சுற்றி பார்த்தான்.

'தப்பித்தே தீருவேன்... தப்பித்தே தீர வேண்டும்... தீர வேண்டும்'-எண்ணக் கொந்தளிப்போடு ருத்ரா மேல் ஒரே மோதலாக மோதி அவரை கீழே தள்ளிவிட்டு வாசலைக் கடந்து ஓட ஆரம்பித்தான்.

ருத்ராவிடம் துளிக் கூட பதட்டமில்லை.

காயத்ரி கண்களை அகல விரித்து சார் என்று கத்துகிறாள். அந்த சமயம் பார்த்து வெளியே துப்பாக்கி வெடிக்கும் அரவம்...

ஒன்று...

இரண்டு...

மூன்று என்று மூன்று தோட்டாக்கள் சீறும் சப்தம்...

''வெளியே போலீஸ் வளையம் இருக்கும்மா. அவன் தப்பிச்சே தீர முடியாதும்மா... குண்டுகள் அவன் மேல தான் பாய்ஞ்சிருக்கும்'' என்றார் ருத்ரா மிக சோகமாக. அதைக் கேட்ட காயத்ரி துளி ஈரம் கூட காய்ந்திராத அந்த தாலிச் சரடை மெல்ல கைகளில் பற்றியபடி ஒரு ஓரமாக அமர்ந்து விசும்ப ஆரம்பித்தாள்.

''நீ ரொம்ப கிரேட்டும்மா...'' -என்று பாராட்டும் ருத்ராவின் பாராட்டை அவளால் ஏற்க முடியவில்லை.

குழந்தையைப் போல விசும்பி விசும்பி அழ ஆரம்பிக்கிறாள்.

ஆனால் திருமாங்கல்ய சரட்டிலும், திருமாங்கல்யம் மேலும் அந்த கண்ணீர் கம்பீரத்தோடுதான் சொட்டத் தொடங்கியிருந்தது.

**முற்றும்**

24180
4097938

# மண்ணில் மனிதர்கள்

அகிலா ஆபீசுக்கு கிளம்பி விட்டாள். அத்தைப் பாட்டி மடியோடு செய்து கொடுத்த ரவை உப்புமாவை கேரியரில் அடக்கிக்கொண்டு, வயர் கூடையில் அதையும் கல்கி, கலைமகள், குங்குமம் என்று சஞ்சிகைகளையும் அள்ளிப் போட்டுக் கொண்டு அகிலா ஆபீசுக்கு கிளம்புவது என்பது இன்று நேற்று நடக்கும் விஷய மில்லை.

அது ஒரு பத்து வருடத்து வரலாறு. கல்லூரியிலேயே முதலாக வந்து பட்டம் வாங்கிக் கொண்டு வெளியே வந்த கையோடு வேலைக்குப் போக ஆரம்பித்தவள்தான். இன்றுவரை அந்தப் பயணம் தடை இல்லாமல் நடந்து கொண்டிருக்கிறது.

ஒரு பிரபலமான தனியார் நிறுவனம் ஆரம்பத்தில் முந்நூறு ரூபாய் சம்பளத்துக்கு அவளை வேலைக்கு எடுத்துக் கொண்டது. இன்று ஏறத்தாழ மூவாயிரம் சம்பளம்!

''எதுக்குடா சிவராமா இவளை வேலைக்கு அனுப்பிண்டு? கல்யாணம் பண்ணிண்டு இன்னொருத்தன் வீட்டுக்குப் போய் தாயா மாறி குழந்தைகளை வளக்கற

பொறுப்பு அவனுக்கு இருக்குடா. முந்நூறுக்கும் நானூறுக்கும் ஒரு பொம்மனாட்டி, குப்பை கொட்டப் போறது குடும்பத்துக்கு நல்லதில்லடா...'' அன்றே அத்தைப் பாட்டி தடுத்துப் பார்த்தாள்.

''அத்தே... நோக்கு உலகம் தெரியாது! உன் காலம் வேற, இவ காலம் வேற. இன்றைய கல்யாண மார்க்கெட்ல ஒரு பொண்ணு கறுப்பா செவப்பாங்கறது கூட இரண்டாம் பட்சம். அவ கிராஜுவேட்டா, வேலைக்கு போறாளாங்கறதுதான் பிரதான விஷயம்.''

அவரது பதிலால் அத்தைப் பாட்டியிடம் அசூயை. ''என்னடா கொடுமை இது வேலைக்கு போயிட்டா அப்புறம் பிள்ளை குட்டி பெத்துக்கறதும், அதைப் பராமரிக்கறதும் எப்படிடா?''

''அதுக்குதான் உங்களை மாதிரி கிழடுகள் இருக் கேளே?''

''என்ன இருந்தாலும் தாய்ப்பாசம் போல வருமாடா?''

''வரலேன்னா போயிட்டு போறது. மொதல்ல கல்யாணம் நடக்கனும். அவ ஒருத்தனுக்கு மொதல்ல பொண்டாட்டின்னு ஆனாதான் தாயாக முடியும். அதுக்கே வக்கில்லை. இதுல அடுத்தவா பாசம், தாய்ப் பாசம்கற விஷயங்கள்ளாம் அதுக்கப்புறம்தான் தீர்மான மாகனும்.''

நாம என்ன டாட்டாவா, பிர்லாவா? இந்த இந்திய தேசத்தோட மோசமான நடுத்தட்டு மனுஷா நாம அத்தை. நாம எப்படி வாழனும்கறதை நாம தீர்மானிக்க முடியாது. சூழ்நிலைதான் அதைத் தீர்மானிக்கறது. அதுக்கு தக்க மாதிரி நாம நடந்துக்கலைன்னா நாறிடு வோம் நாறி...''



அன்றைக்கு சிவராமன் அப்படிப்பேசின பிறகு இன்று வரை அத்தைப் பாட்டி வாயே திறக்கவில்லை. வயதான காலத்தில் கணவன் குழந்தைகள் என்கிற பந்தங்களுக்கு இடமேயில்லாதபடி, பட்டமரமாகி விட்டவளுக்கு மருமகன் சிவராமன்தான் எல்லாம். சிவராமனுக்கும் அத்தைப்பாட்டி அபிதகுஜம்தான் அப்பா அம்மா என்று சர்வமும். மனைவி மங்களத்தை அகிலாவுக்கு நான்கு வயசாகும் போதே மஞ்சள் காமாலையின் பொருட்டு எமனுக்குக் கொடுத்தாகிவிட்டது.

சர்க்காரில் கலெக்டர் அலுவலகத்தில் டெபுடி தாசில்தார் அளவுக்கு சிவராமனுக்கு பதவியும் உயர்ந்து விட்டது

ஆச்சு... இன்னும் ஆறு மாசத்தில் தாசில்தார் ரிடையர் ஆகப் போகிறார். அவருக்குப் பிறகு சிவராமன்தான் தாசில்தார். ஆபீஸ் ஜீப், டவ்வாலி என்று அமக்களம் பண்ணலாம்.

இப்போதைய தாசில்தார் பத்து லட்சம் மதிப்பில் பங்களா கட்டியிருக்கிறார். எல்லாம் லஞ்ச சம்ரட்சணை.

''நா பாலபுண்யத்துக்கு பயந்தவன். நானா காலணா கேக்க மாட்டேன். தானா கொடுக்கறதை வேண்டாம்னு சொல்ல மாட்டேன். நாளைக்கே ஒரு மந்திரி வந்தா அவருக்கு குளியல் சோப்புல இருந்து குடிக்க சோடா வரை நான்ல வாங்கித் தரவேண்டியிருக்கு கவர்மென்டா அதுக்கெல்லாம் காசு கொடுக்குது?''—என்கிற நியாய மான வாதத்திலிருந்து ''நா பார்க்க வேலைக்குச் சேர்ந்த சாதாரண குமாஸ்தா நாலு வீடு வாங்கிட்டான் இந்த, ஆபீஸ்ல, ஏதோ என்னால சிம்பிளா ஒரு பங்களாதான் கட்ட முடிஞ்சது...''—என்று கழிவிரக்கப் பட்டுக் கொள்வது வரை அசல் இந்திய மண்ணின் ஒண்ணாம் நம்பர் ஊழல் புழுதி.

இவர்கள் அளவிற்கெல்லாம் சிவராமன் போனவர் இல்லை. ஆனால் போய்தான் ஆகவேண்டும் என்கிற நிர்ப்பந்தம் மட்டும் நித்யம் உண்டு. நேற்றுவரை அந்த நிர்ப்பந்தங்களை ஜெயித்துவிட்டவர் இன்று வேறுமாதிரி சிந்திக்க தொடங்கிவிட்டார். நாமும் கை நீட்டினால் என்ன?

அகிலா இதுவரை கல்யாண மார்க்கெட்டில் விலை போகாததுதான் பிரதான காரணம்.

பத்து வருஷத்தில் நூற்றுக்கும் மேல் மாப்பிள்ளைகள் பெண் பார்க்க வந்து போய்விட்டனர். சொஜ்ஜி பஜ்ஜி செலவுக் கணக்கே ஐம்பதாயிரம் தாண்டிவிட்டது.

அகிலா கிராஜுவேட்டாக இருந்து கொண்டு வேலைக்குப் போய் மூவாயிரம் சம்பாதித்தாலும்கூட.. காக்கைக் கறுப்பில் தேகம் இருப்பதாலும், ஆஸில்யம் என்கிற ஒரு பெண் பிறக்கக் கூடாத நட்சத்திரத்தில் பிறந்து விட்டதாலும் அந்த இரண்டு காரணங்களிலும் அவளது கல்யாண வாழ்க்கை சிக்கிக் கொண்டு மீளுவேனா என்று கதறிக் கொண்டிருக்கிறது.

சிவராமன் அலுத்துப் போய் விட்டார். அத்தைப் பாட்டியோ கடவுளே இல்லை என்று சொல்லும் எல்லையில்...

ஆனால் அகிலா இதற்கெல்லாம் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. அரசமரம், ஆலமரம், பிள்ளையார், சண்டி முண்டி என்றுதேவ விலாசம் தேடிப் போய் சுற்றின பிறகும், எள் விளக்கு, எண்ணெய் விளக்கு, நெய் விளக்கு என்று விதவிதமாக தீபங்கள் ஏற்றியும் பாவ இருள் கரைந்திராத நிலையில் அவள் ஒரே ஒரு முடிவுக்கு மட்டும் வந்திருக்கிறாள்.



இனி எந்த ஆண் மகன் முன்னாலும் என்னை கல்யாணம் செய்து கொள், வாழ்க்கை கொடு என்கிற விண்ணப்பத்தோடு காலில் விழவோ காட்சி தரவோ தயாராக இல்லை.

கல்யாணம் ஆனால்தான் வாழ்க்கையா?

ஆகாவிட்டால் சுவாசப்பை வேலை செய்யாதா? இதயம் இயங்காதா? சாப்பிடும் வஸ்துக்கள் ஜீரணமாகாதா? ஒண்டிக் கட்டையாய் ஒருவர் தயவும் இன்றி வாழ்ந்து மடிவதும் தவத்தைப் போன்ற ஒரு முனித்வமான செயல்தான். அதுதான் இனி தவக்கு சரி என்கிற முடிவோடு கல்யாண எண்ணத்தை ஆசிட்டில் போட்டு கொளுத்திவிட்டு மரத்துப் போய் நடந்து கொண்டிருந்தாள். ஆண் ஜாதி அவள் பார்வையைப் பொருத்த மட்டில் காக்கை குருவி நாய் கழுதையைப் போன்ற ஒரு உயிர்க் கூட்டம் மட்டுமே. அவைகளைப் பார்க்கும்போது நமக்கு ஏதாவது நேரிடுகிறதா என்ன?

அவள் வரையில் அதுபோல் ஆகிவிட்டது ஆண் கூட்டம்! சமீபகாலமாக எந்த ஒரு ஆண்மகனையும் ஒரு பொருட்படுத்துதலோடு பார்த்து அவள் பேசியதே இல்லை. அதிலும் அவள் பணிபுரியும் ஆபீசில் மேனேஜரே அவளை இப்மட்டில் கண்டிக்கும் வரை போனபின்பும் அவள் மனதில் மாற்றமில்லை.

'போங்கடா நீங்களும் உங்க இனமும்' என்பதுபோல் ஒரு உக்ரமான நினைப்பு. சுயநலம் மிகுந்தவர்கள் என்கிற மிகமிக உறுதிப்பாடான எண்ணம். இவர்களை மதிப்பதே பாவப் என்கிற சித்தாந்தம். அதன் எதிரொலி யாராவது கிழடு கட்டைகள் 'டைம் என்ன?' என்று கேட்டால் கூட சொல்லாமல் நடக்கும் அளவு போய்விட்டது.

ஆனால் ஒருவன் மட்டும் அவள் மனதை பிராண்டிக் கொண்டே இருக்கிறான். ஆண் வர்க்கத்தில் அவன் ஒரு

தியாகி என்பதுபோல் ஒரு நினைப்பு அவனுக்குள் மெல்ல துளிர் விட்டுள்ளது. அவனை மட்டும் லஜ்ஜையில்லாமல் பார்ப்பாள். சிரிப்பாள். சமயங்களில் "சௌக்கியமா" என்று கூடக் கேட்பாள். அவனுக்கும் உச்சி குளிர்ந்து போகும். பாதம் பூமியிலிருந்து நழுவி விடும்.

"இந்தாப்பா சக்கிலி இந்த கிழிசலை தைக்க எவ்ளோ கேக்கறே?"

"எலேய் பாலீஷ் போட இரண்டு ருவாயா? பகல் கொள்ளையா இருக்குதே?" இப்படி தன்னை அணுகுபவர்கள் ஏகவசனம் பேசியே கேட்டவனுக்கு அகிலாவின் அணுகுமுறை மட்டும் அமிர்தமயமான ஒன்று.

நகரின் பிரதான சாலை ஒன்றில் பஸ் ஸ்டாப் அருகில் கிழிந்த குடை ஒன்றின் நட்டுவைத்த நிழல்தான் அவனது ஜாகைப் பகுதி. ஒரு தோல்பையும் அதிலுள்ள குத்துக் கம்பியும் நாலும் மெழுகும்தான் அவனது சொத்து.

ஆனால் அவனுக்கும் ஒரு நம்பிக்கை நட்சத்திரம் உண்டு. அதுதான் அவனது மகன் குமரேசன்! நாலு வயசு குட்டி சிங்கம் சதா சிலேட்டும் கையுமாக எதையாவது கிறுக்கிய படி...

"அப்பா எனக்கு கார்ப்பரேஷன் பள்ளிக்கோடம் வேணாம். இங்கலீஷ் பள்ளிக்கூடம்தான் போவே நா. அனுப்புவியா?"

"குமரு...அப்பா சாதாரண சக்கிலிப்பா. ஒன்னிய கார்ப்பு பள்ளிக்கோடம் அனுப்புனாலே அது பெரிசுடா"

"ஆங்... அம்மா சாவையில என்னிய இங்கிலீஷ் பள்ளிக்கோடம் அனுப்பறதா சொன்னீல்ல...?"

"அது சாவப் போறவ உசர் திருப்திக்காக ராசா..."

"அப்ப என்னிய இங்கிலீஷ் பள்ளிக்கோடம் அனுப்ப மாட்டியா?"



"அதுக்கு எனக்கு வக்கில்ல ராசா..."

இப்படி ஒரு தர்க்கம் ஒரு சமயம் அவர்களிடையே நடந்தபோது பஸ் ஸ்டாப்பில் அனேகர் நின்று கொண்டிருந்தார்கள். அகிலாவும் அவர்களில ஒருத்தி. அந்த இருவரின் தர்க்கம் கேட்டு பலரின் இதழ்க்கடையில் கேலியான புன்னகை. இந்தச் சமயமாகப் பார்த்து குமரேசன் என்னும் அந்தச் சின்னஞ் சிறுவன் ஓங்கலாக அரற்றி அழ ஆரம்பித்தான்.

"ஆங்... இங்கிலீஷ் ஸ்கோலு... ஆங் இங்கிலீஷ் ஸ்கோலு..."

"சரிப்பா அப்பா அனுப்பி தரேன். அனுப்பி தரேன்..."—அந்த சக்கிலியிடம் வேகமான சமாதானம்.

"ஏய் செருப்பு... உன் பையனை நீ மனசு வைச்சா அமெரிக்கா கூட அனுப்பலாம்யா. நீங்கள்ளாம் வரணும்னு தான் அமெரிக்காகாரன் துடிச்சிகிட்டிருக்கான். நல்லா படிக்க வைய்யா..."

பஸ்சுக்கு காத்திருக்கும் ஒருவனிடம் நல்ல சுத்தமான அக்மார்க் கிண்டல்.

"நா எஸ். எஸ். எல். சிக்கே அந்த நாள்ல எக்ஸாம் ஃபீஸ் பதினைஞ்சு ருவாதான் கட்னேன். இப்ப என்னடான்னா எல்.கே.ஜி.க்கே ஆயிரம் ருபா ஆகுது! அதுக்கும் கியூ வரிசை. எல்லாம் இவனை மாதிரி ஆளுங்களும் நமக்கு சரியா களத்துல இறங்கிட்டதால வந்த வினை."

இன்னொருவனிடம் கோபமான புலம்பல். குமரேசனோ இதெல்லாம் புரியாமல் ஆனா, ஆவன்னாவை சிலேட்டில் கிறுக்கத் தொடங்கியிருந்தான். கை போன போக்கெல்லாம் போனது எழுத்து.

சிலர் அதை ரசித்தார்கள்! சிலர் சிரித்தார்கள் சிலர் இதை எல்லாம் பார்ப்பதே கௌரவக் குறைவு என்பது போல் எங்கோ பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அகல்யாவால் அப்படி வேடிக்கை பார்க்க முடிய வில்லை. "தம்பி இப்படி எழுதக் கூடாதுப்பா. இப்படி எழுதணும்." என்றபடி அவன் அருகே அமர்ந்து அவன் கையைப் பிடித்து அவனைச் சரியாக எழுத வைத்தாள். அவன் அவளை கனிவாகப் பார்த்தான். சக்கிலியோ நெகிழ்ந்து போனான்.

அகல்யா அவனுக்காக குத்துக்காலிட்டு அமர்ந்து அவனது கையை பிடித்து எழுதத் தொடங்கிய அந்த சந்தர்ப்பத்தில் எதார்த்தமாக விலகிய சேலை முந்தானை அவளது முன் அழகை பூரிப்பாக வெளிக்காட்ட இது தான் சாக்கு என்று ஒரு கூட்டம் அதையே வெறித்தது.

அவன் கையை எழுத்தின் மேல் ஓட விட்டவள் மெல்லத் திரும்பிய போது தான் தெரிந்தது ஒரு கூட்டமே தன் மேல் ஈத்தனமாக மொய்த்துக் கொண்டிருப்பது!

'ச்சீ என்ன மனிதர்கள் இவர்கள்...'- மனதை அருவருப்பு நெக்கி வளைத்தது.

"ரொம்ப சந்தோஷம்மா... அந்த சக்கிலி அவளது உதவிக்காக அவளை நோக்கி கை கூப்பியிருந்தான். அது மட்டும் சற்று ஆறுதலாக இருந்தது.

அதன் பிறகு அடிக்கடி இப்படி நடக்கத் தொடங் கியது. குமரேசன் தன் பிஞ்சு முகம் காட்டி அவளது அன்பை பெற்றுவிட்டான். ஆனா, ஆவன்னா, ஒண்ணு, ரெண்டு எல்லாம் எழுத ஆரம்பித்து விட்டான்.

"அகல்யா நீ இந்த மாதிரி ஆட்களோட ரொம்ப பழகாதே. அப்புறம் பெரிய நீயூசென்ஸாயிடும்."-என்று சக தோழி ஒருத்தி நடுவில் எச்சரித்தாள்.



"ஏய் நம்ப ஸ்டேட்டஸ் என்ன? அவன் லெவல் என்ன?" என்று சிலர் கேட்க தொடங்கினார்கள்.

எதையுமே அகல்யா பொருட்படுத்தவில்லை. பொருட்படுத்த தயாரில்லை. என்ன பெரிய ஸ்டேட்டஸ்? பெண்ணின் சேலை எப்பொழுது விலகும் என்று எதிர் பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு எதற்கு ஸ்டேட்டஸ்? சமூகத்தில் எது நடந்தாலும் வேடிக்கை மட்டுமே பார்த்துக் கொண்டு, நமக்கெதற்கு வம்பு? என்று சுய நலமாக ஒதுங்கியபடி வேடிக்கை பார்ப்பவர்களுக்கு ஏது ஸ்டேட்டஸ்?

இங்கெல்லாம் சூதும் வாதும் புற அலங்காரங்களும் தான் ஸ்டேட்டஸ். இந்த குமரேசன் அப்படி இல்லை. தாயில்லாத பிள்ளை. அப்பாவைப் போல் குத்தும் ஊசியை கையில் தூக்கிக் கொண்டு இன்னொரு பஸ் ஸ்டாப் அருகே தன் வாழ்க்கை இவ்வளவுதான் என்று செருப்பு தைக்க போகாமல் படிக்க ஆசைப்படுகிறான். தன் பிள்ளை தன்னைப்போல் தற்குறியாக ஆகிவிடக் கூடாது என்று அவன் தகப்பனும் படிக்க வைக்க ஆசைப் படுகிறான். இதற்காக ராப்பகலாய் செருப்பு தைக் கிறான். வெயில் இல்லை மழை இல்லை காய்கிறான்! நடுநடுவே ஏதோ தனக்கு தெரிந்த சமையலை செய்து சோறு பொங்கி வயிற்றுப் பாட்டையும் பார்த்துக் கொள் கிறான்.

"ஏம்ப்பா... உனக்கு தோதா ஒரு பெண்ணை கட்டிக்கலாம்தானே?" அகல்யா கேட்டுப் பார்த்தாள் ஒரு நாள்.

"இன்னொருத்தியா?என் செகப்பி வாழ்ந்த இடத்துல இன்னொருத்தியா? மனசு இடம் தராது தாயி..."-என்று வைராக்யமாக மறுத்து விட்டான். சிகப்பி சாகும்போது அவளது கழுத்தில் கிடந்த கருகுமணித் தாலிக்கொடியை

எடுத்து அகல்யா எதிரே ஆசையாக காட்டிவிட்டு கண்ணில் வேறு ஒற்றிக் கொண்டான்.

அகல்யா ஆச்சரியப்பட்டு போனாள். "உனக்காக வேண்டாம். இந்த குமரேசனுக்காக கட்டிக்கோப்பா..." என்று சொல்லிப் பார்த்தாள். "முடியாது தாயி. என வரும்படி ரெண்டு பேர் வயித்துப் பாட்டுக்கே போதலை. இதுல மூணாவதா ஒருத்தி வந்தா நா குமரை படிக்க வைக்கறது எப்படிங்க?

"அவன் நல்லா படிக்கணும். அவனால தான் எனக்கு விடியணும். இந்த சக்கிலிப் பரதேசிக்கும் ஆண்டவன் செஞ்சிருக்கிற சின்னக் கருணை தாங்க என் மவன் குமரேசன்

"போன சென்மத்துல என்ன பாவம் செஞ்சேனோ இப்படி தோலைத் தைச்சு, காலைப் பிடிச்சு பிழைக்கற பிழைப்பா போச்சு என் பிழைப்பு

"என் குமரு வந்துதான் என் பிழைப்பு மாறணும். நானும் கௌரவமா தலை எடுத்து சமூகத்துல நிமிர்ந்து நடக்கணும் தாயி..."-என்றான்.

"ஆமா உன் பேரு என்ன?"

"சங்கிலி தாயி..."

எவ்வளவோ பேரை பார்த்திருக்கிறாள் அகல்யா. ஆனால் அந்த சங்கிலியிடம் மட்டும் ஏதோ ஒரு மானுட ஆகர்ஷணம் தகிப்பது போல் ஒரு உள்ளுணர்வு அவளுக்குள்.

பஸ் ஸ்டாப்பில் ஒருவர் தவற விட்ட பர்ஸை ஞாபக மாக எடுத்து வைத்திருந்து தந்த அவனது நேர்மை அவளை வியப்பில் ஆழ்த்தியது.

ஆனால் ஏழாயிரம் சம்பளம் வாங்கும் தன் ஆபீஸ் மேனேஜரோ தன் பிள்ளைகளின் கல்வித் தேவைக்கு



ஸ்டேஷனரீஸ் மொத்தத்தையும் ஆபீசிலிருந்தே எடுத்துச் செல்லும் அலபத் தனத்தையும் நினைத்துப் பார்க்காமல இல்லை.

இப்பொழுதெல்லாம் அந்த சங்கிலி அவளுக்கு ஞான குரு போலவே தெரிகிறான். அவனுக்கு ஏதாவது உதவி செய்து அவன் இழிந்த நிலையை மேம்படுத்த பல முனை களில் யோசிக்கிறாள் அகல்யா.

எந்த பேங்கில் இவர்கள் முன்னேற்றத்துக்காக கடன் தருவான்? என்று ஏறி இறங்கி விசாரிக்கிறாள். தன் சொந்த செலவிலேயே குமரேசனை படிக்க வைக்க முடிவெடுத்திருக்கிறாள்.

இன்று கூட ஒரு பேங்க் மேனேஜர் அந்த சங்கிலியை நேரில் வரச்சொல்லியிருக்கிறார். பத்தாயிரம் வரை அவர் லோன் தரக்கூடும். சின்னதாக ஒரு செருப்புக் சடை போடலாம் அந்தத் தொகைக்கு, பிறகு மெல்ல சிறுகக் கட்டி பெருக வாழ முயலலாம்.

ஆசையும் நேசமுமாக பஸ் ஸ்டாப்பை எட்டினவளை குமரேசன் புன்னகையோடு பார்க்கிறான்.

"அப்பா மாமி வந்துட்டாங்க..." என்கிறான்.

"டேய் என்னை மாமி ஆக்கிட்டியா நீ?"-இது அகல்யாவின் கேள்வி.

"நான்தான் தாயி அப்படி கூப்பிடச் சொன்னேன்."

—ஒரு செருப்பை தைப்பதில் மும்முரமாய் இருக்கும் சங்கிலி நிமிர்ந்து பதிலளிக்கிறான்.

"மாமின்னா கொஞ்சமாவது வயசாயிருக்கணும். எனக்கு இன்னும் கல்யாணமே ஆகலை." இது அகல்யா.

"ஏம்மா நிஜமாவா சொல்றே?"

''இதுல பொய் சொல்ல என்னப்பா இருக்கு...?''

''நானும் பல வருஷமா உன்னை பாக்கறேன் இந்த பஸ் ஸ்டாப்புல. பலதுகளும் பல்லிளிக்கிற இந்த உலகத்துல எவ்வளவு நாளைக்கு தாயி இப்படியே இருக்கப்போறே?''

''இனிமே இப்படியே காலம் பூரா இருந்திடப் போறேம்பா. சரி சரி...எதுக்கு அந்த வெட்டிப் பேச்சு பேசிகிட்டு. நீ இனிமே இப்படி ரோட்டு ஓரமா குடை நிழல்ல உக்காந்து செருப்பு தைக்க வேண்டாம். உனக்கு நான் பேங்க் லோனுக்கு ஏற்பாடு பண்ணியிருக்கேன். இப்பவே என்கூட கிளம்பு...''

''எங்க தாயி?''

''நீ கடையை முதல்ல ஏறக்கட்டு. பிறகு சொல்றேன்.''

''குமரேசன்?''

''அவன் இல்லாமலா? அவனையும் இன்னிக்கே ஒரு நல்ல பள்ளி கூடத்துல சேர்த்திடலாம்...''

''தாயி...என்னென்னமோ சொல்றே...செய்யறே. உனக்குதான் எங்க பேர்ல எவ்வளவு கரிசனம்? நான் பதிலுக்கு எப்படி தாயி உனக்கு நன்றி செலுத்துவேன்?''

சங்கிலி நா தழுதழுக்க பேசும்போதுதான் ஒரு கார் அந்த பிரதான சாலையில் தலைதெறிக்கிற வேகத்தில் பிரவேசித்திருந்தது! சாலை மையத்தில் சீராக வராமல் வளைந்து நெளிந்தபடி சாலை மனிதர்களை அலற விட்ட படி வந்து கொண்டிருந்தது!

பிளாட்பார ஓரமாக செருப்பு தைக்குமிடத்தில் நடப்பது எதையும் உணராத நிலையில் சிலேட்டும் கையுமாக குமரேசன் **'அ...அணில், இ...இலை, உ....உயிர்'** என்று எழுதும் தருணமாகப் பார்த்து அவனைச் சமீபித்து அவன் மேலேயும் ஏறி அவனை ரத்தக் கூழாக்கிவிட்டு திரும்பவும் நடுச்சாலைக்கு வந்து திணறிய படி ஓட ஆரம்பித்தது!



'ஐயோ என்ன நடந்தது? என்ன நடக்கிறது இங்கே... எல்லோருமாய் பதறிப்போய் சுதாரித்து நிமிர்வதற்குள் அந்த கார் வேகமெடுத்து விட்டது

சங்கிலி தன் மகனுக்கு நேர்ந்த கொடுமையைப் பார்த்து மயங்கி கீழே விழப் போக அகல்யா கால் நரம்பு அறுந்தமாதிரி விதிர்த்துப் போய் ஓட ஆரம்பித்த காரைப் பார்க்க டிரைவிங் சீட்டில் அவள் பார்வைக்கு பளிச் சென்று தெரிந்த நபர் அந்த தொகுதி எம்.எல்.ஏ. மதுரை மன்னனின் மகன் அன்புச்செல்வன்!

ஸ்டேஷனில் சர்க்கிள் இன்ஸ்பெக்டர்தான் இருந்தார். தொலைபேசி மூலம் வந்த சேதியால் குழம்பிப் போயிருந்தார்.

''ஏன் சார் ஒரு மாதிரியாயிருக்கீங்க?''-என்று கேட்ட ஏட்டை தன் சின்னக் கண்களால் வெறித்தார்.

''என்னய்யா நாடு இது. இடமாவும் போக உடமாட்டேங்கறாங்க. வலமாவும் போக உடமாட்டேங்க றாங்க.'' என்று முணங்கினார்.

''சார் புரியும்படி சொல்லுங்க...''

''என்னத்தய்யா சொல்ல? எம்.எல்.ஏ மதுரை மன்னன் மகன் குடிச்சுபிட்டு காரை ஓட்டி ஏகப்பட்ட பேர் மேல ஏத்தியிருக்கான். ஒரு பிஞ்சுப் பையன் ஸ்பாட் அவுட்டாம். பிராது வந்தா எப்.ஐ.ஆர் போடம சமாளிக்கச் சொல்லி அவர் தரப்புல இருந்து பிரஷர்.''

''சரி என்ன பண்ணப் போறீங்க?''

''என்னத்த பண்ண? இவனுங்க பேச்ச கேக்காட்டி நாம இந்த ஊர்ல குப்பை கொட்ட முடியுமா? பிராது வரட்டும் பாப்பம்...''

சர்க்கிள் அலுப்பாக பேசும் போதே திபுதிபு என்று ஒரு கூட்டம் ஸ்டேஷனுக்குள் நிழைந்தது. லபோ திபோ என்று கத்தத் தொடங்கியது. அவர்களில் பேசக்கூட சக்தியற்ற நிலையில் தென்பட்டான் சங்கிலி. அவனுக்கு பக்கத்தில் சோகச் சிலையாக அகல்யா.

சர்க்கிள் கூட்டத்தை அமைதிப்படுத்திவிட்டு அகல்யாவைப் பார்த்து கேட்டார். ''என்னம்மா விஷயம்?''

அகல்யா நடந்ததை சொல்லி நிறுத்தினாள். குரலில் அநியாய பதட்டம். நடந்ததை ஜீரணிக்க முடியாத தவிப்பு.

''ஏம்மா கார் ஓட்டினது எம்.எல்.ஏ. மகன்தான்னு உனக்கு நல்லா தெரியுமா?''—சர்க்கிளின் கேள்வி.

''நல்லா தெரியும். எந்த கோவில்ல வேணும்னாலும் வந்து சத்யம் பண்றேன். இப்ப அடிபட்ட இந்த செருப்பு தைக்கறவர் பையனோட பாடி தெருவுல கிடக்கு. முதல்ல அதை எடுக்கணும். போஸ்ட்மார்ட்டம் பண்ணணும். அப்புறமா நல்லடக்கம் பண்ணணும், அதுக்கு வழி பண்ணுங்க...''

'அகல்யாவின் தீர்க்கமான பேச்சு சர்க்கிளை கொஞ்சம் கொத்தியது. அவளை சற்று தனியாக அழைத்தார்.

''ஏம்மா நீ யார்? இந்த செருப்பு தைக்கறவனுக்காக எதுக்கும்மா இப்படி வக்காலத்து வாங்கறே?'' மிக நைச்சியமாக கேட்டார்.

''சார் நான் யாரா இருந்தா உங்களுக்கென்ன?



நடந்த அநியாயத்தை கண்ணால பார்த்தவ சார் நான். கண்ணால பார்த்தவ!''

''அட இருக்கலாம்மா. இந்த மாதிரி விஷயங்கள்ள ஒரு குடும்பப் பொண்ணு இப்படி போலீஸ் ஸ்டேஷன், கோர்ட் முன்னல்லாம் வந்தா அவ எதிர்காலம் நாசமாயிடும் உன் வேலையப் பார்த்துகிட்டு போறதுக்கென்ன?'

''சர்க்கிளின் பேச்சைத் தொடர்ந்து அவரை தீர்க்கமாக முறைத்த அகல்யா மெல்லத் திரும்பி சங்கிலியைப் பார்த்தாள். அவன் உழுது போட்ட நிலம் போல கிளர்ந்து போய் தன் ஒரே பிடிப்பான நம்பிக்கை நட்சத்திரமான அருமை மகனை இழக்கக் கூடாத விதத்தில் இழந்து விட்ட சோகத்தில் சித்த பிரமை பிடித்தது போல் ஆகியிருந்தான்.

அவனைப் பார்த்ததும் ஆவேச நெருப்பு அவளுக்குள் மெல்ல கொழுந்துவிட ஆரம்பித்தது—

''யோவ்... எனக்கு அட்வைஸ் பண்றதை நிறுத்திட்டு இப்ப ஆக்ஷன் எடுக்கப்போறியா இல்லியா?''—என்று சற்று பலமாகவே கத்தினாள். சர்க்கிளிடம் உறைந்த நிலை. நெடுநேரம் எதுவுமே பேச முடியவில்லை

''ஐயா, என் மகன் மேல கார் மோதுனதுல மண்டை உடைஞ்சு போச்சுங்க...''

''அநியாயமா என் சைக்கிள் மேல ஏத்தி நசுக்கி நாசம் பண்ணிட்டாங்க. ஆயிரம் ரூபாய்க்கு போன வாரம்தான் வாங்கினேன்...''

''அட சைக்கிள் என்னய்யா பெரிய சைக்கிள். என் கறவை மாட்டு மேல மோதி மாடே போய் சேர்ந்திருச்சு. ஆறாயிரத்துக்கு ஹோசூர்ல இருந்து வாங்கி வந்த பசுய்யா அது...''

''ஆளுக்கு ஆள் புலம்புகிறார்கள். சர்க்கிளிடம் இறக்கம். அடுத்த அடியை எப்படி எடுத்து வைப்பது என்கிற குழப்பம். மனதின் ஒரு ஓரம் எம்.எல்.ஏ.வை நிற்கவைத்து சுட்டது. மறு ஓரம் கண்டந்துண்டமாக வெட்டியது.

ஆனால் நிஜத்தில் நேரில் நடு நடுங்குவதுதான் வழக்கமாக ஆகி விட்டிருந்தது.

''சரி... சரி... ஒரு வெள்ளைத்தாள்ல நடந்ததை எழுதிக் கொடுத்திட்டு போங்க...நாங்க நடவடிக்கை எடுக்கறோம்''— என்றார் ஏட்...சர்க்கிளிடம் இறக்கம் இளகவில்லை

''சார்...ஆக்சிடென்ட் ஸ்பாட்டுக்கு வந்து பாடியை எடுக்கற வழியைப் பாருங்க. எஃப் ஐ ஆர். போட்டு கேஸை ஃபைல் பண்ணுங்க.''—அகல்யா சற்று கோபமாகவே பேசினாள்.

எஃப்—ஐ-ஆர்'-என்று அவள் பயன்படுத்திய பதம் சர்க்கிளை உசுப்பியது.

''அம்மா, நீ எங்களுக்கு எப்படி நடந்துக்கணும்னு சொல்லித் தர வேண்டாம். எங்களுக்குத் தெரியும்...''—என்றபடி தன் தரப்பு கோபத்தை காட்டினார் ஏட்.

'உங்க வேலை உங்களுக்கு தெரியும்னா நாங்க இவ்வளவு சொல்லியும் ஏன் ஆக்கிடென்ட் ஸ்பாட்டுக்கு கிளம்பாம இருக்கீங்க...?' அவள் பேச்சு சர்க்கிளின் பின் மண்டையில் குத்தியது. விவரம் தெரிந்த பெண்ணாக இருக்கிறாளே... என்று கவலைப் பட வைத்தது.

கரிய உருவமானாலும் நல்ல லட்சணம். திருத்தமான அவயவங்கள். சர்க்கின் மனதில் அவள் யார்? - என்று அறிந்து கொள்ள வேண்டிய ஆவல் ஒரு புறமும் மறு



புறத்தில் உடனே எம் எல்.ஏ.யிடம் பேச வேண்டிய அவசியமும் உண்டாயிற்று.

''கொஞ்சம் பொறும்மா...''— என்றபடி அவர்களை வெளியே நிற்க வைத்து விட்டு தொலைபேசியில் எம்.எல்.ஏ யோடு தொடர்பு கொண்டார்.

''வணக்கம் சார்... என்ன சார் இப்படி பண்ணிட்டீங்க?''

''எப்பிடிய்யா?''

''காரை கொஞ்சம், உங்க சன் பாத்து ஓட்டக் கூடாதுங்களா? இங்க அடி பட்டவங்க, உசுரை பறி கொடுத்தவங்கன்னு ஒரு படையே வந்துருக்கு. எப்படி சமாளிக்கறதுன்னு தெரியலை...''

''சாராய வியாபாரிகிட்ட இருந்து சைக்கிள்ள டபுள்ஸ் போறவன் வரை லஞ்சம் வாங்கிட்டு சமூகத்தையும், மேலதிகாரிகளையும் சமாளிக்கறதை விடவா இது கஷ்டம்... மிரட்டி அனுப்புய்யா...''

''மிரட்டினா பயப்பட, வந்துருக்கறவங்க ஒண்ணும் ஸ்கூல் பசங்க இல்லீங்க. பெரிய ஆளுங்க. சட்ட நுணுக்கம் எல்லாம் தெரிஞ்சு வெச்சிருக்காங்க. நம்ம சைட் ரொம்ப வீக்கா இருக்கு சார்...''

''நம்ம சைட் வீக்கா இருந்தா ஆரஞ்சுப் பழம், ஹார்லிக்ஸ்னு கொடுக்க வேண்டியது தானே?''—எம்.எல்.ஏ.யிடம் துளிகூட பதட்டமேயில்லாத கிண்டல். சர்க்கிள் உடனேயே போனை முடக்கினார். வெளியே வந்து அகல்யா பக்கம் திரும்பினார்.

''முதல்ல ஆக்சிடெண்ட் ஸ்பாட்டுக்கு போகலாம். வாங்க...'' - என்று அவளோடு மற்றவர்களையும் அழைத்தார்.

''கேஸ் ஃபைல் பண்ணலையா?'' - அகல்யாவிடம் அதே முக்கியமான கேள்வி.

''பண்றேம்மா. நீ சொல்றது நிஜமா பொய்யான்னு பாக்க வேண்டாமா? வா ஆக்சிடெண்ட் ஸ்பாட்டுக்கு...''

ஸ்டேஷனில் இருந்த போலீஸ் ஜீப் அனைவரையும் சுமந்தபடி அந்த பிரதான சாலையை குறித்து வைத்தது!

குமரேசனின் மேல் கொத்துக் கொத்தாய் ஈக்கள். அவனை படிக்கத் தூண்டிய மூளை கபாலம் நீங்கி தனியாக ஒரு காலி ஃபிளவர் பூப் போல் சாக்கடை ஓரமாக கிடந்தது

முகமே பார்க்க முடியாத மாதிரி நசுங்கல். ரத்தம் சாலையில் உலக வரைபடம் போல ஓரங்கள் ஒழுங்கில்லாதபடி ஓடிப் பரவி உறைந்து விட்டிருந்தது.

சுற்றிலும் ஊர் ஜனம். உதடுகளில் உச்சு உச்சு சப்தம்.

புழுதிக் கவளத்தை புரட்டி எடுத்தபடி வந்து நின்ற ஜீப்பிலிருந்து போலீஸ் கூட்டம் இறங்க, அகல்யாவும் சங்கிலியும் அவர்களோடு சேர்ந்து இறங்க...

சங்கிலி குமரேசனின் சடல நிலையைப் பார்த்து அடி வயிற்றில் அகினிச் சுருட்டலோடு அப்படியே மங்கத் தொடங்கினான்.

தாங்கிப் பிடித்தது சில கைகள்... அகல்யாவுக்கு கூட அடி வயிற்றை புரட்டியது. பூத்த பூப் போல இருந்த பிள்ளை அறுபது நிமிஷம் கூட ஆகவில்லை இப்படி அகோரமாகி விட்டானே?

இதுதான் விதியா? விதியின் அந்த சூத்ரதாரி யார்? மனதில் கேள்விக் குமுறல்.



எட்டுக்கும் சர்க்கிளுக்கும் கூட. இதயம் இருந்தபடியால் ஈரம் வெய்யில் வியர்வை போல சொட்ட ஆரம்பித்தது.

''சார் எட்டு திக்குல ஒரு திக்குலகூட ஒரு சொட்டு சாராயமோ பிராந்தியோ கிடைக்கக் கூடாது. அம்புட்டையும் அழிச்சாதான் சார் இதைப் பார்த்ததுக்கு பிராயசித்தம் தேடுனதா அர்த்தம்.''—என்று எட், சர்க்கிளின் காதோரம் முணுமுணுத்தார்.

''அரசியல் வாதிக்கு ஆயிரமா கொடுத்து வேலை வாங்கி நா சர்க்கிள் ஆகியிருக்கேன். உன்னை மாதிரி உணர்ச்சி வசப்பட்டா அவனுங்க நம்மளை உண்டு இல்லைன்னு பண்ணிடுவாங்க. எதுவும் பேசாம ரிப்போர்ட்டை எழுது பொடியனுக்கு விதி முடிஞ்சு போச்சு போய் சேர்ந்துட்டான். இது புரியாம சாராயம் பிராந்தின்னு குத்தம் சொன்னா என்னய்யா அர்த்தம்?

ஒரு ஃபுல் அடிச்சிட்டு நா ஒரு ஆக்சிடென்ட் கூட பண்ணாம ஓட்டிக்காட்டவா?

அந்த எம் எல் ஏ மகன் ஒரு ரத்தம் செத்த பய... அதான் ஓட்டத் தெரியாம ஓட்டி நம்ம உசுரை வாங்கறான்.''

சர்க்கிளும், எட்டும் குசு குசுவென்று பேசுவது அகல்யாவின் காதிலும் விழாமல் இல்லை. அவள் முகத்தில் தீப்பிடித்தது போல் ஒரு சிவந்தநிலை நாட்டு நடப்புகளை பத்திரிகைகளில் வாசிப்பவளாக இருப்பதால் அந்த செய்திகளை அறிந்த உத்தேசத்தில் உடனேயே ஒரு எச்சரிக்கை அவளுக்குள் சுடர்விட்டது. அந்த எச்சரிக்கைச் சுடரில் அகப்பட்டவன் பிரபல ரிப்போர்ட்டர் மோகன் தான்!

உடனேயே அருகிலுள்ள பப்ளிக் டெலிபோன் பூத்தை நோக்கி ஓடி மோகன்தாஸை அழைக்க ஆரம்பித்தாள்.

''குட்மார்னிங் மோகன்தாஸ்—நான் அகல்யா?''

''வெரி குட் மார்னிங்...என்னங்க மேடம் அதிச யமா?''

''முக்கியமான விஷயம் மோகன்தாஸ். காந்திரோட் ஒரு ஆக்சிடெண்ட். கொஞ்சம் டில் பஸ் ஸ்டாப்கிட்ட உடனே வர்ரீங்களா?''

''ஆக்சிடெண்டா? யாருக்கு என்ன ஆச்சு?''

''இந்த இந்திய தேசத்து ஒரு இளம் பிரஜை ரத்தக் கூழாயிட்டான் மோகன்தாஸ். இவ்வளவுக்கும் காரணம் அன்புச் செல்வன்! இவர் அப்பாதான் தொகுதி எம், எல். ஏ. மதுரை மன்னன். போலீஸ் ரொம்ப சதாய்ப்பாங்க போல தெரியுது.''

''அப்படியா...ஹாட்நியூஸ்தான்...அங்கேயே இருங்க ...தான் உடனே கிளம்பி வர்ரேன்...''

**மோ**கன்தாஸ் தலத்துக்கு தனது ஹீரோ ஹோண்டா வில் வந்து சேர்ந்தபோது குமரேசனை போலீஸ் போஸ்ட் மார்ட்டத்துக்கு கொண்டு போய் விட்டிருந்தது.

ஆக்சிடெண்ட் நடந்த அடையாளமே தெரியாதபடி வழக்கமான சாலைப் பரபரப்பு தனியாக அவனுக்காக அகல்யாவிடம் மூகச்சுணக்கம். மோகன்தாஸ் மெல்ல அக்கம் பக்கம் விசாரிக்க ஆரம்பித்தான்.

''ஏங்க...இங்க ஒரு ஆக்சிடெண்ட் நடந்துச்சின்னு கேள்விப் பட்டேனே...''

''ஆமாங்க...அநியாயமா ஒரு சின்னப் பையன் உசுர் போயிடிச்சுங்க...''



''ஆக்சிடெண்ட் நடக்கறப்ப நீங்க இருந்தீங்களா? எப்படி நடந்துச்சு?''

''அதைத் தெரிஞ்சு என்ன பண்ணப் போறீங்க? போன உசுர் திரும்ப வரப்போகுதா? இந்த காலத்துல தான் காரை ஏரோப்ளேன்னு நினைச்சு ஓட்றது சர்வ சாதாரணமாச்சே?''

''யார் காரை ஓட்னது, அடையாளம் தெரியுமா?''

''எல்லாம் நம்ம ஏழைப் பங்காளர் மதுரை மன்னன் எம். எல். ஏ. மகன்தான்...''

தனது விசாரிப்பின் விரிவுகளை உடனேயே எழுதிக் கொள்ள ஆரம்பித்தான் மோகன்தாஸ்.

''தம்பி யாரு...எதுக்கு இதை எல்லாம் எழுதறீங்க?''

''நான் ஒரு ரிப்போர்ட்டர். ஆக்சிடெண்ட் ரிப் போர்ட்டை கலெக்ட் பண்ணி எழுதப் போறேன்.''

''தம்பி உனக்கு ஒரு கும்பிடு. உன் திசைக்கு ஒரு கும்பிடு. நீ பாட்டுக்கு உன் வயித்துப் பாட்டுக்காக நாங்க சொன்னதை எழுதிட்டு போயிடுவே. அந்த எம். எல். ஏ. கிட்ட அப்புறம் யார் அவஸ்தை படறது...தயவு செய்து எங்க பேரை போடாதே.''

''என்னங்க இவ்வளவு பயப்பட்றீங்க...உங்களால தேர்ந்தெடுக்கப்பட்ட எம். எல். ஏ.ங்க அவர். உங்களை கண்டா அவருல்ல பயப்படணும்?''

''பயப்படற மாதிரி ஆளை நாம தேர்ந்தெடுக் கலையே...ஒரு ரவுடியைதானே. தேர்ந்தெடுத்திருக் கோம்...அதுக்கு இப்படி எல்லாம் விலை கொடுக்கத்தான் வேணும்''

''இவ்வளவு தெளிவா பேசறீங்களே...ரவுடின்னு தெரிஞ்சும் ஏன் ஓட்டுப் போட்டீங்க?''

''அவன் ரவுடியானாலும் எங்க ஜாதி. ஒப்பிட்டா லேயும் ஜாதியாலேயும் இவன் வந்துட்டான்...''

ஒரு ஆக்சிடென்ட் ரிப்போர்ட் சேகரிக்க வந்த இடத்தில் விஷயம் வெவ்வேறு தடங்களில் பாய்வதை பக்கத்திலிருந்த அகல்யா உணர்ந்தவளாக ''மோகன்தாஸ்...''— என்றாள் அவனை அழைக்கு முகமாய்... மோகன் தாஸுக்கு பிரக்ஞை மீண்டது.

''சாரி அகல்யா... நாம வந்த விஷயத்தை விட்டுட்டு எங்கேயோ போயிட்டோம்ல? எனிவே... ஆக்சிடென்ட் பண்ணது மதுரை மன்னன் மகன்தான்னு பப்ளிக்குக்கும் நல்லா தெரிஞ்சிருக்கு. இனி பத்திரிகைல போட்டு கிழிக்க வேண்டிதுதான்...''

மோகன்தாஸ் பற்களை நரநரத்து சொன்ன விதத்தில் அந்த ஆக்சிடென்ட் தனிப்பட்ட முறையில் அவனையும் நெக்குருக விட்டிருப்பது துல்லியமாக தெரிந்தது

இருவரும் போலீஸ் ஸ்டேஷன் நோக்கி நடந்தபடி பேச ஆரம்பித்தார்கள்.

''நீங்க பத்திரிகைல எழுதி கிழி கிழின்னு கிழிக்கறதை விட, அந்த மதுரை மன்னனும், அவன் மகனும் தண்டிக் கப்படறதை விட பெரிய விஷயம் ஒண்ணு இருக்கு மோகன் தாஸ்.''

''என்ன அகல்யா?''

''அந்த ஏழை செருப்பு தைக்கற தொழிலாளி சங்கிலிக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமையறதுதான் அது. ஒரு சாதாரண செருப்பு தைக்கற தொழிலாளியாக அவன் இருந்தாலும் அடிப்படையில நல்ல குணாம்ச முள்ள ஒரு மனுஷன் அவன்.



ஆயிரம் மதுரை மன்னன் அவன் கால் தூசுக்கு சமமாக முடியாது. அவனோட இலட்சியக் கனவுதான் அவன் மகன் குமரேசன்.

இப்ப அந்த குமரேசன் ஜி.எச் மார்ச்சுவரில பிணங்களோட பிணமா கிடக்கறான்... ரொம்பவும் அநியாயமான சாவு. என் கண் எதிரே நான் கண்ட மிகப் பெரிய கொடூரம் இது. என்னால நமக்கெதுக்கு ஊர் வம்புன்னு ஒதுங்க முடியலை. அந்த குமரேசன் முகம் என்னை பார்த்து எங்கப்பாவுக்கு இனி யார் இருக்கான்னு கேக்கற மாதிரி படுது.

எங்கப்பா சந்தோஷமா வாழறதை பார்த்தா தான் அநியாயமா செத்த என் ஆன்மா சந்தோஷப்படும்னு சொல்ற மாதிரி இருக்கு. சங்கிலியோட நிலையை என னாலே நினைச்சே பார்க்க முடியலை.''

அகல்யாவின் பேச்சின் முடிவில் விழியோரம் ஈரம் கசிந்து விட்டிருந்தது. ஆச்சரியப்பட்டான், மோகன்தாஸ். உள்ளூர பிரமித்தும் போனான்.

சாதியில் இளைத்த ஒருவனிடம் அவள் காட்டும் மனிதாபிமானம் வால் நட்சத்திரம் போல் அதிசயமான ஒன்றல்லவா?

அதிலும் பிராமண சாதிக்காரி என்கிற அந்தஸ்தை மீறி இத்தனை தூரம் வருவது என்பது சாதாரண மானதா என்ன?

மோகன்தாஸுக்குள் வியப்பின் அலைகள். இந்த விஷயத்தில் தானும் முடிந்த அளவு உதவி செய்தாக வேண்டும் என்கிற பிரக்ஞை வேறு அவனுக்குள் இப்போது ருதுவாகி விட்டிருந்தது.

''அகல்யா உங்களை எப்படிப் பாராட்டறதுன்னே தெரியலை.'' என்றான் மெலிதாக.

''பாராட்டைப் பற்றி சிந்திக்கிற நேரமா இது- மோகன்தாஸ். எனக்குள் கண்டனங்கள்தான் ஊர்வலம் போய்கிட்டிருக்கு. போலீஸ் ரொம்ப மெத்தனமாக இருக்கு.

அசல் சினிமா போலீஸா நடந்துக்குது. அந்த ஏழைக்கு நியாயம் கிடைக்குமான்னு சந்தேகமா இருக்கு.

ஏற்கனவே இந்த சமூகம் ஒரு கோழைச் சமூகம். நேர்லகூட பார்த்திராத சினிமாக்காரனுக்காக மன்றம் வைக்கும், கை தட்டும், மார்பு கைன்னு பச்சைகூட குத்திக்கும். ஆனா தனக்கு பக்கத்துல நடக்குற அநியாயத்தைகூட தட்டிக் கேட்க நினைக்காது.

நடந்துருக்கற அநியாயமோ அரசியல்வாதி சம்பந்தப்பட்டது. அதுலயும் அந்த எம்.எல்.ஏ. ரவுடி வேற... நமக்கெதுக்கு வம்புன்னு ஊரே ஒதுங்கப் போற விஷயம் இது.

நாம எப்படி நியாயத்தை நிலை நிறுத்தறதுன்னு யோசிப்போம்..''

வாஸ்தவம்தான் என்பது போன்ற தலையசைப்பு மோகன்தாசிடம். ஸ்டேஷனிலோ நிலை வேறாக இருந்தது.

''ஏய்யா இந்த சங்கிலிக்கு உக்காந்து செருப்பு தைக்க இந்த நாட்டுல வேற இடமே கிடைக்கலையா? நடுரோடுதானா கிடைச்சது?''-சர்க்கிளின் கேள்வி மோகன்தாஸை வேறு விதமாக சிந்திக்க விட்டது.

''சார் அவன் செருப்பு தைச்சது நடுரோட்ல இல்ல. பிளாட்ஃபாரத்துல..'' என்றான்.

''பிளாட்ஃபாரமும் ரோட்டோட ஒரு பார்ட்தானே?''



''அதுக்கென்ன சார் இப்போ? காரை ஏத்திக் கொன்னது தப்பா சரியா?''

''அவர் எங்கேய்யா காரை ஏத்திக் கொன்னாரு. அந்த பொடியன்ல ஓடி வந்து கார் முன்ன விழுந்தான்.''

அகல்யாவுக்கு பொட்டில் அடித்த மாதிரி வலித்தது. சர்க்கிளின் அந்தப் பேச்சு. ஸ்டேஷனில் ஒரு ஓரமாய் சோர்ந்து போய் கிடந்த சங்கிலி கூட அதைக் கேட்டு அதிர்ந்து போனான்.

''ஐயா அநியாயமா பொய் பேசாதீங்க. என் பையன் ஒரு பாவமும் அறியாதவன்.'' - அந்த நிலையிலும் கத்தினான்.

''வாயை மூடுய்யா. நீங்கள்ளாம் சரியான டிராஃபிக் நியூசென்ஸ். இந்த ஒரு நாட்டுலதான் ரோட்டுல குப்பை கூளம், ஆடு, மாடு, கழுதை, ரோட்டோரமா கடைங்க, மனுஷங்க நெரிசல் எல்லாம். அதான் எல்லாத்துக்கும் காரணம். நாம சரியா இல்லாம அடுத்தவங்களை பேசக் கூடாதுய்யா.''

சர்க்கிளின் பேச்சில் மோகன்தாஸிடம் உறைந்த நிலை. மனதில் எண்ண ஓட்டம்.

இது மரமேறிப் பறிக்க வேண்டிய நியாயம். மடியில் வந்து விழாத நியாயம். சில நியாயங்கள் இன்று இப்படித்தான் எட்டாத உயரத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டு ஏழைகளை பாடாய்ப்படுத்திக் கொண்டு இருக்கிறது.

சற்று இளக்காரமான புன்னகையை முகத்தில் தேக்கியபடி சர்க்கிளை வெறிக்கிறான் மோகன்தாஸ்.

''என்ன தம்பி இப்படி பார்க்கறே? பேனா இருக்கு எழுத, போட்டறதுக்கு இருக்கவே இருக்கு பத்திரிகைன்னு

நீங்க ஏதாவது எழுதிவிட்டு போயிடுவீங்க எங்க பிழைப்பு அப்படி இல்ல தெரியுமா?''

''உங்க பிழைப்பு எப்படி. அதை உங்க வாயாலேயே சொல்லுங்களேன் பாப்போம்.''

''இந்த காக்கி பேண்ட் சட்டையை கஞ்சியில நனைச்சு விறைப்பா இஸ்திரி போட்டு மாட்டிக்கற ஒரு கஷ்டம் போதுமே எங்களுக்கு. பத்தாதுக்கு தலைக்கு தொப்பி, காலுக்கு ஷூன்னு கிலோ கணக்குல வெயிட். வெய்யில் காலத்துல ஒரு நா ஒரு மணி நேரம் போட்டுப் பாரு கஷ்டம் தெரியும்.''

''இப்ப நாங்க எங்க கஷ்டத்தை சொல்ல வந்தோமா, இல்லை உங்க கஷ்டத்தை கேக்க வந்தோமா?''

''நீ எதுக்கு வந்திருந்தாலும் சரி... தப்பு எம். எல். ஏ. மகன் பேர்ல கிடையாது. செத்துப் போன பையன் பேர்லதான்!''

''அடப் பாவிகளா விசாரணையே இன்னும் தொடங்கலை. அதுக்குள்ற தீர்ப்பெழுதிட்டியே?''

''தீர்ப்பெழுதலை... உள்ளதைச் சொன்னேன். நான் சொன்னா கேக்க மாட்டே! கோர்ட்ல ஜட்ஜ் இதையே சொல்லும் போது மூடிக்கிட்டு கேட்டுகிட்டு வருவீங்க. புரியாத ஆளுங்கய்யா.''

''யாருய்யா புரியாத ஆளுங்க. உனக்கு பசங்க இல்ல! அதுல யாருக்காவது ஒருத்தருக்கு இப்படியானா நீ இப்படியெல்லாம பேசிக்கிட்டு நிப்பியா?'' - ஆவேசத்துடன் கேட்டவள் அகல்யாதான்.

அவளை சர்க்கிளும் ஏட்டும் மாறி மாறி பார்க்கின்றனர். சங்கிலி அழுது கொண்டு நிற்பதையும் பார்க்கின்றனர்.



''பாதிக்கப்பட்ட ஆளு எனக்கென்னான்னு அழுதுகிட்டு நிக்கறான். ஆனா சம்பந்தமேயில்லாத நீங்க ரெண்டுபேரும் துள்றீங்க. இதுல என்னவோ இருக்கறதா நான் சந்தேகப்பட்றேன்.'' ஏட், சர்க்கிளுக்கு எடுத்துக் கொடுத்தார்.

''என்ன இருக்கு மனிதாபிமானத்தை தவிர?'' மோகன்தாஸ் அலறினான்.

''மனிதாபிமானமா' அப்படின்னா என்னா கண்ணு? அது சிவப்பா கறுப்பா?''

''ஏன் இப்படி எல்லாம் பேசறீங்க. ஒரு அரசியல்வாதி தப்பு செஞ்சா மனிதாபிமானம் கூட உங்க கண்ணுக்கு வேற வடிவம் எடுக்குமோ? பத்திரிகை சக்தி தெரிஞ்சுமா எடக்கு?'' மோகன்தாஸ் போட்ட போடில் இருவரும் வாய் மூட, கூப்பிட்டது டெலிபோன்.

மறுமுனையில் மதுரை மன்னன். அவன் பேசும் முன்பே ஏட்டுக்கு புரிந்து போனது.

''சார் எம். எல். ஏ.'' என்றார் சர்க்கிள் பக்கம் திரும்பி. மதுரை மன்னன் உதட்டு பிராந்தி வாடை அந்த எலக்ட்ரானிக் கருவியின் ஒயர் வழியாக ஓடி வந்து ஏட்டின் மூக்கில் நுழைந்தமாதிரி ஒரு சிலிர்ப்பு ஏட்டிடம்.

''என்னய்யா ஆச்சு. யாராச்சும் வந்து பிராது கொடுத்தாங்களா?''

''ஆமாங்க சமாளிக்கிறது பெரும்பாடா இருக்கு.'' இது சர்க்கிள்.

''பார்ட்டி பெரிய கைய்யா என்ன?''

''விவரத்துல பெரியவங்க. பத்திரிகைக்காரங்கல்லாம் கிளப்பிக்கிட்டு வந்து ஒரே வாக்குவாதம்.''

"என்னா பெரிய வாக்குவாதம்? உள்ள தள்ளி நாலு போடு. அடிக்கு அஞ்சாதவன் நம்ப சினிமாவுல மட்டும் தான் வருவான்."

"இல்லீங்க. சினிமா மாதிரி வில்லன் நடந்துகிட்டா சினிமா மாதிரியே ஹீரோவும் வருவாங்கபோல தெரியுது. இங்க ஹீரோயின் வந்திருக்குது."

"யாரு விஜயசாந்தியா?"

"அட என்னங்க நீங்க எடக்கா பேசிகிட்டு, இது அகல்யா. விவரமானபொண்ணு."

"நீ சொல்றதை பார்த்தா நான் நேரில் வரவேண்டி இருக்குமோ?"

"வந்தா குற்றம் கன்ஃபார்ம் ஆகிடும். நீங்க வராதீங்க. உங்க ஆளுங்க யாராவது வரட்டும். வந்து சமாதானப் படுத்தி நஷ்டஈடு கொடுத்து சரிபண்ணப் பாருங்க."

மறுமுனையில் மதுரைமன்னன் விலகியதை 'டொடக்' சப்தம் நிரூபித்தது. நிமிர்ந்த சர்க்கிள் திரும்பவும் அகல்யா, மோகன்தாஸ், சங்கிலியை நெருங்கினார்.

"நடந்தது நடந்து போச்சு. வெட்டியா நியாயம் பேசறதால அந்த பய எழுந்து வரப் போறதில்ல. இப்ப எம்.எல்.ஏ. ஆட்கள் வருவாங்க. என் கிட்ட பேசின மாதிரி அவங்ககிட்ட பேசி காரியத்தை கெடுத்துடாதீங்க. நியாயமான ஒரு தொகை தருவாரு. வாங்கிகிட்டு ஓசை படாம போய்கிட்டே இருங்க. இல்லேன்னா ரொம்ப கஷ்டப்பட வேண்டி வரும்."

சர்க்கிளின் பேச்சை மோகன்தாஸ் எரிச்சலுடன் எதிர்கொண்டு முறைத்தான்.

"யார் சார் கஷ்டப்பட வேண்டி வரும். நீங்களா இல்லை நாங்களா?"- என்றான்.



"இரண்டு பேரும்தான். விவகாரத்தை அமுக்கத் தெரியலைன்னு என்னை ஒரு காஞ்சபட்டிக்கு மாத்துவான். உங்களை உள்ளூர்லையே வெச்சு நசுக்கு வான்.

"ஆக அதிகாரமட்டத்து தப்பை கண்டுக்கவே கூடாது அப்படித்தானே?"

"கண்டுக்கோ. இப்ப இல்ல. அடுத்த எலெக்ஷன்ல! ஓட்டுப் போடாதே."

"தெரியாத்தனமா அந்த ஒரு உரிமை மட்டும் பாக்கி இருக்கு. அதையும் காலாவதியாக்கிட்டா உங்களை அந்த ஆண்டவன்கூட தட்டிக் கேட்க முடியாது."

"தோ பாரு. நீ பத்திரிகைகாரன் வளைச்சு வளைச்சு கேள்வி கேப்பே. என் லிமிட் எல்லை வரைதான். உன் இடத்துல நான் இருந்தா இதுதான் சாக்குன்னு காசு வாங்கிட்டு, அக்கடான்னு நழுவத்தான் பார்ப்பேன். அது தான் புத்திசாலித்தனம். அஞ்சு வயசுப் பையன் எதிர் காலத்துல வேலைக்கெல்லாம் போய் சம்பாரிச்சி அப்பானை காப்பாத்தறதுக்கு பதிலா செத்து காசு வாங்கித் தரான். வாங்கிக்கறதுதான் பெட்டர்.

காசை வாங்கி பேங்குல போட்டுட்டு ஜாலியா ஊரை சுத்தச் சொல்லு." அங்கே பேச்சு வளர்ந்து கொண்டே போனது. சட்டென்று மோகன்தாஸுக்கு பொறி தட்டியது. இப்போது குமரேசனின் நல்லடக்கம் தான் முதல் காரியம். மற்றதெல்லாம் பிறகு என்று மெல்ல உறைபட ஆரம்பித்தது.

திடீரென்று முகத்தில் சிரிப்பை பரப்பி, சர்க்கிளை இணக்கமாக பார்த்து சிரித்தான்.

யதார்த்தம் புரிந்துவிட்டது போல் பாவனை காட்டி னான் சங்கிலியும், அகல்யாவும் விழித்தார்கள். புகார்

கொடுக்க வந்த மற்ற ஜனங்கள் வெளியே மர பெஞ்சில் வழி தெரியாத யாத்ரீகர்கள் போல் அமர்ந்திருந்தார்கள்.

மளமளவென்று மோகன்தாஸ் அகல்யாவுடனும் சங்கிலியுடனும் வெளியே வந்தான்.

''என்ன மோகன்தாஸ்... அந்த சர்க்கிள் நமக்கு லஞ்சம் கொடுத்து பிரச்னையை சமாளிக்க பாக்கறான். நீங்க வளைஞ்சிட்டீங்களே.'' அகல்யா அலறினாள்

''வளையலை அகல்யா. புத்திசாலித்தனமா நடந்துக் கிட்டிருக்கேன். இந்த மாதிரி கேஸ்ல நியாயம்கறது ஒரு வெட்டவெளி தீபம் மாதிரி. நாம ரொம்ப சாமான்யப் பட்டவர்கள்! அவங்க புயல் மாதிரி, நாம்ப சாமர்த்தியமா செயல்படலைன்னா தீபத்தை அந்த புயல் அணைச்சிடும். அப்புறம் கரடியா கத்தினாலும் பிரயோஜனமில்லை.''

''நீங்க சொல்றது புரியலை.

''நம்ப கேசுக்கு விட்னஸ் ரொம்ப முக்கியம். குமரேசன் மேல எல்.எல்.ஏ. மகன் கார் ஏறினதை எத்தனை பேர் பார்த்தாங்கங்கறது இப்ப பெரிசில்ல. அதுல ஒரே ஒருத்தராவது கோர்ட்டுக்கு வந்து சாட்சி சொல்வாங்களான்னு பார்க்கணும். அது இம்பாசிபிள்.''

''ஏன் இல்லை? நான் இருக்கேன். நான் சொல் றேன்.''

''உங்க விட்னஸை எம்.எல்.ஏ. வக்கீல் ரொம்ப சுலபமா காலாவதியாக்கிடுவாரு. அப்படியே நின்னாலும் பிளாட்ஃபாரத்துல கடை போட்றது நியூசென்ஸ்ங்கற ஆங்கிள்ள அவங்க நுழையலாம். குமரேசன் குறுக்கத்தான் வந்து விழுந்தான்னு அவங்க ஆட்கள் யாராவது பொய் சாட்சி சொல்லி உங்க சத்தியத்தை கேலிக் கூத்தாக் கலாம்.''



''அப்ப நியாயமே கிடைக்காதா? நம் போராட்டம் வீண்தானா?''

''ஏன் இல்லை. சாமர்த்தியமா நடந்தா நிறைய வாய்ப்பு இருக்கு. நம் விஷயத்துல எதிரியை ரொம்பவும் கோபிக்க விடக்கூடாது. எம்.எல்.ஏ பணத்தை தந்து சமாதானப்படுத்த வரேன்னு சொல்லியிருக்கறது நமக்கு ஒரு நல்ல சான்ஸ். பணத்தோட வரட்டும். அது ஒண்ணு போதும். அப்புறம் பாரு!''

சங்கிலி உடனேயே மோகன்தாஸின் கரத்தைப் பிடித்து தன் கண்ணில் ஒத்திக் கொண்டான்.

''நான் கொஞ்சம் புண்ணியமும் பண்ணியிருக்கேன். இல்லேன்னா எனக்காக நீங்க இவ்வளவு யோசிச்சு செயல்படுவீங்களா?''

மோகன்தாஸ் அவள் தோளை வாஞ்சையாக பிடித்தான்.

''சாதியில் இளைச்சாலும், காசு பணத்துல, அந்தஸ்துல இளைச்சாலும், சாமர்த்தியத்துல மட்டும் இளைக்கக் கூடாது. இன்றைய உலகத்துல வாழ நாம போட வேண்டிய முதல் மூலதனமே அது ஒண்ணுதான்.'' அவன் அஸ்திரம் போல் போட்டதை அகல்யா அகண்ட விழிகளுடன் அங்கீகரித்து அந்த சோகத்திலும் நெகிழ்ந்து பூரித்தாள்.

கலெக்டர் ஆபீஸ்!

மனித தேகங்களின் இடையீட்டில் திமிறிக் கொண் டிருந்தது. பத்து மணியைத் தாண்டியும் சீட்டில் சின்சியராக வேலையை துவக்கியிருப்பவர்கள் சிலராக இருக்க, அவர்களில் ஒருவராக சிவராமன்! டெபுடி தாசில்தார். அவரது பியூன் அறைக்கு வெளியே சுவற்றைச் சுரண்டிக் கொண்டிருந்தான்.

முகத்தில் இறுகிப் போன கோபம். சிவராமன் கீழே வேலை பார்க்க ஒப்புதல் இல்லாத முகபாவம்.

அவன் எதிரே தாசில்தாரின் உதவியாளர் நூறு ரூபாய் நோட்டாக எண்ணும்போது அவனுக்கு எறும்பு உடம்பில் ஊர்வது போல் ஒரு பரபரப்பு.

''ஐய்யோ... ஐய்யோ... ஒரு அரிச்சந்திரனுக்கு பியூனாக்கி ஆண்டவன் என்னை சோதிக்கிறானே. அவன் வாங்கினாத்தானே நான் வாங்க!

முந்தி இருந்த ஆள் தானும் வாழ்ந்து என்னையும் வாழ வெச்சான். இவன் கெடுக்கறானே'' எனும்போது கலெக்டர் அழைப்பதாக தகவல் வந்தது.

சிவராமன் பயபக்தியோடு கிளம்பினார்.

மரப்படிகளில் மாடி ஏறி நீண்ட நீண்ட வராண்டா காரிடார்களில் நடந்து குறுக்கும் நெடுக்குமாய் ஃபைல் களுடன் நடக்கும் ஊழியர் உருவங்களைக் குடைந்து ஒரு வழியாக கலெக்டரின் அலுவலக அறைக்குள் நுழைந் தார்.

''வாங்க மிஸ்டர் சிவராமன். ஒரு கம்ப்ளைண்ட்!''- எடுத்த எடுப்பில் கலெக்டர் சானேஸ்வரக் கண்ணாடி வழியாக பார்வையை விட்டு கரகர குரலை உயர்த்தி னார்.

''என்ன சார்?''

''டேக் யுவர் சீட்! சொல்றேன். உங்களுக்கு ஒரு டாட்டர் இருக்காங்கல்ல?''

''ஆமாம் சார். அகல்யான்னு பேர். தனியார் கம்பெனியில ஸ்டெனோ வேலைக்குப் போறா!''



''குட்...நான் கேக்காமலே பேர், வேலையெல்லாம் சொல்லிட்டீங்க. நல்ல ஐக்யூ உங்களுக்கு. உங்க டாட்டரை பற்றிதான் கம்ப்ளைண்ட்.''

''இப்பல்லாம் நலல பொண்ணு, கெட்ட பொண்ணுக்கு மதிப்பு மரியாதை கிடையாது மிஸ்டர் சிவராமன் புத்திசாலிப் பெண், அட்ஜஸ்ட் பண்ணிக்கற பெண்களுக்குதான் காலம்.''

''சார் என்ன சொல்றீங்க?''

''அவங்களுக்கு சோஷியல் வெல்ஃபேர்ல இண்ட்ரஸ்ட் உண்டா?''

''உண்டு சார். ரொம்பவும் பூஞ்சை மனசு. அக்கிரமங் களுக்காக அதிகம் கவலைப்படுவா.''

''கவலைப்பட்றதோட நிறுத்திப்பாங்களா, இல்லை, ஆக்டிவா தைரியமா அதை எதிர்த்து செயல்பட பார்ப்பாங்களா?''

''சார் நீங்க பேசறது, கேக்கறது எல்லாமே புதிரா இருக்கு. என்ன விஷயம் முதல்ல அதைச் சொல்லுங்க.''

''உங்க டாட்டர் சம்பந்தமில்லாம தன் விஷயத்துல தலையிடறதா தொகுதி எம்.எல்.ஏ. மதுரை மன்னன் ஃபீல் பண்றாரு. அவர் மகன் கார்ல யாரோ ஒரு செருப்பு தைக்கறவன் பையன் குறுக்க விழுந்து செத்துட்டானாம்.

அவன் குறுக்க வந்து விழலை மதுரை மன்னன் மகன் தான் காரை ஏத்தி கொன்னான்னு ஒரு பத்திரிகை நிருபர் துணையோட உங்க டாட்டர் அகல்யா போலீஸ்ல கம்ப்ளைண்ட் பண்ணியிருக்காங்க.''

''எனக்கு இது எதுவுமே தெரியாது சார்?''

''லுக் மிஸ்டர் சிவராமன். அந்த மதுரை மன்னன் மகன் சொன்னதாவே இருக்கட்டும். இந்த மாதிரி பப்ளிக் விஷயத்துல பொலிடீஷியன் மட்டத்துல ஒரு வயசுப் பெண் மோதறது அவங்க எதிர்காலத்துக்கு நல்லதுல்ல.

நாம்பள்ளாம் வெறும் பம்பரம் சாட்டை அரசியல் வாதிங்க கைல இருக்குங்கற எதார்த்தம் நமக்குதான் தெரியும்.

உங்க டாட்டரை தன் வேலையை மட்டும் பார்க்கச் சொல்லுங்க. அவங்களுக்கு கல்யாண வயசுதானே?''

கலெக்டர் முன் சிவராமன் மௌனமாக இருந்தார்

''என்ன சிவராமன் பதிலைக் காணோம்?''

சிவராமன் சிலிர்த்து, உதறியபடி பதில் தருகிறார்.

'சார், என்ன கேட்டீங்க?''

''அவங்களுக்கு கல்யாணம் ஆயிடிச்சா?''

''இல்லை சார்.''

' என்ன வயசு?''

''முப்பது வயசுக்கு மேல ஆயாச்சு.''

''வாட் முப்பதுக்கு மேலேயா? என்ன சிவராமன் இது? உங்க காஸ்ட்ல் பதினெட்டு பத்தொன்பது வயசுல எல்லாம் கல்யாணம் முடிஞ்சிடுமே.''

''அது போன நூற்றாண்டுல சார்.''

''இப்ப என்ன வந்தது?''

''நாள், நட்சத்திரம், நிறம், சம்பாத்யம், வரதட்சணை, சீர் எல்லாமே இப்ப பிரச்னை.''



''எதையாவது பண்ணி, ஒரு இரண்டாம் தார மாவது உங்க பெண்ணை தட்டிவிடப் பாருங்க. அவங்களுக்குன்னு ஒரு குடும்பம் கணவன் குழந்தைன்னு இருந்தா இப்படி பப்ளிக்குல மூக்கை நுழைக்க மனசு வருமா என்ன?''

''முயற்சிக்கிறேன் சார்.''

''முயற்சிக்காதீங்க. முடிச்சுட்டேன்னு சொல்லுங்க. எம். எல் ஏ. போன் பண்ணி சத்தம் போட்டப்போ உங்களை பத்தி நல்ல விதமா சொல்லி அவர் கோபத்தை பெரும்பாலும் தணிச்சிருக்கேன். அதைக் காப்பாத்திக் கணும்.''

பொம்மைத் தனத்தோடு தலையசைத்துவிட்டு வீட்டுக்கு வந்தபோது...

**சோ**கப்பதுமையாக உட்கார்ந்து கொண்டிருந்தாள் அகல்யா. சேலைக் கொசுவத்தில் அங்கங்கே சுடுகாட்டு மண்! சுடுகாடு என்று சொன்னாலே அதற்காக மூன்று முறை குளிக்கச் சொல்வாள் அத்தைப்பாட்டி அபித குஜம்.

இப்பொழுது குமரேசனுக்காக சுடுகாட்டிற்கே போய் அவனை அடக்கம் செய்துவிட்டு வந்திருக்கிறாள். அவனது பிஞ்சு உடம்பு மண்விழுந்து மூடிப்போன காட்சி மனதை நிரடிக்கொண்டே இருக்கிறது.

இந்த மண்ணில் மகத்தான வாழ்வு வாழுவான் என்று எண்ணிய ஒருவனை பூமி பசிக்கிறது என்று வாங்கிக் கொண்டு விட்டது.

விதையை புதைத்தால் மரம் வளரும்.

சிதையை புதைத்து விட்டிருக்கிறோம். எது வளரும்? மனதில் ஆவேசம் வளர்ந்து கொண்டிருந்தது. அப்

பொழுது பார்த்து சிவராமன் உள்ளே நுழைந்து கொண்டிருந்தார். அவர் முகத்தில் ஒரு தீர்மான முடிவு தெரிந்தது வந்தவர் அகல்யாவை பார்த்தும் என்ன ஏதுஎன்று கேட்க வில்லை. அவளாகவும் வாயைத் திறக்க தயாரில்லை.

கால்கை கழுவிக்கொண்டு ஹாலில் உள்ள ஊஞ்சலுக்கு வந்துதான் வாயைத் திறந்தார்.

''என்னம்மா அந்த சங்கிலியோட மகனை நல்லடக்கம் பண்ணிட்டியா?''

விருட்டென்று நிமிர்ந்து அப்பாவைப் பார்த்தாள் அகல்யா.

''எனக்கு எப்படி தெரியும்னு பாக்கறியா? நான் அரசாங்க உத்யோகஸ்தன். நீ தொட்டு தாக்கியிருக்கற நபர் ஒரு அரசியல்வாதியோட மகன். நிறைய சினிமா பாத்துருக்கே. சொச்சத்தை நீயே புரிஞ்சுக்கோ, அப்பாவுக்கு மகளை கண்டிச்சு வைக்கச் சொல்லி மிரட்டல்.''

''என்னப்பா பண்ணப் போறேள்?''

''மிரட்டலை விடு. தொழில்ல அது ஒரு பகுதி. நான் அதையெல்லாம் நினைச்சு கவலைப்பட போறதில்ல. ஆனா உன் கல்யாணத்தை பத்தி எப்படி கவலைபடாம இருக்க முடியும்?''

''அதனால...''

''நீயும் இப்ப அரைக் கிழவி உனக்கு இனி யாராலையும் ஒரு இளைஞனை கல்யாணம் பண்ணி வைக்க முடியாது. தப்பித்தவறி சீர்திருத்த மனப்பான்மை உள்ள இளைஞர்கள் யாராவது முன்வந்தாலும் பாவம் அவா. உன் நட்சத்திரத்தைப் பார்த்த ஓடிப் போயிட்றா!



முதல்ல முப்பது வயசுவரை பிரம்மச்சரியத்தோட வாழற இளைஞர்களே இந்த தேசத்துல அபூர்வம்னா!

ஆகையால பிராக்டிகலா யோசிச்சேன் இரண்டாம் தாரம்தான் உனக்கு தோது. நீ கன்னிப்பருவத்துல இருந்து அந்த ஸ்லாபுக்கு வந்துட்டே. ஆகையால துணிஞ்சிட்டேன். நம்ப பாலக்காட்டு ராம சுப்ரமணியனை பத்தி நீ என்ன நினைக்கற?''

சிவராமனின் கேள்வியை தொடர்ந்து அகல்யா முகத்தில் தீக்கொழுந்து. அதில் பாலக்காட்டு ராமசுப்ரமணியன் தெரிந்தான். ஐம்பதை நெருங்கிக் கொண்டிருக்கும் அப்பாவைப் போன்ற தாசில்தார் உத்யோகஸ்தன். ஒருபெண் குழந்தை அவனுக்கு இருப்பதாக ஞாபகம். அவன் மனைவி தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டதாகவும் ஊர்ஜிதம். அந்த தற்கொலைக்கு போலீஸ் ரிக்கார்ட் வயிற்று வலியை காரணம் காட்டினாலும் நிஜம் செக்ஸ் வக்ரம் என்பது சிவராமனுக்கு தெரியும்.

''அப்பா அந்த வக்ரம் புடிச்சவனா?''

''வக்ரமல்லாம் வாலிபத்துலம்மா இப்ப நாடி நரம்பு தளர்ந்துடுத்து. பாவம் ஒருபெண் குழந்தையை வெச்சுண்டு அல்லாட்றான்.''

''நானும் இனி அவனோட சேர்ந்து அல்லாடவா?''

''இங்க இப்படியே போயிண்டிருந்தா நீ, நான், அத்தை நம்ம வாழ்க்கை சகலமும் அல்லாட்றதோட இல்லாமலே போயிடும்.''

பேசிவிட்டு பதிலுக்குக் காத்திராமல் சிவராமன் போயே போய்விட்டார்.

அபிதகுஜம் மட்டும் எதிரே வந்து நின்றாள்.

''கொழந்தே...அவன் கெடக்கறான். நீ கவலப் படாதே'' என்றாள்.

''எப்படி பாட்டி கவலப்படாம இருக்க? இப்ப எதுக்கு திடீர்னு இந்த முடிவு''

''நான் ஒண்ணு சொல்றேன் கேக்கறியா?''

''என்ன?''—எங்கோ பார்த்தபடி கேட்டாள்.

''எனக்கே அவன் பேசினது பிடிக்கலை. ஒரு பெண்ணோட புருஷன் கோழையா அம்மாஞ்சியாகூட இருக்கலாம். ஆனா ஒழுக்கமில்லாதவனா வக்ரம் புடிச்சவனா மட்டும் இருக்கவே கூடாது. அப்படி ஒரு ஆம்படையானோட நான் பட்டபாடு ஒண்ணுபோதும் இந்த ஆத்துக்கு. ஆகையால...''

''ஆகையால...''—ஆவலாக பாட்டி பக்கம் திரும்பினாள் அகல்யா.

''நீ உன் மனசுக்கு பிடிச்ச யாரை வேணும்னாலும் கல்யாணம். பண்ணிக்கோ. ஒண்ணு மட்டும் ஞாபகம் வெச்சுக்கோ. கல்யாண பந்தத்தை, பொண்டாட்டிங்கற உறவை யார் பெரிசா நினைக்கறானோ அவா எந்த சாதியில பிறந்திருந்தாலும் அவா பிராம்மணாதான். அப்படி நினைக்காதவன் பிராம்மண சாதியிலையே பிறந்திருந்தாலும் அவன் கீழ் சாதிதான். இது என் தீர்மானம். என் அனுபவத்துல நான் போட்ட தீர்மானம். ஆகையால அந்த ராம சுப்ரமணியத்தை பார்த்து உன் அப்பன் கல்யாணம் பேசி முடிக்கறதுக்கு முன்னால, நீ உன் மனசுக்கு பிடிச்சவனை கல்யாணம் பண்ணிண்டு மாலையும் கழுத்துமா வா. மத்ததை நான் பாத்துக்கறேன.''

பாட்டி அபிதகுஜத்தின் அந்தப் பேச்சில் அகல்யா ஆடிப் போனாள்.



பாட்டி...'' என்று காலில் விழுந்தாள்.

பெட்டி நிறைய பத்து ரூபாய் கட்டு. பத்தாயிரம் ரூபாயைத்தான் அப்படி அடுக்கிக்காட்டியிருந்தார் மதுரை மன்னன். அதை சுமந்து வந்த நபர் அவர் அடிவருடிகளில் ஒருவன்.

''இந்தா உனக்கு நஷ்டஈடு. இதை வெச்சு நீ பெரிய செருப்பு கடை போடலாம். கவர்மெண்ட்ல லோன் வேணுமா? ஐயா வாங்கித் தரேன்னு சொன்னாரு. பஜார்ல எங்க வேணா உக்காந்து கடை போட்டுக்க. யாரும் உன்னை டச் பண்ண மாட்டாங்க.''

பணத்தை சங்கிலிக்கெதிராக நீட்டிய நபரின் பேச்சில் ஏகத்தாளம்.

சங்கிலி பணத்தை பார்த்து விட்டு மோகன்தாஸை பார்க்கவும் மோகன்தாஸ் காமிராவை லோட் செய்வதில் மும்முரமாக இருந்தான். பக்கத்தில் அகல்யா.

''தம்பி எதுக்கு காமிராவை நோண்டறீங்க.''

''நீங்க பணம் கொடுத்த விஷயத்துக்கு ரெக்கார்ட் வேண்டாமா?''

மோகன்தாஸ் அப்படி கேட்கவும் அவர்கள் முகத்தில் புரியாத குழப்பம். அதற்குள் மளமளவென்று போட்டோ எடுத்து விட்டான் மோகன்தாஸ்.

மறக்காமல் பணப்பெட்டியையும் வாங்கிக் கொண்டான்.

''இப்படித்தான் புத்திசாலித்தனமா நடந்துக்கணும். இதை விட்டுட்டு நீதி நியாயம்னு புலம்பிகிட்டிருந்தா புலம்பியே சாக வேண்டியது தான்.'' - என்ற கருத்தோடு சிவில் டிரெஸ்ஸில் அங்கே சர்க்கிள் இன்ஸ்பெக்டரும்

ஆஜர் ஆனார். போட்டோவில் அவரும் விழ ஆரம்பித்தார்.

"ஏய் எதுக்கு போட்டோ எடுக்கறே. இங்க என்ன விழா நடத்தி பண முடிப்பா தராங்க."

"இல்ல சார்... இதுவும் பண முடிப்புதானே?

"நாளைக்கே இந்த சங்கிலியை இவங்க சாதிக்காரங்க தூண்டி விட்டு வேற மாதிரி பிரச்னையை கிளப்பினா அப்ப சாட்சிக்கு இதுதான் சார் வரும்.

இன்னிக்கு சி.எம்.மோட பவரைவிட தாழ்ந்த சாதிக்காரங்க நாலு பேர் ஒன்னு சேர்ந்துட்டா அவங்க பவர்தானே நிக்குது..."

மோகன்தாஸ் அப்படியும் இப்படியுமா புரட்டிப் போட்டு பேசியது சர்க்கிளுக்கு கொஞ்சம் புரிந்தது. கொஞ்சம் புரியவில்லை. பின்னர்,

"ஏதாவது ஏடாகூடம் பண்ணி வைக்காதே. இனியாவது பிராக்டிகலா திங்க் பண்ணி நல்லபடி வாழப் பாருங்க..." என்று ஒரு மகான் போல் அருள் வாக்கெல்லாம் சொன்னார்.

கொட்டை எழுத்தில் மறுநாள் பேப்பரிலேயே வந்து விட்டது எம்.எல்.ஏ. மதுரை மன்னன் லஞ்சம் கொடுத்த செய்தி. மறைமுகமா அவர் தன் மகனின் குற்றத்தை ஒப்புக் கொள்வதற்கு அதுவே சரியான ஆதாரமாகி விட்டது.

போட்டோவில் மதுரை மன்னன் ஆட்களுடன் சர்க்கிளும் சிவில் டிரெஸ்ஸில் கம்பீரமாகத் தெரிந்தார்.

எதிர்க்கட்சிக்காரர்களுக்குப் படு கொண்டாட்டமாகி விட்டது.



'ஒரு ஏழைக்கு இழைக்கப்பட்ட அநீதி...

எம்.எல்.ஏ.வின் பணத்திமிர்!

நியாயாத்தின் விலை பத்தாயிரம்...' என்றெல்லாம் விதம் விதமாக தலைப்புகள்.

கால் காசு பெறாதவன் என்று ஏளனமாக பார்த்து துரும்பாக ஒதுக்கப் பட்டவன், கண்ணில் விழுந்த துரும்பாக உறுத்த ஆரம்பித்து விட்டான்.

காலையிலிருந்தே மதுரை மன்னன் வீட்டு டெலிபோன் அலறி அலறிக் களைத்துக் கொண்டிருந்தது.

"என்னண்ணே இப்படி இளிச்ச வாய்த்தனமா பணத்தைக் கொடுத்து மாட்டி கிட்டீங்க..."

"அடுத்து மந்திரியா ஆற நிலைக்கு போய்கிட்டிருந்தீங்க. இப்படி சறுக்கிட்டீங்களே..."

"இப்படியா மகனுக்கு செல்லம் கொடுத்து கெடுப்பீங்க. சி எம். போன் பண்ணி கேட்டா என்ன சொல்லப் போறீங்க?"

எடுக்கின்ற ஒவ்வொரு தொலைபேசித் தொடர்பிலும் இப்படித்தான் ஏடாகூடமான கேள்விகள் கருத்துக்கள்.

கையை குத்திப் பிசைந்து குமுறிக் கொண்டிருப்பதால் மார்பில் கூட மதுரை மன்னனிடம் இலேசான வலி.

பக்கத்திலேயே வக்கீல்.

"யோவ்... இந்த சிக்கல்ல இருந்து எப்படிய்யா வெளிய வர? வரவே முடியாதுன்னா சொல்லு என் மகனை நானே போலீஸ்ல பிடிச்சு கொடுத்து மனுநீதி சோழன் மாதிரி நடந்துகிட்டதா ஃபோகஸ் பண்ணிக்கிறேன்."

''அவ்வளவு தூரம்லாம் போக வேண்டாங்க. இது ரொம்ப சோட்டா கேஸ். நீங்களோ உங்க மகனோ நேர்ல போய் பணம் கொடுக்கலைல்ல...?''

''ஆமா...''

''அப்ப கவலையை விடுங்க. யாரோ பணம் கொடுத்திருக்காங்க, அவங்களும் வாங்கியிருக்காங்க. பணம் கொடுத்தவங்க உங்க பேரை சொன்னதுக்கு நீங்க என்ன பண்ணுவீங்க. எல்லாம் அரசியல் எதிரிகள் பண்ணும் சதின்னு சொல்லுங்க...''

''அப்படிச் சொன்னா என் பேச்சு நிக்குமா?''

''நிக்க வைக்கணுங்க. அதிகாரம் கைல இருந்தும் இப்படி பயப்பட்டா எப்படி? மறுப்பு அறிக்கை விடுங்க...''

''அத நான் விடத்தான் போறேன். அதுக்கு முந்தி என்ன பண்ணலாம்...''

''இத்தனை தூரம் இந்த பிரச்னையை டெவலப் பண்ணினவங்களை கொஞ்சம் தட்டி வையுங்க.''

அடுத்த வினாடியே தொலை பேசியில் சிவராமனை பிடித்து கடிக்க ஆரம்பித்தார் மதுரை மன்னன்.

''ஏய்யா... மனசுக்குள்ற என்ன பெரிய ஹீரோன்னு நினைப்பா உனக்கு.கலெக்டர் மூலமா:உன்னை பக்குவமா கண்டிச்சும் நீ புரிஞ்சுக் கலையே...

உன் மகளுக்கு தன் மனசுல என்ன பெரிய ஜான்சி ராணின்னு நினைப்பா? தெருவோரமா செருப்பு தைக்கறவனுக்காக உன் பொண்ணு வக்காலத்து வாங்கறதை நீ வேணும்னா மனிதாபிமானம்னு வர்ணிக்கலாம். ஊர் உலகம் நம்பாது.



அவனுக்கு வரப்போற நஷ்ட ஈட்லடு அதுக்கு எத்தனை பர்சென்ட்டுன்னு தான் கேக்கும்.

இது பர்ஃபெக்ட் உலகம் இல்லைய்யா. பர்சென்ட் உலகம்!''

''சார்; கோபப்படாதீங்க. நான் ஒண்ணும் கண்டிக் காம இல்ல?''

''நீ கண்டிச்சே இந்த லட்சணம்னா கண்டிக்காட்டி இன்னும் மோசமா போயிருக்குமோ?''

''அப்படியெல்லாம் இல்ல. அவளுக்கு குருட்டுத் தைரியம். அதான் இப்படி நடந்துக்கறா...''

''அப்புறம் நான் என் நிஜ தைரியத்தை பதிலுக்கு காட்டினா நீ தாங்குவியா? உன்னை டிரான்ஸ்ஃபர் பண்றது எனக்கு சில நிமிஷத்து வேலை.''

''தயவு செய்து மொதல்ல அதை செய்யுங்க...''

''மறைமுகமா உன் பொண்ணை திருத்த முடியாதுன்னு சொல்றே. அப்படித்தானே?'',

''ஐயய்யோ அப்படி அர்த்தமில்லை. டிரான்ஸஃபர் பண்ணினா தொடர்பு அறுந்துடும். எதுவானாலும் நினைச்சு மட்டும்தான் வேதனைப் பட முடியும். நேர்ல போய் ஃபாலோ ப்ண்ண வேண்டாம் பாருங்க.''

''வியாக்யானமா பண்றே... நான் உன்னை டிரான்ஸ்பர் பண்றது அப்புறம். உன் மக இனி என் மகன் விஷயமா மூச்சுகூட விடக்கூடாது. விட்டா அது தான் அவ விட்ற கடைசி மூச்சா இருக்கும்.''

''பகவானே... அப்படியெல்லாம் பண்ணிடாதீங்க. நான் கண்டிக்கிறேன். நிச்சயமா கண்டிக்கிறேன்.''

மதுரை மன்னன் அடுத்தபடியாக டெலிபோனில் மோன்தாஸை பிடித்து இழுத்தார்.

''நிச்சயமா... உங்க புத்தி தெரிஞ்சு அதுக்கு தகுந்த மாதிரி ஆப்பு வெச்சு அசைக்க தெரிஞ்ச ஒரேரிப்போர்ட்டர் இன்னிக்கு ஃபீல்டுல நான்தான்.''

''உனக்கு நான் ஆப்பு வைக்கவா?''

''என்ன தமிழ் சினிமா மாதிரி அடியாட்களை ஏவி விட்டு என் கை கீாலை முறிக்க போறீங்களா? இப்படி எல்லாம் செய்வீங்கன்னு எனக்கு நல்லாவே தெரியும்.

எல்லாம் தெரியும் உங்களுக்கு...ஆனா புத்திசாலித் தனமா மட்டும் நடந்துக்க தெரியாது.''

''எனக்கு புத்திசாலித்தனமா நடந்துக்கத் தெரியலையா? டேய்...அரசியல்ல எனக்கு ஐம்பது வருஷ அனுபவம்டா அது தெரியுமா உனக்கு?''

''உங்க வயசே நாப்பத்தெட்டுதான். அம்மாவோட கர்ப்ப காலத்தையும் சேர்த்துக்கிறீங்களோ? புருடாவை கொஞ்சம் பாத்து விடுங்க. அடியாட்களை ஏவிவிட்டு உங்க தப்பை மறைமுகமாக ஒத்துகிட்டே போகாதீங்க. கவர்னருக்கும், சி.எம்.முக்கும் என் உயிருக்கு ஆபத்துன் நான் லெட்டர் போட்டு அது பத்திரிகையிலயும் வெளி வந்தாச்சு. பாக்கலையா நீங்க?''

''பார்த்தேன்...பார்த்தேன்...ஆளை வெச்சு அடிச்சு காலி பண்றது அந்த கால ஸ்டைல்...உன் முடிவை நீயே தேடிக்கும்படி பண்றதுதான் என் ஸ்டைல்.''

''எப்படி...எப்படி? என் முடிவை நானா தேடிக்கு வேனா...அதையும்தான் பாக்கறேனே...''

''பார்க்கத்தாண்டா போறே...''



போனை மூடக்கின மதுரை மன்னன் முகத்தில் ஏகப் பட்ட பீதி.

''என்ன சார் சொல்றான் பய. ரொம்ப எகிர்றானா?''

''ஆமாம்...எல்லாம் பத்திரிகை கைல இருக்கற தைரியம்...''

''என்ன சார் பெரிய பத்திரிகை. இவங்களுக்கு இப்ப யாருக்கு சப்போர்ட் பண்றதுன்னே தெரியலை. முதுகுல குத்தறவங்களை எல்லாம் கூப்பிட்டு தொடர் கட்டுரை எழுதச் சொல்றாங்க. வியாபாரம்தான் அவங்களுக்கு குறி.''

''யோவ்...நான் உன்கிட்ட விளக்கம் கேட்டேனா? என் பிரச்னையில நான் எப்படி மீண்டும் வர்றதுன்னு பார்.''

''நீங்க எதுலயும் சிக்க மாட்டீங்க. சிக்கவும் முடியாது.''

''இவ்வளவு தூரம் பத்திரிகைலபோட்டு நாற அடிச்ச வங்க கோர்ட்டுக்கு போகப் போறதா சொல்லியிருக்காங் களே கவனிச்சியா?''

''கோர்ட்டுக்குதானே... தாராளமா போகட்டும். கோர்ட்டுக்கு போறதுதான் நமக்கும் நல்லது. வாய்தா வாங்கியே அவங்களை கொல்லலாம். நம்ம நாட்டுல எந்த வழக்குங்க முதல் நாள் தாக்கலாகி மறுநாள் தீர்ப்பு வந்துருக்கு?''

''தீர்ப்ப விட்டுத்தள்ளு கழுத! இமேஜுன்னு ஒண்ணு இருக்குல்ல...''

''அதுக்கெல்லாம் கவலைப்பட்டா பையனை காரை தொடவே விட்டிருக்கக் கூடாது...''

''இந்த காலத்து பசங்க எங்கய்யா பேச்சை கேட்கறாங்க.''

''உங்க பையனே உங்க பேச்சை கேக்காத நிலையில் ஊரும் உலகமும் கேக்கணும்னு நீங்க எதிர்பார்க்கறது எந்த வகையிலங்க சரி?''

''ஆமா இப்ப நீ யார் பக்கம் பேசறே...? எனக்கு தானே வக்கில் நீ?''

வக்கில் சற்று மிடறு விழுங்கி அசட்டு சிரிப்பு சிரித்தார்.

நகத்தை கடித்துக் கொண்டிருந்தார் நல்லமணிப் பாண்டியன். இப்படி நகத்தை கடித்தால் கடூரமாக சிந்திப்பதாகப் பொருள்.

எம்.எல்.ஏ. மதுரை மன்னனை எதிர்த்து நின்று தொடர்ந்து நான்கு முறை சொற்ப ஓட்டில் தோற்ற எதிர்கட்சிக்காரர் தான் நல்லமணிப் பாண்டியன்.

இப்பொழுது மதுரை மன்னன் சங்கிலி விஷயத்தில் நாறத் தொடங்கியிருப்பது அவருக்கு புதுத்தெம்பை அளித்துள்ளது.

எதிலாவது சிக்கமாட்டானா-பெயரைக் கெடுக்க முடியாதா என்று காத்திருந்தவருக்கு சங்கிலி வசமாக உதவி விட்டான்.

''இப்படியே நகத்தை கடிச்சிகிட்டிருந்தா எப்படி?'' நல்லமணிப் பாண்டியனை நிமிண்டுபவள் அவரது மனைவி கற்பகவல்லி...

''போய் அந்த சங்கிலியை பார்த்து நாலு வார்த்தை ஆறுதல் சொல்லுங்க. ஒரு இரண்டாயிரத்தை செலவுக்கு கொடுத்துட்டு வாங்க. பின்னால பேசிக்கலாம் என்று



அவருக்கு அரசியலும் சொல்லித்தர ஆரம்பிக்கிறது அவள் உதடு.

''தெரியும்டி...இரண்டாயிரம் தந்தா பத்தாது நம்ம கட்சியையே அந்த சங்கிலிக்கு ஆதரவா கத்த விடணும். இந்த நாட்டுல எங்க எவன் ஜெயிச்சாலும் இனி இந்த ஊர்ல மதுரை மன்னன் மட்டும் ஜெயிச்சு வரக்கூடாது. அதுக்கு என்ன செய்யணுமோ அவ்வளவையும் செய்யணும்.

''பேசிகிட்டும் நகத்தை கடிச்சிகிட்டும் இருந்தா எப்படி? காரியத்துல இறங்குங்க...?''

''பொறுடி...மாநிலத் தலைவர்கிட்ட இருந்து போன் வரும். காத்துகிட்டிருக்கேன்.''

அதேபோல் போன்மணி அடித்தது.

''யாரு நல்ல மணிப்பாண்டியா?''

''ஆமாங்க தலைவரே...உங்க போனுக்காக தான் காத்திருக்கேன்''

''அந்த சங்கிலி விஷயமா இங்க துணைத்தலைவர் கிட்டயும் செயலாளர் கிட்டையும் நான் கலந்து பேசினேன். பிரச்னையை தீவிரமா தொட்டா மாநில அளவுல நாம வளர்ரதுக்கு சந்தர்ப்பம் நிறைய இருக்கு. மதுரை மன்னன் சார்ந்திருக்கிற கட்சியையும் டெபாசிட் வாங்க முடியாதபடி பண்ணிடலாம். ஆகையால் சங்கிலியை நீங்க தாராளமாவே சப்போர்ட் பண்ணலாம்.

முடிஞ்சா சங்கிலியை நம்ம கட்சியில சேர்க்கப் பாருங்க...''

''சரிங்க தலைவரே...''

''சங்கிலி நமக்கு கிடைச்சிருக்கற ஒரு பக்கா ஆயுதம். பாத்து பயன்படுத்தணும், நாம ஆதரிக்க ஆரம்பிச்சுட்டாலே மதுரை மன்னன் பாதி செத்துடுவான்...''

''ஆமாம் தலைவரே...அதுல சந்தேகமென்ன?''

''அவசியப்பட்டா நான்கூட சங்கிலியை வந்து பார்த்து ஆறுதல் சொல்றேன்.''

''அவசியப்பட்டா என்னங்க தலைவரே...நீங்க கட்டாயம் வரணும். என் ஊருக்கும் தொகுதிக்கும் நீங்க வந்து பல மாசம் ஆயிடிச்சு...''

''அப்ப வரவேற்பு ஏற்பாடெல்லாம் செய்யுங்க.''

'ஆகா...தடபுடலா செஞ்சிட்றேன். கட்அவுட்டால ஊரையே நிறை வைக்கறேன் பாருங்க,'' நல்லமணிப் பாண்டியன் போனை முடக்கிவிட்டு மனைவி கற்பக வல்லியை நைச்சியமாக பார்க்கிறார்.

''கற்பு...அரசியல்ல ஐயாவும் ஒரு ரவுண்ட் வரப் போறேன். பாத்துக்கிட்டே இரு...''—என்றபடி சங்கிலியை சந்திக்க ஆயத்தமாகிறார்.

''யாரால் யாருக்கு ஆதாயமோ?''-கற்பகவல்லியிடம் மெல்லிய புலம்பல்

அதோ அந்த குடிசைதான்...''-ஒருவன் கை காட்டிய திக்கில் நூற்றுக்கணக்கில் குடிசைகள். இதில் எந்த குடிசையை இவன் காட்டுகிறான் என்பது அகல்யாவுக்கு முதலில் புரியவில்லை. பிறகு கொடி பறக்கும் கூரை என்றவுடன் பளிச்சென்று புரிந்து போனது. அந்த வீட்டை நோக்கி அவள் நடக்கும்போது கூடவே தேய்ந்த சைக்கிள் டயரை உருட்டி விளையாடும் அழுக்குச் சிறுவர்கள் பளிச்சென்றிருக்கும் அவளை அதிசயமாக பார்த்தபடி பின் தொடர்கிறார்கள்.

அச்சு அசலான குப்பப்பகுதி!

நாய், பன்றி, கோழி என்கிற நாட்டு விலங்குகள் மனிதர்களை லட்சியமே செய்யாமல் ஏகபோகமாய் சுற்றி வந்து கொண்டிருக்கின்றன.



அகல்யா ஒரு வழியாக சங்கிலியின் குடிசையை எட்டி விட்டாள்.

சங்கிலி இவளைப் பார்த்த மாத்திரத்தில் படுத்திருந்தவன் எழுந்தோடி வந்தான்.

''வா தாயி...வா...வா...''-வாய் கொள்ளாத வரவேற்பு அவனிடம்.

''நா வர்றதிருக்கட்டும் பிழைப்புக்கு போகலியா?''

''மேலு கால் எல்லாம் வலி. மனசுலையும் குமரு உக்காந்து மறிக்கிறான். எனக்கும் செத்துடலாமான்னு இருக்கு. யாரு இருக்கா எனக்கு? நா எதுக்கு பொழப்புக்கு போகணும்?'' அவன் அப்படி கேட்டதில தவறே இல்லை. என்ன பதில் சொல்வது?-அகல்யா தடுமாறுகிறாள்.

''ஏதோ நான் செஞ்ச புண்ணியம் நீயும், அந்த மோகன்தாஸ் தம்பியும் எனக்காகவும் நியாயம் பேசிக்கிட்டு இருக்கீங்க.''-பெருமூச்சோடு தாழ்வு மனப்பான்மை உதட்டில் தந்தியடிக்க பேசியவனை மேலும் மலங்க மலங்கப் பார்க்கிறாள் அகல்யா

''என்ன தாயி அப்படி பாக்கறே...இந்த பாவப்பட்டவனை பாக்க என்ன இருக்கு?''

''இல்ல...உன்னை எப்படி தூக்கி நிறுத்தறதுன்னு யோசிக்கறேன்.''

''தூக்கியா...இனியா? வேண்டாம் தாயி. நடக்கறது நடக்கட்டும். நீ நல்லபடி உன் வேலையை கவனி.''

''உன்னை இப்படி அம்போன்னு விட்றதுக்காகதானா நாங்க அவ்ளோ சிரமப்பட்டோம்?''

''பட்டீங்க...இல்லேங்கல. என்ன பிரயோஜனம்? நாமல்லாம் கண்ணாடிப் பாத்திரம். ஆள்றவங்களை நோக்கி எப்படி மோதுனாலும் இழப்பு நமக்குதான்...'

''மனசு தளர்ந்துடாதே சங்கிலி. அந்த எம் எல்.ஏ.வையும் அவர் மகனையும் கூண்டுல ஏத்தி உள்ற தள்ளாம விடப்போறதில்ல நாங்க.''

''அவரை தூக்குலையே போடுங்க. எனக்கு கால்காசு பிரயோஜனம் உண்டா? என் குமரு பிழைச்சு வருவானா?''

''அப்படின்னா எல்லாத்தையும் ஏறகட்டிட்டு கோழையா சலாம் போட்டு ஒதுங்கிக்கச் சொல்றியா?''

''அது ஆயிரம் மடங்கு மேல்...''

''சங்கிலி நீ புரிஞ்சுதான் பேசறியா?''

''புரியாம பேச நான் என்ன சின்ன குழந்தையா...?''

'சே...ஆனாலும் நீ இவ்வளவு கோழையா இருப்பேன்னு நினைக்கலே.''

''நீ எல்லாம் நல்லா இருக்கணும்னா நா கோழையா தான் இருக்கணும். என்னை பொருத்தவரை அந்த மகாலட்சுமி வேற, நீ வேற கிடையாது. போ தாயி... போய் பொழைப்பை கவனி. என்னை மறந்துடு.''

சங்கிலியின் பேச்சுக்காக உடனேயே வருந்தி மனதை கல்லாக்கியபடி திரும்பி நடந்தவள் ஒரு இடத்தில் மூச்சு பேச்சற்று ஸ்தம்பித்து விட்டாள்.

எதிரே பொதுக் கழிவறை அதில் அச்சு அசலாய் அவளைப் போலவே படம்!

அருகில் சங்கிலியின் படம். பக்கத்திலேயே 'நாங்க புதுசா கட்டிகிட்ட ஜோடி தானுங்கோ'-எனும் வாசகம்!



'ச்சீய்'...-அகல்யாவிற்கு குமட்டியது. சங்கிலி அந்த அளவு மனது வெறுத்துப் போனதன் மர்மம் புரிபட ஆரம்பித்தது.

பொதுவாழ்க்கையின் முதல் பரிட்சையே அவளை கொத்திப் பிடுங்கியது.

இதெல்லாம் எம்.எல் ஏ. மதுரை மன்னனின் ஏற்பாடு என்பது சட்டென்று புரிந்து போனது.

வீட்டிற்கு திரும்பிய போது தெருப்பாக சிவராமன். ''வீதியில தலை காட்ட முடியலை. பெரிய்ய அன்னை தெரஸாங்கற நினைப்பு

இப்ப அது எதுல போய் முடிஞ்சிருக்கு தெரியுமா? கேட்டுவிட்டு புருவம் தூக்கினார்-அவர்.

''தெரியும் ... நானும் கேள்விப் பட்டேன்.' ஒற்றை வரியில் அகல்யாவிடம் பதில்.

''கேள்விப்பட்டுமா இன்னும் உசுரோட இருக்கே?''

''இதுக்கெல்லாம் ஒரு பொண்ணு சாகணும்னா இந்த பூமியில பெண் ஜென்மத்தையே விளக்கு வெச்சு தேடும் படியாயிடும்ப்பா...''

''வாய்க்கு குறைச்சலில்லை. நம்ம மானம் மரியாதை இப்படியா சிரழியணும்.''

''மானம் மரியாதை சிரழியலப்பா. அதுக்கு சோதனை வந்துருக்கு. இந்த அகல்யா அதை ஜெயிச்சு காமிப்பா.''

''நீ ஜெயிக்கறதுக்குள்ள நான் மேல போயிடுவேன். என்ன பாவம் பண்ணேனோ பொண்ணா உன்னை பெத்துட்டு தினம் தினம் செத்து பிழைக்கறேன்.'' அந்த வார்த்தைகள் அவள் நெஞ்சில் சிலுவையில் அடித்த மாதிரி இறங்கின.

24180
4097938

பக்கத்திலேயே நின்று கொண்டிருந்த அத்தை அபிதகுஜம்கூட அதைக்கேட்டு உடைந்து போனாள்.

''வாயை மூட்றா சிவராமா...ஒரு பெண் குழந்தை கிட்ட இப்படியா பேசுவே. வெக்கமாயில்லை நோக்கு. பிரச்னை வரும்போதுதான் ஒரு மனுஷனுக்கு நிதானம் ரொம்ப முக்கியம். வார்த்தையை கொட்டாதே. திரும்ப அள்ள முடியாதது அதுமட்டும்தான்...''

'நீயும் அவளுக்கு வக்காலத்தா, இப்பவே நான் போய் அந்த பாலக்காட்டு ராமசுப்ரமண்யத்தை பார்த்து கல்யாணத்துக்கு தேதி குறிச்சிட்டு வரேன். கழுத்துல தாலின்னு ஒண்ணு ஏறினாதான் நீ வழிக்கு வருவே...''-பேசிய ஜோரில் பேண்ட் சட்டை மாட்டிக் கொண்டு நிஜமானுமே ஹேண்ட் பேக் சகிதம் வெளிக் கிளம்பி விட்டார் சிவராமன்

''அத்தை என்ன அத்தை இது?'' பதறுகிறது அகல்யா உள்ளம்.

''நான் அன்னிக்கே சொன்னேன். உன் மனசுக்கு பிடிச்ச யாராவது இருந்தா மாலையும் கழுத்துமா வான்னு...இப்ப புலம்பி என்னடி பிரயோஜனம்?'' அபித குஜம் கேள்விக்குள் புழுங்குவது நன்றாக தெரிகிறது.

அகல்யாவிற்குள் எல்லாமே சிதறுகிற மாதிரி ஒரு பிரமை. அவள் மன உறுதியையும் மீறி தற்கொலைக்கு புத்தி தாவும்போது வாசலில் மோட்டார் சைக்கிளின் தேங்கலான சப்தம்.

எட்டிப் பார்த்தாள். மோகன்தாஸ்!

அவனை அந்த சத்தர்ப்பத்தில் துளியும் எதிர்பார்க்க வில்லை அவள்.

''வாங்க மோகன்தாஸ் வாங்க...'' வாய் கொள்ளாத வரவேற்பு. மனதின் சோகத்துக்கு உடனடியாக ஒரு திரைபோட எப்படியோ அவளால் முடிந்தது.



''அகல்...ஒரு முக்கியமான விஷயம் நம்ம சங்கிலிக்கு இப்ப திடீர்னு ஏகப்பட்ட டிமாண்ட்! அது விஷயமா பேசத்தான் வந்தேன்.''

''என்ன சொல்றீங்க மோகன்தாஸ். மொதல்ல உட்காருங்க.''

''உட்கார்றது அப்புறம். சட்டுன்னு கிளம்புங்க சொல்றேன்.''

''என்ன விஷயம் சுருக்கமாவாவது சொல்லுங்க.''

''நம்ம சங்கிலிமீது எதிர்க்கட்சிக்காரங்க பார்வை விழுந்திருக்கு. தங்களோட ஃபுல் சப்போர்ட்டை சங்கிலிக்கு தர அவங்க முடிவெடுத்துருக்காங்க.

எம்.எல் ஏ. மதுரை மன்னனை உண்டு இல்லைன்னு பண்ணப் போறாங்க.

யூ நோ... காலைல என்னை போன் பண்ணி மிரட்டி னான் அந்த மதுரை மன்னன் ராஸ்கல்.''

''நிஜமாவா?''

''ஆமா அகல்... தனியா நாம துவங்கின தர்மயுத்தத் துக்கு இன்னிக்கு பெரிய அளவுல சப்போர்ட் எல்லாம் கிடைச்சிருக்கு. இதைக் கொண்டு சங்கிலிக்கு நாம சரி யான நஷ்டஈடு வாங்கித் தரணும்.

இனி எந்த அரசியல்வாதியும் ஏழைங்கிட்ட வாலாட்டக் கூடாது. ஒழுங்கா இருந்தாதான் பதவிங்கற விழிப்பை ஏற்படுத்தணும்.''

மோகன்தாஸிடம் பிரக்ஞையான பிரக்ஞை. அதை பார்க்க பூரித்து போகிறது அகல்யா மனது. அபிதகுஜம் கூட அதைக் கேட்டு சிலிர்த்தாள்.

''அம்பி நீ யாரு... ரொம்ப நன்னா பேசினேப்பா நீ. இந்த காலத்து பசங்க சீட்டாடிண்டு சினிமா பாத்துண்டு பொழுதை அழிச்சிக்கறவாங்கற என் அபிப்ராயம் உன்னால மாறியிருக்கு'' என்றாள்.

''இவங்கதான் என் அத்தைப் பாட்டி...''-அகல்யா மறுவினாடி மோகன்தாசுக்கு அவளை அறிமுகப்படுத்த அவன் பெரிதாக அபிதகுஜம் எதிரே கை கூப்பினான்.

அவனது அந்தக் கை கூப்பல்... புன்னகை தவழும் முகம் எல்லாமே அபித குஜத்துக்கு மிகவும் பிடித்துப் போகிறது.

''தம்பி உன் சொந்த ஊர் எது? அப்பா அம்மா என்ன பண்றாங்க?'' கேட்கிறாள்.

''என் சொந்த ஊர் சேலம். அப்பா அம்மாவுக்கு நெசவுத் தொழில். நான் நெசவாளர் குடும்பத்துல இருந்து வந்திருக்கிற ஒரு பத்திரிகையாளன்.''

''பலே... செய்யும் தொழிலில் நெய்யும் தொழிலே மேலுன்னு பெரியவா சொல்வா. மானம் காக்ற தொழில் இல்லையா? அதுல இருந்து வந்துரு-க்கறவனா நீ... ரொம்ப சந்தோஷம்பா...''

அபிதகுஜம் சொல்லி முடிக்குமுன் காப்பியுடன் வருகிறாள் அகல்யா.

ரசித்து சாப்பிடுகிறான் மோகன்தாஸ். அவனையே ஊன்றிப் பார்க்கிறாள் அபிதகுஜம்.

இவனுக்கும் அகல்யாவுக்கும் இருக்கும் பழக்கம் எந்த வகையில் சேர்த்தி? வெறும் நட்பா? இல்லை காதலா? ஆஹா... காதலாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். அது கல்யாணத்தில் முடிந்தால் இன்னும் சிறப்பாக இருக்குமே. அபிதகுஜம் மனது அலை பாய்கிறது.



அகல்யாவை தனியாக அழைத்தபோது அவள் கிளம்பி விட்டாள்.

''வெளிய கிளம்பிட்டியா?''

''ஆமாம் பாட்டி... போய் அந்த சங்கிலி விஷயத்தை கவனிச்சாகணும்.''

''இப்பதானே உன் அப்பன் சத்தம் போட்டான்.''

''அவருக்கு அவர் கவலை. எனக்கு என் கவலை.''

''உன்னைப் பத்தியும் கொஞ்சம் கவலைப்படேன்''

''என்ன பாட்டி சொல்றே?''

''போனவன் அந்த ராமசுப்ரமண்யத்தோட வந்தா என்ன பண்ணுவே?'' அப்பொழுதுதான் அவள் தன்முன் உள்ள அந்தப் பெரியசிக்கலை திரும்ப யோசிக்க ஆரம்பிக்கிறாள். மோகன்தாஸ் வந்ததில் சகலமும் மறந்துபோய் விட்டது அவளுக்கு...

மௌனம் தோளில் ஏறும் கிளியாக ஏறிக்கொள்கிறது.

''ஆமா இந்த மோகன்தாஸ் எப்படி?''

''எதுக்கு பாட்டி கேக்கறே...''

''புரியலையா உனக்கு?'' அபிதகுஜம் எங்கு வருகிறாள் என்பது அகல்யாவிற்கு புரிந்து விட்டது.

''பாட்டி நா அவரண்ட அந்த மாதிரி நினைப்போடல்லாம் பேசல...பழகல.''

''அதனால என்ன இனி பேசு பழகிப்பாரு.'' சரி என்று தலையாட்டிவிட்டுகிளம்பப் பார்த்தவளை வெடுக்கென்று பிடித்து இழுத்து பூஜைஅறைக்குக் கூட்டிச் சென்றாள்.

அம்பாள் குங்குமத்தை எடுத்து அவள் நெற்றியில் வைத்தான்.

பாட்டியின் ஆசை அகல்யாவை நெகிழ்த்துகிறது. மடிசார் புடவைக்குள் துவண்டுபோற தேகத்துக்குள் இப்படி ஒரு இதயமா?

காலில் விழுந்து நமஸ்கரித்துவிட்டு கிளம்பினாள். வெளியே வந்தவுடன் மோகன்தாஸ் கேட்டான். "என் கூட பைக்ல ஒண்ணா வரதுல ஆட்சேபணை இல்லியே?"

"பைக்ல மட்டுமில்ல மோகன்தாஸ்...வாழ்க்கையிலையும் ஒண்ணாவர ஆசைப்பட்றேன்." என்றவளை மளாரென நிமிர்ந்து பார்த்தான்.

"அகல்யா இதுஎன்ன விபரீத ஆசை?"—அவன் பதிலுக்கு நெடுநேரம் மௌனம் காத்தாள்.

அவள் பைக்கில் தொற்றிக் கொண்டான். பறக்கத் தொடங்கியது அந்த வாகனம்.

"நா கேட்ட கேள்விக்கு நீங்க பதிலே சொல்லலையே போகும் போதும்" கேட்டாள்.

"சொல்றேன்...புரியும்படி சொல்றேன்.

சங்கிலி வீட்டுமுன் ஒரே கூட்டம்.

வெளியே பளபளப்பான மாருதி கார்களின் வரிசை. கட்சிக் கொடிகள் தெரிந்தன. வந்திருப்பது அரசியல்வாதிகளின் கூட்டம் என்று தெரிந்தது. உள்ளே சங்கிலி எதிரே நல்லமணிப் பாண்டியன்!

"அண்ணே உங்களை பாக்க பரிதாபமா இருக்கு. ஏழைன்னா எப்பவுமே அந்த மதுரை மன்னனுக்கு இளப்பம். நம்மை தட்டி கேக்க யார் இருக்கான்னு மமதை அவனுக்கு. நியாயத்துக்காக உசுரைக்கூட விட தயாரா



இருக்கறவன் இந்த நல்லமணி. நீங்க கவலைப்படாதீங்க. இனி அவனை கவனிச்சுக்கறது எங்க வேலை..."

"ஆமாண்ணே...நல்லமணி அண்ணன் சொன்னா செய்யறவரு. நல்லது எங்கிருந்தாலும் எடுத்துக்குவாரு. நீங்க கவலைப்படாதீங்க..." ஆளாளுக்கு சங்கிலி எதிரில் ஆறுதல் எனும் பெயரில் அளக்கிறார்கள். சங்கிலிக்கு என்ன பேசுவது எதைப் பேசுவது என்றே தெரியவில்லை.

சில நாட்களில் அவன் வாழ்க்கைப் போக்கே மாறிவிட்டது. இந்நேரம் ஏதாவது பிய்ந்த செருப்பை தைத்தபடி உட்கார்ந்திருக்க வேண்டியவன் இப்படி மாறிப்போன வாழ்க்கைப் போக்கை ஜீரணிக்க முடியாமல் தவிக்கிறான்.

இப்படி எல்லாம் நடப்பதற்கு பெயர்தான் விதியா? காலச்சக்கரம் வினோதமாக சுழல்கிறது. இந்த சுழற்சியில் கீழே இருப்பவன் மேலேயும் மேலே இருப்பவன் கீழேயும் வருவதெல்லாம் அது நடத்தும் கண்ணாமூச்சி விளையாட்டோ?

சங்கிலிக்குள் பிடிபடாத குழப்பம்.

நல்லவேளை அந்தவேளை பார்த்து மோகன்தாஸும் அகல்யாவும் அங்கு வந்து சேர்ந்தனர்.

அவர்களைப் பார்த்த உடன்தான் அவனுக்கு தெம்பாக இருந்தது.

"வா தாயீ...வாங்க தம்பி..." என்று உதடு மலர்ந்தவன் நல்லமணிப் பாண்டியனை பளபளப்பான விழியோடு ஏறிட்டான்.

"இவங்கதான் உனக்கு உதவி செஞ்சவங்களா?"—இது நல்லமணிப்பாண்டியன்."

"ஆமாங்க...என்வரையில இவங்கதான் எல்லாம்."

''பலே...இளைய சமுதாயம் இப்படில்ல இருக்க ணும்.''

''நல்லமணிப் பாண்டியனின் பாராட்டை அலட்சிய மாகப் புறந்தள்ளி விட்டு மோகன்தாஸ் உள்ளே நுழை கிறான்.

''சாரோட கட்சி சங்கிலிக்கு நியாயம் கிடைக்க போராடப் போறதா கேள்விப்பட்டேன்.''

''ஆமாம் தம்பி...இவருக்கு ஏற்பட்ட பாதிப்பை பேப்பர்ல படிச்சு தெரிஞ்சுகிட்டோம். கொதிச்சு போயிட்டோம். ஒரு அரசியல்வாதிதான் இந்த அநியா யத்துக்கு காரணம்னு தெரிய வரவும் கொதிப்பு இரண்டு மடங்காயிடிச்சு.

இந்த மதுரைமன்னன் மாதிரி ஆட்களாலதான் அரசியல்வாதிகளுக்கே கெட்ட பேர். அதை எங்களை மாதிரி அரசியல்வாதிகளாக வேடிக்கை பார்க்க முடியாது.

ஒரு அரசியல்வாதியால வந்த கஷ்டத்துக்கு இன் னொரு அரசியல்வாதி வந்து பரிகாரம் தேடித் தந்தா தான் எதிர்காலத்துல அரசியல்வாதி பேர்ல மக்களோட நம்பிக்கை நீடிக்கும்...''

—நல்லமணிப்பாண்டி மேடை கிடைத்துவிட்ட மாதிரி பேசும் பாவனை தெரிந்தது.

அகல்யா அதைக் கேட்டு சிரித்தாள்.

''ஆமா நீதானம்மா முதல்ல போலீசுக்கு போய் எஃப் ஐ ஆர் போடச் சொன்னது?''

''ஆமாங்க...''

''அந்த மதுரைமன்னன் கொழுப்பை கவனிச்சியா... ஒரு நல்ல எண்ணத்துல நீ சங்கிலிக்கு உதவி செஞ்சதை



கொச்சைப்படுத்தி சங்கிலிக்கும் உனக்கும் தொடர்பு இருக்கிறதா ஒரு வதந்தியை கிளப்பி விட்டிருக்காங்களே இவங்க நல்லா இருப்பாங்களா?''-நல்லமணிப் பாண்டிய னுடன் வந்த ஒருவன் விதரணையாக இந்த கேள்வியை கேட்கவும் அகல்யாவுக்கு சுருக்கென்றது.

''ஊர் முழுக்க இப்படி வதந்திய பரப்புவதே அவனுக்கு வழக்கமா போயிடிச்சு,இதுக்கெல்லாம் பயந்து நீ பின்வாங்கிடக் கூடாது...''- இது இன்னொருவன். மோகன்தாஸ் குறுக்கே நுழைந்தான்.

''நாம விஷயத்துக்கு வருவோம். உங்க அடுத்தக்கட்ட நடவடிக்கை என்ன? சங்கிலியை நீங்க பயன்படுத்திக் கறதைவிட சங்கிலிக்கு நீங்க பயன்பட்றது ரொம்ப முக்கியம்...''

''நல்லா சொன்னே தம்பி...நாடு தழுவின போராட்டம்தான் எங்க திட்டம். தலைவர் இன்னும் இரண்டு நாள்ள நம்ம சங்கிலியை பார்க்க வருவாரு.

அவர் வந்த பிறகு அடுத்த கட்ட நடவடிக்கை பத்தி தெளிவான முடிவுக்கு வந்துடுவோம்.'' அந்த மட்டில் அன்றைய பேச்சு முடிந்து போனது. எல்லோரும் விடை பெற்றுக் கொண்டார்கள்.

மோகன்தாஸும் அகல்யாவும் மட்டும் மிஞ்சித் தங்கினார்கள்.

எல்லோரும் போய்விட்ட பிறகு...

''தம்பி...இப்படி ஆளாளுக்கு என்னை வந்து பாக்கறது பேசறது என் முன்னால வானத்தை வில்லா வளைச்சுடலாம் கவலைப் படாதேங்கறது இது எதுவுமே எனக்குப் பிடிக்கலை தம்பி. நான் நிம்மதியா செருப்பு தைச்சுகிட்டு வாழ்ந்துகிட்டிருந்தேன். விதி என் பையனை

கொண்டுகிட்டு போயிடிச்சு என் வாழ்க்கையையும் அது விடாது போல தெரியுதே?''

சங்கிலியின் பேச்சை கேட்டு மோகன்தாஸ் உறுதி படவே பதில் தருகிறான்.

''சங்கிலி...எனக்கு இந்த விதி, நேரம் இதிலெல்லாம் நம்பிக்கை கிடையாது. எதையும் நாம தெளிவா உணர்ந்து செயல்படணும். அதுல நாம போடற துணிச்சலுக்கு ஏற்ப விளைவுகள் இருக்கும்.

சுண்டு விரல் நகம் அளவு கூட இல்லாத சிலந்திப் பூச்சி எத்தனை தடவை அதோட வலையை அறுத்து விட்டாலும் திரும்ப கட்டிடுது. அதுமட்டுமல்ல, அதோட வலைல எந்த ஒரு ஜீவன் வந்து சிக்கினாலும் அது விட்டறதில்லை.

அந்த சின்ன சிலந்தியை விடவா நாம மோசம்?

நாமளும் போராட்டத்தை கைவிடக்கூடாது.

அதேபோல நாம பின்னற வலைல மத்தவங்க பூச்சி மாதிரி விழுந்து நசுங்கி சாகணும்.

இந்தியா மாதிரி நாடுகள்ள நியாய தீபத்தை ஏத்தவே ரொம்ப பேர் பயப்பட்றாங்க. மீறி ஏத்தினாலும் ஏதாவது ஒரு பணக்காரன் அல்லது அநியாயக்காரன் அதை ஊதி ஊதி அணைச்சிடறாங்க.

''நம்ப விஷயத்துல இனி இதை விடக்கூடாது.''

''பேச நல்லா இருக்கு மோகன்தாஸ். சங்கிலிக்கு என்ன பெரிய பின்பலம் இருக்கு. இந்த மாதிரி போக்குல தெளிவா நடந்துக்க? குருவி தலைல பனங்காயை ஏத்தின மாதிரி காலம் இவர் தலைல இப்படி விளைவுகளை ஏத்தி வேடிக்கை பாக்கறதா நான் நினைக்கிறேன்.''

''ஏன் அகல்யா நாம இல்லை?''

''நம்மால எந்த அளவு உதவி செய்ய முடியும்?''



''மனசு வெச்சா எந்த அளவுக்கும் செய்ய முடியும்.''

''புரியும்படி சொல்லுங்களேன்.''

''சங்கிலிக்கு நான் செய்யற உதவி கூட பரஸ்பரம் ஒரு ஆணுக்கு இன்னொரு ஆண் செய்யற உதவிதான் ஆனா நீங்க செய்யறது அப்படி இல்லை.''

' வாஸ்தவம்தான். அதுக்கென்ன இப்போ.''

''அந்த உதவிகளை உரிமையோட செய்ங்க சங்கிலிக்கு படிப்பு சொல்லிக் கொடுங்க. அவருக்குள்ள அறிவுச் சுடரை ஏற்றிவைங்க.''

''கொஞ்சம் கால தாமதமானாலும் இது நடைமுறை சாத்யமே. ஆனா இதை என்னைவிட நீங்களே செய்ய லாமே. மத்த நல்லவங்க கூட செய்யலாமே?''

''அவங்களை விட நீங்க செய்யறதுல பல மடங்கு நன்மை இருக்கு.''

''எனக்கு புரியலை மோகன்தாஸ்.'' - சங்கிலியோ மோகன்தாஸும் அகல்யாவும் விவாதிப்பதையே ஆர்வ மாகப் பார்த்துக் கொண்டிருந்தான். மோகன்தாஸ் திடு மென்று அகல்யாவை தனியே அழைத்தான் இருவரும் வாசல்புறம் ஒதுங்கினார்கள். அங்கே எதிர் சுவரில் அகல்யாவையும் சங்கிலியையும் இணைத்து எழுதப் பட்டிருந்த வாசகங்கள் அவர்கள் கண்ணில் பட்டது.

''இப்படி வதந்தியை கிளப்பினது இருக்கட்டும். இதை உடனே வெள்ளையடித்து அழிக்கணும்னுகூட சங்கிலிக்கு தெரியலை பாத்தீங்களா?''

''அவர் என்ன செய்வாரு. பையன் போயிட்ட சோகம். உலகஅறிவு இல்லாத வறண்டநிலை. உயிரோட அவர் இருக்கறதே பெரிசு.''

''வாஸ்தவம்தான். சங்கிலி விஸ்வரூபம் எடுக்கணும். நாம எடுக்க வைக்கணும்.''

''எதையும் கொஞ்சம் விளக்கிச் சொல்லுங்க.''

''அகல்யா உங்க மனிதாபிமானம் அப்பழுக்கில்லாதது தெய்வீகமானது. அதனாலதான் ஒரு பஸ் ஸ்டாண்டில எல்லோரும் ஒதுங்கி வேடிக்கை பார்த்த சங்கிலியை உங்களால நெருங்கி நேசிக்க முடிஞ்சது. அதனால அந்த இணைப்பு வதந்தி அளவுக்கு வளரவும் செய்துருக்கு''

''சரி அதுக்கென்ன?''

'இப்ப நீங்களும் நானும் இந்த சங்கிலிக்கு செய்துருக்கற உதவி ஒரு பாதி கூட கிடையாது. இனிமேதான் நிறைய செய்தாகணும்.''

''ஆமா, அதுதான் உண்மையும்கூட.''

''அப்படின்னா இந்த வதந்தியை நீங்க ஏன் உண்மையாக்கி வதந்தியை கிளப்பினவங்க முகத்துல கரி பூசக் கூடாது?'' அதிர்ந்து போனாள் அகல்யா!

''மோகன்தாஸ் நீங்க என்ன சொல்றீங்க?''

''நல்லா யோசிச்சுதான் சொல்றேன். நீங்க என்னை நேசிக்கறது எனக்கு நல்லா தெரியும். நானும் உங்களை நேசிக்கறேன். இரண்டு பேரும் சேர்றதுல எந்த பெரிய மாற்றமும் இந்த சமூகத்துல ஏற்பட்டுடப் போறதில்லை.

வயசுப் பொண்ணு வயசுப்பையனுக்காகங்கறது ஊர் உலகம் அறிஞ்ச தெரிஞ்ச சேதிதானே?

நம்மைப்போல லட்சம் காதலர்களை இந்திய பூமியும் பார்த்திடுச்சு. ஆனா உங்களைப் போல ஒரு ஜோடி இந்தப் பூமிக்கு புதுசில்லையா?''



அகல்யா அதைக் கேட்டு ஸ்தம்பித்தாள். அவன் பேச்சை ஜீரணிக்க முடியாத திணறலில் கண்களில் கலக்கமும் வெறிப்பும் கலந்து மின்னியது.

''நீ சங்கிலியை கை பிடிக்கணும்னு நான் சொல்றதுக்கு வேறுபல காரணங்களும் உண்டு. சங்கிலி பேர்ல அரசியல் வாதிகளுக்கும் பப்ளிக்குக்கும் அனுதாபம்நிறைய இருக்கு. இந்த அனுதாபத்தை நீதி நியாயமா மாற்ற புத்திசாலித்தனம் வேணும்.

அது உன்கிட்ட இருக்கு. அவன் நல்லவன். ஆனா அரசியல்வாதிக்கும், நீதி மன்றத்துக்கும் ஈடு கொடுக்க முடியாதவன். நீ அவன்கூட சேர்ந்தா மத்த விஷயங்கள் சுலபமா முடிஞ்சிடும்.''

''ஏன் மோகன்தாஸ்...இதை நான் சங்கிலி மனைவியா இருந்துதான் செய்ய முடியுமா? அவரோட நண்பரா தோழியா அல்லது தங்கையால்லாம் இருந்து செய்ய முடியாதா?''

''நல்ல கேள்வி...நண்பரா தோழியா இருந்து செயல்பட்டா மதுரை மன்னன் மாதிரி அரசியல் வாதிகள் வதந்திகளா கிளப்பி விட்டுகிட்டே இருப்பாங்க. பத்து பேர்ல எட்டுபேர் அதை நம்பலைன்னாலும் இரண்டு பேர் நம்பறதும் நமக்கு நஷ்டம்தான்.

அடுத்து தங்கையா...

இந்த தங்கை ஸ்தானம் ரொம்ப குழப்பமானது.

நீ கல்யாணம் ஆகாத பொண்ணு. கல்யாணம் பண்ணிக்காம சங்கிலிக்கு உதவறதை யாருமே ஒத்துக்க மாட்டாங்க.

என்னப்பா உன் தங்கச்சிக்கு ஒரு நல்ல இடத்துல கல்யாணம் பண்ணி வைக்காம உன் வாழ்க்கைக்கே

அவளை இழுக்கறீயேன்னு சங்கிலியைதான் குத்தம் சொல்லுவாங்க. மீறி நீ கல்யாணம் பண்ணிகிட்டா உன் கணவன் இதுக்கு சம்மதிக்கணும்கற கட்டாயங்கள்ளாம் இருக்கு. உன் கணவன் சம்மதிச்சாலும் சங்கிலிக்கு நீ முழு நேர உதவியெல்லாம் செய்ய முடியாது. உன் குடும்பத்தையும் பாத்துக்கற பொறுப்பு உன்மேல ஏறுது.

நீ சங்கிலியோட மனைவியாகறதுதான் எல்லா விதத்துலையும் சரி. உண்மையான புரட்சித் திருமணம் அதுதான். சாதிமத பேதத்துக்கு எதிரான சரியான செயல் அதுதான். உங்க அஸ்திவாரமே பலமாயிட்ட பின்னால அதன்மேல அரசியல்ல நீங்க எழுப்ப நினைக்கற நல்ல விஷயங்கள்ளாம் அதன்பிறகு ரொம்ப சுலபமாயிடும். சொல்லுக்கும் செயலுக்கும் சம்பந்தமில்லாத அரசியல்வாதிகள்தானே இப்ப நாட்டுல அதிகம்?

நல்ல அரசியல்வாதிகள் கண்ணுக்கு தெரியாததால தான் தப்பானவங்கள்ள சுமாரானவங்களை நல்லவங்களா நம்பி மக்கள் பின்னாலபோய் கிட்டிருக்காங்க. பலமான அஸ்திவாரம் உள்ள நல்ல தலைவர்களே அவங்க வளர்ந்துவிட்ட நபர்களால பிரச்னைகளை சந்திக்கற காலமா இந்த காலம் இருக்கு.

காலம் அப்படிப்பட்ட காலம். அதுக்கு தகுந்த மாதிரி அழுத்தத் தோடயும் உண்மைகளோடையும் இறங்கினாதான் தாக்குப் பிடிக்க முடியும்." மோகன்தாஸின் நீண்ட பேச்சில் அசைக்க முடியாத உண்மைகள். அகல்யா யோசிக்கிறாள்.

நாளோ நட்சத்திரமோ ஏன் தன் தேகமோ உள்ள திரவியமோ எதுவுமே தனக்கு பயனில்லை மீறி அது பயன்பட்டாலும் பயன்படுத்திக் கொள்ளப் போவது வக்ரபுத்தி கொண்ட பாலக்காட்டு ராமசுப்ரமணியன் போன்ற சராசரிக்கும் கீழானவர்கள்தான்.



பாவி...

படுபாவி...

மகாபாவி என்கிற நிலையில் சுயமாய் அனுதாபப்பட்டுக் கொள்ளக் கூட இயலாத நிலையில் தன்னாலும் பெரிய பெரிய செயல்களுக்கு, துணைபோக முடியும் என்கிறானே இந்த மோகன்தாஸ்!

இவனல்லவோ மனிதன்!

சங்கிலிக்குதான் என்ன குறை...மனிதனாய் வகுத்த சாதியில்தானே அவன் இளப்பம். மற்றதில்? அவன் முன் நிற்க எவருக்கு துணிவுண்டு. அவனது மனைவிப் பாசம் தான் கண்டு நெகிழ்ந்த ஒன்றாயிற்றே...

இந்க சமூகத்தில் சாதியில் இளைத்தவன் ஒருபுறம் விரட்டப்பட்டால் நாள் நட்சத்திரம், அழகு, காசு, பணம் என்கிற விஷயத்தில் இளைத்தவர்களும் விரட்டப்படும் நிலை இருக்கிறதே...

இப்படி விரட்டப்படுகிறவர்கள் ஒன்று சேர்ந்தால் விரட்டுகிறவர்கள் கதி?

அகல்யா வீட்டு ஊஞ்சலில் அந்த பாலக்காட்டு ராமசுப்ரமண்யன் கிராப்புக்கு நடுவில் சாஸ்திரத்துக்கு துளி குடுமி நெற்றிப்பட்டையும் பஞ்சகச்சமும் பூணூலும் அவன் பரம வைதிகன் என்கிற மாதிரி காட்டிய போதிலும் கண்ணின் கழுகுத்தனம் மட்டும் சரியான மிருகம் என்கிற மாதிரித்தான் காட்டியது.

அறைக்குள் கதவுக்கு பின்னால் நிற்கும் அபிதகுஜம் அதைத்தான் கவனித்தாள்.

''இந்தப் பொண்ணு இவன்கிட்ட மாட்டிண்டுஎன்ன பாடுபடப் போறதோ?'' மனதிற்குள் முனங்கியவள் எதிரில் சிவராமன்.

''அத்தை...அவளை யாரைக் கேட்டு வெளிய அனுப்பினே என் மானத்தை அவ வாங்கினது போறாதா? இன்னும் வாங்கணுமா?''

''நா அனுப்பலை...அவளா போயிட்டா. இந்த வீடென்ன ஜெயிலா? இங்கேயே அவ அடைஞ்சு கிடக்க.''

''அவளுக்கு வக்காலத்தா? மாப்ள வந்து உக்காந்துண்டு இருக்கச்சே இப்ப நா போய் அவளை தேடினா நன்னா இருக்குமா?''

''ஆமா...பெரிய மாப்பிள்ளை. இப்பதான் இருபது வயசாறது. ரொம்ப உத்தமமான பிள்ளை. ஐம்பது வயசுல இன்னொரு பொண்டாட்டிக்காக வந்து உக்காந்துண்டிருக்கறவன் தான் மாப்பிள்ளையா?''

''என்ன பண்ணச் சொல்றே... அவ பொறந்த நாழி அப்படி?'

''அவளை நீதானே அந்த நேரத்துல பெத்தே. அப்ப பெத்துட்டு இப்ப அவ பேர்ல பழி போட்றது நன்னா இல்லை...''

''நான்தான் பெத்தேன். இப்ப நான்தானே அதை சரி பண்ணணும்.''

''இது சரி பண்றதாகாது சிவராமா. அப்ப நடந்த தப்பு பகவான் சித்தம். இப்ப நடக்கப் போறது உன் சித்தம். இதுக்கு நீ அவளை கிணத்துல தள்ளி கல்லை தூக்கி போட்டுடு...''

''இப்படி பேசற மாதிரியில்லாம் மனுஷன் நடந்துக்க முடிஞ்சா நாட்டுல யாரும் உசுரோட இருக்க முடியாது.



நானும் கல்யாணம் பண்ணி வைக்க முடியாது. தானும் பண்ணிக்க மாட்டா. நான் என்னதான் பண்ணட்டும்?''

''அவ பண்ணிண்டு வந்தா உனக்கு சம்மதமா?''

''தாராளமா... கல்யாணம்னு ஒண்ணு ஆகி அது இந்த ஊரை விட்டு போனா போதும். அந்த எம்.எல்.ஏ. பிடுங்கலை தாங்க முடியலை அத்தை...'' சிவராமன் இப்படிச் சலித்துக் கொண்ட நேரத்தில்தான் வாசலில் அந்த டாக்சி வந்து நின்றது.

உள்ளிருந்து மாலையும் கழுத்துமாக அகல்யா-சங்கிலி! பக்கத்தில் மோகனதாஸ்.

அதைப் பார்த்த சிவராமன் நெஞ்சைக் கையில் பிடித்துக் கொண்டார்.

அபிதகுஜமோ ஆடியே போய் விட்டாள்.

''என்னடி இது. வாழ வேண்டிய வயசுல...''-வாய் விட்டு புலம்பியபடி எதிரே வந்த அபிதகுஜத்துக்கு மோகன்தாஸ் பதில் தருகிறான். ''வாழ வேண்டிய வயசுலதான் பாட்டிம்மா இப்படித் தியாகம் பண்ண முடியும். இப்படி பண்ணினாதான் பல நீதி வாழும். பல நியாயம் வாழும். ஏழையினாலயும் வாழ முடியும்...''

''நீ சொல்றது ஒண்ணுமே புரியலையே.''

''பாட்டிம்மா...உங்க பேத்தி உடம்புக்கும் அதோட சுகத்துக்கும் பிள்ளை குட்டிகளுக்கும் ஆசைப்பட்டு கல்யாணம் பண்ணிக்கலை. அனாதரவா நிக்கற ஒரு நபருக்கு ஆதரவா மாறி கல்யாணம் பண்ணியிருக்காங்க. இதுவே பணக்காரங்களுக்கு மத்தியிலேயோ இல்லை பிரபலமான அரசியல் வாதிகளுக்கு மத்தியிலேயோ நடந்திருந்தா பெரிசா பேசப்பட்டிருக்கும். புரட்சி அது இதுன்னு வாழ்த்தப்பட்டிருக்கும். ஆனா சாதாரண

மனுஷங்களுக்கு நடுவுல நடந்துருக்கே. எவ்வளவு எதிர்ப்புகளை சந்திக்க போவுதோ?''

அவன் பேசுவதை பாலக்காட்டு ராமசுப்ரமண்யன் கூரமாக முகத்தை வைத்துக்கொண்டு கேட்க, சிவராமன் பேதலித்து நிற்க அபிதகுஜம் மட்டும் துளியும் தாமதிக்காமல் சுதாரித்து உள்ளே ஓடி குங்குமத்தை எடுத்து வந்து அகல்யாவின் நெற்றியில் இட்டு ஆசீர்வதித்தாள்.

''கல்யாணம்கறது நாம பார்த்து பண்ற விஷயம் கிடையாது அது பகவத் சங்கல்பம். யாருக்கு யார்ங்கறதெல்லாம் நம்ம கைல இல்லை. நம்ம கைல இல்லாத விஷயத்துக்கு நாம கவலைப்படக் கூடாது. நடக்கறது நாராயணன் செயல்னா அதை வாழ்த்தரதுதான் நமக்கு நல்லது.

என் பேத்தி அகல்யா தப்பான பாதைல போக மாட்டா. அவ பண்ணியிருக்கிறது செயற்கரிய செயல்.

தன்னோட சுக துக்கத்தை பாக்காம சமூக சிந்தனையோட அவ நடந்துண்டு இவருக்கு மாலை போட்டுருக்கா.

இந்த லோகத்துல தர்மத்தோட அச்சாணி உடையும் போதெல்லாம் இப்படியும் நல்ல நாலு விஷயம் நடக்கும் போல இருக்கு.

நன்னா இருங்கோ... நன்னா இருங்கோ...''-அபிதகுஜத்தின் வாழ்த்துக்கு முதல் நன்றியை மோகன்தாஸ் தான் கூறினான்.

''இந்த முற்போக்கான செயலுக்கு உங்க வாழ்த்து பெரிய போனஸ் பாட்டியம்மா'' - என்றான்.

''சாதி விட்டு சாதி மாறி கல்யாணம் பண்ணிக்கறது, ஓடிப் போய் தாலி கட்டிக்கறது, சாமி இல்லை பூதம் இல்லைங்கறது இதெல்லாம் முற்போக்கா பிற்போக்கா இதெல்லாம் எனக்கு தெரியாதுப்பா.



என் பேத்தி பண்ணியிருக்கறது ஒருமுற்போக்குதான். அவ செயல்ல தெளிவான எண்ணங்கள், நோக்கங்கள், அர்த்தங்கள், இருக்கு. அதனால அது முற்போக்கு. உடம்பாசை, பணத்தாசை இல்ல.

அதனால அது முற்போக்கு சங்கிலி ஒரு சின்ன நியாயத்துக்குக்கூட வக்கத்து போயிட்ட மனுஷனாயிட்டான். அவன் பலப்படணும்—பெரிய நியாயங்களே அவனுக்கு கிடைச்சாகணும். அதுக்கு நாம ஒத்தாசை பண்ணணும்னு நினைச்சு அதுக்காக அவ அவனோட சரிபாதியாவே ஆனது முற்போக்கு.

வாஸ்தவத்துல அகல்யாவோட செயலும் ஒரு தலம் தான்.

இவ என் கால்ல விழக்கூடாது. நான்தான் அவ கால்ல விழணும்.'' என்றபடி காலில் விழப்போன அபிதகுஜத்தை சிவராமன் ஓடி வந்து தடுத்தார். அவரும் வாழ்த்த ஆயத்தமானார்.

சிவராமன் முகத்தில் சற்று பெருமிதம்.

சங்கிலி அதைப் பார்த்து நெகிழ்ந்து போனான். ''நான் முடியவே முடியாதுன்னேன. என் செகப்பி இடத்துல இன்னொரு பொண்ணை வைக்க முடியாதுன்னு சாதிச்சேன். நீ என் தாய் மாதிரின்னு சொல்லி கை எடுத்து கும்பிட்டேன். இந்த மோகன்தாஸ் தம்பி தான் விடலை. என் மனசை மாத்திடிச்சு.

இந்த அலாதைக்குத் தான் இப்ப எத்தனை உறவு?'' நெகிழ்ந்த மோகன்தாஸை பார்த்து சிவராமன் கை தட்டினான்.

''பலே சங்கிலி...நல்லா சொன்னே யாருக்கு உறவுகள் தேவையோ அவங்களுக்கு உறவுகள் கிடைச்சிருக்கு. என் எண்ணம் ஈடே றிடுச்சு...உங்க இரண்டு பேர் இணைப்பு எத்தனை பேரை கலக்கப் போவது தெரியுமா?''

**மோ**கன்தாஸ் சொன்னது சத்யமான நிஜம். அகல்யா சங்கிலி இணைப்பை தமிழ்நாட்டின் சகல பத்திரிகைகளும் அதிசயச் செய்தியாக முதல் பக்கத்திலேயே போட்டு வாழ்த்தியிருந்தன.

சமூகத்தில் நல்ல மாற்றங்கள் வர வேண்டும் என்று விரும்பும் ஒவ்வொருவரும் வலிய வந்து வாழ்த்திக் கொண்டிருந்தார்கள்.

சில பத்திரிகைகள் கவர் ஸ்டோரியே வெளியிட்டதில் சங்கிலி தமிழ் நாட்டின் மிக முக்கிய பேசும் மனிதனாகி விட்டான்.

இதனால் எல்லாம் ஒடிந்து போன முதல் நபர் மதுரை மன்னன் தான்.

மூட்டைப் பூச்சியாக நினைத்து தரையோடு தரை யாக தேய்க்கலாம் என்று பார்த்தால் இப்படியா இந்த விஷயம் விஸ்வரூபம் கொள்ளும்?

மதுரை மன்னனுக்கு நெஞ்சைக் கரித்தது.

எந்த பத்திரிகையை திறந்தாலும் அகல்யா சங்கிலி ஜோடியின் படம்தான்! அவர்களுக்கான புகழ் மாலை தான்

ஒரு கட்டத்தில் அந்த செய்தியை படிக்கத் தொடங் கிய மதுரை மன்னனை தொலைபேசி அழைத்தது மறு முனையில் அவர் கட்சியின் தலைவர்.



''தப்ப பண்றது பெரிசில்ல. அதுல இருந்து தப்பிக்கிற சாமர்த்தியம் இருந்தா தப்பு பண்ணனும். இல்லாட்டி மூடிகிட்டு சும்மா இருக்கணும்.

சும்மா ரோட்டுலே உக்காந்து செருப்பு தைச்சுகிட்டு இருந்தவனை ஹீரோவாக்கி கட்சி பெயரையே கெடுத்துட்டியேய்யா...சி.எம் ரொம்ப ஃபீல் பண்றாரு தெரியுமா?

அடுத்த ஹோம் மினிஸ்டர் நீதான்னு நினைச்சுகிட்டி ருந்தேன். ஆனா உன்னை பதவி காலம் முடியற வரையில சட்டசபைக்கே வரக் கூடாதுன்னு சொல்லச் சொல்லிட் டாரு.

நான் விதியை நம்பற ஆள் கிடையாது.

ஆனா இப்ப நம்பறேன்.''

மறுமுனையில் கண்டிப்புடன் தொலைபேசி முடங்கிக் கொள்ள இங்கே மதுரை மன்னனுக்கு சட்டென்று நெஞ்சு வலிக்கத் தொடங்கியது.

ஏற்கனவே சாராயம், பிராந்தியால் தளர்ந்து போயிருந்த உடம்பு துளிகூட தாங்காமல் மாரடைப்பு மறியல் செய்தது.

உடம்புச் சதை முழுக்க குப்பென்ற வியர்வைப் பந்தல். மூச்சுக் குழலில் காற்று தொண்டையை மீறி உள்ளே போக மறுத்தது.

எவ்வளவோ பந்துக்களை, மறியல்களை அவர் செய்திருக்கிறார் அதை இந்த சமூகம் சமாளித்து விட்டது.

ஆனால் இந்த மாரடைப்பு மறியலை ஒரு வினாடி அவரால் தாங்க முடியவில்லை. எல்லாம் என் கையில்

என்கிற மம்மதைக்கு அந்த வினாடியில் ஞானம் கிட்டிய போதிலும் பலனில்லை.

உயிர்ப்புறா 'போதும்டா சாமி உன்கிட்ட நான் பட்டது' என்று மேலே எழும்பி பறக்கத் தொடங்கி விட்டது!

"மதுரை மன்னன் திடீர் மரணம்!"

'பத்திரிகைகளில் செய்தி கொட்டை எழுத்தில் மின்ன அரசியல் வட்டாரத்தில் ஒரு எதிர்பாராத அதிர்ச்சி.

ஆளும் கட்சி எம்.எல்.ஏ.வாயிற்றே மதுரை மன்னன்? மரணச் செய்தியோடு இடைத் தேர்தல் வரை ஒரு அலசலும் அன்றே ஆரம்பமாகி விட்டது.

எகிறிக் குதித்து மகிழாத குறையாக மகிழ்ச்சிக் கடலில் நீந்திக் கொண்டிருப்பதென்னவோ நல்ல மணிப் பாண்டியன் என்றும் ஆகிவிட்டது.

"நல்ல நேரத்துலதாண்டா போய் சேர்ந்தே...நாலு தடவை என்னை நீ தோற்கடிச்சே. இந்த தடவை இந்த சங்கிலியை முன் வெச்சு நான் மேல வரலே, என் பேர் நல்ல மணிப்பாண்டி இல்ல..." என்று சூள் கொட்டி சபதம் செய்த கையோடு அந்த கணமே தான் எம்.எல்.ஏ. ஆகிவிட்டது போல் தர்பார் பண்ணவும் தொடங்கி விட்டார்.

வந்தவர்களும் நல்லமணிப் பாண்டியை எம்.எல்.ஏ. என்று ஒப்புக் கொண்ட மாதிரியே நடக்கவும் ஆரம்பித்து விட்டனர்.

"அண்ணே சங்கிலிக்கு நாம சப்போர்ட் பண்ணனுதல தமிழ்நாடு முழுக்க நமக்கு நல்ல பேர் குறிப்பா நம்ம ஏரியாவுல கேக்கவே வேண்டாம்.



அண்ணே நீங்க படுத்துகிட்டேகூட ஜெயிக்கலாம்..." —என்று ஆளாளுக்கு ஏற்றிவிட நல்லமணிப் பாண்டியன் மீசையை நீவிவிட்டு சிரிக்கிறார்.

ஆனால் மோகன்தாஸ் மட்டும் வேறுவிதமாக சிந்தித் தான்!

"என்ன மோகன்தாஸ் சொல்றீங்க... என் வீட்டுக் காரர் எலெக்ஷன்ல நிக்கணுமா?" மோகன்தாஸ் தன் எண்ணத்தை சொன்னபோது விதிர்த்து நிமிர்ந்து இப்படி கேட்பது அகல்யாதான்.

"ஏன் அகல்யா ஆச்சரியப்படறீங்க. சங்கிலி எலெக்ஷன்ல நிக்க கூடாதா."

"என்ன மோகன்தாஸ் சொல்றீங்க. அரசியல் சாக்கடையில இவரால ஒருநாள் ஒருபொழுது கூட தாக்கு பிடிக்க முடியாதே..."

"ஏன் முடியாது? நீங்க மனசு வெச்சா முடியும். ஒரு அடாவடிப் பேர்வழி எம். எல். ஏ.வா வரலாம். ஒரு யோக்யன் வரக்கூடாதோ?"

"வரக் கூடாதுன்னு சொல்லலை. ஆனா அது முடியாதுன்னு சொல்றேன். எம்.எல்.ஏ. ஆறதுன்னா சும்மாவா?"

"வாஸ்தவம்தான். ஆனா சங்கிலியால முடியும். நல்லமணிப் பாண்டியன் கட்சிக்கு இப்போ சங்கிலிதான் முக்கியமான பலமே."

சங்கிலியை முன் வெச்சு நல்லமணி எம்.எல்.ஏ. ஆகறதுக்கு சங்கிலியே ஆகிட்டு போகட்டும்.

"இன்னிக்கு உங்க மேலதான் ஜனங்க பார்வை இருக்கு. நல்லமணிப் பாண்டியன் பேர்ல இல்லை..."

மோகன்தாஸின் கருத்துக்கு சங்கிலியிடம் இருந்தும் எதிர்ப்பு பலமாக வந்தது.

''தம்பி... போதும் தம்பி! எனக்கு அகல்யா மனைவியா கெடைச்சதே, நான் பிரதம மந்திரி ஆன மாதிரிதான். இதுல இந்த எம். எல். ஏ. எம். பி.ங்கறதெல்லாம் என்னை மாதிரி ஆளுங்களுக்கு கிடையாது. ஆளை விடுங்க...''

''சங்கிலி இப்படி சொல்லக்கூடாது நீங்க. வெந்ததை தின்னுட்டு வேளை வந்தா சாகற ஜென்மமா நீங்க இது நாள் வரை இருந்தது போதும். அதிகாரமும் அந்தஸ்தும் உங்களுக்கு இல்லாததுனால நீங்க பட்ட கஷ்டம் மறந்து போச்சா?''

எந்த போலீஸ்ஏறெடுத்து பார்க்கக்கூட மறந்துச்சோ அந்த போலீஸ் உங்க முன்ன கை கட்டணும். எந்த நியாயம் அரசியல்வாதிங்கற காரணத்துக்காக அந்த மதுரை மன்னன் கட்டளைக்கு சலாம் போட்டதோ அது உங்க கட்டளைக்கும் கட்டுப்பட்டு கௌரவமா வாழணும்.

இதெல்லாம் நடக்கணும்னா நீங்க எம்.எல் ஏ. ஆகணும். ஓட்டுப் போட மக்கள் தயாரா இருக்கும்போது உங்களுக்கு என்ன கவலை. நல்லது கெட்டதை எடுத்து சொல்ல நான் இருக்கேன். அகல்யா இருக்காங்க. யோசிக்காதீங்க சங்கிலி.

எந்த கட்சி உங்களை ஆதரிக்க முன் வந்ததோ அது கிட்ட எம்.எல.ஏ. சீட் கேளுங்கோ. இல்லேன்னா சுயேச்சையா நிப்பேன்னு சொல்லுங்க. நீங்க எம்.எல் ஏ· ஆகணும்கறதுக்காக மட்டும் நான் இதை சொல்லலை.

நல்லமணிப் பாண்டியனும் ஒரு சந்தர்ப்பவாதி. அவன் எம்.எல்.ஏ. ஆகக் கூடாதுன்னா நீங்க ஆகித்தான்



தீரணும். அதுக்காகவும் சொல்றேன்.'' மோகன்தாஸின் அர்த்தச் செறிவுள்ள 'பேச்சு இந்த முறையும் வென்றது. அரைமனதாக சங்கிலி தலையசைக்க அந்த சம்மதத்துடன் கட்சித் தலைவரை பார்க்க மோகன்தாஸ் கிளம்பி விட்டான்!

''தம்பி சொல்றதெல்லாம் சரியாத்தான் இருக்கு ஆனா நல்லமணி கட்சிக்கு ரொம்ப பாடுபட்டவர். நாலு முறை தோத்தவர். ஜெயிக்கற வாய்ப்பு அவருக்கு வந்திருக்கும் போது அதை அவருக்கு தர முடியாதுங்கறது எந்த வகைல சரி. தலைவரின் கேள்வி முன் அசமந்தமாக சிரிக்கிறான் மோகன்தாஸ்.

''நீங்க இப்படி சிரிச்சா எப்படி? என் கேள்விக்கு பதில் சொல்லுங்க.''

''நான் சொல்ல ஒண்ணுமில்ல தலைவரே. சங்கிலி எம் எல் ஏ. ஆகியே தீரணும் அவர் எம். எல் ஏ. ஆகறதன் மூலம் அவரது இனத்தோட தாழ்வு மனப் பான்மை உடையும். ஆனா நல்லமணி அப்படியில்லை. அவர் எம்.எல்.ஏ. ஆக ஆயிரம் வழி உண்டு.'

வழி இல்லைன்னா எம்.பி.க்கு நிறுத்தலாம் மாவட்ட தலைவர் ஆக்கலாம். நல்லமணியை பாராட்ட ஆயிரம் வழி உண்டு. ஆனா சங்கிலிக்கு ஒரு வழிதான் இருக்கு அது எம். எல். ஏ. ஆகறது மட்டும்தான்.'' மோகன்தாஸின் பேச்சைக் கேட்டு ஆழ்ந்த மௌனம் கொள்ளும் தலைவர் அவனை சற்று வெளியே உட்கார சொல்லிவிட்டு தன் சகவட்டத்துடன் ஆலோசனை செய்கிறார். அவர்கள் மோகன்தாஸ் கருத்துக்கு இசைவாகவே பேசுகின்றனர்.

''பேசாம சங்கிலியே வரட்டும். நல்லமணி ரொம்ப விவரமான ஆளு. பதவி தரேன்னா ஆளும் கட்சிக்கு

தாவினாலும் தாவிடுவான். சங்கிலி அப்படி இல்ல. தலைவர் பேச்சுக்கு மறுபேச்சு பேசமாட்டான்.''

''ஆமாம்...இந்த சந்தர்ப்பத்துல பாதிக்கப்பட்ட நபரே எலெக்ஷன்ல நிக்கறதுதான் நல்லது. செலவும் நமக்கு மிஞ்சும். நல்லமணிப் பாண்டியனை நான் சமாதானம் செய்யறேன். ஆளும் கட்சி சார்பா நின்னா அந்த மதுரை மன்னன் மகன் அன்புச்செல்வன்தான் நிப்பான். பேச்சும் அப்படிதான் அடிபடுது. காரை ஏத்திக் கொன்றவனுக்கு எதிரா பாதிக்கப்பட்டவனே நிக்கறது தான் நல்ல போராட்டத்தை உருவாக்கும். மக்கள்கிட்ட தாம பிரச்சாரம் பண்ணவும் வசதியா இருக்கும்...ஆனா ஒண்ணு. ஆளுங்கட்சி அன்புச்செல்வனைதான் நிறுத்து தான்னு பாப்போம். நம்ம கட்சி சார்புல நல்லமணிங் கற வதந்தியே நீடிக்கட்டும். கடைசி நிமிஷத்துல சங்கிலின்னு போட்டு உடைச்சு நாட்டையே ஒரு கலக்குகலக்குவோம்.'' கடைசி நபர் சொன்ன கருத்துதான் சரியான அரசியல் கருத்தாக ஏற்கப்பட்டது.

தலைவர் அதை மோகன்தாஸிடம் சொல்லி, சங்கிலியே நிற்க உறுதி சொன்னபோது மோகன்தாஸ் நெகிழ்ந்து போனான்.

அவன் எண்ணங்கள் ஒவ்வொன்றும் வென்று படி ஏறி வருவதில் அவனுக்கே பெருமிதம். இன்னும் எவ்வளவோ இருக்கிறதே?

ஊர் திரும்பி அகல்யாவிடம் அதை சொன்னபோது அகல்யா உச்சி குளிர்ந்து போனாள்.

''அகல்யா, சந்தோஷப்பட்றதைவிட பெரிய விஷயம் எலெக்ஷனை ஃபேஸ் பண்றது...சங்கிலியை கையெழுத்து போட மட்டுமல்ல, மேடையில் தங்கு தடையில்லாம



பேசவும் வைக்கணும்.''

மொதல்ல நீங்க எழுதிக்கொடுங்க பிறகு தானாவே பிக்கப் ஆயிடுவாப்பல...''

மோகன்தாஸின் கருத்துக்கு வேகமான செயல் அகல்யாவிடம். சங்கிலி அகல்யா எதிரே ஒரு மாணவன் ஆகிறான் அவள் டீச்சரம்மாவாகிறாள்.

தர்மயுத்தம் தனது ஆரம்பத்தை இந்த வடிவில் உருவகித்துக் கொள்கிறது.

மோகன்தாஸ் மற்ற வெளிப்பணிகளில் எல்லாம் இறங்கி பம்பரமாய் சுழல்கிறான்.

பத்திரிகைக்காரனாக இருப்பதால் சக பத்திரிகைகள் சங்கிலியை பிரதானப்படுத்தி கட்டுரைகளை எழுதிக் குவிக்க மறுமுனையில் அன்புச்செல்வன் மிகவும் பலவீனமான நிலையில்...

வேறு யாரை நிறுத்தினாலும் இதைவிட மோசமான நிலை அவர்களுக்கு...அன்புச் செல்வனுக்காவது மதுரை மன்னனின் மரண அனுதாபமும், பழைய வெற்றியின் பங்கும் துளி இருக்கிறது மற்றவர்களுக்கோ துளிகூட எதுவுமில்லை.

நல்லமணிப் பாண்டியனையும் கட்சி சமாதானம் செய்து விடுகிறது. இருந்தும் அவனுக்குள் பொறுமல்.

''நான்லாம் பரம்பரை அரசியல்வாதி. நான் பாக்க செருப்பு தைச்சு கிட்டிருந்தவனெல்லாம் இப்போ எம்.எல்.ஏ. ஆறதா என்னடா இது கொடுமை.'' என்று அவன் புலம்பாமல் இல்லை.

''அண்ணே ஜனநாயகம்னா இதுதானேண்ணே...?''

''பெரிய ஜனநாயகம். எதுக்கும் ஒரு தகுதி இருக்குடா...''

''அரசியல்வாதியாறதுக்கு நேர்மைதான் முதல் தேவை. அடுத்தது சகிப்புத்தன்மை. அதுக்கும் அடுத்து திறமை. இந்த மூன்றும் இருக்கறதாலதான் செருப்பு தைக்கற சங்கிலி எதிர் நீச்சல் போட்டு இவ்வளவு தூரத்துக்கு வந்திருக்கான்...''

''வக்காலத்து வாங்காதீங்கடா... இதே மாதிரி எதிர் நீச்சல் போட்டு ஒரு டாக்டராவோ, எஞ்ஜினியராவோ ஆக முடியுமா?''

''ஆகக்கூடி அரசியல்வாதிங்க எலெக்ஷன்ல நிக்க எதாச்சும் ஒரு தகுதி வேணும்னு சொல்றீங்க. அப்படித் தானே?''

''பின்ன... கட்சியில சீனியாரிட்டி இருக்கணும். ஒரு தடவையாவது ஜெயிலுக்கு போயிருக்கணும்...''

நல்ல மணிப்பாண்டியனின் சந்தர்ப்பவாதம் அவன் சகாக்களிடமே எடுபடவில்லை. அதனால் பெரிதாக பாதிப்பும் ஏற்பட்டுவிடவில்லை எலெக்ஷனில் சங்கிலி அமோக வாக்குகளில் வெற்றி பெற்று விட்டான்!

வெற்றிச் செய்தியை கேள்விப்பட்ட மறுவினாடியே சங்கிலி பார்க்க எண்ணியது கட்சித் தலைவரையோ, ஏதோ ஒரு கடவுளின் திருஉருவையோ அல்ல... அகல்யாவையும், மோகன்தாஸையும்தான்!

அகல்யா அருகிலேயே இருந்தாள்...

''மோகன்தாஸ் அழைத்து வரப்பட்டான்.

''தம்பி... உனக்கு நான் எப்படி நன்றி சொல்லுவேன். இந்த குப்பையையும் கோபுரமாக்கிட்டியே...''-கண்ணீருடன் மோகன்தாஸ் எதிரில் கை கூப்பினான் சங்கிலி.



''இதோ பார் சங்கிலி... உங்களுக்கு இந்த குப்பை கோபுரம் சிந்தனையெல்லாம் கூடாது. இந்த தாழ்வு மனப்பான்மையால நீங்க சிதைஞ்சு கிடந்தது போதும்.

இந்த பதவி உங்களுக்கு நியாயமா கிடைக்க வேண்டிய பதவி. உங்க மகன் குமரேசனோட இழப்பை யோசிச்சா இது கால்தூசு கூட பெறாது. இருந்தாலும் இது இப்போ உங்களுக்கு பெரிசுதான்.

இதை நல்லவிதமா கையாளுங்க. மதுரை மன்னன் மாதிரி தப்புக்கு துணை போகாம உங்களைப் போன்ற ஏழை ஜனங்களுக்கு நீதியும் நியாயமும் கிடைக்க பாடுபடுங்க.

சங்கிலி எம்.எல்.ஏ. மாதிரி சேவை செய்தவரு யாரும் இல்லைங்கற பேரை எடுக்கணும்.

குறிப்பா குமரேசனை கொன்னுட்டு அதிகாரத்துனால தப்பிக்க நினைச்ச அந்த அன்புச் செல்வனை சும்மா விடக்கூடாது.''

மோகன்தாஸின் பேச்சைச் கேட்டு அகல்யாவும் நெகிழ்ந்து போகிறாள்.

''ஆமாம் மோகன்தாஸ். எஃப்.ஐ ஆர். போடக்கூட இழுத்தடிச்ச போலீஸ் இப்ப என்ன செய்யுதுன்னு பார்த்துடறேன். ஏழை உயிர் ஒண்ணும் எள்ளுருண்டை இல்லைன்னு நிரூபிச்சு காட்றேன்.'' அகல்யாவின் சவால் முன் மார்பு நிமிர்த்துகிறான் மோகன்தாஸ்.

''சபாஷ் அகல்யா... ஏழை உயிர் எள்ளுருண்டை கிடையாது. இது ரொம்ப முக்கியம்.''-ஊக்கப்படுத்துகிறான்.

அன்புச் செல்வன் அரண்டு போய்விட்டிருந்தான். முதல் முறையாக ஜனநாயக நாட்டில் வாழ்வதன்

சிக்கலை உரண ஆரம்பித்திருப்பதால் உடம்பில்கூட நடுக்கம் ஏகமாய்...

அன்புச் செல்வனை அவனது சித்தப்பா வேதநாயகம் கடிந்துக் கொண்டிருந்தார்.

அவன் நகத்தை கடித்துக் கொண்டிருந்தான்.

"நேத்துவரை போலீசு சலாம் போட்டு வளைஞ்சு கொடுத்திச்சு. கோர்ட்டு படி ஏறணும் - அந்த சின்னப்பய மேல கார் ஏத்தி கொன்னதுக்கு கம்பி எண்ணணும். ஆளும் கட்சி ஆளா இருந்தாலும் நீ சல்லிக் காசு பெறாத வன்.

ஆளும் உன் கட்சிக்கும் இப்ப உண்மை தெரிஞ்சிருக்கும். உன்னை ஆதரிச்சு தன்னோட இமேஜை அது இனியும் கெடுத்துக்காது. இது எனக்கு நல்லா தெரிஞ்சதால சொல்றேன், பேசாம நீயே சரண்டராயிடு.

சித்திப்பா வேதநாயகத்தை அன்புச் செல்வன் இந்த முறை சற்று காட்டமாகவே பார்க்கிறான்.

"சித்தப்பா...உங்க அட்வைசுக்கு நன்றி. நான் எங்கப்பாவோட அச்சு அசலான வாரிசு. நான் எப்படிங்கறதை பாக்கத்தான் போறீங்க! எந்த ஜனநாயகம் எனக்கு எதிரா மாறிச்சோ, அதே ஜனநாயகத்தை எனக்கு சாதகமா மாத்திக்கவும் எனக்கு தெரியும்..."

அன்புச் செல்வனின் பேச்சால் வேதநாயகம் ஒரு வினாடி தடுமாறிப் போய்விட்டார் இவன் இனியாவது நெறிப்படுவான் என்று பேசப் போக, அது ஏட்டிக்கு போட்டியாக அல்லவா போய்விட்டது.

அது சரி, இவன் எப்படி இவனது சிக்கலிலிருந்து விடுபடப்போகிறான்?

ஆவலான ஆவல் அவரிடம்.



அடுத்த வாரம் கோர்ட்டில் வழக்கு!

அன்புச்செல்வன் நேரில் ஆஜராக வேண்டும். எப்படியும் இந்த முறை அவன் நழுவ முடியாது. தண்டனை உறுதி. சட்ட வல்லுநர்கள் எல்லாம் கூட அதையேதான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில், வழக்கை வாபஸ் வாங்கச் சொல்லி ஒரு தகவல் சங்கிலிக்கும்—சங்கிலியின் கட்சியிலேயே அன்புச்செல்வன் சேர்ந்து விட்ட தகவல் பத்திரிகைக்கும் போய்க் கொண்டிருந்தது!

"என்ன சார் இது அநியாயம். நேத்துவரை மேடைல கன்னா பின்னான்னு பேசிட்டு இன்னிக்கு கட்சி மாற இவனுக்கு எப்படி மனசு வந்தது."

கட்சிக்குள்ளேயே சிலர் கேட்ட கேள்விக்கு தலைவரிடம் அசமந்தமான சிரிப்பு கூடவே அழுத்தமான பதில்.

"அரசியல்ங்கறது வெறும் பழி உணர்ச்சிகளால ஆனதல்ல. அதுல சாணக்யத்தனம் மிகுதியும் இருக்கணும். ஒரு ஆளுங்கட்சி பிரமுகர் நம்ம கட்சியை மதிச்சு உறுப்பினராக நினைக்கறது, ஒரு நல்ல மாற்றம். நம்ம கட்சிக்கும் அது வளர்ச்சி.

நண்பர் அன்புச்செல்வன் தன் தவறுக்கு வருந்தி என்கிட்ட மன்னிப்புக் கேட்டார். எனக்கு இளகின மனசு சரின்னுட்டேன்..."

"சார் அவர் சங்கிலியோட மகனை கார் ஓட்டி கொன்னவர்."

"இதுக்கு என்ன ஆதாரம் இருக்கு? வழக்கும் கோர்ட்டுல இருக்கு. நமக்கும் முடிவு தெரியாது. நாம

எப்படி இதுபற்றி பேசலாம். அவர் கொலை செய்திருக்க மாட்டார்ங்கறதுதான் என் நம்பிக்கை...''

''நீங்களே இடைத்தேர்தல்லஅவரை கொலையாளின்னுதானே சொன்னீங்க?''

''சொன்னேன்...இல்லேன்னு சொல்லலை. அப்ப எனக்கு கிடைச்ச தகவல்கள் அப்படி. இப்பதான் அன்புச் செல்வன் உண்மையை சொன்னார். இப்படி பழசை நாம கிளறிகிட்டே போனா இந்த நாட்டுல அரசியல் பண்ணவே முடியாது. நடந்தது நடந்ததா இருக்கட்டும்னு விட்டுடணும்.''

''சங்கிலி இதுக்கு ஒத்துக்குவாரா சார்...?''

''ஏன் ஒத்துக்க மாட்டார்...அவர் இப்ப ஒரு எம்.எல்.ஏ. அவரோட மகன் மரணம் அவரை இந்த அளவுக்கு ஆளாக்கியிருக்கு. இதுபோதும் அவருக்கு.

எதிரியை பழிவாங்கற புத்தி அவருக்கு இருக்காதுன்னு நான் நினைக்கிறேன்.''

''ஜனங்க இதையெல்லாம் கண்டிக்க மாட்டாங்களா? இப்படியெல்லாம் பேசினா என்ன நினைப்பாங்க?''

''ஒண்ணும் நினைக்க மாட்டாங்க...''— என்ற தலைவர் 'ஜனங்களோட மறதி பத்தி உனக்கு என்னய்யா தெரியும்?' என்கிற மாதிரி சிரித்தார்...

எல்லோரையும் ஒருவழியாக சமாளித்துக் கொண்டு வெளியே வந்தவர் எதிரே மோகன்தாஸ்!

''வாங்க தம்பி...''

''நான் வர்றது இருக்கட்டும் இதென்ன கூத்து?''

''எது?''

''அன்புச்செல்வன் விஷயம்னு சொல்லணுமா?''



''தம்பிக்கு வயசென்ன?''

''நான் அன்புச்செல்வன் பத்தி கேட்டா நீங்க வயசை பத்தி கேக்கறீங்களே...''

''ஆமா தம்பி...சில விஷயங்களை புரிஞ்சுக்க வயசும் வேணும். அதான் கேட்டேன்.''

''விஷயங்களையா? துரோகங்களையா?''

''அரசியல்ல துரோகங்கற வார்த்தையே கிடையாது. அது தெரியுமா உங்களுக்கு?''

''அப்ப முதுகுல குத்தறதுக்கு பேர்தான் அரசியலா?''

''எதுக்கு இந்த முதுகுல குத்தறது, துரோகம்கற வார்த்தையெல்லாம்? அன்புச்செல்வன் குற்றவாளின்னே வெச்சுப்போம். அவனை தண்டிச்சு திருத்தறது பெரிசா அரவணைச்சு திருத்தறது பெரிசா?

உங்களுக்கு ஒண்ணு தெரியுமா தண்டிக்கறதை விட மன்னிக்கறதுதான் பெரிய தண்டனை...''

''அரசியல் கட்சி தலைவர்கள் அவ்வப்போது ஆன்மீக மகானாகவும் ஆக வேண்டியிருக்கும் போல இருக்கே''

''நாலும் தெரிஞ்சாதான் அவன் தலைவன். பிராக்டிகலா பேசுவோம். எதிரியா இருந்த அன்புச் செல்வன் இப்ப நண்பனா மாறியிருக்கான். இவனை எதிரியாவே விட்டு வெச்சு சமாளிச்சு கிட்டுருக்கறது நல்லதா இல்லை நண்பனாக்கி பக்கத்துல வெச்சு கவனமா பாத்துக்கறது நல்லதா?''

''அவன் ஒண்ணும் நண்பனா உங்ககிட்ட வரலை. தண்டனையில இருந்து தப்பிக்கறதுக்காக நண்பன் மாதிரி வேஷம் போட்டு வந்துருக்கான். நாளைக்கே

இதே போக்குல இன்னொரு கட்சிக்கு போகமாட்டாங்கறதுக்கும் உத்தரவாதம் கிடையாது.''

''அரசியல் தலைவர்களும் சரி, மக்களும் சரி எந்த விஷயத்துலயும் ஒரு தடவைதான் மன்னிப்பாங்க. கட்சி மாறுவது அவன் தொழிலானா அப்ப அவனை எப்படி சந்திக்கறதுங்கறது எனக்கும் நல்லாவே தெரியும்.''

''இப்ப தப்பா சந்திச்சுட்டு, அப்புறமா சந்திக்கப் போறதைப் பத்தி இப்ப என்ன பேச்சு?''

''என் அனுபவத்துல நான் தப்பெல்லாம் பண்ணை தில்ல. உங்களுக்கு இள ரத்தம். அதான் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முடியாம பேசறீங்க.''

''முடிவா என்ன சொல்றீங்க?''

''உணர்ச்சி வசப்படாதீங்க. வாழ்க்கையிலயும் அரசியல்லையும் முன்னுக்கு வரப் பாருங்க.''

''அரசியலை சாக்கடைங்கறது சரியாத்தான் இருக்கு.

''சுத்தமான நல்ல தண்ணியா இருக்கறது சுலபம். ஆனா அழுக்குகளைத் தாங்கி அரூபமாகி சாக்கடையா இருக்கறது எவ்வளவு கஷ்டம் தெரியுமா?

ஒரு வகையில சாக்கடை தியாகத்தின் ரூபம்,'' மோகன்தாஸுக்கு அதுக்குமேல் அங்கு நின்று அவருடன் பேசப் பிடிக்கவில்லை. வேண்டா வெறுப்பாக அவரைப் பார்த்தான்.

''என்னை நீங்க எதையாவது பேசி சமாளிக்கலாம். ஆனா சங்கிலிகிட்ட அது நடக்காது. கொதிச்சு கிடக்கறாரு. எங்கே அவர் இந்த பதவியும் வேண்டாம் ஒண்ணும் வேண்டாம்னு நினைச்சுடுவாரோன்னு பயமா இருக்கு...''



''அவர் அப்படி செய்ய மாட்டார். இந்த எம்.எல் ஏ. பதவி அவர் வரையில வாராது வந்த மாமணி. நீங்கள் லாம் அவரை ஏந்திப் பிடிச்சு நான் வந்து வாங்கித் தந்தது. சாதாரண இந்த விஷயத்துக்கெல்லாம் ராஜினாமான்னா அப்புறம் யாரும் பதவியிலேயே இருக்க முடியாது. அவர் அப்படி ஒரு முடிவுக்கு வந்துடாம பாத்துக்கற பெரிய பொறுப்பும் உங்களுக்கு இருக்கு.''

''ச்சே...'' சலிப்போடு வெளியேறினான் மோகன் தாஸ்.

சோகத்தின் சொரூபமாகத் தென்பட்டான் சங்கிலி

இந்த அரசியலுக்குதான் எத்தனை வர்ணங்கள்? கள்ளமில்லாத அவன் மனதில் அதன் உத்தேசத்தில் குமுறல். அருகே ஆறுதல் சொல்ல முடியாத நிலையில் அகல்யா.

''ஒரே குத்தா குத்திட்டு ஜெயிலுக்குப் போயிடட்டுமா?'' சங்கிலியின் கேள்வி முன் சிரிக்கிறாள் அகல்யா.

''அதுக்கா உங்களுக்கு மக்கள் ஓட்டுப் போட்டாங்க?'' எதிர்க்கேள்வி அவளிடம்.

''என்னால ஜீரணிக்க முடியலையே தாயி...''

''ஜீரணிக்கணும். உங்க கஷ்டம் கறதுக்காக இப்படிச் சொல்லலை. அப்பாவிப் பொது ஜனங்கள் மேல இந்த மாதிரி கஷ்டம் எவ்வளவு இருக்கும். அதையெல்லாம் யோசிச்சு பாருங்க...''

''நடக்கறது எதுவும் நல்லதுக்கா தெரியலை. இந்த சாக்கடையில எந்த நியாயத்துக்கு போராடறது? சொந்த மகன் விஷயத்துலயே கோட்டை விட்டுட்டு நீ ஊரோட பிரச்சனைக்கு வந்துட்டியான்னு காறித் துப்பு வாங்களே...''

''வாஸ்தவம்தான். அதுக்காக அந்த அன்புச் செல்வனை குத்திட்டு ஜெயிலுக்குப் போறது சரியா யிடுமா? அது அப்பட்டமான பழி உணர்வு.''

''நீ என்ன சொல்றே... நம் கட்சியில சேர்ந்துட்ட அவனை திருத்தச் சொல்றியா... நாய் வாலை நிமிர்த்த முடியுமா?''

''யாருங்க திருத்தச் சொன்னா? நாய் திரும்பவும் குரைச்சு யாரையும் கடிக்காம பார்த்துக்கச் சொல் றேன்...''

''ஹூம் இதானா நம்ப வேலை...'' இதுக்குதானா எனக்கு லட்சத்து நாப்பதாயிரத்து நானூத்தி பதினாலு ஓட்டு?''

''இதுக்கும் சேர்த்துன்னு நினைங்க...''

இந்த வேளை பார்த்து மோகன்தாஸ் அங்கு வர, அவனை இருவரும் ஆவலாகப் பார்க்கின்றனர். அகல்யா கேட்கிறாள்.

''தலைவர் என்ன சொன்னார்...?''

''உபன்யாசம் பண்ணினார்.''

''அப்படின்னா?''

''எதிரியை மன்னிக்கறதே பெரிய தண்டனையாம். தத்துவம் சொல்லி அனுப்பியிருக்கார்.''

''அது சரிதான். ஆனா அது எப்போ, எந்த சந்தர்ப் பத்துலன்னு இருக்குல்ல...?''

''அகல்யா... இப்படியெல்லாம் பேசறதுனால, கேள்வி கேக்றதுனால பிரயோஜனமில்ல. பழம்பெரும் அரசியல்வாதிகளே இந்த அரசியல்ல மூச்சுத் திணறிக் கிட்டு இருக்காங்க.''



''பேசாம இந்த கட்சியே வேண்டாம்னு சுயேச்சை ஆயிடுவோம் தம்பி.''

''ராஜினாமா பண்றது... கட்சியை விட்டு விலகறது. அன்புச் செல்வனை கொல்றது எல்லாமே தப்பு முடிவுகள். தீச்சட்டி சுடத்தான் செய்யும். வேப்பிலையை அண்டக் கொடுத்து தாங்கிக்கிற மாதிரி ஏதாவது செய்து தாங்கி யாகணும். வழக்கு கோர்ட்டுல இருக்கு. வாபஸ் வாங்காம அங்க வெச்சு அன்புச்செல்வனை உண்டு இல்லை பண்ணணும்.''

மோகன்தாஸின் பேச்சு சங்கிலியை ஒருவழியாக கட்டிப் போட்டு விட்டது. மோகன்தாஸுக்கு அவனைப் பார்க்க பரிதாபமாக இருந்தது.

எங்கும் அவனால் முடிவெடுக்க முடியவில்லை.

மற்றவர்கள் முடிவே அவன் முடிவாகிறது.

எல்லா கட்டத்திலும் இவனை கட்டிப் போடுவதே மோகன்தாஸுக்கும் வேலையாகி விட்டது.

சகிப்பதென்பது வாழ்வின் அத்யாவசியமாகி விட் டது. எதை எதை சகிப்பது என்கிற விவஸ்தையும் இல்லா மல் போய் விட்டது.

மோகன்தாஸ் குமுறினான். பாக்கெட்டை வருடிய போது பஜாரில் வாங்கிய பேனா கத்தி 'இருக்கிறேன்' என்று சொன்னது.

'சும்மா கிடந்த சங்கிலியை அரசியலுக்கு இழுத்து, இப்படி அவஸ்தைப்பட விட்டதற்கு ஏதாவது பரிகாரம் செய்ய வேண்டுமென்றால் ஓசைப்படாமல் அன்புச் செல்வனை தீர்த்துக் கட்டி விடுவதுதான் சரியான வழி. கொள்கையே இல்லாமல் நினைத்த மாதிரியெல்லாம் போனால் இப்படித்தான் சாக வேண்டி வரும் என்பதும் மற்றவர்களுக்குப் பாடமாகி விடும்.'

நினைவின் மூட்டத்தோடு ஒரு உறுதியான முடிவோடு கையில் கத்தியோடு கிளம்பினவன் எதிரே தலைதெறிக்க ஒருவன் ஓடி வந்தான்.

''சார் சார்... அன்புச் செல்வன் மேல அவங்க சித்தப்பா வேதநாயகம் காரை ஏத்தி கொன்னுட்டார். போலீஸ்லையும் போய் சரண்டர் ஆயிட்டார்!''

மோகன்தாஸ் ஸ்தம்பிக்கிறான். அவன் கைப் பிடியிலிருந்து அந்த கத்தி நழுவி கீழே விழுகிறது. ஒரு அசிங்கமான மனிதனை குத்தி கறைபட இருந்த நிலையிலிருந்து மீண்டுவிட்ட மகிழ்ச்சி அதனிடம்.

குதூகலமாக விழுந்த வேகத்தில் அந்த இடத்தில் 'டண டண டண...' என்ற சப்தமிட்டு இடவலமாக ஆடுகிறது... அது!

முற்றும்

# ஜீவா என் ஜீவா

மனிதன் இறப்பதைப் போல் மீண்டும் பிறப்பதும் கர்ம விதிப்படி தவிர்க்க முடியாத ஒன்று! வாழும் நாளில் அவனுள் ஏற்படும் தாக்கங்களில் இருந்து அவன் விடுபட்டு விட்டதாக நினைப்பது கற்பனை. அவனையும் அறியாமல் அவனது மூளைச் செல்களில் அவை பதிந்து விடுகின்றன அந்த செல்கள் உடல் இறந்தாலும் ஆன்மாவோடு எண்ண அலைகளாகச் சேர்ந்தே அலைகின்றன. ஆன்மா எந்த கருப்பையில் தங்குகிறதோ அங்கு தங்கி உரிய வேளையில் நினைக்கப்படுகிறது.

—ஒரு உபநிஷதக் கருத்து

## 1

உற்சாகமாகத் தென்பட்டாள் உமா.

சல்வார் கம்மீசில் ஒரு தேவதையின் சொரூபம் காட்டியபடி சூட்கேஸில் ஆடைகளை எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள்!

''டூர் எத்தனை நாளைக்கு?'' — ஒரு ஆடையை மடித்துத் தந்தபடி கேள்வியோடு உமாவை ஏறிட்டாள் அவள் அம்மா விசாலம்.

''ஒரு வாரம்மா. காலேஜ்ல பிரமாதமா அரேன்ஞ் பண்ணியிருக்காங்க. கொடைக்கானல், ஊட்டின்னு

வழக்கமான இடங்களுக்கே போகாம இந்த தடவை எஜிப்டிவா திட்டம் போட்டுருக்கோம்.

ஹிஸ்டரி ஸ்டூடண்ட்ஸ் மகாபலிபுரம், பேலூர், சித்தன்னவாசல்னு சுத்துவாங்க. பாடனி ஸ்டூடண்ட்ஸ் கொல்லிமலை, ஜவ்வாதுமலைன்னு சுத்தப் போறாங்க. அவங்கவங்க படிப்புக்கு ஏற்ற மாதிரியான டூர்.

இந்த டூர்ல இன்னொரு விசேஷம் என்னன்னா...?''

உமா கேள்வியோடு ஒரு சுடிதாரை சுருட்டிய சமயம், அறைக்குள் நுழைந்திருந்தான் அவினாஷ்.

''என்ன விசேஷம்...? எல்லாரும் பஸ், ரயில்னு ஏறிப் போகாம நடந்தே பாதசாரிகளா ஊர் ஊரா சுத்தப் போறீங்களா?''

கிண்டலாகக் கேட்டான்.

'சும்மா இரு அண்ணே...எவ்வளவு பிளான் பண்ணி திட்டம் போட்டுருக்கோம் தெரியுமா? நீ சொன்ன மாதிரி நடந்தே ஒரு ஊருக்குப் போகற திட்டமும் இருக்கு...''

''நிஜமாவா, எந்த ஊரும்மா அது?''—ஆவலாகக் கேட்டபடி பேண்ட்லிருந்து லுங்கிக்கு மாறத் தொடங்கினான் அவினாஷ்.

''வேலமங்கலம்!'' பட்டென்று பதில் வந்தது உமாவிடமிருந்து. உடனேயே அவினாஷ் முகம் வெளிறியது.

''வேலமங்கலத்துக்கா?'' நறுக்கலாகக் கேட்டான்.

''ஆமாண்ணா... அங்க இருக்கற செண்பக தேவி கோவில் ரொம்ப பூர்வீகமான கோயிலாமே'' கேட்டுக் கொண்டே அவினாஷிடம் ஊன்றினாள் உமா. அவன் முகத்தில் சிலப்பாடத் தொடங்கியிருந்தது.

''ஏண்ணே...அந்த ஊர் பேர் சொன்ன உடனே ஒரு மாதிரியாயிட்டே...?'' தூக்கலாகக் கேட்டாள்.



''ஒண்ணுமில்லம்மா... வேலமங்கலம் செண்பக தேவி கோயில் இப்ப ரொம்ப பழுதடைஞ்சு போச்சு. அங்க கள்ளச் சாராயம், விபசாரமெல்லாம் நடக்கறதா எங்க பத்திரிகைக்கே நிறைய தகவல் வந்ததுண்டு.

அதோட முரட்டு மலைப்பாதையில அந்த கோயிலுக்கு போகணும். பாதையெல்லாம் தூர்ந்து போயிருப்பதனால யாருமே இப்ப அங்க போறதில்ல.

குறிப்பா பெண்கள் அந்தப் பக்கம் போனா உயிரோட திரும்பறதேயில்லைன்னு சொல்றாங்க

ஆதாரபூர்வமா எவ்வளவோ தகவல்கள். அதான் யோசிக்கறேன்...'

ஒரு பிரபல பத்திரிகையின் துணை ஆசிரியனாகவும் உலக விஷயங்களை விரல் நுனியில் வைத்திருப்பவர்களில் ஒருவனாகவும் உள்ள அவினாஷின் கருத்தை உமாவால் சாதாரணமானதாகக் கருத முடியவில்லை, அவளுக்குள்ளும் கவலை வந்து பந்தல் போட்டது. உடனேயே அது பிரிந்தும் போனது.

''அண்ணே...நான் என்ன தனியாவா போறேன். என் கூட பத்துப் பதினஞ்சு பேர் வரப் போறாங்க. அதில பாதிக்கு மேல பாய்ஸ்...'' சுதாரித்தாள் உமா, உடனேயே விசாலம் சிலிர்ப்பிக் கொண்டு இடைமறித்தாள்.

''அப்படி என்னடி அந்த ஊருக்குப் போய் சாதிக்கப் போறீங்க? டூராம் டூர். எங்கேயும் நான் அனுப்ப மாட்டேன். இந்தமாதிரி ஆபத்தான இடத்துக்கு ஒரு கன்னிப் பொண்ணு போக வேண்டிய அவசியமில்ல...உன் மாமன் மகன் ராகல் டெல்லியில இருந்து வரப்போறான். உன் முறைப் பையன் அவன். அவன்கூட சேர்ந்து நீ எங்க வேணும்னா போய் வா. இப்படிக் கஷ்டமான டூரெல்லாம் வேண்டாம்.

உமா உடனேயே அதைக் கேட்டு முகத்தைக் கடூர மாக்கிக் கொண்டாள்.

அதுவரை படு உற்சாகமாக ஊருக்குப் போகும் சந்தோஷத்தோடு மனசுக்குள் ஜ்வலித்த மத்தாப்பு, மழை பெய்து நமுத்த மாதிரி சுணங்கிப் போனது.

''அண்ணே...ஏண்ணே அம்மாவை வெச்சுகிட்டு இப்படி எதையாவது சொல்றே. இப்ப பத்தியா அம்மா விட்டத்துக்கு ஏறிட்டாங்க...? வேலமங்கலம் டூர் எங்க வரையில ஒரு அட்வென்சர் ட்ரிப்.பாதுகாப்பா போய்ட்டு திரும்பிடுவோம். நீங்க யாரும் கவலைப்படத தேவை யில்லை.

நாங்க ஒன்னும் பாப்பா இல்லை. உமா தீர்க்க மாகப் பேசியபடி சூட்கேசை மூடினாள். விசாலம் கவலை யோடு அவினாஷைப் பார்த்தாள்.

அவினாஷ் எதுவும் பேசாமல் தாடையை தடவினான். பின் ஒரு முடிவோடு வாய் திறந்தான்.

''ஓகே உமா...உன் வேகத்தை நான் தடை செய்ய விரும்பலை. பட் பீ கேர்ஃபுல். பகல்ல பத்து மணிக்கு மேலதான் நீங்க அந்த கோயில் இருக்கற மலை மேல ஏறணும். சாயங்காலம் அஞ்சு மணிக்கெல்லாம் திரும்பிட ணும். குரூப்பாதான் எங்கேயும் போகணும். யாராவது வம்புக்கு வந்தா பதிலுக்கு முறைச்சுக்காம உடனேயே திரும்பிடணும்.

வேலமங்கலம் கிராமம் நல்ல வளமான கிராமம். அந்த கிராமத்துல எங்க பத்திரிகையோட வட்டார நிருபர் ஒருவர் இருக்கார். ஏதாவது அவசியம்னா அவர் உதவியைக்கூட நீங்க பயன்படுத்திக்கலாம்.

அவர் பேர் கணேசன். இதோ அவரோட அட்ரஸ்.''



கட்டளையாகப் பேசியபடி கணேசனின் முகவரியை ஒரு துண்டு சீட்டில் எழுதி உமா எதிரில் நீட்டினான் அவினாஷ்.

வாங்கி தன் டம்பப் பைக்குள் வைத்துக் கொண்ட வளை விசாலம் கவலையோடு பார்த்தாள்.

''உன்னை ஒரு ஆம்பளை மாதிரியே வளர்த்துட் டேண்டி. பயமே இல்லாம போச்சு உனக்கு...'' என்று தனது கருத்தஉதட்டை சுழித்து அசைத்து பெருமூச்சோடு பேசினாள்.

உமா மெல்லிய புன்னகையோடு கைக் கடிகாரத்தைப் பார்த்தாள்.

வேன் வரவேண்டிய நேரம்!

''என்னம்மா எப்ப கிளம்பப் போறே?—அவினாஷ் தான் கேட்டான்.

''கிளம்பிக்கிட்டே இருக்கேண்ணே... மொத்தமா நாலு மாருதி வேன்ல போறோம். வீட்டுக்கே வந்து பிக்கப் பண்ணிக்கறதா சொன்னாங்க. வர்ற நேரமா யிடுச்சு. அதான் எதிர்பார்த்துகிட்டிருக்கேன்'' என்றாள்.

''ஆமா...ராகவ் வந்தா என்ன சொல்லட்டும்?'

''டூர் போயிருக்கறதா சொல்லு...''

''அவன் ரொம்ப ஃபீல் பண்ணுவான். நான் டெல்லி யில இருந்து வரும்போதுதானா இவ டூர் போக ணும்னு...''

''அதுக்கு நான் என்ன பண்ணட்டும். இவன் நான் டூர் போகும்போது ஏன் வரணும், அப்புறம் வரலாமே?''

''உமா. அவன் உன் வருங்கால புருஷன். அவன் இவன்னு மரியாதை இல்லாம பேசாதே...''

''அவன் என் மாமா மகன். அவ்வளவுதான். மத்த விஷயங்களைப் பத்தி நான் யோசிக்கவே இல்லை. ஆகையால் இப்போதைக்கு ராகவ் என் வரையில 'அவன் இவன்' தான்!''

உமா என்னும் கொன்னும் வெடிக்க பேசியது கேட்டு விசாலம் அதிர்ந்து போனாள். அவினாஷை சோகமாகப் பார்த்தாள் அவினாஷ் அர்த்தபுஷ்டியோடு சிரித்துக் கொண்டான்.

''என்னடா சிரிக்கறே...உனக்குக் கொஞ்சமாவது பொறுப்பு இருக்கா? ராகவ் எவ்வளவு பெரியவன்! அவன் உத்யோகமென்ன, சம்பாத்யமென்ன? அவனை இவ இவ்வளவு துச்சமா பேசறாளே... நாளைக்கு அவன் பெண்டாட்டியான பின்ன இப்படி பேசினா எங்கண்ணனும் அண்ணியும் நம்பளை பத்தி, என்னடா நினைப்பாங்க?''

பிலுபிலு என்று அவினாஷை பிடிக்க தொடங்கினாள் விசாலம். உமா லட்சியமே செய்யவில்லை. அவினாஷ் சற்று எரிச்சலுடன் பதில் சொன்னான்.

''அம்மா...

நீங்க ரொம்ப அலட்டிக்கிறீங்க. இந்தக் காலத்து பெண்ணை கொஞ்சம் விட்டுத்தான் பிடிக்கணும். உங்க காலத்து பெண்கள் மாதிரி பூம்பூம் மாடா எடுத்ததுக்கெல்லாம தலையாட்மாட்டாங்க'' என்றான்.

அதே சமயம் வாசலில் ஹாரன் சப்தம் கேட்டது. அதைத்தொடர்ந்து கோரஸாக கைதட்டலுடன் கோஷ்டி அதனுள் அட்டகாசம் செய்து கொண்டிருப்பதும் கேட்டது

''அண்ணே வேன் வந்திடிச்சு. நான் கிளம்பட்டுமா?'' சூட்கேஸை கைகளில் தூக்கியபடி பரபரப்பானாள் உமா. விசாலம் வெளியே எட்டிப் பார்த்தாள்.



ஊதா நிறத்தில் ஒரு மாருதி வேன். அதன் தலைமேல் கட்டுக் கட்டாய் சாமான்கள். உள்ளே ஆண் பெண் பாகுபாடின்றி பிதுக்கிக் கொண்டு கலவையாய் ஏழெட்டு பேர்.

ஒருவன் பத்து பைசா அளவு விட்டத்தோடு கூடிய சிறிய கூலிங்கிளாசை மாட்டிக்கொண்டு வேனுக்குள் இருந்துகொக்கைப் போல் வெளியே தலையை நீட்டி ''உமா'' என்றான் சற்று உக்ரமாக.

''வந்துகிட்டிருக்கேன் தினேஷ்...'' பதிலோடு வாசலைத் தாண்டினாள் உமா.

''டீ...சாமி கும்பிட்டுட்டு கிளம்படி.'' விசாலம் உள்ளிருந்து கத்தினாள்,

''எனக்கும் சேர்த்து நீயே கும்பிட்டுக்க...'' பதிலோடு வேனுக்குள் ஏறி வளையல்கைகளை பெரிதாக ஆட்டி டாட்டா காட்டினாள் உமா.

அவினாஷ் சற்று கவலையோடு கையசைத்தான். வேன் கண்களை விட்டு மறைந்தது.

அகலமான தார்ச் சாலையில் அம்புபோல் சீறியது. உள்ளே கோரசாக எல்லோரும் பாடத் தொடங்கியிருந்தார்கள். உமா விண்டோ வழியாக நழுவும் புளியமரங்களையும் அதற்கப்பாலான வயல் வெளிகளையும் பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள்.

நெடுநேரம் வரை எதுவும் பேசத் தோன்றவில்லை.

திடுமென்று பிரேக் அடித்து உலுங்கிக் குலுங்கியது வேன்.

''ஏன் ராஜ் நிறுத்திட்டே...'' உள்ளே ஒருவன் கேட்கவும் வேனை நான்கு பேர் சூழ்ந்து கொண்டிருந்தனர். ஒருவன் கையில் பெரிதான உண்டியல்.

''சார்...பாதைப் போக்கு வீர முனியப்பனுக்கு ஏதாவது காணிக்கை போடுங்க சார்...'' குரலோடு குலுங்கியது உண்டியல்.

''ப்ச்சச்...'' பெரிதாக உதட்டை சுழித்தான் பாஸ்கர் என்பவன். ''இதுக்கு தானா வேனை நிறுத்தினீங்க. உங்களுக்கு வேற வேலையே கிடையாதாய்யா?'' உஷ்ணமாக உதட்டை பிரித்தான் தயாளன்.

''சரி சரி ஒரு எட்டணாவை போட்டுட்டு வண்டியை எடுங்க. என்றபோது அந்த உண்டியலை குலுக்கியவன் உமாவை பார்த்து விழிகளை முடிந்த மட்டும் அகட்டி விரித்தான். ஆச்சரியம் அணை மதகு திறந்த மாதிரி அவன் முகத்தில் பாயத் தொடங்கியிருந்தது.

''ஏ தாயி கும்புட்டேறன் தாயி...என்னத் தெர்லீங்களா நான்தாங்க வானமாமலை...'' என்றான்.

—உமா அவனை பார்த்து ஒன்றும் புரியாமல் விழித்தாள். ''வானமாமலை? தெரியலையே...யாருப்பா நீ?'' என்று திருப்பிக் கேட்டாள்.

''என்ன தாயி...என்னை தெரியலையா உனக்கு? இதே முனியப்பன் கோயில் வாசல்ல நீயும் கருணாகரனும் மாலையும் கழுத்துமா வந்து... மறந்து போச்சா உனக்கு...?'' வானமாமலை எனும் அந்த காவிப்பல்காரன் பேச்சு அனைவருக்குமே மண்டையைச் சுற்றியது.

''உமா...உன்னைப் போலவே யாரையோ பார்த்துட்டு நீன்னு நினைச்சு பேசறான் இந்த ஆளு...சரி சரி வண்டியை எடுப்பா...'' கத்தினான் சங்கரநாராயணன் எனும் எம். ஏ. ஜுவாலஜி மாணவன்.

''இல்லீங்க...நான் சரியான ஆள்கிட்டதான் பேசறேன். எண்ணி பதினெட்டு வருஷத்துக்கு முன்னால



ரத்த பிரமாணமா இவங்க சொன்னது என்னன்னு உங்களுக்கு தெரிய நியாயமில்ல...''

அந்த வானமாமலையின் தீர்க்கத்தில் உமா தன் புருவத்தை வில்லாக வளைத்து சுழித்தாள்.

''யோவ் யாருய்யா நீ? புரியாத தமிழ்ல என்னென்னமோ பேசறே...நீ சொல்ற பதினெட்டு வருஷத்துக்கு முன்னால இவ பிறக்கக்கூட இல்ல!

ராஜ் வண்டியை எடு. கொஞ்சம் விட்டா எதையாவது பேசி நம்ம கொண்டையில பூ சுத்திடுவாங்க.''

ராஜ் எனும் மாணவன் கியரை மாற்றி கிளட்சை மிதித்து அந்த ஊதாநிற மாருதியை மீண்டும் வேகப்படுத்த அது திரும்பவும் சீறியது.

உமா திரும்பி திரும்பி பார்த்துக் கொண்டே வந்தாள். அவனை முதன் முறையாக பார்க்கும் ஒருஅறிமுக சந்திப்பாக அது இல்லாமல் இதற்கு முன் அவனைப் பல முறை பார்த்ததுபோல் ஒரு நினைவு உள்ளுக்குள் பரவியது.

''ஏய் உமா...என்ன அப்செட்டாயிட்டே. அவன் என்னமோ ஒளர்றான். இதையெல்லாமா நினைச்சுகிட்டுவரே?ஆமா இதுக்கு முந்தி இந்த டிஸ்ட்ரிக்ட் பக்கம் வந்திருக்கியா?'' பாஸ்கர் என்பவன் கேட்டான்.

''எனக்கு இதுதான் முதல் விசிட்...'' சங்கரநாராயணன் குறுக்கே புகுந்து பதில் சொன்னான்.

''எனக்கும் இதுதான் முதல் விசிட், பாஸ்...'' என்ற உமா விண்டோ வழியாக வெளியே பார்த்துவிட்டு ஆனா பலதடவை வந்த மாதிரி இருக்கு. இந்த பாதையில ஒரு

ஒத்தைப் பனைமரமும் அதுக்கு கீழ ஒரு யோகியோட சமாதியெல்லாம் இருக்கற மாதிரி கூட தோணுது.''

''உமா சொன்ன மறுவினாடி ஒருபாதை வளைவில் அவள் குறிப்பிட்ட ஒற்றைப்பனை மரமும் அதன் கீழ் ஒரு சமாதியும் தெரிந்தது

' வாவ்...என்ன ஆச்சரியம்! ஏய் உமா, நீ சொன்ன மாதிரியே ஒத்தைப் பனைமரம் பிளஸ் சமாதி. என்னடி, ரீல் விட்றியா? இதுக்கு முந்தி நீ இந்த பக்கம் வந்திருக்கணும். அதான் இவ்வளவு கரெக்டா சொல்றே ''— வைஜெயந்தி என்பவள் வாய் பிளந்தாள்.

உமா அந்தப் பனைமரத்தையும், சமாதியையும் பார்த்து நிஜமாலுமே செருமிப்போனாள்.

''நோ... நான் ஒரு தடவை கூட இந்த பக்கம் வந்ததில்ல. எனக்குப் பொய் சொல்ல வேண்டியது அநாவசியம்...'' சற்று கோபத்துடன் கத்தினாள்.

அப்பொழுது பக்கத்து சமவெளியில் மேய்ந்து கொண்டிருந்த மாடுகளில் சில சாலையில் நடந்தபடி அசமந்தம் செய்தது.

ராஜ் ஹாரன் அடித்து ஓய்ந்து போனான். சப்தம் கேட்டு மாட்டுக்காரன் ஓடி வந்து அவைகளை விரட்டி விட்டான்.

''ஏய்யா மாடுங்களை பார்த்து மேய்க்கக் கூடாதா?'' ராஜ் அந்த மாட்டுக்கார கிழவனை பார்த்து கத்தவும் அவன் பணிவாக முகம் சுணக்கி ''தப்பா எடுத்துக்காதீங்கய்யா'' - என்ற குரலோடு ராஜ் பக்கம் திரும்ப, எதார்த்தமாய் உமா அவன் கண்ணுக்கு தென்பட்டாள்.

உடனேயே அவன் விழிகள் பாய்மரமாய் விரிந்தது.



''ஜீவா...சொன்ன மாதிரியே திரும்பப் பிறந்து வந்திட்டியா தாயி என்னால நம்பவே முடியலையே... எல்லாம் செண்பகதேவி அருள்தான்...!''

—அவன் பேச்சைக் கேட்டு அத்தனை பேரும் அப்படியே ஸ்தம்பித்துப் போனார்கள்.

---

**பாவம் புண்ணியம் மட்டும் ஒருவனது பிறவிகளில் தொடர்வதில்லை. கல்வி, கேள்வி ஞானம், இசை என்பனவும் தொடர்கிறது. ஒருவன் ஒரு பிறப்பில் கற்ற கல்வி ஏழு பிறப்புக்கும் தொடருவதாக வள்ளுவமே கூறுகிறது.**

**—பூர்வஜென்ம ஆராய்ச்சியாளர் சாண்டில்யா**

---

# 2

உமா, ஜீவா என்றும் அவள் திரும்பவும் பிறந்து வந்திருக்கிறாள் என்றும் பரவசமாகப் பேசிய அந்த மாடு மேய்ப்பவனை ஸ்தம்பிப்போடு பார்த்த உமாவின் நண்பர்கள் மெல்ல உமா பக்கம் திரும்பினார்கள்.

''உமா, இந்த ஆள் சொன்னதைக் கேட்டியா• உனக்கு எதாவது புரியுதா? ஜீவாங்கறான், திரும்ப பிறந்து வந்தவன்னு சொல்றான்...எங்களுக்கு தலையைப் பிய்ச்சுக்கலாமான்னு இருக்கு.''

''யோவ் யாருப்பா நீ...என்ன சொல்றே?''

—பாஸ்கர் பட்டாசாக வெடித்தபடி உமாவிடமிருந்து திரும்பி அந்த மாடு மேய்ப்பவனை பார்க்க அவன் முகத்திலோ ஆனந்தப் பரவசம்.

''கேக்கறேன்ல...''—திரும்ப இடித்தான் பாஸ்கர். அவனின் கருத்த உதடுகள் மெல்ல பிரிந்தன.

''என்னால நம்பவும் முடியலை. நம்பாம இருக்கவும் முடியலை. உலகத்துல எவ்வளவோ அதிசயங்கள். புரிஞ்சுக்க முடியாத விஷயங்கள். அதுல இந்த ஜீவா விஷமுயம் சேரப்போகுது தம்பி...''

''எந்த ஜீவா விஷயம்பா?''

''கார்ல உக்காந்துருக்குதே இந்த ஜீவா...இதோட விஷயம்தான்...''

''கார்ல உட்கார்ந்துருக்கறது ஜீவா இல்ல. உமா.''

''உங்களுக்கு அவங்க உமா. ஆனா இந்த வேலமங் கலத்துக்கும் அதைச் சுத்தி உள்ள எட்டு திக்கு கிராமத் துக்கும் அவங்க ஜீவா தம்பி...''

''ஐயோ...புரியும்படி சொல்லேன்...''

''நான சொல்றது இருக்கட்டும்...நீங்கள்ளாம் யார், எங்க போய்கிட்டு இருக்கீங்க?''

''நாங்கள்ளாம் காலேஜ் ஸ்டூடண்ட்ஸ் வேலமங்கலம் செண்பக தேவி கோயிலுக்குதான் போயிட்டிருக்கோம்...'

''அந்த ஆபத்தான இடத்துக்கா?''

''அப்படி என்ன அங்க ஆபத்து?''

''போகப் போக தெரிஞ்சிப்பீங்க...ஆனா ஜீவா நீ, போக வேண்டிய இடத்துக்குதான் போயிட்டிருக்கே... அந்த ஆத்தாளுக்கு சக்தி போயிட்டதா நினைச்சேன். இல்லேங்கறது இப்ப தெரிஞ்சு போச்சு.

போ தாயி போ...

உன் மக அனுபவிச்சுகிட்டிருக்கற ஒரு சித்ரவதைக்கு முடிவு கட்ட வேண்டாமா?



உன் புருசனோட சித்தபிரமைக்கும் ஒரு வழி பாக்க வேண்டாமா?

போ...''

—அந்த மாடு மேய்ப்பவன் புதிர் போன்ற சில விஷயங்களை பேசிவிட்டு பெரிதாகக் கை கூப்பினான். சலங்கை கட்டிய கருமருத்தடி குலுங்க,குமாரபாளையத்து கருப்புப் போர்வை காற்றிலாட, கலைந்த தலையில் ஒன்றிரண்டு காய்ந்த புல் துண்டுகள் ஒட்டியிருக்க, அவன் பேசிய விதமும், கை கூப்பிய விதமும் அவர்களை அவசரப்படுத்தியது.

பரிட்சை ஹாலில் கேள்வித்தாளை பார்க்கின்ற வேளையில் விடைக்காக மௌனிப்பதுபோல் மௌனித்து ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். உமா குழம்பிப் போயிருந்தாள். அந்த மாட்டுக்காரன் முகம் அவள் நினைப்பில் சண்டித்தனம் செய்தது. ஏற்கனவே பதிந்த முகம் போல் நினைவுப் புள்ளிகள் மின்னிக் கசிந்தன.

தலையை சிலிப்பிக் கொண்டாள். பக்கத்து மைல் கல் வேலமங்கலம் எட்டு கிலோ மீட்டர் என்றது. அதன் தலைமேல் சாம்பல் கழுத்து காகம் ஒன்று உட்கார்ந்த படி உமாவை வெறித்தது.

தலையை உயர்த்திய போது பச்சையாகப் பிடித்து வைத்த கொழுக்கட்டை போல வேலமங்கல மலை தெரிந்தது. புசுபுசு என்று பசுமை...மலைமேல் கோயில் எங்கே இருக்கிறது என்பதே தெரியாத அடர்த்தி.

பழுப்பாய் ஒரு பாதை தலை வகிடு போல் துளிதூரம் தெரிந்து பின் அழிந்து போயிருந்தது. சற்றுத் தள்ளி நெட்டுக்குத்தாய் ஏக உயரத்திற்கு ஒரு பாறை.

24180

அந்தப் பாறையை பார்த்த வினாடியில் அதன் மேல் இருந்து தான் கீழே தள்ளப்படுவது போல் ஒரு எண்ணம் மூளைச் செல்களை நிமிண்டிக்கொண்டு வெளிப்பட்டது.

தன்னையும் அறியாமல் 'வீல்' என்று அலறினாள். எல்லோரும் உமாவிடம் நெருங்கிக் குவிந்தார்கள். பதறிச் சிலிர்த்தார்கள்.

''உமா ஏன் கத்தினே.''

''அந்த மலையைப் பார்த்தா, கத்தினா...இங்க என்ன நடக்குதுன்னே தெரியலையே...''

''உமா, சொல் உமா...ஏன் கத்தினே? யோவ் மாட்டுக் காரா நீ குட்டையை குழப்பினது போதும், இடத்தை காலி பண்ணு.

ராஜ் வேனை கிளப்பு...''

-ஆளாளுக்கு கேள்வி கேட்க, ஆயாசிக்க, வேன் தார்ச்சாலையில் திரும்ப சீறத் தொடங்கியது. உமா மெல்ல பிரக்ஞை மீளத் தொடங்கினாள்.

மெல்ல விண்டோ வழியாக வெளியே பார்க்கத் தொடங்கினாள். முத்து முத்தாய் முகத்தில் வியர்வைப் பந்தல்.

இதைவிட அதிகமாக வியர்க்க ஒரு கைக்குழந்தை யோடு ஓடிவந்து விழுந்தது போல் ஒரு புது நினைப்பு...! அந்தக் குழந்தையின் அழுகுரல்கூட காதோரம் மிக மெலிதாகக் கேட்பது போல் ஒரு பிரமை...

இரண்டு கைகளை உயர்த்தி நீட்டியபடி, வாயிலி ருந்து எச்சில் குப்பல் குப்பலாக வழிய, கண்களின் நீர்ப் பாதையில் வெள்ளம் போல் வேகமும், தொண்டைக் குழியில் விக்கல் விழுந்துவிட்ட குழித் துடிப்பும், ஒரு சேர ஒரு சரிவில் விழுந்துவிட்ட அந்தக் குழந்தை



தன்னைப் பார்த்து உயிர் வேதனையோடு கத்துவது போல் ஒரு பிரமையும்கூட...என்ன இதெல்லாம்?

மெள்ள உமாவின் கண்களில் நீர்திரளத் தொடங் கியது. உதடுகளில் ''என் குழந்தை என் குழந்தை'' என்கிற கேவல் பிறந்தது.

நண்பர்களிடம் திகைப்பு.

''ஏய் உமா...என்ன ஆச்சு உனக்கு?''

—சங்கர நாராயணன் அதிர்வாக கேட்டான்.

உமாவால் பதில் சொல்ல முடியவில்லை.

ஊஹூம்! பதில் சொல்லத் தெரியவில்லை.

மலங்க மலங்க விழித்தாள். தலையின் பின்புலம் ஜிவுஜிவு என்று ஒரு உணர்வு. உள்ளுக்குள்ளே சகல பாகங்களும் இடம் மாற எத்தனிக்கின்ற மாதிரி ஒரு வேதனை.

மாவுப் பையை பிதுக்கி உதறுகின்ற மாதிரி அப்படியே திருப்பிப் போட்டு காலம் உதறுவதுபோல் ஒரு பிரமை.

வேனோ நிற்காமல் விரைந்து கொண்டிருந்தது. தூரம் குறைந்து, வேலமங்கலத்தின் மலை அடிவாரம் சமீபிக்கத் தொடங்கியது. மலையின் இடப்பக்கம் பள்ளம் வெட்டினது போன்ற ஒரு இடத்தில் வேலமங்கலம் கிராமம்.

நகர பாதிப்புகளுடன் ஆன்ட்டனா கொண்டை களோடு மச்சு வீடுகளும் நிறைய தென்பட, சுற்றிலும் வயல் வெளி!

வயல் வெளி நாரைகள் நாற்றுப் பாத்திகளுக்குள் நண்டுகளுக்காக ஒற்றைக்கால் தவம் செய்ய, கிராமத்தை

பார்த்த உமாவின் நண்பர்கள் ஒரு வினாடி குள் கொட்டி வியந்து போனார்கள்.

"ஏய் கிராமத்துக்குள்ள முதல்ல போலமா? இலல மலைக்கு போவோமா?"

"கிராமத்துல என்னடா வேலை.மலையும் கோயிலும் தானே நமக்கு முக்கியம்?"

"ஓ.கே. மலைக்கே போவோம். வைஜெயந்தி நீ கேமிராவை எடுத்துக்க...சாரதா நீ கேசட் ரிக்கார்டர்... பாஸ்கர் நீ நோட்ஸ் எடு..."

"எல்லாரும் எல்லாத்தையும் எடுத்துக்கறது அப்புறம். உமா இன்னும் பேசவேயில்லையே... அவளுக்கும் நமக்கும் நேர்ந்த எக்ஸ்பீரியன்ஸோட சீரியஸ்நெஸ் தெரியாம நாம நம்ம வேலைய பார்த்தா எப்படி?"

"என்ன பெரிய எக்ஸ்பீரியன்ஸ்...யாரோ இரண்டு பேர் வழியில தென்பட்டு ஜீவா—அம்மன் அருள்னு பேசினா அது பெரிய எக்ஸ்பீரியன்ஸா?

எல்லாம் உளறல்.

படிச்சவங்க மாதிரி நடந்துக்கணும். பகுத்தறிவு எதுக்கு இருக்கு?"

—அவர்களுக்குள் வாக்குவாதங்கள் வலுத்த சமயம் அடிவாரம் பக்கமாக ஒரு வில் வண்டி வந்து நின்றது.

திபுதிபுவென்று அதிலிருந்து நான்கு பேர் இறங்கினர். ஒழுங்கில்லாத மலைப்பாதை மேல் பாய்ந்து ஏறினர்.

ஆவாரம் செடிகள் செழித்து கொழித்து பாதையை மறிக்க அதனுள் நுழைந்து மறைந்தனர்.



வில் வண்டியை ஓட்டி வந்தவன் வண்டியை விட்டு இறங்காமல் அங்கேயே இருந்தான். ஒரு பீடியை எடுத்து பற்ற வைத்துவிட்டு புகையை கக்கியபடி திரும்பினான். மாருதி வேனையும் உமாவின் நண்பர்களையும் பார்த்து புருவத்தை உடைத்த வளையலாக்கினான்,

திரும்பவும் பீடிப் புகையிலை நெருப்புக் கங்கு களால் சுடப்பட்டு சாம்பலாகி அவன் வாயண்ணங்களில் நுழைந்த சமயம் அவன் பார்வை உமாவைப் பார்த்து விட்டது.

உடனேயே உதட்டில் நெருப்புச்சுட்ட மாதிரி ஒரு பதட்டமும் உதறலும் பரவியது. உமாவும் அவனைப் பார்த்தவுடன் தன்னை மறந்தவளாக விழிகளை அகல மாக வெறித்தாள்.

அவன் வேகமாக மலைப்பாதையில் இறங்கி ஓடத் தொடங்கினான்.

---

**உலகில் ஜடப்பொருள் அதிசயம் மட்டும்தான் ஏழு! ஆனால் பிரபஞ்ச மானுட அதிசயங்கள் எவ்வளவோ. அதில் ஒன்று பூர்வஜென்மா. பூர்வஜென்மா பற்றிய பிரக்ஞையே வாழும்நாளில் ஒருவனை புண்ணியத்தில் ஈடுபடுத்துகிறது. பாபங்களில் இருந்து விடுவிக்கிறது. இறந்த பின் நடக்கும் இந்த அதிசயத்தில் ஆயிரமாயிரம் நுட்பம் இருக்கிறது. ஒரு உயிர் ஆடாக, மாடாக ஜனிக்கக்கூட அந்த நுட்பமும் பாபமும் புண்ணியமுமே காரணம்.**

**உபநிஷதம்**

---

# 3

மலைப்பாதை சாரைப் பாம்பாக நெளிந்தபடி கிடந்தது. ஊடே அதிகப் பிரசங்கித்தனமாய் வளர்ந்து இடைமறித்துக் கிடந்தது சில காட்டு வாகை மரங்களின் கிளைகள்.

ஓடும் அந்த மனிதன் அந்த கிளைகளை அற்பமாக கருதி தாண்டியபடி ஓடிக் கொண்டிருந்தான்.

ஓரிடத்தில் நெருப்புப் புகையின் திண்டு திண்டான தேக்கம். கண்ணைக் கரித்தபடி அந்த புகைக் கூட்டத்துக்கு நடுவே சிலர்.

''அடேய் வில்வண்டி மாமுண்டி தலை தெறிக்க ஓடிவர்றதைப் பாரு...'' கூட்டத்தில் ஒருவன் முணுமுணுக்க கூட்டமும் நிமிர்ந்து நோக்க இதற்குள் மாமுண்டி எனும் அவன் அவர்களை சமீபித்து அநியாயப் பெருமூச்சு விட்டான்.

''என்னாச்சு மாமுண்டி...ஏன் இப்படி ஓடிவர்றே?'' ஒருவன் கேட்கிறான்.

''தியாகு அய்யா எங்கே?''— மாமுண்டியிடம் கேள்வி.

''அய்யா வரவே இல்லியே...''

''அப்படின்னா அய்யா வீட்லதான் இருக்கணும். நான் அங்கேயே பாத்துக்கறேன்.''

''அவர் கல்யாண ஜரூர்ல இருக்காரு. நீ எதுக்கு இப்ப அவரைத் தேடிக்கிட்டு...?''



''காரணமாத்தான்...உங்களுக்கு விளக்கமா சொல்ல நேரமில்ல. இந்த மலைக்கு ஒரு டூரிஸ்ட் கோஷ்டி வந்துருக்கு. அதுல ஒருத்திய நீங்க பார்த்தா வாயைப் பிளந்துடுவீங்க. என்னதான் மலைக்கோவிலை நாம இழுத்து வெச்சு பூட்டி பூஜை இல்லாம பண்ணினாலும் ஆத்தாளுக்கு அருள் இல்லாம போயிடாதுங்கறதை நான் புரிஞ்சுகிட்டேன். நான் வரேன்...''

—மாமுண்டி ஓடிவந்த வேகத்தில் திரும்பி ஓடினான். கூட்டம் குழம்பிப் போனது. புகைக் கங்குகளுக்கு காரணமான நெருப்புச் சுடரின் மேல் கள்ளச் சாராயப் பானைகள்!

அந்தப் பெண்ணின் கண்களில் தாரை தாரையாக கண்ணீர். பதினெட்டு வயது முடிந்திருந்தாலும் பத்து வயது குறைத்தே மதிப்பிடும்படியான தோற்றம் அவளுக்கு பட்டுப்புடவையை மிக செயற்கையாக சுற்றி விட்டிருந்தார்கள்.

கண்களைச் சுற்றிலும் அழுத்தமாக விழுந்துவிட்டிருந்த கருவளையங்கள் அவள் சிரித்ததை விட அழுததே அதிகம் என்று சொல்லாமல் சொல்வது போல் தோன்றியது.

உடம்பில் பல இடங்களில் சூட்டுத் தழும்புகள். உலகில் உள்ள அப்பாவிப் பெண்களுக்கெல்லாம் தலைமை தாங்கத் தகுதியானவள் போல் தெரிந்தாள், செண்பகம் என்னும் அவளைப் பார்க்க அத்தனை பேருக்கும் பாவமாகத்தான் இருக்கிறது. அதற்காக பரிதாபப் பட்டு விடவும் முடியாது. மீறி பரிதாபப்பட்டால் அவளது அழுகையில் பரிதாபப் பட்டவர்க்கும் பங்கு கிடைத்துவிடும்.

எல்லாம் தியாகு என்னும் அந்த அரக்கனின் செயல்.

நம்பிக்கை துரோகம், படுபாதகம், கொலை வெறி எல்லாம் ஒன்று கலந்து ஒரே ஒருவனிடம் மட்டும் குடியேறிவிட்டது போன்ற உருவம்.

வேலமங்கலத்துக்கே தன்னை ஒரு அரசனாக கருதிக் கொண்டிருப்பவன். ஆனால் பொக்கிஷங்கள் ஏதுமில்லாத அடாவடி அரசன்.

பொக்கிஷங்களுக்காகத்தான் அந்தப் பெண்ணை படாத பாடுபடுத்திக் கொண்டிருக்கிறான்,

நாற்பத்தைந்து வயதை கடந்து பதினெட்டு வயதில் ஒரு பெண்ணுக்கு தந்தையாகவும் ஆகிவிட்ட போதிலும் அதே வயதில் இன்னொரு பெண்ணை மகளாக நினைக்காமல் மனைவியாக நினைக்கிறான் என்றால் எல்லாம் காரணம் இல்லாமல் இல்லை.

''ஜீவாவைத்தான் கட்ட முடியலை. அவ மக செண்பகத்தையாவது கட்டி பட்ட நாயக்கர் பரம்பரைச் சொத்தை ஆண்டு அனுபவிக்கலாம்னு நினைக்கிறான் தியாகு. இதுல அந்த பெண்ணுக்கு பிரியமில்லாட்டியும் கட்டாயக் தாலி கட்டிட்டா அது கல்யாணம் இல்லேன்னு ஆயிடுமா என்ன?

நடக்கறது எதுவும் நல்லதுக்கா தெரியலை. தாயும், உசுரோட இல்லாம, தகப்பனும் சரி இல்லாம அந்தப் பொண்ணு செண்பகம் படற பாடு ஆண்டவனுக்கே அடுக்காது...''

-ஊருக்குள் இப்படிப் பேசிக் கொள்வதில் நிறையவே சங்கதிகள் உள்ளன.

அதோ ஒரு குப்பைத் தொட்டி!

அதன் அருகே ஒரு பைத்தியம் அந்த குப்பைக் கூளங்களை கிளறிக் கொண்டு புலம்பிக் கொண்டிருப்பதைப்



பார்த்து இதயம் துடிக்காதவர்களே அந்த ஊரில் இருக்க முடியாது.

''மகாராஜாவா யானை மேலையே ஏறி வர இந்த ஆளுக்கு வழி இருந்தும், இப்படி பைத்தியமா லோலோன்னு அலையணும்னு விதி இருந்தா யார் என்ன பண்ண முடியும். ஜீவா மட்டும் உசுரோட இருந்தா இப்படி எல்லாம் நடந்திருக்குமா?''

அதுவும் ஊருக்குள் உலவும் ஒரு உக்ரமான புலம்பல் தான். அவர்களால் புலம்பத்தான் முடியும் தப்பித்தவறி பைத்தியமாயிற்றே என்று உதவி எல்லாம் செய்து விட முடியாது. செய்து விட்டு யார் பிரச்சினையின்றி வாழ்ந்து விட முடியும்?

அனைத்திலும் தியாகு எனும் நபரின் அரக்கத்தனங்கள் ஊர்ப் பிரசித்தம்.

இதோ பட்டு வேட்டி பட்டுச்சட்டை சகிதம் அந்த அரக்கன் புதுமாப்பிள்ளை போல் தோற்றம் தரும் காட்சி தான் என்ன?

உடம்பைச் சுற்றி அத்தர் மணக்கிறது.

உதட்டிலே மட்டும் சாராய நெடி!

''என்னடா சொல்றா அவ... என்னை கட்டிக்கிட்டு சந்தோஷமா இருக்கப் போறானாமா இல்லை சித்ரவதைப்பட போறானாமா?''

-அவனிடம் கடூரமான கேள்வி.

''அது சம்மதிக்கிறது இருக்கட்டுங்க. நீங்க ஆசைப் பட்டாபட்டது தானே? அப்புறம் அதுல தேவை இல்லாத கேள்விங்கள்ளாம் எதுக்கு?

விடிஞ்சா உங்களுக்கும் செண்பகத்துக்கும் மலைக் கோவில்ல வெச்சு கல்யாணம்.

பட்ட நாயக்கர் சொத்துக்கெல்லாம் இனி எப்பவும் ராஜா நீங்கதான்.''

-இப்படி ஒரு கைத்தடி தியாகு எதிரே சொல்லி மார் தட்டும் போது ஓடி வந்து நிற்கிறான் மாமுண்டி.

''ஐயா ஐயா...'' என்கிறான் பதட்டமாக.

''என்னா மாமுண்டி, ஏன் இப்படி பதர்றே? கள்ளச் சாரயத்தை போலீஸ் பிடிச்சிடிச்சா. எவ்வளவு லஞ்சம் கொடுத்தாலும் அப்பப்ப கேசுக்காக அப்படித்தான் நடந்துக்குவாங்க அவங்க...''

-தியாகுவிடம் அசட்டையான பேச்சு.

''அதில்லீங்கய்யா... பதினெட்டு வருஷத்துக்கு முந்தி செத்துப் போச்சுங்களே ஜீவா... அதை இப்ப நேர்ல பார்த்தேங்க...''

-மாமுண்டியின் பேச்சில் தியாகுவிடம் விதிர்ப்பு.

''என்னடா சொல்றே?''

''ஜீவாம்மாவை பாத்தேங்க...''

''செத்தவளை எப்படிடா பாக்க முடியும்?''

''மறுஜென்மம் எடுத்து வந்திருக்குங்க.''

''என்னடா காது குத்தறே...?''

''காது குத்தலை, நேரில நீங்களும் பார்க்கலாம். நம்ப செம்பக தேவி கோவில் இருக்கற மலைக்கு சுத்தி பார்க்க வந்திருக்குங்க அந்தப் பொண்ணு.''

''ஜீவா சாயல்ல ஒரு பொண்ணா?''

''சாயலெல்லாம் இல்லீங்க. அச்சு அசல் ஜீவாவே தான்''



''சரி அப்படித்தான் இருந்துட்டு போகட்டும். அதுக் கென்ன இப்போ? ஏன் இப்படி பதட்டப்பட்றே?''

''என்னய்யா நீங்க பழசை மறந்து இப்படி கேள்வி கேக்கறீங்க. ஜீவா சாகும்போது சொன்னது மறந்து போச்சா உங்களுக்கு...''

''நீ என்னை இப்ப கொன்னுடலாம். என் கைக் குழந்தை என் பைத்தியக்கார புருஷன் எல்லார்கிட்ட இருந்தும் என்னை பிரிச்சுடலாம். ஆனா நான் திரும்ப வருவேன். நிச்சயமா வருவேன். இந்த செண்பக தேவிக்கு சக்தி இருக்கறது உண்மைன்னா மறுஜென்மம் எடுத்தா வது நான் வந்தே திருவேன். அப்ப உன்னை நான் சும்மா விடமாட்டேன் நீ செஞ்ச பாவத்துக்கெல்லாம் வட்டியும் முதலுமா அப்பத்தான் உனக்கு இருக்கு...

பட்டநாயக்கர் சொத்து கடுமையான உழைப்பால உண்டானது. அதை உன்னைப் போன்ற தெருநாயெல் லாம் பங்கு போட முடியாது. இதை நீ நிச்சயம் தெரிஞ்சுப்பே...''

-மலைப்பாறை சோத்துக் கத்தாழைச் செடி ஓரமாக மேலிருந்து விழுந்து, உடம்பெலும்பெல்லாம் நொறுங்கி விட்ட நிலையிலும், பிரியவிருந்த உயிர் மூச்சை பிடித்துக் கொண்டு அன்று ஜீவா பேசினது அப்படியே திரும்பவும் தியாகுவின் காதில் ஒடுகிறது.

அழியாத குரல்!

'இப்படியெல்லாம் சினிமாவில் மட்டும்தான் நடக்கும் நிஜ வாழ்க்கையில் சாத்யமா என்ன?'' மூளைக்குள் கேள்விக் குடைச்சல். போய்ப் பார்த்து வந்தால் என்ன?

ஆவல் தாளாமல் கிளம்ப எத்தனித்தவனை குத்ரைய்யா என்னும் கிழவன் ஒரு தினுசாகப் பார்த் தான்.

ருத்ரைய்யா...தியாகுவின் வழிகாட்டி அறுபதைக் கடந்து விட்ட சகுனி மாமா. வழுக்கைத் தலையும் கைத் தடியுமாய் ஆளைப் பார்த்தால் சத்தியமாக அடிக்கத் தோன்றும் உருவம். யார் இவர்? பூர்வீகம், குலம், கோத்திரம் எதுவும் யாருக்கும் தெரியாது. ஆனால் இவர் சொன்னால் தியாகு எதையும் செய்வான் என்பது மட்டும் எல்லோருக்கும் தெரியும்.

அந்த அளவு தியாகுவிடம் செல்வாக்கு!

''எங்க தியாகு கிளம்பிட்டே...அந்தக் குட்டியை பார்த்துட்டு வரலாம்னா?' தாடையை தடவியபடி. வழுக்கைத் தலையில் தாளம் போட்டபடி கேட்கிறார் ருத்ரைய்யா.

''ஆமா ருத்ரைய்யா...மறு ஜென்மமாம்ல மறு ஜென்மம்.''

''ஏன் இருக்கக் கூடாதா?''-ருத்ரைய்யாவிடம் பூடகமாகக் கேள்வி.

''இருபதாம் நூற்றாண்டுல இருந்துகிட்டு பேசற பேச்சைப் பாரு செத்தா சாம்பல் மட்டும்தான் ருத்ரைய்யா...''

''அப்படின்னா எதுக்கு அவளை பார்க்க துடிக்கறே. யாரோ ஒருத்தின்னு விட்டுட்டு போறதுதானே? விடிஞ்சா உனக்கும் செண்பகத்துக்கும் கல்யாணம் வேற நடக்க இருக்குது. நீ மாப்பிள்ளையாதான் மலைல கால் எடுத்து வைக்கணும்.''

''எல்லாம் சரி ருத்ரைய்யா. அந்த குட்டியை சும்மா பாத்துதான் வெப்போமே...உலகத்துல ஒருத்தரைப் போல ஏழு பேர் இருப்பாங்களாமுல்ல ''

''இருந்துட்டு போறாங்க. நீ வேலையைக் கவனி''



-ருத்ரையாவிடம் கண்டிப்பான பேச்சு கூடவே உமாவை பற்றின சிந்தனை

'ஜீவா நிஜமாலுமே நீ பிறந்து வந்துட்டியா?'

---

**சில பிறந்த குழந்தைகட்கு சில பாடங்கள் விரைவாக கவனம் ஆகும்—சில குழந்தைகள் பாடுவதில் அதிக கவனம் செலுத்தும்...சில ஆடுவதில்...சில தூங்குவதில்...இதெல்லாம் அன்னையின் கருவில் உயிர் உடலாக உருப்பெறுவதில் நிகழ்கிறது என்றாலும் இதற்கும் அடிப்படை அதன் பூர்வ ஜென்ம சேகரிப்புதான்.**

**—டாக்டர் வில்சன்**

---

# 4

அந்தச் சின்னமலையின் அழகில் அவர்கள் கரைந்து கொண்டிருந்தார்கள். உச்சியில் தெரிந்த செண்பக தேவி கோவிலை அவர்கள் சமீபத்து விட்டிருந்தார்கள். கூடவே சில மாடு மேய்க்கும் ஊர்ச் சிறுவர்கள்.

''டேய் இங்க வாடா...இந்தக் கோவில் சாமி பேர் என்ன?''

''செம்பக தேவி...''

இந்தக் கோவில்ல வேற என்ன விசேஷம்?''

''சுரங்கப் பாதை!''

' சுரங்கப் பாதையா.''

''ஆமா...பட்ட நாயக்கர் வீட்டுக்கு போற சுரங்கப் பாதை.''

''எங்க இருக்கு இப்ப அது? பட்ட நாயக்கர் யாரு.''

''ஆருக்கு தெரியும். ஊருக்குள்ள பேசிக்குவாங்க.''

உமாவோடு வந்த நட்புப் படையில் தினேஷ்தான் மாட்டுக்காரச் சிறுவனை இப்படிக் குடைந்தது.

மாலைச் சூரியன் வேகமாகச் சரிந்து கொண்டிருந்தான். எல்லோரும் சுற்றி சுற்றி பார்த்துக்கொண்டே நடக்க உமாவின் கால்கள் மலைக்கோவிலின் உடைந்த துவஜஸ்தம்பத்தை எட்டியிருந்தது.

காவிக் கொடி பறக்கும் துவஜஸ்தம்பம். உச்சந் தலையில் ஒரு மலைக் கழுகு.

துவஜஸ்தம்பத்தை இதற்கு முன் நூறுநூறு முறை பார்த்தது போல் ஒரு நினைப்பு.

தேங்கித் தேங்கி நின்றபடி அந்த கம்பத்தை பார்த்தவளை பாஸ்கர் நெருங்கி விட்டிருந்தான்.

''என்ன உமா கம்பத்தையே அப்படி பார்க்கறே?''

''இதுக்கு முந்தி இந்த கம்பத்தை நான் நிறைய தடவை பார்த்த மாதிரி ஒரு ஃபீலிங் பாஸ்கர்...''

''போச்சுடா...நீ இன்னும் அந்த ஆளுங்க கிளப்பி விட்ட பிரமையில இருந்து மீளலையா? உமா நாம் பிக்னிக் வந்துருக்கோம். இட் ஈஸ் எ ட்ரிப் ஃபார் எஜுகேஷன் வித் என்டர்டெய்ன்மென்ட் அதை மறந்துட்டு வாட் ஈஸ் திஸ் நான்சென்ஸ்?''

''நான்சென்ஸ் இல்ல பாஸ்கர் இட் ஈஸ் எ ஹாட் ஃபீலிங்.''



''ஓ.கே... ஓ.கே... அப்படியே இருக்கட்டும். கமான் மத்த விஷயத்தை கவனி.''

துவஜஸ்தம்பத்தை கடந்து நடந்தவள் மெல்ல படியேறி பதினாறு கால்களில் நிற்கும் மண்டபத்தை எட்டினாள். மண்டபத்தில் அநியாய சிதைவு. ஒரு எலிக் குஞ்சின் பருமளில் சிலந்தி ஒன்று சுருட்டி வைத்துக் கொண்டு பாயாக உபயோகிக்கலாம் என்னும் அளவில் வலை ஒன்று பின்னியிருந்தது. வௌவால்களின் சிரசாசனத் தோற்றம் வேறு. மெல்லிய துர்வாடை.

இதற்குள் சூரியன் மேற்குக்குள் புதைந்து போய் விட்டிருந்தான். இருளின் சாம்ராஜ்ய பிரிவு. வந்திருந்தவர்களில் டார்ச்லைட் உள்ளவர்கள் அதை உபயோகிக்கத் தொடங்க உமா மட்டும் துளியும் தட்டுத் தடுமாறல் இன்றி அந்த பதினாறு கால் மண்டபம் தாண்டி சிதைந்த படிகள் ஏறி அம்மனின் மூடிக் கிடக்கும் சன்னதி முன் போய் நின்று மெள்ள கதவைத் தள்ளினாள். கிரீச்சிட்டு திறந்தது கதவு.

''பாஸ்கர்...''-என்று திரும்பி அழைத்தாள். டார்ச் வெளிச்சமுடன் சப்தம் கேட்டு நெருங்கி வந்தான் பாஸ்கர்.

''இங்க என்ன பண்ற உமா. இருட்டிடிச்சு. நாம கிளம்புவோமே...''-என்றான்.

''பேசாம என்கூட வா.'' - உமா கர்ப்பக்கிரகத்துக்குள் காலெடுத்து வைத்தாள்.

உமாவிற்குள் திடுமென்று ஒரு உள்ளுணர்வு அது கர்ப்பகிரக கதவை மூடச் சொன்னது. சாத்திய கதவின் இடப்பக்கம் ஒரு விளக்கு மாடம். மாடத்தில் ஒரு பெரிய அகல் விளக்கு காய்ந்து கருகிக் கிடக்க, உமா அந்த

விளக்குப் பிடித்து திருக, அம்மன் அமர்ந்திருக்கும் பீடம் சப்தமுடன் அசைந்து கொடுத்தது.

பாஸ்கரின் விழிகள் காதுவரை விரியத் தொடங்கின.

''உமா இதெல்லாம் உனக்கு எப்படி தெரியும்?''— அவன் இழைந்த குரலில் கேட்கிறான்.

''அதெல்லாம் அப்புறம். நீ இந்த விளக்கை பலமா திருகேன். ப்ளீஸ்...'' - அவள் வேண்டுகோளை அவன் நிறைவேற்ற ஆரம்பித்தான். வலுக்கொண்டு இரு கைகளாலும் உறுதியாகப் பற்றித் திருகினான். அப்படியும் இப்படியுமாக அசைந்து விக்ரகம் நகர்ந்து கொடுக்க அது அமர்ந்திருந்த இடத்திற்கு கீழே படிகளால் ஆன பாதை ஒன்று அந்தகார இருட்டோடு பாதை தெரிய டார்ச்சின் வெளிச்சம் உள்ளே நுழைந்தது.

''என் பின்னால் வா. இறங்கு...''-உமா அவனை ஊக்கப்படுத்தினாள்.

''ஏய் உமா என்ன இதெல்லாம். தெலுங்கு டப்பிங் படம் பார்க்கற மாதிரி இருக்கு. இது எங்க போகுதுன்னு தெரியலையே...பயமா இருக்கு உமா.''

''பயப்படாதே இது என் வீட்டுக்கு போகுது.''

''வாட்...உன் வீட்டுக்கா...? இங்க இருந்து இரு நூறு மைல் தூரத்துக்கா இந்த சுரங்கப்பாதை போகுது என்ன உளர்றே''

''நீ பேசாம என் கூட வா. ப்ளீஸ்...''-உமா அவனை அழைத்தபடி அம்மன் பீடத்தின் மேலேறி தென்பட்ட அந்த பாதையில் மெள்ள இறங்க ஆரம்பித்தாள்.

''உமா...வெளிய நம்ம செட் நமக்காக தவிச்சுகிட்டிருப்பாங்க.''



''அவங்க தவிப்பைவிட என் குழந்தையோட தவிப்பு எனக்கு பெரிசு பாஸ்கர்.''

''திரும்ப உளற ஆரம்பிச்சுட்டியே. நல்ல ட்ரிப்பா இது இருக்கும்னு நினைச்சேன். இப்படி விட்டலச்சாரித் தனமாகும்னு நினைக்கலவே இல்லை உமா...''

—பாஸ்கரின் புலம்பலை சட்டை பண்ணாமல் நெடுந்தூரம் இறங்கி விட்டாள் உமா. பாஸ்கரும் இறங்கத் தொடங்கினான். படி முடிந்த இடத்தில் பிரம்மாண்டமான ஒரு அறை. அறையின் சுவர்களில் பெரிய பெரிய படங்கள்! அறைக்கு இரண்டு கதவு. ஒன்று மலையின் அடிவாரத்துக்கு...இன்னொன்று பட்டநாயக்கர் வீட்டுத் தோட்டத்துக்கு என்று குறிப்போடு தென்பட்டது.

அறையில் தொங்கிய படங்களில் ஒட்டடைக் கூடு.

''பாஸ்கர் அந்தப் படத்தைத் துடை...''-உமா டார்ச் லைட்டை அடித்தபடி காட்டிய படத்தை பாஸ்கர் அரைமனதாக கைகளால் துடைத்தான். மெள்ள பழுப்பான உருவங்கள் தெரிந்தன. ஒரு உருவம் பாஸ்கரை அதிர்ச்சி அடைய வைத்தது. அது உமா!

''உமா இதென்ன உன் படம்?'' பதற்றத்துடன் கேட்டான்.

''என் படம்தான். பக்கத்துல இருக்கறது என் அப்பா சிங்க நாயக்கர். அம்மா மனோன்மணி. என் தாத்தா பட்டத்து நாயக்கர் படம் அதோ...''

-டார்ச்சின் வட்ட வெளிச்சம் சுவரின் இன்னொரு படத்தின் மேல் பாய, அதை துடைத்தபோது கம்பீரமாக தென்பட்டார் ஒரு வயதான பெரியவர். பட்டுத் தலைப்பாகை-ஷெர்வானி குர்தா உடை. கழுத்தில் கூட மஹாலட்சுமி ஹாரம். நெற்றியில் சந்தனப் பொட்டு

ராஜ பரம்பரைகளின் அசாத்ய லட்சணங்கள் அப்படியே தெரிந்தன.

பாஸ்கர் வியந்து நெளிய ஆரம்பித்தான்.

திடீரென்று உமா விசும்பி விசும்பி அழ ஆரம்பித்தாள்.

''ஏன் உமா அழறே?''-பாஸ்கர் கேட்டான்

''என்னென்று தெரியலை பாஸ். மனசுல அநியாயமா ஒரு சோகம் புரளுது. புதுசு புதுசா எண்ணங்கள் அலை போடுது. அம்மா என்னை காப்பாத்து, அம்மா என்னை காப்பாத்துன்னு என் பொண்ணு என்னை கூப்பிட்ற மாதிரி ஒரு சலனம் வேற...''

''நீ சொல்றது எதுவும் புரியலே உமா. நடக்கற எதையும் என்னால எதார்த்தமா எடுத்துக்க முடியலை. நாம வழியில பாத்தவங்க உன்னை ஜீவான்னு சொல்லி, திரும்பப் பிறந்து வந்துட்டியா தாயின்னு சொன்னது வெறும் உளறல் இல்ல.சம்திங் அதுல என்னவோ இருக்கு. இல்லேன்னா இப்படி சொல்லி வெச்ச மாதிரி இங்க வந்து இந்த படங்களை எனக்கு அடையாளம் காட்டுவியா நீ? ரியலி இட் ஈஸ் எ த்ரில்லிங். அண்ட் அன்பிலீவபிள் எக்ஸ்பீரியன்ஸ்...

உமா, இப்ப நீ என்ன பண்ணப் போறே. எதுக்கு இங்க வந்தே...மொத அதைச் சொல்லு...''

''ஒன் மினிட்...''-என்ற உமா டார்ச் லைட் வெளிச்சத்தில் தரையில் எதையோ தேட ஒரு மரப்பெட்டி பளிச்சிட்டது. அதைத் திறந்து பார்த்தவள் அதில் டார்ச் லைட்டின் மெல்லிய வெளிச்சத்தில் பளீரிட்ட வைரக் கிரீடம் பார்த்து அப்படியே நெகிழ்ந்து போனாள்.

''பட்டத்து நாயக்கர்சொத்து உழைச்சு சம்பாதிச்சது



அதை உன் போன்ற தெருநாயெல்லாம் பங்கு போட முடியாது.''

-சாகும் முன் ஜீவா சொன்னது அழையாமல் இப்போது அவளுக்கு இழையோடியது. அந்த வைரக்கிரீடத்தின் கீழ் உயில் பத்திரமும் பத்திரமாக இருந்தது. இலேசாக நைந்து போயிருந்தாலும் மடக்கி வைத்தது வைத்தபடி இருக்கிறது.

இப்படி ஒரு கோயில்-அதில் இப்படி ஒரு சுரங்கப் பாதை-அங்கே ஒரு அறை-அறையில் பொக்கிஷம் என்று பட்ட நாயக்கர் காலத்திலே பார்த்துப் பார்த்து செய்த இந்த ஏற்பாடுகளை நினைத்தபோது பிரமிப்பாக இருந்தது.

''பாஸ்கர் நாம இப்ப வெளிய போகலாம். தயவு செய்து நீ இங்க பார்த்த எதையும் வெளியே பிரஸ்தாபிக்கக் கூடாது. செய்வியா?''-உமாவின் கேள்வி முன் பாஸ்கர் அந்த இறுக்கத்திலும் சிரித்தான்.

''அப்படியே பேசினாலும் யாராவது நம்புவாங்களா என்ன?''-திருப்பி கேட்டான்.

''இல்ல பாஸ்கர். காலம் என்னை ஒரு அர்த்தத்தோட தான் இங்க கூட்டி வந்திருக்கு. நீயும் காரணத்தோட தான் துணை சேர்ந்திருக்கே. ஆகையால் வெறும் எக்ஸைட்மெண்ட் மைண்டோட நாம் பேசாம, யோசிச்சு பேசுவோம்...''

''ஓ.கே... உமா நம்ம ப்ரெண்ட்ஸ்ங்ககிட்ட கூடவா இத பத்தி பேச வேண்டாங்கறே.''

''யெஸ்...இப்ப பேச வேண்டாம். பிறகு விரிவா பேசிக்கலாம். இப்ப என் கூட வா. நாம மலை அடிவாரத்துக்கு இந்தப் பாதை வழியாவே போயிடுவோம்.''

-அவன் அழைக்க பாஸ்கர் டார்ச் லைட்டை உயர்த்தி இறங்கி வந்த படிப்பாதையின் மேல் விட்டான். உள்ளே இறங்க வழி விட்டிருந்த பீடம் இப்போழுது மூடிக் கொண்டு விட்டிருந்தது.

இதற்குள் அடர்த்தியான இருளில் மலை அடிவாரத்திற்கு செல்லும் கதவைத் திறக்கவும், குபீர் என்று காத்திருந்த மாதிரி பாய்ந்து வந்தது ஒரு வௌவால் ஒன்று. உமா பயத்துடன் பாஸ்கர் மேல் விழுந்தாள். எந்த இடம் எந்த காலமாக இருந்தாலும் பருவ வயதில் ஒரு பெண்ணும் ஆணும் ஸ்பரிசிக்கும்படியான எந்த ஒரு சம்பவமும் அது அதிர்ச்சிக்குரியதன் பின்னணியில் நிகழ்ந்தாலும் அதில் இனிமை கூத்தடிக்க தொடங்கிவிடும் எனும் நிஜம் பாஸ்கருக்குப் புரிந்து போனது.

அழகிய உமா!

வாளிப்பான பதினெட்டு வயது. பிரம்மனின் விசேஷ வரப்படி செழித்த மார்பழகுடன் பொத்தென்று ஆடவன் ஒருவனின் மைதான மார்பில் விழுந்தால், அனல்மின் உற்பத்திக்கென தனியாக நிலையமா அமைக்க வேண்டும்?

பாஸ்கருக்குள் காமப்பித்து கால் கை என்று பரபரப்பாக ஓடிப்பிடித்து விளையாடியது. நெடுநேரம் மௌனம். பின் ஒருவழியாக சுதாரிப்பு. உமா மெல்ல அவன் மார்பிலிருந்து மீண்டாள். ''சாரி பாஸ்...''—என்றாள்.

''எகெய்ன் ஐ நீட் அதர் சாரி உமா...''— என்று பாஸ்கர் பேசின விடலைக் குறும்பு பாஷையை ரசிக்க அந்தப் போதில் உமாவால் முடியவில்லை.

திறந்து கொண்டு கதவுக்கப்பால் டார்ச்சின் ஒளியில் திண்டு திண்டாக மலையைக் குடைந்து உருவாக்கிய படிகள் பார்த்து பார்த்து இறங்கும்போது சில இடங்



களில் மூச்சை அடைத்தது. வளைந்து வளைந்து போனது பாதை. எவ்வளவு தூரம் போகிறது என்பதை கணிக்க முடியவில்லை உமா பாஸ்கரின் கைகளை இறுகப் பற்றிக்கொண்டு இறங்கினாள். அவனுக்கு அந்த ஒன்றிற்காகவே நெடுந்தூரம் அந்த பாதை செல்ல வேண்டும் என்று தோன்றியது. ஒரு கட்டத்தில் சில்லென்று முகத்தில் அறைபட்டது மலைக்காற்று.

வியர்வை ஒழுகலை பனியாக்கி சில்லிட விட்டது. ''அடிவாரம் வந்துடிச்சின்னு நினைக்கிறேன்.''—என்ற உமாவைப் பூர்ண சந்திர ஒளிக்கதிர்கள் வரவேற்க, ஆவாரஞ் செடிப் புதர்கள் வெளிக்காற்றில் ஆடியபடி தெரிந்தன.

ஒரு புதரை நிமிண்டிக் கொண்டு இருவரும் வெளியே வந்தனர். மலையின் இடப்பக்கம் அது. ஆளரவமே இல்லை. பாஸ்கர் சோம்பல் முறித்து கைகளை உயர்த்தினான். அப்பொழுது பார்வை ஒரு பாறை விளிம்பை பார்க்க பார்வையில் தீப்பிடித்துக் கொண்டது.

பாறைவிளிம்பில் மேல் வரிசையாக படம் எடுத்தபடி நாகங்கள். உமாவும் பார்த்தாள். பயத்தில் நாவறண்டு போனது. அப்பொழுது தூரத்தில் யாரோ அழும் சப்தம் மிக மெலிதாக கேட்டது. சப்தம் வந்த திக்கில் சரீரம் மெல்ல நகர்ந்தது. நாகங்கள் அசையாமல் வெறித்தன. சந்திர ஒளியில் இப்படி ஏகாந்தமாக படம் விரித்து நிற்பது எங்களுக்கு மிகப்பிடித்த ஒரு விஷயம் என்பதுபோல் பார்த்தன.

அழுகை சப்தம் இப்போது பெரிதாகிக் கொண்டே போனது. இருவரும் சப்தத்தை சமீபித்த இடத்தில் ஒரு குடிசை தெரிந்தது. குடிசையில் மெலிதான காடா விளக்கின் வெளிச்சம்.

பாஸ்கர் மெல்ல குடிசைக்குள் எட்டிப் பார்த்தான். ஒரு வயதான கிழவி சோகம் தாளாமல் அழுது கொண்டிருந்தாள். தூங்கும் வேளையில் விழித்து அழும் அள வுக்கு அப்படி என்னதான் நேர்ந்து விட்டிருக்கும்?

பாஸ்கர் மெல்ல தலையை வெளியே இழுத்துக் கொண்ட உமாவைப் பார்க்கும்படி சைகை காட்டினான்.

உமா எட்டிப் பார்த்தாள். பாட்டியின் முகம் பளிச் சென்று தெரிந்தது. எங்கேயோ இதற்கு முன் பார்த்தது போல் நினைவில் சண்டித்தனம். வெகு சீக்கிரத்தில் நினைவுக்கு வந்துவிட்டது. இது அழகம்மைப் பாட்டி! பட்டநாயக்கரின் ஒரே தங்கை. ஏறத்தாழ நான்கு தலை முறைக்கு முந்தைய பாட்டி. பேத்தி ஜீவாவைக் கண்டு விட்டால் அப்போதே பொக்கை வாய் பொங்கிக் குழிய பகபகவென்று சிரித்துப் பாசமழை பொழியும் பாட்டி.

பாட்டி நீ இன்னுமா சாகவில்லை?—உமா விக்கித்து திக்கித்து ''பாட்டி'' என்றாள் கேவலாக. சப்தம் கேட்ட பாட்டிக்கு சப்த நாடியும் ஒடுங்கின மாதிரி ஆகிவிட்டது. மருண்டு போய் பார்த்தாள். நடுங்கும் குரலில் திருப்பிக் கேட்டாள். ''ஆரது?''

''நான்தான் பாட்டி ஜீவா...'' - உமா தன்னை அறியாமல் சொன்ன பதிலில் பாட்டியின் பஞ்சு விழி களில் நெருப்பின் ஜொலிப்பு.

''ஜீவாவா? என் அண்ணன் பேத்தி ஜீவாவா? பட்டநாயக்கர் பேத்தி ஜீவாவா?''

கேட்டுக் கொண்டே தடுமாறியபடி எழுந்தவள் எதிரே பாஸ்கரும் உமாவும் போய் நின்றனர். பாட்டியின் முகத்தில் ஆச்சரியக் கூத்தாட ஆரம்பித்தது.



''தாயே செப்பகா... உன் கருணையே கருணை. அம்மா ஜீவா, மறுபடி பொறந்து வந்துட்டியா? உன்னை நினைச்சுதானே நான் அழுது கிட்டிருந்தேன். பட்ட நாயக்கர் வம்சம் பாழா போகப் போவுதேன்னு நினைச்சு குமுறிக்கிட்டிருந்தேன்.

விடிஞ்சா உன் மகள் செம்பகத்துக்கும் அந்த அரக்கன் தியாகுவுக்கும் கல்யாணம். அது மட்டும் நடந்துட்டா பட்டநாயக்கர் வம்சத்தை காப்பாத்த யாராலேயும் முடியாதே, என்ன செய்வேன்னு குமுறிக்கிட்டிருந்தேன். சரியான நேரத்துல வந்துட்டியா தாயி...''

-பாட்டி பேசிக் கொண்டே உமாவின் கன்னங்களை வருடி கண்ணீர் வழிய திருஷ்டி கழித்தாள்.

''நான் வருவேன்னு தெரியுமா பாட்டி?''

''ஒரு நம்பிக்கைதான் தாயி...''

''செத்தவ எப்படி வரமுடியும்?''

''அதான் மறுபிறப்பெடுத்து வந்துட்டியே...''

''நான் இப்ப உமாவாச்சே?''

''இந்த பிறப்புல உமா. ஆனா போன பிறப்புல ஜீவா தானே...''

''இதை உலகம் நம்புமா?''

''இந்த ஊர் நம்பும். உன் உருவத்தை யார் பார்த்தா லும் நம்புவாங்க. அச்சு அசலா ஜீவாவேதான் நீ.''

''நானும் ஒத்துக்கறேன். எனக்குள்ளேயும் பழைய நினைவு ஓடுது. ஆனா இதெல்லாம் கனவான்னு சமயத் துல எனக்கு தோணுது...''

''கனவில்லம்மா... நிஜம். சத்யவதியா கற்புக்கரசியா கதறக்கதற செத்த யாரும் ஆத்மசாந்தி அடையறதே

யில்லை. அதுலேயும் செண்பகதேவி அருளுக்குப் பாத்திரமானவங்க விதியால துர்மரணம் அடைஞ்சாலும் அவங்க லட்சியங்களை வாழ வைக்க அவங்க திரும்ப பொறந்தே தீருவாங்கங்கறது இந்த ஊரோட அசைக்க முடியாத நம்பிக்கை ஜீவா.

நீதான் அந்த செம்பகதேவி பொண்ணாச்சே! உன் மரணத்தோட அவள் பூஜை புனஸ்காரம் எல்லாம் போச்சே தாயி இனி எல்லாம் சரியாயிடும் ஜீவா. இனி எல்லாம் சரியாயிடும். நாளைக்கு காலைல அந்த கல்யாணத்தை மட்டும் எப்படியாவது தடுத்து நிறுத்திடும்மா. உன் பொண்ணை காப்பாத்து...''

''என்ன கல்யாணம் பாட்டி?''

''உனக்கு பழி வரவும், உன் சாவுக்கும் காரணமான தியாகு, பட்டநாயக்கர் சொத்தும், பொக்கிஷமும் தனக்கே வரணும்னு உன் பொண்ணை கட்டிக்கப் போறான். உன் பொண்ணை அடிமையா வெச்சு வளர்த்தவன். நாளை காலைல தாலி கட்டப்போறான். கல்யாண வயசுல ஒரு பொண்ணு இருக்கச்சே அவன் மப்பை பார்த்தியா.. தட்டிக் கேட்க ஆளில்லையே?''

-பாட்டி பேசப் பேச தலையைப் பிய்த்துக் கொள்ளலாம் என்றிருந்த பாஸ்கர் சட்டென்று இப்போது தலையிட்டான்.

''உமா, இந்த பாட்டி பேச்சுல ஒண்ணு மட்டும் நல்லா புரியுது. பூர்வஜென்மத்துல நீ ஜீவா. மற்றபடி எதுவுமே புரியலை. யார் தியாகு? அது என்ன கல்யாணம்?''

-பாட்டி பாஸ்கரை வெறித்தான்.

''டேய் நடந்ததை கேள்விப்பட்டா உனக்கு பேச்சு மூச்சே நின்னுடும்டா. நானே இப்ப அப்படித்தான் இருக்கேன்...'' - என்றான்.



''நடக்கறதை பார்த்தே எனக்கு அப்படித்தான் இருக்கு. இதுல நடந்ததுன்னு ஒண்ணு இருக்கா என்ன?''

—பாஸ்கரை உமா முறைத்தபடி பேசினாள்.

''பாட்டி என்ன நடந்ததுன்னு கொஞ்சம் சொல் அழிஞ்சும், அழியாம தெரிஞ்சும் தெரியாம எனக்குள்ள ஒரே குழப்பம் நீ தெளிவா சொல்றதுல தான் எனக்கு குழப்பம் நீங்கணும். எனக்கு மட்டுமல்ல என்கூட வந்துருக்கற என் நண்பர்களுக்கும்...''

''ஆமா எங்க அவங்க!''

''தேடணும். இனிதான் தேடணும். எங்க இருக்காங்களோ எப்படி இருக்காங்களோ?''

''உமா நான் போய் அழைச்சுக்கிட்டு வரேன். நீ இங்கேயே இரு...'' என்றான் பாஸ்கர்.

'வேண்டாம் நான் உங்களோட வரேன். உங்க இடத்துக்கு வரேன். வந்து எல்லாத்தையும் சொல்றேன் என்றபடி பாட்டி கம்பெடுத்தபடி நிமிர்ந்தாள்.

''பாட்டி வழியில நிறைய பாம்புங்க...'' என்றாள் உமா.

''அதுங்கதான் எனக்கு காவல் ஜீவா. அதனால தான் இந்தப் பக்கம் அவ்வளவாயாரும் வர்றதில்லை. இந்த கிழவியால என்ன பெரிசா வந்துடப்போவுதுங்கற தப்புக் கணக்குல என்னையும் உசுரோட விட்டு வெச்சு வேடிக்கை பார்த்துக்கிட்டிருக்கான் அந்த கொலைகாரன் தியாகு...''

—நடந்தபடியே பாட்டி பேசுகிறாள். மலையை சுற்றியபடி அடிவாரத்தை ஒருவழியாக எட்டினார்கள். கெடிகாரம் மணி பதினொன்றை தாண்டியிருந்தது.

நல்லவேளையாக அடிவாரத்தில் வேனில் எல்லோரும் இருவருக்குமாக காத்துக் கொண்டிருந்தனர்.

பாட்டியுடன் வந்து நின்றவர்களைப் பார்த்து ஆச்சரியமும் திகைப்பும் அடைந்தனர்.

''எய் எங்க போயிட்டீங்க இரண்டு பேரும்''—ஒரே கேள்வியை எல்லோரும் கேட்டனர்.

''ஆமா யார் இந்த பாட்டி''-ஆவலான அவர்கள் கேள்விக்கு வேனில் ஏறி விடைதர ஆரம்பித்தாள் பாட்டி எல்லோரிடமும் நிசப்தமான ஒடுக்கம.

அதேசமயம் வேனுக்கு வெளியே அடிவார சருக்கத்தில் ஒரு மரத்தின் பின்னால் இருவர் ஒளிந்தபடி வேனையே உற்றுப் பார்ப்பது அவர்களுக்கு தெரியவில்லை.

பாட்டியோ 1975க்கு போயிருந்தாள்.

---

**நல்ல எண்ணங்களையே எண்ணுங்கள். தவறு என்று தெரிவதை உடனே தவிர்த்திடுங்கள் மனது தவறு எனும் சகதியில் விழுந்து மீண்டாலும் அதன் பாதிப்புகள் ஆயுட் காலத்திற்கும் தொடரும் மனது ஒரு அற்புதமான நுட்பமான விவரிப்புக்கு அப்பாற்பட்ட இறைவன் படைப்பு இதைக் கண்ணாடிப் பாத்திரம் போல் கையாள வேண்டும் இல்லா விட்டால் இதற்கு நேரும் பாதிப்பு ஏழு பிறப்புக்கும் தெரியும்.**

**—டாக்டர் வில்சன்**

---

# 5

''பட்ட நாயக்கர் பேரைச் சொன்னாலே ஊர் கையெடுத்து கும்பிட்டு கன்னத்துல போட்டுக்கும். அப்படி ஒரு மரியாதை, மதிப்பு...''-அழகம்மை பாட்டி ஒரு பூர்வ வரலாற்றை சொல்லத் தொடங்கியிருந்தாள்.



அவர் மகன் சிங்க நாயக்கரும், அப்பனுக்கு தப்பாத பிள்ளை. என் ஆசை மருமக பிள்ளை அவன் சிங்க நாயக்கரோட சம்சாரம் மனோன்மணி துடியலூர் ஜமீன்தாரிணி. இவனோட தம்பி தியாகு இருக்கானே அவனை...

-அழகம்மை பாட்டி தியாகு பேரை சொல்லும் போது ஏற்பட்ட குரூரம் அவள் முகத்தில் கொப்பளித்தது.

'ஜமீனை எல்லாம் இந்திய அரசாங்கம் ஒழிச்சு மான்யம் கொடுத்துட்டாலும் சொத்து பத்துல மனோன்மணி குடும்பம் பட்ட நாயக்கர் குடும்பத்துக்கு சளைச்சது இல்லை. ஆனா அவ்வளவையும் குதிரை ரேஸ்லையே ஒருத்தனால விட முடியும்னா அது தியாகுக்கு தான் பொருந்தும் அப்பவே அவன் பண்ணுன மைனர் தர்பார்ல துடியலூர் ஜமீனே நாறிப் போயிடிச்சு அவனாலேயே அவன் அப்பா ஈஸ்வர நாயக்கர் மூச்சு நின்னு போச்சுன்னா பாத்துக்குங்களேன்.

அப்பாவும் போயாச்சு...சொத்தும் இல்லை. யாரிருக்கா இனி அவனுக்கு? இந்த வேலமங்கலம் வந்து சேர்ந்துச்சு அந்த நாய் அப்ப பிடிச்ச சனிதாம்மா இன்னும் பட்ட நாயக்கர் குடும்பத்தை விடலை...''

-பாட்டி சொல்லிவிட்டு பெரிதாக அழ ஆரம்பித்தாள், உமாவிடம் நடுக்கம் கலந்த அமைதி. பாட்டி சொன்ன மனிதர்களின் உருவங்கள் எல்லாம் மெள்ள அவளுக்குள் மூளைச் செல்லில் நிமிண்டிக் கொண்டு நெளிய ஆரம்பிக்கின்றன.

தன் பூர்வஜென்ம வரலாறு இப்படி தன்னுள்ளேயே ஒரு சில செல்களில் பதிவாகியிருக்கும் என்பதை அவளா லேயே நம்ப முடியவில்லை.

பாட்டி தொடர்கிறாள்.

"சிங்க நாயக்கர் மனோன்மணி தம்பதிக்கு ஒரே பெண் குழந்தை.அதுதான் ஜீவா! அந்த செம்பக தேவியே மகளா வந்து பிறந்துட்ட மாதிரி அப்படி ஒரு அழகு... அப்படி ஒரு தேஜஸ்!"-பாட்டி அப்படி சொல்லி விட்டு உமாவை ஆழமாக ஒரு பார்வை பார்க்கிறாள்.

"எரிஞ்சு சாம்பலாயிட்ட ஒரு அழகு திரும்ப அப்படியே பிறந்து வந்துருக்குன்னா இந்த பூமியிலதான் நமக்கு புரிபடாத விஷயங்கள் எத்தனை? எத்தனை?"

-பாட்டியின் கேள்வி அந்த கல்லூரிப் பட்டாளத் தையே அதிசயிக்க வைக்கிறது. ஞாபகமாக பாஸ்கர் டேப்ரிக்கார்டரை ஆன் செய்து பாட்டியின் பேச்சை ரெக்கார்ட் செய்யத் தொடங்குகிறான்.

"ஜீவான்னா தாத்தா பட்டநாயக்கருக்கு அப்படி பிரியம் கோச்சு வண்டியில தாத்தாவும், பேத்தியும் புறப்பட்டு போனா ஊரே பார்த்து அதிசயிருக்கும். பட்டுப் பாவாடையும், சட்டையுமா, தலை நிறைய மல்லிகையும், கனகாம்பரமுமா தங்கம் வைரம் பரபரன்னு மின்ன ஜீவா தாத்தா பக்கத்துல உக்காந்து போறதை பார்த்து ஊரே அதிசயிச்சாலும் ஒருத்தன் மட்டும் அதை கண்டுக்கவேயில்லை. அவன் பேரு கருணாகரன். எப்பவும் ஊரே ஒரு பாதையில போகும் போது ஒருத்தன் மட்டும் தனியா போனா அவனை கவனிக்கிறது மனுஷ இயல்புதானே?

செம்பகதேவி கோயிலுக்கு ஒரு பௌர்ணமியன்னிக்கு அந்த கருணாகாரன் சாமி கும்பிட வந்த இடத்துல ஜீவா அவனைப் பார்த்து ஆச்சரியப்பட்டு போனா! பணம்



காசுக்கு துளியும் மசியாத மனசு. ஜீவாவை அவன் ஏறெடுத்துகூட பார்க்காம செம்பக தேவியையே பார்த்துக்கிட்டிருந்தான். அப்பவே ஜீவா மனசு கட்டுனா இவனைத்தான் கட்டணும்னு முடிவெடுத்துடுச்சு.

கருணாகரன் சாதியில ரொம்ப தாழ்ந்த பய. குதிரைக்கும், மாட்டுக்கும் லாடம் கட்றதுதான் அவங்க பரம்பரை தொழில். இருந்தும் பயபுள்ள எப்படியோ கஷ்டப்பட்டு பி.ஏ.வரை படிச்சிருந்தான். ரொம்பவும் ரோஷக்காரன். ஆனா ஜீவாவோ இவனை நெனைச் சிட்டா ஆனா ஆத்தா மனோன்மணிக்கோ தம்பி தியாகுவையே கட்டி வைக்கணும்கறது எண்ணமா இருந்துச்சி.

தியாகுவும் ஜீவாவே கதின்னு சுத்திசுத்தி வந்தான். பட்ட நாயக்கருக்கோ தியாகுவை கொஞ்சம்கூட பிடிக்கலை. சதா சாராயம், பீடி, சிகரெட்டுன்னும் தேவடியாத்தனமும் பண்ணிக்கிட்டிருக்கறவனா தன் ஜீவாவுக்கு புருஷனா வர்றதுன்னு நினைச்சு காட்டமா எதிர்த்தார். தாத்தாகூட சேர்ந்து ஜீவாவும் மாமாவை மறுதலிச்சா. சிங்க நாயக்கரும் ஜீவா கட்சிதான்.

தனக்கு ஆதரவே இல்லை. எதிர்ப்புதான் அதிகம் கறது தியாகுவுக்கு தெரிஞ்சு போச்சு. இப்படியே போனா ஜீவாவை கட்டவே முடியாதுங்கறதும் அவனுக்கு புரிஞ்சு போச்சு. இந்த சந்தர்ப்பத்துலதான் பட்ட நாயக்கரும், சிங்க நாயக்கரும் கொளத்தூர் காட்டுக்கு வேட்டைக்குப் போனாங்க. போன இடத்துல என்ன நடந்துச்சோ, ஏது நடந்துச்சோ இரண்டு பேரும் திரும்பலை. அவங்க பிணங்கதான் திரும்பி வந்துச்சு. உடம்பெல்லாம் கிழிபட்டு, அறுபட்டு அவங்க வந்த கோலத்தைப் பார்த்து நானே கதிகலங்கிட்டேன். கேட்டா புலி

அடிச்சிடிச்சுன்னு கூசாம பொய் சொன்னான் இந்த தியாகு.

மனோன்மணி சுதாரிச்சுகிட்டா. தம்பியை தனியா அழைச்சி எப்படி இது நடந்துச்சின்னு கேட்டா. நீ பொய் சொல்றேன்னு சொல்லி கூப்பாடு போட்டா. அந்த கல்லுளிமங்கன் அசைஞ்சு கொடுக்கலை.

கொஞ்ச நாள் கழிச்சு திரும்பவும் ஜீவாவை கல்யாணம் பண்ற விஷயத்துல தவியா தவிக்க ஆரம்பிச்சான். மனோன்மணியை போட்டு பிடுங்கி எடுத்தான். பட்டநாயக்கர் குடும்பத்துலையோ அவனோட காட்டு தர்பார்தான் இரண்டு முக்கிய ஆண் சிங்கங்க இல்லாத இடத்துல நரியோட நாட்டாமை

ஆனா ஜீவாவோ கருணாகரனை காதலிக்க ஆரம்பிச்சா. ஆரம்பத்துல பிடி கொடுக்காத கருணாகரன் போகப் போக இளகிட்டான். இரண்டு பேரும் உசுருக்கு சுரா காதலிக்க ஆரம்பிச்சுட்டாங்க. இது தியாகுவுக்கு தெரிஞ்சப்போ தியாகு அடைஞ்ச அதிர்ச்சிக்கு அளவே இல்லை. கருணாகரனை கூப்பிட்டு கடுமையா எச்சரிச்சு பார்த்தான். ஜீவாவை தனி அறையில வெச்சு பூட்டி வைச்சு சித்ரவதை செய்தான்.

ஆனா பருப்பு வேகலை. இப்பதான் ஒரு அதிசயம் நடந்தது. பூட்டுன பூட்டு அப்படியே இருக்க அநத அறையில இருந்த ஜீவாவை காணலை.பட்டநாயக்கருக்கு பிறகு சிங்க நாயக்கருக்குகூட சரியா தெரியாத சுரங்கப் பாதை வழியா செம்பக தேவி கோயிலை அடைஞ்ச ஜீவா நேரா கருணாகரனைப் பார்த்து கோயில்லையே வெச்சு தாலி கட்டிக்கிட்டா!

மாலையும் கழுத்துமா வந்து நின்னவங்களை இனி யார் என்ன செய்துட முடியும்? தியாகு ஒருபக்கம் குமுறு னாலும் மறுபக்கம் சுதாரிச்சு அட்சதை அள்ளிப் போட்



டான். நல்லவன் மாதிரி நடிக்க ஆரம்பிச்சான். அப்படி நடிச்சாதான் காலம் தள்ள முடியும்கறது அவனோட நிலை.

காரணம். பட்ட நாயக்கரோட உயில் அப்படி! தன் சொத்து முழுவதும் பேத்தி ஜீவாவுக்கும், அவ புருஷ னுக்கும்னு அதில் இருந்தது. ஜீவாவுக்கு பிறகு அது ஜீவாவோட பொண்ணுக்கும் அவனோட புருஷனுக்கும் தான் சேரணும்னு அதுல இரண்டு வரிகளை பட்ட நாயக்கர் என்ன காரணத்துனாலேயோ எழுதியிருந்தார்.

ஜீவாவுக்கு பெண் குழந்தைதான் பிறக்கும்கறது எப்படித்தான் பட்ட நாயக்கருக்கு தெரியுமோ? வைத்தீஸ்வரன் கோயில் நாடி ஜோசியன் சொன்னதா தான் இருக்கணும். அந்த நாடி ஜோசியன் எழுதிக் கொடுத்த ஜோசியக் குறிப்பு இதோ...

அழகம்மை பாட்டி மடியிலிருந்து எடுத்து நீட்டிய அந்த நாற்பது பக்க நோட்டை வைஜெயந்தி என்னும் உமாவின் நெருங்கிய சினேகிதி ஆவலாக வாங்கிப் பார்த்தாள்.

ஏறத்தாழ இருபது வருஷத்துக்கு முந்திய நோட். இலேசாகப் பழுப்பு தட்டியிருந்தது. முன் அட்டையில் கஜமுக விநாயகர் தோற்றம். அட்டையைத் தள்ள முதல் பக்கத்தில் குருஸ்துதி. அடுத்த பக்கத்தில் ஜாதக கட்டங் கள். அதற்கு அடுத்த பக்கங்களில் நாலு நாலு வரிகளில் முடியும் பலன் கூறும் தமிழ்ப் பாடல்கள். பல வரிகள் புரிந்தன. சில வரிகள் புரியவேயில்லை. பக்கத்திலேயே ஜோதிடனின் உரைநடை விளக்கம்.

ஒரு விஷயம் வைஜெயந்தியை கிள்ளியது.

''பட்டநாயக்கர் எனும் நீ அகால மரணமேயடை வாய். இது உன் பூர்வ ஜென்ம பாபத்தால் வருவது.

உனக்குப் பின் உன் வம்சம் தள்ளாடும். உன் மகன் பேத்தி முதலியோரும் கொல்லப்படுவர். இயற்கை மரணமே உன் வம்சத்திற்கு இல்லை. ஆனாலும் செண்பக தேவி அருளால் உன் கொள்ளுப்பேத்தியால் உன் வம்சம் மறுமலர்ச்சி அடையும்.

இறந்து பிறக்கப்போகும் உன்பேத்தி ஜீவா உமையின் பேரோடு திரும்ப வந்து உன் வம்சம் காப்பாள்... அது வரை உன் பொக்கிஷங்களை செண்பக தேவியிடமே விட்டு விடுவாய்...

உன் குலதெய்வமான செண்பக தேவிக்கே பூசனைகள் அற்றுப் போகும். ஐ நான்கு வருடம் கழித்து அவளிடம் என்று முதல் தீபம் எரிகிறதோ அன்றிலிருந்து விடிந்து விடும் உன் வம்சம்.

—உரக்க படித்த வைஜெயந்தியின் விளக்கம் கேட்டு கூட்டமே வாய் பிளந்தது.

''இப்ப புரியுதா...உமாவைப் பார்த்த மாத்திரத்துல நான் ஜீவாதான்னு ஒத்துக்கிட்ட காரணம் இதுதான். இதெல்லாம் விதியோட சங்கல்பம் தாயி...விதியோட சங்கல்பம்...''

''பாட்டி பாட்டி...நீ கதையைச் சொல்லு. முக்கிய மான கட்டத்துல விட்டுட்டியே...நல்லவன் மாதிரி நடிக்க ஆரம்பிச்ச தியாகு அப்புறம் எப்படி நடந்துகிட்டான். ஜீவா எப்படி செத்தா?''

—பாஸ்கர் ஆவலாக கேட்டான்.

''சொல்றேன். அந்த படுபாவி ஜீவாவை எப்படியும் அடையணும்கற ஆசையை அப்பக்கூட விடலை. அவனுக்கு அதுக்கு ரொம்ப பயன்பட்ட நபர் ஜீவா புருஷன் கருணாகரன்தான். கருணாகரன்கிட்ட ரொம்ப நல்லவிதமா நடந்துகிட்டான் நரி. தான் ரொம்ப



அயோக்கியனா இருந்து இப்ப மாறிட்டதா கருணா கரனை நம்ப வெச்சான்.

இந்த நிலையிலதான் ஜீவா கர்ப்பமானா! அதே சந்தர்ப்பத்துல அவளோட அம்மா மனோன்மணி பாம்பு கடிச்சு செத்துப் போனா...ஜீவாவுக்கு இப்ப புருஷனைத் தவிர யாரும் துணையில்லை. புருஷனோ அந்த தியாகு பிடியில. சண்டாளன் தியாகு மெள்ள கருணாகரனை கஞ்சாவுக்கும் அபினுக்கும் அடிமையாக்கிட்டான். போதைக்காக கருணாகரன் ஊசியெல்லாம் போட்டுக்கற அளவுக்கு போயிடிச்சு நிலைமை.

சதா போதையில கருணாகரன் கிடக்க, திரும்பவும் தியாகுவோட நாட்டாமை ஆரம்பமாயிடிச்சு. பட்ட நாயக்கர் சொத்து பத்து கணக்குகளை வரவு செலவை தியாகுவே பார்த்தாகணும்கற நிலைமை.

ஜீவா கர்ப்ப வயிற்றோட இந்த சூழ்நிலையை எண்ணி தவிச்சா. தியாகு சதி பண்றது நல்லா தெரிஞ்சு போச்சு. தியாகுவோ பட்டநாயக்கர் மாளிகை பூரா குடைஞ்சிகிட்டிருந்தான். பட்டநாயக்கர் எழுதி வெச்ச உயிலை அவன் தேட்றது ஜீவாவுக்கு நல்லா தெரிஞ்சு போச்சு. உயிலோட சேர்த்து பட்டநாயக்கர் தன் குடும்பத்து வைர நகைகளையும் வெச்சிருந்தார். அதுல அந்த வைர கிரீடம் ரொம்ப விசேஷம். பட்டநாயக்கர் வம்ச வாரிசுகளுக்கு பேர் சூட்டு விழா நடக்கும்போது போட்டு விடுவாங்க. நமக்கு சுதந்திரம் கிடைக்கறதுக்கு முந்தியே அதோட மதிப்பு ஒரு கோடி ரூபா...இப்ப அது பல கோடி போகும்.

உயிலை ஒண்ணும் பண்ண முடியாட்டியும் அந்த வைர நகைகளையாவது அடிச்சிடணும்கறது அவனோட எண்ணம்.

இந்த சூழ்நிலையில் ஜீவாவுக்கு இருந்த ஒரே துணை

நான்தான். அது எட்டு மாச வயித்தோட என் மடியில் விழுந்து தன் புருஷனையும், தியாகுவையும் எண்ணி அழுததை இப்பகூட என்னால ஜீரணிக்க முடியலை தன் சோகத்துக்கு மருந்தா அவ இந்த மலைக்கோவில் ஆத்தா செம்பக தேவியைதான் நம்புனா. நான் தவறுனாலும் அவ கோயிலுக்குப் போய் அவ விளக்கு போட தவறுன தில்லை.

கர்ப்ப வயிற்றோட அவ படியேறி கோயிலுக்கு போகும்போது அத்தை பாட்டி நான்தான் அவளுக்கு காவல். கோவிலுக்கு போனா கர்ப்பகிரகத்துக்கு உள்ற போய் கர்ப்பகிரக கதவை சாத்திக்குவா. என்னைகூட உள்ள சேர்க்க மாட்டா!

கேட்டா பாட்டி நான் நிர்வாணமா பூஜை செய்யறதை யாரும் பார்க்க கூடாது பாட்டிம்பா...

அவ அவ்வளவு கஷ்டப்பட்டு பூஜை புனஸ்காரம்னு இருந்தும் ஒரு பலனும் இல்லையே...அவளுக்கு குழந்தையும் பிறந்திடிச்சு. நாடி ஜோசியம் சொன்ன மாதிரி பொண் குழந்தை!

குழந்தை அப்படியே ஜீவாவை கொண்டிருந்துச்சு. இந்த சந்தர்ப்பத்துல தான் அந்த தியாகு பெரிய சதி வேலையை செய்தான். சதா மயக்கத்துல இருக்கற கருணாகரன்கிட்ட ஒரு டாக்டரை கூட்டிகிட்டு போனான். அந்த டாக்டர் கருணாகரனை சோதனை பண்ற மாதிரி பண்ணிட்டு ''மிஸ்டர் கருணாகரன் உங்களுக்கு குழந்தை பிறக்க சந்தர்ப்பமே இல்லை. ஏன்னா உங்கிட்ட உயிரணுவே இல்லைன்னு'' சாதிச்சார்.

கருணாகரனுக்குள்ற சந்தேகப் பிசாசை பிடிச்சு அடைச்சிட்டான் தியாகு. கருணாகரன் இதைஉடனடியா நம்பலை. வேற ஒரு டாக்டரை பார்த்தான். அந்த



டாக்டரும் அப்படியே சொன்னார். அதுவும்கூட தியாகுவோட ஏற்பாடுதான்.

கருணாகரன் குழம்பிப்போய் கடைசிவரை குழந்தையைப் பார்க்கக்கூட வரலை. குழந்தைக்கு பேர் வைக்கற நாளும் வந்துடிச்சி. வம்ச வழக்கப்படி வைரக் கிரீடத்தை வெச்சு அழகு பார்க்கப் போற நேரம். பேர் வைக்கற சம்பிரதாய நிகழ்ச்சி. இந்த மலைல உள்ள செண்பகதேவி கோவில்லதான் நடக்கணும்னு சொல்லிட்டா ஜீவா.

அதேபோல் நடந்துச்சி; தலையில வைரகிரீடத்தோட குழந்தை தொட்டில்ல தவழ்ந்த காட்சி இப்பகூட ஞாபகத்துல துளியும் மாறாம இருக்கு. தியாகு பக்கத்துலையே வெறி பிடிச்ச மாதிரி நின்னு அதை பார்த்துகிட்டு இருந்தான்.

ஜீவாவோ புருஷனுக்காக காத்திருந்தா. கருணாகரனும் வந்தான். வந்தவன் குழந்தையைப் பார்க்காம 'இது யாருக்குப் பொறந்த குழந்தைன்னுதான் முதல்ல கேட்டான்!' ஆடி போயிட்டா ஜீவா. பதில் பேசாம கதறிக் கதறி அழுதா. கருணாகரன் காலைப் பிடிச்சுகிட்டு 'இது உங்க குழந்தைன்னு அழுதா...'

ஊரே பிளந்த வாயை மூடலை பேர் சூட்டு விழாவுக்கு வந்த சொந்தபந்தங்க ஊர்க்காரங்க எல்லோரும் திகைச்சு நின்ன அந்த நேரத்துல தியாகுவோட ஆள் ஒருத்தன் பரசுன்னு பேர். திடீர்னு முன்னால வந்து ''நமக்குதான் பொறந்ததுன்னு சொல்லு ஜீவா''ன்னு சொன்னப்போ ஜீவாவுக்கு நாடி நரம்பே அறுந்து போயிடிச்சு. நானும் கொதிச்சு போய் அந்த பரசு சட்டையை பிடிச்சேன். அவன் சளைக்கலை. 'கருணாகரனுக்கு குழந்தை பிறக்க வழியில்லைன்னு டாக்டருங்க சொல்லிட்டாங்க. இவனுக்கு ஆண்மை இல்லைங்கறதால ஜீவா தவிச்சுப் போனா. காதலிச்சு கல்யாணம்

செய்தவன் இப்படி ஏமாத்திட்டானேன்னு புலம்பி என் மடியில விழுந்தா. நான் வேண்டாம்னு சொல்லிப் பார்த்தேன். 'இல்லே எனக்கு வம்சம் வேணும், வாரிசு வேணும். இல்லாட்டி சொத்தெல்லாம் எனக்குப் பிறகு கோயிலுக்கு போயிடும்னு' சொல்லி வம்பா என் மூலமா குழந்தை பெத்திகிட்டு இருக்கா. ஒருவகையில ஜீவா இப்போ என் பொர்ஞ்சாதின்னான் பரசு...

பெயர் சூட்டு விழா பெயர் கெட்டுப்போன விழாவா மாறிடிச்சும்மா. ஜீவா அப்போ கதறுன கதறல் எனக்கு இப்பகூட நினைவுல இருக்கு...!

அழகம்மை பாட்டியின் விவரிப்பில் இந்த இடத்தில் ஒரு சின்ன இடைவெளி. வேனில் அவ்வளவையும் அசையாமல் கேட்டுக்கொண்டிருந்த உமாவின் விழிகளில் கண்ணீர் பொல பொல என்று கொட்ட ஆரம்பித்தது.

''ஆமா பாட்டி... நீ சொல்றது எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு. என் புருஷன் எதுக்கையே என்னை கேவலமா பேசினவன் முகம் இப்பகூட எனக்கு ஞாபகத்துல இருக்கு. பரசுங்கற அந்த சண்டாளனை நான் விடப் போறதில்லை பாட்டி. விடப்போறதில்லை. விடப் போறதில்லை...''—வெறி பிடித்தவள் போல அலறின உமாவை, வைஜெயந்தியும் பாஸ்கரும் கட்டுப்படுத்துவதற்குள் துடித்துப் போனது கூட்டம்.

வெளியே மரத்தடியில் ஒளிந்தபடி கேட்டுக் கொண்டிருந்த இரண்டு உருவங்களில் ஒருவன் முகம் இப்போது உமாவின் பேச்சால் கருத்துப்போய் விட்டிருந்தது.

''டேய் ஜீவா திரும்ப பொறந்து வந்துருக்கறது நெஜம்தான். என் முகம் இன்னும் ஞாபகம் இருக்குன்னு சொல்றானேடா. கேட்டியா. என்னை சும்மா விடப் போறதில்லையாமே அவ. பயமா இருக்குடா பாண்டி எனக்கு...'' பக்கத்தில் இருந்த உருவத்திடம் அவன்



சொன்னது வேன் வரை கூட அந்த இருட்டில் கேட்டு விட்டது.

உடனேயே வேனை விட்டு சங்கரநாராயணனும், பாஸ்கரும் சப்தம் வந்த திக்குக்கு செல்ல, அந்த இரண்டு பேரும் மிரண்டு ஓட ஆரம்பித்தனர். சங்கரநாராயணன் எகிறிப் பாய்ந்ததில் ஒருவனைத்தான் பிடிக்க முடிந்தது. பாண்டி என்பவன் ஓடியே போய் விட்டான்'

''டேய் யாருடா நீ... இங்க ஒளிஞ்சுகிட்டு என்ன பண்றே?''-தரதரவென்று இழுத்து வந்து கேள்வி கேட்டவனை அவன் திருதிரு என்று முழித்தபடி பார்த்தான். வேனின் ஹெட்லைட்டை ஒருவன் தட்டிவிட பொங்கிப் பாய்ந்த வெளிச்சத்தில் அவன் யார் என்பது துல்லியமாகவே தெரிந்தது. உமா அவனைப் பார்த்த மாத்திரத்தில் கத்தத் தொடங்கினாள்.

''அடேய் பரசு நீயா...பரமசண்டாளா! அன்னிக்கு என் வாழ்க்கையையே கெடுத்த பாவி...''-என்று கத்தத் தொடங்கினாள்.

திடீரென்று அந்த பரசு தன்னை பிடித்துக் கொண்டிருந்த கைகளை உதறித்தள்ளிவிட்டு ஓட ஆரம்பித்தான்.

உமாதானும் வேனைவிட்டு இறங்கி அவனை துரத்துவாள் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. தலைதெறிக்க ஓடியவன் ஒருஇடத்தில் தடுமாறி நின்றான். அதற்கு மேல் போனால் நூறு அடிக்கும் குறைவில்லாத சரிவில் விழுந்து பாம்புப் புற்றுகளாய் உள்ள இடமாய்ப் பார்த்து அவைகளின் மேல் விழவேண்டியதுதான்.

மேலே சந்திர வெளிச்சம்...

கீழே வீச மறந்த காற்று...

எதிரே பதட்டத்துடன் பரசு!

உமாவோ புதிதாகத் தொற்றிய வெறியுடன் அவனை நோக்கி...பின்னாலேயே டார்ச்லைட் வட்டங்களுடன் நண்பர் கூட்டம்.

''உமா, வேண்டாம்...சொன்னா கேளு திரும்ப வா...அவனைத் துரத்தாதே...'' அவர்கள் உதடுகளில் அழைப்பு.

ஆனால் பாட்டியோ வேணைவிட்டு இறங்கவில்லை. இப்படியெல்லாம் நடக்கும் என்று தெரிந்தவள் மாதிரி சலனமில்லாமல் இருக்க, சரிவின் விளிம்பில் பரசுஎன்னும் தியாகுவின் கைத்தடி நடுங்கியபடி நின்று கொண்டிருந்தான்.

ரவுடித்தனத்துக்கு பேர்போனவன்தான். உமாவை ஒரு தூசாய் கருதி தூக்கி எறிய முடிந்த போதிலும், அவனுக்குள் இறந்துபோன ஜீவா தெரிவதால் அவனுக்குள் ரவுடித்தனம் ஒளிந்துகொண்டு பயம் கூத்தாடத் தொடங்கியிருந்தது அது நடுங்கும் அவனது கால்களுக்குக் கீழே அவனது பாரம்தாளாமல் நெகிழ்ந்து சரியும் மண்பிண்டங்களுக்கும் நன்றாக தெரிந்தது. இந்த நிலையில் ஒரு பேயைப்போல உமா முன்னேற முன்னேற அவன் நடுங்கியபடி ஒவ்வொரு அடியாக பின்னால் வைக்க ஏகாண்ட சரிவில் ஒரு கட்டத்தில் அவன் உடல் சரசரவென்று விழுந்து சரியத்தொடங்கியது.

ஆளுயர பாம்புப்புற்றுகள் மேலெல்லாம் அவன்உடல் உருண்டு விழ, புற்றுகள் நொறுங்க, அதனுள் ஒளிந்திருந்த பாம்புகள் சீறிக்கொண்டு வெளியே வர...

சில வினாடியிலேயே அவன் பாம்புகளின் கொத்தல் தாளாமல் உயிர் வேதனையோடு கத்துவது நன்றாகவே கேட்டது. அந்த இரவின் பிடியில் அந்த சப்தம் முதல்



சம்ஹார ஒலியாக வேலமங்கலம் எங்கும் எதிரொலிக்கும் போலத் தோன்றியது.

உமா அப்படியே விக்கித்து நின்றுவிட்டாள். மனதை விட்டு ஒருபாரம் இறங்கி விட்டமாதிரி ஒரு உணர்வு. நண்பர்கள் படைமெள்ள அவளை அணுகி சப்தம் வந்த சரிவில் டார்ச்லைட்டை பாய்ச்ச அதில் நெடுந்தொலைவில் வாயில் நுரை ததும்ப தென்பட்டது உயிரில்லாத பரசுவின் சரீரம்!

''யாரும் பரிதாபப்படாதீங்க... இவன் இன்னும் மோசமா சாகவேண்டியவன். ஏதோ இந்த மட்டிலும் பாம்புக்கடியோட உசுரை விட்டுட்டான். பொண்ணோட கற்போட விளையாடினா என்னிக்கிருந்தாலும் இதுதான் கதி...பேசிக் கொண்டே நடுங்கும் முதுமைத் தள்ளாடலுடன் அழகம்மை கூட அங்கு வந்துவிட்டாள்.

ஏனோ உமா விசும்பி அழ ஆரம்பித்தாள். ''பாஸ்கர் ...என்ன பாஸ்கர் இது. நான் என்னென்னவோல்லாம் பண்றேன். எனக்குள்ள யாரோ புகுந்து கிட்டு ஆட்ற மாதிரி இருக்கு பாஸ்கர். நான் இப்பவே எங்க அண்ணன் அவினாஷை பார்க்கணும், அது கூட பேசணும். அப்பதான் எனக்கு திருப்தியாகும். யாராச்சும் என் அண்ணன் கிட்ட உடனேயே கூட்டிகிட்டு போங்க ப்ளீஸ்...'

விசும்பி அழுதவள் தோள்மேல் அழகம்மை பாட்டியின் கைகள் விழுந்தன.

''ஜீவா...ஒருத்தனை பழிவாங்கிட்டே... இன்னும் ஒருத்தன் பாக்கி இருக்கான். உன்பொண்ணு உனக்காக நீ காப்பாத்தறதுக்குன்னே காத்திருக்கா. இவங்களையெல்லாம் மறந்துட்டு அவினாஷ் அதுஇதுன்னு நீ பேசறது நல்லா இல்ல...'' என்ற கிழவியை இப்போது எல்லோரும் சற்று மிரட்சியுடன் பார்த்தனர்.

''பாட்டி நாங்க வந்துருக்கறது ஒரு டூர். 'அதுல இப்படியெல்லாம் விஷயங்கள் இருக்கும்னு நாங்க கனவுல கூட நினைக்கலை. இது வரையிலையும் நடந்ததாவது பரவால்ல. இப்போ ஒருத்தன் இந்த ராத்திரியில உமாவால செத்தே போயிட்டான்! நடக்கற ஒவ்வொண்ணையும் நாங்க எதார்த்தமாவே எடுத்துகிட்டு போக முடியாது. நாங்க முதல்ல இந்த ஊரைவிட்டு போனாதான் எல்லாம் சரியாகும்...''சங்கரநாராயணன் பேசப்பேச ஆமோதித்தது கூட்டம்.

''ஆமா பாட்டி, நீ சொன்ன கதைகேட்க சுவாரஸ்யமாக இருக்கு. ஆனா வெளிய சொன்னா நம்பமாட்டாங்க. மறுஜென்மம் ஆவிங்கறதெல்லாம் இந்த நவீன உலகத்துல நம்ப முடியாத கட்டுக்கதைகள். அப்படியே அது உண்மையா இருந்தா இருந்துட்டு போகட்டும். எங்களை விட்டுடு. எங்களுக்கு பயமா இருக்கு...''—இது வைஜெயந்தி, எல்லோரும் இப்படி பரசு என்பவனின் மரணத்தால் மாறிவிட்டதை நினைத்து பாட்டிக்கு என்னவோ போல் ஆகிவிட்டது. சில வினாடி கண் மூடி தியானித்தவள் ''சரிம்மா நீ உன் இஷ்டம்போல நடந்துக்கோ. நீங்க போகலாம்...'' என்றாள்.

'' அப்பாடா...'' எல்லோரிடமும் பெருமூச்சு.

''ஆனா நீங்க நினைச்சாலும் போக முடியாது. இவ்வளவு தூரம் வேளைபார்த்து உங்களை தள்ளிகிட்டு வந்த இந்த செண்பகதேவி இனிதானா கைவிட்டுடப் போறா? அந்த நம்பிக்கையிலதான் இப்படி சொல்றேன்'' என்றாள் கிழவி.

எல்லோரும் எதுவும் பேசாமல் வேனை அடைந்த போது அங்கே ஆச்சரியம் காத்திருந்தது.

உமாவின் அண்ணன் அவினாஷ் வேலமங்கலத்தின் பத்திரிகை ரிப்போர்ட்டர் கணேஷ"டன் நின்று கொண்



டிருந்தான்! கைவசம் காமிரா,டேப்ரிக்கார்டர்,ரிவால்வர் என்று ஏக தடபுடல்.

உமா அவினாஷை பார்த்த மாத்திரத்தில் ஓடிவந்து கட்டிக் கொண்டாள்.

''அண்ணே நீ எப்படி இங்கே?''-கேட்டாள்.

''உன்னை அனுப்பிச்சுட்டு மனசு கேக்லே. எங்க பத்திரிகை நிருபர் கணேசனுக்கு போன்பண்ணி நீ வரப்போறதை சொன்னேன். அவரோ உடனே நீங்க கிளம்பி வாங்க. ஊருக்குள்ற பதினெட்டு வருஷம் முந்தி செத்துப்போன ஜீவாங்கற பொண் திரும்ப பிறந்து அதே உருவத்தோட வந்துருக்கறதா ஒரே புரளி அனேகமா அது உங்க தங்கையா இருக்கணும்கறது என்யூகம்னு சொல்லி ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார்.ஏன்னா என்னோட ஒரு போட்டாவுல உன்னை அவர் ஏற்கனவே பார்த்துருக்கார். பதினெட்டு வருஷத்துக்கு முந்தி ஜீவாங்கற பெண்ணையும் பார்த்துருக்கார். ஆசையால் கூட்டிக்கழிச்சு சரியாவே கணக்கு போட்டு என்னை கூப்பிட்டார்- எனக்கு ஒரே ஆச்சரியம். இங்க வந்தா ஊர் பூரா உன்னை பத்திதான் பேச்சு...''-அவினாஷ் மூச்சு விடாமல் பேசி நிறுத்தினான். ''அண்ணே இந்த பாட்டி ஜீவா கதை முழுவதையும் சொல்லிச்சு. அதெல்லாம் உண்மை. எனக்குள்ள அந்த எண்ணங்கள் அப்படியே இருக்குண்ணே. இந்த ஊர், மலைக்கோயில், இந்தப் பாட்டி யாருமே எனக்கு புதுசு இல்லை. இந்த ரிப்போர்டர் கணேசன் கூட எனக்கு புதியவரா தெரியலை. இவருக்கு கூட முதுகில பெரிசா ஒரு தழும்பு இருக்கும். மலைக்கு சாமிகும்பிட வந்தப்போ படியில வழுக்கி விழுந்து சறுக்கினதுல தேங்காய்ச் சிரட்டை கிழிச்சு ஏற்பட்ட தழும்பு அது.''

-உமா சொல்லி வாய் மூடவும் கணேசன் அதைக் கேட்டு சிலிர்த்துப் போனார்.

''மிஸ்டர் அவினாஷ் உமா சொல்றது நிஜம், எனக்கு தழும்பு உண்டு. உமா ஜீவாதான். ஜீவாதான் உமா எனக்கு சந்தேகமேயில்லை...''

பரவசப்பட்டார் கணேசன். அதுவரை மௌனமாயிருந்தபாட்டிபக்கம் அனைவரின் பார்வையும் உடனேயே திரும்பியது

''பாட்டி அந்த கதையோட க்ளைமாக்சை நீ இன்னும் சொல்லலையே. ஜீவா எப்படி செத்தா? ஜீவா புருஷன் கருணாகரன் நிலை என்ன?''-என்று கேட்டார்கள்.

'பரசு அப்படி சொல்லவும் கருணாகரனுக்கு சித்தம் கலங்கப் போச்சு. ஏற்கனவே போதை வஸ்த்துக்களால தளர்ந்து கிடந்த அவன் தேகம் இந்த அதிர்ச்சியை தாங்கலை. அங்கேயே சட்டையை கிழிச்சுகிட்டு பைத்தியமா மாறி கத்த ஆரம்பிச்சுட்டான். கதறிகிட்டே மலைப்படியில இறங்கி ஓடின அவன் பின்னால. ஊர் ஜனங்க கொஞ்சம் பேர் ஓட, மீச்சம் பேர் நடக்கறதை வேடிக்கை பார்க்கத் தொடங்க, தியாகு பேச ஆரம்பிச்சான்.

''நியாயப்படி பரசுவுக்கும் ஜீவாவுக்கும் இந்த வாரிசு பிறந்துருக்கறதால, கருணாகரனும் பைத்தியம பிடிச்சு ஓடிட்டதால ஜீவாவுக்கு இனி பரசுதான் புருஷன. பட்ட நாயக்கர் சொத்தெல்லாம இனி அவனுக்கும இந்த குழந்தை வாரிசுக்கும்தான் சொந்தம். ஊர் ஜனங்க எதுக்கையே இந்த உண்மை தெரிஞ்சு போச்சு ஆகையால இனி ஜீவா நடந்ததையெல்லாம் மறந்துட்டு கருணாகரனை ஒழிச்சு தலைமுழுகிட்டு பரசுவோட வாழணுமனு கேட்டுக்கறேன் என்றான

ஜீவா அதை கேட்டு கதறுனபடி குழந்தையோட கர்ப்பகிரகத்துக்குள்ளறையே நுழைஞ்சி கதவை சாத்திகிட்டா!



ரொம்ப நேரம் வரை கதவை திறக்கலை. வெளிய எல்லாரும் காத்திருந்தோம். கதவை திறந்து பார்க்க ஆசைப்பட்டு கர்ப்பகிரகத்தையே தகர்க்க நினைச்சான் அந்தப் பாவி தியாகு.

அதே மாதிரி கதவை உடைச்சு உள்ள காலையும் வெச்சுட்டான். அங்கியோ ஜீவாவும் குழந்தையும் ஆத்தாவோட காலடில மயங்கிக் கிடந்தாங்க அந்த வைரக்கிரீடத்தைக் காணோம்.

மயங்கிக்கிடந்தவளை மயக்கம் தெளிய வச்சு வெளிய இழுத்துகிட்டு வந்தான் தியாகு. பரசு கையைப் பிடிச்சு இழுத்து 'வா வாழலாம்'னு அழைச்சான்.

ஜீவா தட்டிவிட்டா நான் சுத்தாமானவ, நான் சுத்தமானவ. இவங்க சொல்றதெல்லாம் பொய்யுனு சொல்லி கத்துனா. குழந்தையோட மலைப்படியில இறங்கி ஓடினா. தியாகு விடலை. அவளை பிடிச்சுகிட்டு போக ஆன மட்டும் முயற்சி செய்தான். ஊர் வாய்பொத்தி வேடிக்கை பார்த்தது...பட்ட நாயக்கர் குடும்ப விஷயத்துல தலையிட்டா என்ன ஆகும்னு அவங்களுக்கு நல்லாவே தெரியும்...

ஜீவாவோ ஓடிகிட்டேயிருந்தா. நான் மலங்க மலங்க வேடிக்கை பார்த்தேன்...என்னால அது மட்டும்தான் முடிஞ்சது.

அப்போ கைக்குழந்தை நழுவி கீழே விழுந்துடிச்சு. ஒரு பாறை இடுக்குல அது வீல்வீல்னு கத்துது. ஜீவாவோ அதை தொட்டுதூக்கக்கூட ஆசைப்படாம ஒரு பாறை மேல ஏறி நின்னா. எல்லோரும் வேடிக்கை பார்க்க உரக்க கத்துனா டேய் நான் சுத்தமானவடா...என்னை குத்தம் சொன்ன உன்னை நான் சும்மா விட மாட்டேண்டா''-என்றாள்.

தியாகு அவகிட்ட நெருங்கி அந்த வைரகிரீடம் எங்கடின்னு அவகாதுல மட்டும் விழற மாதிரி கேட்டான்.

பட்டநாயக்கர் சொத்து உழைப்பால வந்தது. உன் மாதிரி நாய்களால அதை அனுபவிக்க முடியாதுன்னு அவ கத்துனது நல்லா எல்லார் காதுலேயும் விழுந்திச்சு தியாகு ஆவேசப்பட, ஜீவா அவன் மேல் ஒரு வெறிநாய் போல பாஞ்சா. கடிக்க ஆரம்பிச்சா! ஆனா தியாகுவோட முரட்டு கைகளுக்கு அவஎல்லாம் ஒரு பொருட்டா என்ன? கோபத்தோட அவளை பிடிச்சு பாறை மேல இருந்து கீழே தள்ளினான். பெரிசா ஒரு கல்லையும் தூக்கி அவ தலை மேலயே போட்டான்.

தலை நசுங்கி ரத்தம் வெளிய வர ஜீவா அலறினா... ஒரு பக்கம் பாறை இடுக்குல குழந்தையோட அலறல். மறுபக்கம் அவளோட ஜீவக்குரல். நான் ஓடிப்போய் குழந்தையைக் கையில எடுத்தேன். தியாகுவோட ஆட்கள் சுத்தி வளைச்சு நின்னாங்க.

கூட்டத்துக்கு என்ன நடக்குதுன்னு தெளிவா தெரியாது. ஜீவா தானா பாறை மேல இருந்து குதிச்சிட்டதா அவங்க நினைச்சாங்க.

ஜீவாவோ சாகும்போது சாபம் விட்டா! நான் திரும்ப பிறப்பேன். பிறந்து வந்து உன் கொட்டத்தை அடக்குவேன். பட்டநாயக்கர் சொத்தை நீ ஆள முடியாது...செம்பகாதேவி, அருளால இதை சாதிப்பேன்னு சொல்லி உயிரை விட்டா!

அந்த சாபக்குரல் இந்த ஊர்க்காரங்களுக்கு இப்பவும் அழியாத குரல். அதன் பிறகு கண்டவங்க காலடிபட்ட செண்பக தேவியோட அந்த கர்பக்கரகம் தூர்ந்து போச்சு. குழந்தை தலையில இருந்த வைரக்கிரீடத்தோட தான் ஜீவா கர்பகிரகத்துக்குள்ள நுழைஞ்சா. ஆனா அது போன இடம் தெரியலை.



அதை அன்னியில இருந்து இன்னி வரை தியாகு தேடறான். அதை மட்டுமா உயிலையும்! உயிலோட ஷரத்து ஊருக்கே தெரியும். ஆகையால பட்டநாயக்கர் சொத்து தனக்கு வரணும்னா அதன்படி ஜீவாவோட பெண்ணைத் தானே கட்டிக்கிட்டாகணும். ஜீவாவைதான் கல்யாணம் செய்ய முடியலை. சொத்துக்காக அவ பெண்ணையாவது கல்யாணம் செய்யலாம்னு பார்க்கறான்.

இவனோட தர்பாரை தட்டிக் கேட்க யாருக்கும் துணிச்சல் கிடையாது. போலீஸ்ல இருந்து வக்கீல் வரை யார் வந்தாலும் பணத்தால அடிச்சுடுவான்...''

-அழகம்மை பாட்டி ஒரு வழியாக முடிவிற்கு வந்து விட்டிருந்தாள்.

''பாட்டி, அந்த பைத்தியக்கார கருணாகரன்?''- பாஸ்கர் கேட்ட கேள்விக்கு நிருபர் கணேசனிடமிருந்து பதில் வந்தது.

''என் வீட்டுத் திண்ணையிலதான் படுத்துக் கிடக்கறார். சில நாள் குப்பைமேடு. சில நாள் முனியப்பன் கோவில் திடல். சில நாள் மரத்தடி இப்படி கண்ட இடத்துல அவரைப் பார்க்கலாம்...''

''ஒருத்தர்கூட அவரை பைத்தியகார ஆஸ்பத்திரியில சேர்க்க முயற்சி எடுக்கலையா?''

சேர்த்தும் பலனில்லை. கருணாகரன் குடும்பமே அவரை கை விட்டுடிச்சி. ஏதோ மிச்சம் மீதி சோறாவது போட அந்த தியாகு ஊருக்கு அனுமதி கொடுத்துருக்கான்...''

''அந்த கெலைகாரன் இவரை மட்டும் ஏன் இன்னும் உயிரோட விட்டு வெச்சிருக்கான்...''

"தன்னோட யார் மோத நினைச்சாலும் இப்படி ஆயிடுவாங்கன்னு காட்டத்தான். அடுத்து பைத்தியம் தானே என்ன செஞ்சுட முடியும்கற திமிர் வேற!-

"உயிலையும், வைர கிரீடத்தையும் இன்னுமா அவன் கண்டு பிடிக்கலை...?"

"கண்டு பிடிக்க முடியலை. அதனாலதான் ஜீவா பெண்ணை மனைவியாக்கிக்க அந்தப் பாடுபடறான். பாவம் அந்த பெண், இவன் பிடியில உதிர்ந்த பூ மாலையா இருக்கு..."

"அவனை கட்டிகிட்டா மட்டும் ஆஸ்தி இவனுக்கு சொந்தமாயிடுமா என்ன... உயிலே எங்க இருக்குன்னு தெரியாதப்ப?"

"நல்ல கேள்விதான். உயிலே இல்லேன்னு போனா லும், பட்டநாயக்கர் வாரிசு அந்த பொண்ணு ஒருத்தி தான். அவளுக்குதானே சொத்து வந்தாகணும்?"

"ஆமா அந்த பொண்ணு மேஜராயிட்டாளா?"

"ஆயிருக்கணும். இல்லேன்னா இத்தனை நாள் இல்லாம திடீர்னு கல்யாணம்னு இறங்குவானா என்ன?"

"பொண்ணுக்கு இந்த கல்யாணத்துல இஷ்டமா?'

ஒரு ஐம்பது வயசை எட்டிட்டவனை எந்த வயசுப் பொண்ணு கட்டிக்க சம்மதிப்பா... இது கட்டாயக் கல்யாணம்.

உள்ளூர் போலீஸ் ஆசீர்வாதம் இந்த விஷயத்துல நிறையவே இருக்கு..."

"அப்ப நாம தடுக்க வேண்டிய முதல் விஷயமே இப்ப இதுதான்..."



"யெஸ்...விடிஞ்சா நாம சாதிச்சே ஆக வேண்டியது இதைத்தான். மற்றதெல்லாம் பிறகு பேசிக்கலாம்."

"அப்ப யாரும் இந்த மலைக் கோயிலை விட்டு போக வேண்டாம். இங்கேயே காத்திருப்போம். விடியட்டும். இரண்டுல ஒண்ணு பார்த்துடுவோம்..."

"அவனை நம்ம கூட்டத்தால சமாளிக்க முடியாது.

நமக்கு சட்டத்தோட துணை அவசியம். உள்ளூர் போலீஸ் இந்த விஷயத்துல நமக்கு துணை வராது. இதுக்கு ஏற்ற ஆள் டிஸ்ட்ரிக்ட் எஸ்.பி. தான் நானும் அவினாஷும் எஸ்.பியோட வரோம். இப்பவே கிளம்ப றோம்."

-கணேசன் பேசின கையோடு வேனில் ஏற அவினாஷ் தொற்றிக் கொள்ள வேன் விரைய ஆரமபித்தது.

நிலா வேடிக்கை பார்த்தது

அவர்கள் விடியலுக்காக ஒரு மரத்தடியில் காத்திருக் கத் தொடங்கினார்கள்.

---

**பிரபஞ்ச ரகசியங்களை எல்லோரும் தெரிந்து கொண்டு விட முடியாது. அது தெரிந்தவன் பேசுவதேயில்லை. 'கண்டவர் விண்டிலர்—விண்டவர் கண்டிலர்'—ஆகை யாலேயே சில அதிசயமான விஷயங்களை நம்பாமல் விவாதித்துக் கொண்டே இருக்கிறோம். விவாதிக்காமல் சிந்திப்போம். நமக்குள் சிந்திப்போம். அதுதான் ஞானம். அந்த ஞானம் ஒவ்வொரு பிறவியிலும் தொடரும்.**

**—உபநிஷத் சாரம்**

---

# 6

விடிந்து விட்டிருந்தது.

கிழக்குவானின் அடி மட்டத்தில் ஆரஞ்சுப் பந்தாய் சூரியன். பட்டநாயக்கர் மாளிகையின் சாளரத் துவாரங்களில் அதன் கரங்கள் உள்ளே நுழைய அண்ணாந்து அதைப் பார்க்கும் தியாகுவின் கண்களில் அநியாய சிவப்பு.

அதிகாலை வேளையில் தூக்கம் முழிக்கும் கண்களாய் இல்லாமல் விடிய விடிய தூங்கவேயில்லை என்று காட்டும் பிராந்திச் சிவப்பில் கண்கள்.

—பக்கத்தில் பரிவாரம்.

—குறிப்பாக ருத்ரைய்யா!

''கல்யாணத்தைப் பற்றிய விசனமா இல்லை வேவு பார்க்க போன பரசு அந்த வேன் கோஷ்டிகிட்ட மாட்டிக்கிட்ட விசனமா?'' ருத்ரைய்யாவின் கேள்வி முன் தியாகுவால் மௌனம் தான் சுமக்க முடிகிறது.

—அப்போது ஒருவன் ஓடிவந்தான்.

''ஐயா...பரசு மலை அடிவாரம் பாம்புப் புத்துப் பக்கம் நீலம் பாரிக்கச் செத்துக் கிடக்கறாருங்க...! வேனில வந்த ஜீவா கோஷ்டி மலையை விட்டு போகாம அங்கேயே டேரா போட்ருக்காங்க...!''—என்றான்.

—தியாகுவுக்கு விதிர்ப்பு தட்டியது.

—பட்டு வேட்டி பட்டு ஜிப்பாவை வியர்வை உப்பு காரப்படுத்தி கசக்கத் தொடங்கியது. ஐம்பது வருஷமாய்



பாதகங்களுக்காக எல்லாம் அஞ்சவே அஞ்சாத மனதில் முதல் தடவையாக பயத்தின் பரவல். நெடு நேரம் மூளையால் எதையும் சிந்திக்கலே முடியவில்லை.

ருத்ரைய்யா நிமிண்டி விட்டான்.

''தியாகு...போனவனை பத்தி என்ன கவலை. செம்பகம் சமுத்தல தாலிய கட்டப்பார். கட்டிட்டா உன்னைப் பிடிக்க யாருமில்லை. பிடிச்சாலும் யாருக்கும் ஒரு லாபமும் இல்லை.''

''ஆமாங்கய்யா...ஒம்பது பத்தரை முகூர்த்த நேரம். இப்ப மணி ஆறேகால் மத்த சாங்கியமெல்லாம் வேற இருக்கு. இப்பவே மலைக்கு கிளம்புனாதான் தோதா இருக்கும்...''—இன்னொருவன் முன் வந்தான்.

''ஊருக்கு அழைப்பு வெச்சாச்சா?''

''ஒருத்தர் பாக்கியில்லை. மலைக்கோவில்ல வெச்சு ஏன் கல்யாணம் பண்ணனும். பட்டநாயக்கர் மாளிகையே போதாதான்னு ஒருத்தர் கேட்டாரு? எல்லாம் காரணமாத்தான்னு சொல்லியிருக்கோம். கோயில் கர்ப்ப கிரகத்தைகூட இன்னேரம் கல்யாணம் பண்ணி வைக்கற ஐயர் திறந்து சுத்தப்படுத்தி பூஜையெல்லாம் செய்துகிட்டிருப்பார்...''

பட்டநாயக்கர் மாளிகையின் கருத்துக்கேற்ப செண்பக தேவியின் ஆலயக் கருவறை அறைக்கதவு வயதான பிராம்மண பட்டர் ஒருவரால் திறக்கப்பட்டு சுத்தப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது.

''பாழடைஞ்ச கோயில்ல திரும்ப பூஜை நடக்கணும்னா சாஸ்திரப்படி ஜீர்ணோத்தாரம், கும்பாபிஷேகம் எல்லாம் நடக்கணும். படுபாவி, நீ போய் சும்மா பூஜை பண்ணு. ஆத்தா ஒண்ணும் பண்ணமாட்டா. பண்ணுனா நான் பாத்துக்கறேங்கறான். ரவுடிக் கும்பல்

கிட்ட மாட்டிண்டு நான்னா அபச்சாரம் பண்ண வேண்டியிருக்கு'' என்று முணு முணுத்தபடியே தரையைக் கழுவியவர் செண்பக தேவியின் உருவைப் பார்த்து கண்ணீர் விட்டார்.

''அம்மா தாயே...உனக்கே பூஜை இல்லைன்னு ஆயிடுத்தே! அநியாயம் பண்றவன் எனக்கு தெரிய எத்தனையோ வருஷமா ராஜா மாதிரி வாழ்ந்துண்டு வரான். ஆனா தர்மத்துக்கெல்லாம் தாயான நீ இந்த அநியாயத்தைக் கண்டும் கோபம் கொள்ளாம சக்தியற்று இருக்கியே...அப்புறம் உன்னை சேவிக்கறவாளுக்கு எங்க இருந்து பக்தி பொங்கி வரும்?'' என்று கேள்வியெல்லாம் கேட்டபடி புதிய புடவையை அவளுக்கு சாற்றி மாலையெல்லாம் அணிவித்து நெற்றிக்கு திலகமும் இட்டார்.

விளக்கேற்றுவதற்காக குத்து விளக்கைத் தேடியவர் எதிரே மாடத்து விளக்கு 'வா வா' என்றது!

பல வருஷத்து கசடோடு கறுத்துப் பல்லைக் காட்டியது. துடைக்கத் தொடங்கினார். ஆனால் மாடத்தை விட்டு அதைப் பிரித்துக் கையில் எடுக்க முடியவில்லை!

அதிசயமாக மலைக்கோவிலில் அன்று கூட்டம் சேரத் தொடங்கி விட்டிருந்தது. அடிவாரத்தில் படியின் துவக்கத்திலேயே தியாகுவின் ஆட்கள் பன்னீர்ச் செம்பும் கல்கண்டு தட்டுமாய் வருபவர்களை வரவேற்க ஆயத்தமாகி விட்டார்கள்.

வருபவர்களுக்குள் நடக்க இருப்பதைப் பார்க்கும் ஆர்வம் ஒருபுறம், அநியாயத்தை தட்டிக் கேட்க வழி இல்லையே என்னும் ஆதங்கம் மறுபுறம்!

குறிப்பாக இன்று மணப்பெண்ணாக அலங்காரத்தில் இருக்கும் செண்பகத்துக்கு செண்பகம் என்று பெயர்

24180



4097938

சூட்டிய அந்த நாளில் நடந்ததைப் பார்த்திருந்தவர்கள் முகத்திலோ ராஜ சோகம்......

''எப்படி இருந்த குடும்பம்...ஊம் எப்படி ஆயிப் போயிரிச்சு பார்த்தீங்களா? பத்தொம்போது வருஷம் கழிச்சு நான் இப்பதான் இந்த மலைக் கோவிலுக்கு வரேன். முன்னெல்லாம் இந்த மலைப்படியில ஜோடி ஜோடியாக நடந்து போவாங்க. படி ஓரமெல்லாம் செவ்வரளியும் மஞ்சக் குழலியும் என்னமா பூத்துக் கிடக்கும்...

''இப்ப இந்த சண்டாளன் பிடியில இங்க சாராய ஆறுன்னா ஓடுது...''

''எப்பவும் காசிருக்கறவங்க வெக்கறதுதான் சட்டம் அத தெரிஞ்சுக்க. கோவில் பட்ட நாயக்கருக்கு சொந்தமான கோயில். தியாகுவும் அப்படி இப்படின்னு ஒரம்பறை. பட்ட நாயக்கர் மாப்பிள்ளை பேரனோ பைத்தியம். ஏதோ இந்த மட்டும் இந்த செண்பகம் உசுரோட இருக்கறதை நினைச்சு சந்தோஷப்படுவியா அதை விட்டுட்டு பழம் பெருமை பேசறியே...''

''ஆமா...ஜீவா மாதிரியே ஒருத்தி இந்த ஊருக்கு வந்துருக்காளாமில்ல. என்ன அதிசயம்?''

''நான் பாக்கலை தாயி. பாக்கத்தான் இந்த கல்யாணத்துக்கே வந்துருக்கேன். அது எப்படி தாயி செத்துப் போனவ திரும்ப வந்து பொறந்து அதே மாதிரி வர முடியும்?''

''எனக்கென்னவோ இந்த கல்யாணம் நடக்காதுன்னு தோணுது. அந்த ஜீவா வாட்டம் உள்ள பொண்ணு தடுத்துடுவா பார்...''

''தியாகுவா கொக்கா...? ஒரு ஊரையே கட்டி மேய்க்கறவண்டீ அவன். நேத்து டபடபன்னு வண்டியில

வந்து இறங்குன ஒரு குட்டி இந்தகல்யாணத்தை கடுத்துருவானாக்கும். அவ ஜீவா சாயல்லா இருக்கலாம். அதுக்காக ஜீவாவே வந்துட்டா ... ஆத்தாளுக்கு சக்தியோ சக்தி ஆ, ஊன்னுகிட்டு ஏன் இப்படி புலம்பறீங்க?

அந்த ஜீவாவே வானத்தை கிழிச்சுகிட்டு நேர வந்தாலும் இந்த செண்பகத்தைக் காப்பாத்த முடியாது. பட்ட நாயக்கர் சொத்து போனது போனதுதான்.''

படியேறிச் செல்லும் ஜனங்களின் பிரஸ்தாபிப்புகள் நடுவே கெடிகாரம் மணி எட்டை தொட்டு விட்டிருந்தது. அப்பொழுது அடிவாரச் செருக்கத்தில் அந்த மாணவக் கூட்டத்தின் வேனின் நுழைவு!

இவ்வளவு நேரமாய் எங்கோ ஒளிந்திருந்தது போலவும் இப்பொழுது அது அங்கே வேளை பார்த்து நுழைந்த மாதிரியும் தோன்றியது.

வேனில் இருந்து எல்லோரும் திபுதிபு என்று இறங்க இறுதியாய் உமா இறங்கினாள். உமாவோடு சேர்ந்து இன்னொரு நபரும் இறங்குவதைப் பார்த்த கூட்டத்துக்கு அதிர்ச்சி.

—அது கருணாகரன்!

—பார்க்க பனிச்சென்று சவரம்செய்த முகத்தோடு வேஷ்டி ஜிப்பாவில் கொனஷ்டைகள்ஏதுமின்றி இறங்கியவரை கூட்டம் வைத்த கண் வாங்காமல் பார்க்கிறது.

ஆங்காங்கே மலைப்படியில் செல்ல ஏறும் கூட்டமெல்லாம் சேதி அறிந்து திபுதிபு என்று கீழே இறங்கி வந்து உமாவையும் கருணாகரனையும் ஒருசேரப் பார்த்த பார்த்தவர்களில் பலருக்கு விழிகள் காதுவரை விரிந்து கொடுத்தன.

''என்ன அதிசயம்... என்ன அதிசயம்... ஜீவா நீ திரும்ப வந்துட்டியா? ஆத்தா செம்பக தேவி...''



வயதான கிழவி ஒருத்தி கன்னத்தில் போட்டுக்கொள்கிறாள்.

உமா எல்லோரையும் ஒரு தினுசாகப் பார்த்தபடி கருணாகரனைத் தாங்கலாய் அழைத்துக் கொண்டு மலைப்படியின் முதல் படியில் கால் வைக்க பன்னீர் செம்புடன் நிற்பவன் முறைக்கிறானா விதிர்க்கிறானா என்றே தெரியவில்லை.

''இந்த பைத்தியம் எப்படி இப்படி அடங்கி கூட வருது?''

''தியாகு பார்த்தா பின்னி எடுத்துப் பிடுவானே?''

''ஏய் நீங்கள்ளாம் யாரு?''—மலைப்படியில் தியாகுவின் கைத்தடி ஒருவன் கேட்கிறான்,

''உம் நாங்கள்ளாம் ஸ்டுடண்ட்ஸ்,'' -சங்கர நாராயணன் பதில் தருகிறான்.

''இங்க எங்க வர்றீங்க,''

''கோவிலுக்கு யார் வேணும்னாலும் வரலாம்''-இது வைஜெயந்தி.

''இது தனியார் கோவில். அதோட சொந்தக்காரருக்கு இன்னிக்கு கல்யாணம்.''

''சொந்தக்காரர் எங்க கூட இல்ல இருக்காரு. யாரையோ சொந்தக்காரர்னு சொன்னா எப்படி?''

''இந்த பைத்தியக்காரனை எங்க பிடிச்சீங்க?''

''உம் இதே ஊர்ல ஒரு குப்பை தொட்டி பக்கத்துல.''

''நீங்க அத்தனை பேரும் இதே மாதிரி பைத்தியக்காரன் ஆகப் போறீக.''

''உன்னை மாதிரி இதயமில்லாத மனுஷனா ஒரு கொடுமைக்காரனுக்கு எடுபிடியா இருக்கறதுக்கு பைத்தியமாக இருக்கிறது மேல்தான் மாப்ளை''

-வார்த்தைக்கு வார்த்தை வாதம் வலுப்பட சூழ்ந்திருப்போர் உமாவை ஜீவா என்று நம்பி தீவிரமாகப் பார்த்து வியந்து கொண்டே போக, நடப்பது எதுவும் மனிதச் செயலாகவே யாருக்கும் தெரியவில்லை.

இதற்குள் செய்தி மலைமேல் கோவிலுக்கு வலப்பக்கம் உள்ள கல் மண்டபத்தில் இருக்கும் தியாகுவின் காதுகளையும் எட்டியது.

கருநாகம் காலைக் கொத்தின மாதிரி விருட்டென்று எழுந்திருந்தான் ருத்ரைய்யா தோளைப் பிடித்து அமர வைத்தான். உதட்டுச் சிகரெட்டை தூக்கி எறிந்து விட்டு புதிய சிகரெட்டை செருகி நெருப்பும் வைத்தான்.

''மஹா தைரியசாலி நீ. இந்த ஜீவா விஷயத்தை கேள்விப்பட்டதுல இருந்து ரொம்ப அலட்டிக்கிறியே. யார் வந்து என்ன செஞ்சிட முடியும்? உள்ளூர் இன்ஸ்பெக்டர்தான் உன் கைல தாலியையே எடுத்துத் தரப் போறாரு. நீ கட்டப் போறே! இன்னுமா கவலை?''

''இன்ஸ்பெக்டர் வந்துட்டாரா?''

''வந்துகிட்டே இருக்கார்.''

''அப்ப நம்ப ஆளுங்க என்ன புடுங்கிகிட்டா இருக்காங்க. பட்டநாயக்கர் சொத்தை வெறும் சீட்டாடித் தண்ணி அடிச்சே அழிச்சிடலாம்னு நினைக்கறாங்களா? வர்ற கோஷ்டியை நாலு சாத்து சாத்தி ஊரைப் பாக்க திருப்பி அனுப்பறதுக்கென்ன?''

''கல்யாண நேரத்துல கை கலப்பு கலாட்டல்லாம் கூடாது தியாகு அவங்க வந்தாதான் என்ன? அவங்களால என்ன செஞ்சிட முடியும்.வேணும்னா அவங்க கையையும் நாலு அட்சதை கொடுத்து ஆசீர்வாதம் வாங்கப் பார். ஒரு காலேஜ் கூட்டம் எதார்த்தமா டூர் மாதிரி இந்த பக்கம் வந்திருக்காங்க. அதுல ஒருத்தி ஜீவா மாதிரி இருக்காங்கறதுக்காக இப்படியா அலட்டிக்குவே?



பழைய குற்ற உணர்வு உன்னைப் பிராண்டுனா அடக்கிக்கோ. வெளிக் காட்டிக்காதே' அது பலவீனம்.''

ருத்ரைய்யாவின் மந்திராலோசனையில் தியாகு பெட்டிப் பாம்பாய் அடங்கிப் போனான். இதற்குள் அவர்கள் மலை உச்சியை எட்டி விட்டிருந்தார்கள்.

அலங்காரமாய் தென்பட்ட செண்பகதேவி கருவறைக்கு முன் உள்ள மண்டப வாசலை கூட்டமாக எட்டினார்கள். ஆங்காங்கே தீவுத் தீவாய் வேலமங்கல வாசிகள்.

துவஜஸ்தம்பத்தின் மேல் நடப்பதைப் பார்க்க எனக்கும் ஆசை என்பது போல் ஒரு கழுகு!

ஆமாம் எங்கே செண்பகம்?

---

**உலகில் பூர்வஜென்ம விஷயங்கள் ஒவ்வொரு நூற்றாண்டிலும் நிருபணமாகித்தான் வருகிறது. பூர்வஜென்மத்துக்கு மிகச் சரியான சான்றுகள் நமது ரிஷிகளிடம் உள்ளது. கூர்ந்து பாருங்கள் தெரியும். பிரகலாதன்தான் ராகவேந்திரர். லக்ஷ்மணன்தான் ஆதிசேஷன்.**

**– புலவர் கீரன்**

---

# 7

மலைக்கோவில் பின்புறம் தியாகுவின் அடியாட்களின் மனைவிமார் பிடியில் அவள் திணறிக்கொண்டிருந்தாள்.

''கண்ணு நல்ல பொண்ணா லட்சணமாக நடந்துக்கோ. ஐயாவை அனுசரிச்சு போனா தங்கமா

இழைப்பாரு. இல்லாட்டி சித்ரவதைதான். உன் அப்பாவோ பைத்தியம். அம்மாவோ உசுரோட இல்லை. இந்த நிலைல உனக்கு இப்படி ஒரு இடம் வாய்க்க கொடுத்து வெச்சிருக்கணும். அழுவாம சந்தோஷமாக இரு கண்ணு"-என்று ஒருத்தி தேற்றிக் கொண்டே இருந்தாள்.

செண்பகத்துக்கு பேசக்கூட திராணியில்லை. பயத்தில் புரண்டு, பயத்தில் நெளிந்து, பயத்திலேயே வளர்ந்து விட்டிருக்கிறாள் அவள்.

தோள் மேல் தூக்கி வளர்த்தவன் இன்று தாலியும் கழுத்துமாக நான்தான் உன் புருஷன் என்கிறான். அப்பாவைப் போன்ற உறவு இப்படிக் கூட மாறிப் போகுமா என்ன?

அதனால்தான் கலிகாலம் என்றால் எதுவும் நடக்கும் என்கிறார்களோ?

தேம்பித் தேம்பி அழும் அவளை ஒருத்தி தேற்றிக் கொண்டேயிருக்கிறாள். அச்சு அசலாய் ஜீவாவின் ஜாடை! பதினெட்டு வருஷத்துக்கு முன்பு ஜீவாவை பார்த்த மாதிரியே இருக்கிறாள்.

இப்படியா கதறக் கதற கைக் குழந்தையாக விட்டு விட்டு பெயர் சூட்டிய கையோடு இந்த உலகை விட்டுப் போவாள்?

சில நேரங்களில் பெரியவர்களின் உயிலால்தான் எத்தனை விபரீதங்கள்?

சன்னதியில் செண்பகதேவி விக்ரகம் பளிச்சென்று தெரிகிறது. நெடுநாள் கழித்து அவளை மாலையும் கழுத்துமாக தெய்விகமாகப் பார்க்க முடிகிறது.

ஆனால் சன்னதியில் விளக்குதான் அணைந்து அணைந்து போகிறது. எங்கிருந்தோ காற்று வந்து



அணைத்துக் கொண்டே இருக்கிறது. இப்படி எல்லாம் நடக்கவே கூடாது.

பட்டர் அச்சத்துடன் தெரிகிறார். நடப்பது எல்லாமே அநியாயம். இப்படி இதற்கு துணை போக வேண்டியிருக்கிறதே. குமுறிக் கொண்டே இருக்கிறது அவர் மனசு. மேளக்காரன் மேளம் வாசிக்க தொடங்குகிறான். கல்யாண வீட்டின் களை அங்கே கட்டத் தொடங்குகிறது. விரிக்கப்பட்ட ஜமக்காளத்தில் ஊர் ஜனம் பய பக்தியோடு அமருகிறது.

ஏதோ நடக்கப் போகிறது?

நிச்சயம் அபத்தமாக எதுவும் நடந்து விடாது.

ஒரு இனம் புரியாத நம்பிக்கையில் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள செண்பகம் மேடைக்கு அழைத்து வரப்படுகிறாள்.

"மேடைல உக்காந்து அழுதே கண்ணை நோண்டிப் பிடுவோம்." - என்கிறாள் ஒருத்தி. செண்பகத்தின் கால்கள் நடுங்குகின்றன. உடம்பில் பதட்டம்.

-பட்டர் மந்திரங்களை என்னவோ பேருக்குச் சொல்கிறார். அதோ இன்ஸ்பெக்டர்! டூட்டி டிரெஸ்ஸிலேயே வந்து கொண்டிருக்கிறார். தியாகு எதிர் கொண்டு அழைக்கிறான். ஸ்னேகமாக தோள் தட்டி சிரிக்கிறான். லெஹர் பெப்சி மூடி திறந்த ஆவிப் பறத்தலோடு ஜில்லென்று கைகளுக்கு வருகிறது. மடக்மடக்கென்று விழுங்கியபடி மணமேடையை நெருங்கி அருகில் உள்ள சேரில் உட்கார்ந்து கொள்கிறார்.

தாலி கட்ட வேண்டியதுதான் பாக்கி. மாங்கல்யம் ஆசிர்வாதத்துக்காக கூட்டத்துக்குள் பிரவேசிக்கிறது. ஒரு பெண் திடீரென்று ஆசிர்வதிக்கும் சாக்கில் சட்டென்று அந்த தாலியை கையில் எடுத்தபடி எழுந்து நின்றாள்.

கூட்டமே பதைத்துப் போய் பார்க்க தியாகு வெறியாகித் திரும்ப அந்தப் பெண் கேள்வி கேட்கிறாள் ''ஆமா கல்யாணப் பொண்ணுக்கு கல்யாண வயசு வந்தாச்சா?''

''எவடி அவ. யாரைப் பார்த்து என்ன கேள்வி கேக்கறே?''

-ஒருவன் பாய்கிறான்.

''அவசரப்படாதே மிஸ்டர். அப்புறம் பல வருஷம் கம்பி எண்ண வேண்டியிருக்கும்'' எங்கிருந்தோ ஒரு குரல் வர அந்த குரல் வந்த திக்கை நோக்கினால் அங்கே எஸ்.பி. சவரிமுத்து. கூடவே அவினாஷ், கணேசன்!

எஸ்.பி.ஐ. பார்த்த மாத்திரத்தில் வேலமங்கலத்து இன்ஸ்பெக்டருக்கு திணறுகிறது. எழுந்து பதட்டத்துடன் சல்யூட் செய்கிறார்.

-அப்படி கேள்வி கேட்டவள்கூட ஒரு போலீஸ் பெண்மணி.

-தியாகு முகத்தில் ரத்தம் செத்த வெளிறல்.

''இது கட்டாய கல்யாணம்னு கேள்விப்பட்டோம். புகார் வந்தது. அதான் கிளம்பி வந்திருக்கோம். என்னய்யா தியாகு, ஐம்பது வயசுக்கு மேலே உனக்கு பதினெட்டு வயசுல பொண்ணு கேக்குதா?'' - எஸ்.பி. கேட்டுக் கொண்டே செண்பகத்தை நெருங்கி ''இந்த கல்யாணத்துல உனக்கு இஷ்டமாம்மா'' -என்று நேரிடையாகவே கேட்டார்.

அவள் அழுது கொண்டே அவரைப் பார்த்து வெறித்தாள்

''அப்ப எழுந்திரு. தியாகுவை அரெஸ்ட் பண்ணுங்க.''



-என்ற எஸ்.பி.யின் பார்வை லோக்கல் இஸ்பெக்டர் பக்கம் சென்றது.

''ஆமா பெரிசா இந்த கல்யாணத்துக்கு தலைமை தாங்க வந்துருக்கிங்களோ. இப்படி ஒரு கல்யாணத்தை ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரா நடத்தறது? உங்களுக்கென்ன நம்ப டிபார்ட்மெண்ட் பணக்காரங்களுக்கும் ரவுடிகளுக்கும் ஜால்ரா போட்றதுக்காகவே ஆரம்பிக்கப் பட்டதுங்கற நினைப்பா?''

-எஸ்.பியின் கேள்வி முன் இன்ஸ்பெக்டர் தலை குனிந்து போனது.

ஒரு அநியாயம் தவிர்க்கப்பட்ட காட்சியை ஊரே பார்த்து அதிசயித்துப் போகிறது. இதுவரையில் தியாகு என்பவனுக்கு எதிராக யாரும் சுண்டு விரலைக்கூட அசைத்ததில்லை. இபபோதோ ,எங்கிருந்தோ வந்த ஒரு மாணவப்படை அவனை போலீஸிலேயே பிடித்துக் கொடுத்திருக்கிறது ஆனால் எல்லாருடைய ஆச்சரியமும் சில வினாடிதான், தியாகு கர்ஜிக்கும் விதமாக பேசத் தொடங்கினான்.

''எஸ்,பி சார் இது கட்டாயக் கல்யாணம் இல்ல அந்தப் பொண்ணு விருப்பத்தோடதான் இதை செய்துக்கறேன். பட்ட நாயக்கர் விருப்பம் எதுவோ அதை நான் செய்துகிட்டிருக்கேன். எங்க அக்கா மனோன் மணிக்கு கொடுத்த வாக்கை நிறைவேற்றிகிட்டிருக்கேன். அக்கா மக ஜீவாவை என் வாழ்க்கைத் துணையா ஆக்கிக்க ஆசைப்பட்டேன் என் அக்காவுக்கும் அதுதான் ஆசை.

ஆனால் அது நிறைவேறலை. கருணாகரன்கற இந்த பைத்தியக்காரன் வந்து அதை கெடுத்துட்டான் இவனால ஜீவாவோட வாழ்க்கையே நாசமா போச்சு. அதனால தான் ஜீவா பரசுவை வெச்சுகிட்டா. ஜீவாவுக்கும் என்

சினேகிதன் பரசுவுக்கும் பொறந்தவதான் இந்த செண்பகம்.

பரசு தன் மகளை பட்டநாயக்கர் வம்சத்துக்குதான் தருவேன்னு சொன்னான். அந்த வம்சாவளியில இப்ப ஒரு ஆண் மக்களும் இல்லை. ஆனா அந்த வம்ச சொந்தமா நான் இருக்கேன். அதனால நான்தான் செண்பகத்தைக் கட்டிக்கணும்னு எழுதியே கொடுத்திருக்கான்.

-தியாகு பேசப் பேச கூட்டம் அதிர்ந்து போனது. எஸ்.பி.யே குலைந்து போனார். அதுவரை எதுவும் பேசாமல் மறைவாக இருந்தா உமா அவனது பேச்சால் வெறி பிடித்தவள் போல் உருமாறினாள்.

''டேய் இதே கோயில்ல பதினெட்டு வருஷத்துக்கு முந்தி நடத்தின நாடகத்தை இப்பவும் அப்படியே இழை பிசகாம நடத்தலாம்னு பார்க்கிறியா?''-கேட்டபடி அப்பொழுதுதான் தியாகு எதிரே வந்து நின்றாள்.

தியாகு உமாவைப் பார்த்து நிஜமாலுமே திணறிப் போனான். 'அதே முகம்...அதே உடல்...அதே பார்வை... அதே வசீகரம்!'

''என்னை தள்ளி விட்டு என் தலைல கல்லைத் தூக்கி போட்டு என் உடம்பை விட்டு உயிரை துரத்திட்டதால உன் இஷ்டப்படி எல்லாம் நடந்துடும்னு நினைக்கிறியா''

—அடுத்த கேள்வியில் ஆடியே போய்விட்டான்.

''நான் அப்ப செத்தது எந்த அளவு நிஜமோ அந்தளவு இப்ப திரும்பி பிறந்து வந்துருக்கறதும் நிஜம், எந்த பரசுவை நான் வெச்சிருந்தேன்னு சொன்னியோ அவனை பாம்பும் தேளும் பிடுங்கிக் குதறிடிச்சு அடுத்து நீதாண்டா பாக்கி.

என் வாழ்க்கையோட விளையாடினது பத்தாதுன்னு என் பொண்ணோட வாழ்க்கையோடயும் விளையாடப் பாக்கிறியா?''



-உமாவின் பேச்சு அவினாஷுக்கே ஆச்சரியம் தந்தது. தன் உடன் பிறந்த தங்கை இப்படி பூர்வஜென்ம நினைவுகளை சுமந்தவளாக இருப்பாள் என்று சற்றும் எதிர்பார்த்திராத நிலையில் அந்த நினைவுகளின் பின் புலத்தில் இப்படி ஒரு துயரக்கதையா?

செண்பகம் மண மேடையில் தனக்கு என்ன நடக்கும் என்பதே தெரியாமல் ஒரு புறாக்குஞ்சு போல் தவித்தபடி உட்கார்ந்து கொண்டிருக்கிறாள்.

-எல்லோரும் அவளை ஒரு பார்வையும், உமாவை மறு பார்வையும் பார்க்கின்றனர்.

—எஸ்.பி யிடம் குழப்பம் கட்டத் தொடங்கியிருந்தது.

அவினாஷை தனியாக அழைத்தார்.

''மிஸ்டர் அவினாஷ், இங்க பேசறத எல்லாம் கேட்டா எதை நம்பறது எதை விடறதுன்னே தெரியலை ஒரு கட்டாயக் கல்யாணம் நடக்குது. லோக்கல் போலீசும் அதுக்கு உடந்தை. நீங்க வந்தாதான் அதைத் தடுக்க முடியும்னு சொன்னதால நானே நேர்ல வந்திருக்கேன்.

இங்க இவர் என்னடான்னா இது எங்க குடும்ப விஷயம், அது இதுன்னு அளந்து விட்றார். அந்தப் பெண் என்னன்னா வாயைத் திறந்து எனக்கு இஷ்டமில்லைன்னு சொல்லாம அழுவுது. என்னதான் நடக்குது இங்க?''

-எஸ்.பி.யின் கேள்வி முன் அவினாஷுக்கே லேசா தலையை வலித்தது.

உமா உடனேயே செண்பத்தை நெருங்கினாள்.

''செண்பகம் நான் அம்மா சொல்றேன். இஷ்டமில்லைன்னு சொல்லு. இவன் நம்ப சொத்துக்காக

இப்படி ஒரு பாதகம் பண்றான். ஏமாந்துடாதே. இவன் உன் அம்மா என்னையே கதறக்கதற பழிபோட்டு கொன்னவன்

-நெருங்கிக் கதறியவளை செண்பகம் வெறிக்கிறாள்.

''நீ என் அம்மாவா?''-ஈன சுரத்தில் கேட்கிறாள்.

''ஆமா அம்மா! உன் அம்மா நான்தான்டா! நீ கதறக் கதற இதே மலைக்கோவில்ல அதோ அந்த பாறை மேட்டுல இருந்து இவனால தள்ளிவிடப்பட்டு செத்துப் போனவ நான்...''

உடல் அழிந்தாலும் உண்மை அழியலை. நினைப்பு அழியலை. உன்னை காப்பாத்தத்தான் நான் வந்துருக் கேன்.''

-எஸ்.பி.யே உமாவின் அந்த பேச்சைக்கேட்டு சிரிதது விட்டார். அவினாஷ் பக்கம் திரும்பி கேட்கிறார்.

''என்ன அவினாஷ் இது. உங்க தங்கைக்கு ஏதாவது பைத்தியமா, அம்மான்னு சொல்லி அந்த பெண்ணை இர்ரிடேட்பண்ணுது இது இருபதாம் நூற்றாண்டு அவினாஷ். நேததுகூட நம்ப ஹரிகோட்டாவுல ஒரு ராக்கெட் ஆகாசத்தை சுத்தத் தொட ங்கியிருக்கு. இந்தக் காலத்துலையா இப்படி ஒரு பேச்சு. உங்க சிஸ்டருக்கு ஏதாவது சித்த பிரமையா?''

''நோ சார்...நோ...உமா பேசறதெல்லாம் நிஜம். ஊரைக் கேளுங்க சொல்வாங்க.''

-எஸ்.பி.பார்வை உடனேயே சுற்றி இருப்பவர் களைப்பார்ததது. ஒரு வயதான கிழவி உடனே முன்வால் வநதாள. ''இது ஜீவா, செத்துப் ‍பான ஜீவா. மறு பிறப்பெடுத்து உமாவா வந்துருக்கா. எனக்கு அதுல சந்தேகமேயிலலை'' என்றாள்.



''வாட் நான்சென்ஸ் த்ஸ் ஃபர் ஆல் மறுபிறப்பு பூர்வஜென்மம்னு... நம்பற மாதிரி ஏதாவது சொல்லுங்க. எனக்கு இந்த கதை எல்லாம் வேண்டாம். கல்யாணம் நடக்கறதும் நடக்காததும் மணப் பெண் விருப்பத்துலதான் இருக்குது. வேற எதுல யும் இல்லை. நான் எதையும் நம்ப தயாரில்லை.

இந்தாம்மா பொண்ணு, உனக்கு இஷ்டமா இல் லையா...அழாம தெளிவா சொல்லணும்.''

எஸ். பி. அதட்டலாகக் கேட்ட கேள்வியைத் தொடர்ந்து செண்பகம் மிகவும் குழம்பிப் போனாள். இஷ்டம் இல்லைன்னு சொல்லவாய் வந்தது. ஆனால் தியாகு அதன்பின் என்ன செய்வானோ என்று நினைக்க பயம் வந்து வாயை மூடியது.

அவன் செய்த சித்ரவதைகளை நினைத்து அடி வயிற் றில் பயத்தால் பாம்பின் சுருளல்.

''கேக்கறோம்ல''—உக்ரமாக அதட்டியவர் முன்னால் அவள் மயங்கியே விழுந்து விட்டாள். அதைப் பார்த்து விட்டு

''எஸ் பி. ஐய்யா இது ஜீவாய்யா. ஜீவாவேதான் என்று ஒருவர் ஆவேசமாக முன் வந்தார்.

''நடக்கறது கட்டாய கல்யாணம்தான். எங்களுக்கு சந்தேகம் இல்லை. அடுத்தவங்க வீட்டு விவகாரம்னு நாங்க இனியும் வேடிக்கை பார்க்க விரும்பலை எப்ப ஜீவா தன் மகளுக்காக சொல்லிவச்ச மாதிரி இந்தமலைக் கோவிலுக்கு உமாங்கற இந்தப் பொண்ணா வந்துட் டாளோ அப்பவே அந்த ஆத்தா சக்தி எங்களுக்கு புரிஞ்சு போச்சு. இனியும் நாங்க நடக்கறதை பயந்து போய் வேடிக்கை பார்த்தா எங்களுக்குப் போற வழிக்கு புண் ணியமில்லையா! எங்க வீட்லயும் பொண்டு பிள்ளைகள்

இருக்காங்க. அவங்க நல்லா இருக்கணும்னா நாங்க இந்த அநியாயத்தை வேடிக்கை பார்க்கக் கூடாது''

இன்னொருவர் ஆவேசிக்கிறார்.

எஸ். பி. அனைத்தையும் கேட்டு அதிகபட்சம் குழம்பிப் போனார்.

அதுவரை எதுவும் பேசாமல் இருந்த மாணவர் கூட்டம் மெல்ல வாய் திறந்தது.

''எஸ் பி. சார். உங்களைவிட அதிகமா நாங்களும் குழம்பினோம். பூர்வஜென்மமாவது மறு பிறப்பாவதுன்னு கேலி பேசினோம். ஆன ஜீவாதான் உமாவா பிறந்து வந்தருக்காங்கறதை எங்க அனுபவத்தாலையும், அழகம்மை பாட்டி சொன்ன கதையாலையும் நாங்க ஒத்துகிட்டோம். நாங்க சொல்றதை தயவுசெய்து நம்புங்க.''

இது சங்கர நாராயணன்.

''சார் ராஜஸ்தான்ல கூட இதேமாதிரி ஒரு பூர்வஜென்ம கேஸ் சார். பேப்பர்ல நீங்க படிக்கலையா? ஒரு ராஜஸ்தானிக்கு மகளா பொறந்த பொண்ணு ஒண்ணு. அஞ்சாங்கிளாஸ் படிக்கும்போது இப்படி பூர்வஜென்ம நினைவால கவரப்பட்டு ஜெர்மன் பாஷையே பேசினாளாம். இப்ப அந்த பொண் உயிரோட இருக்கா. உலகத்துல இந்த மாதிரி நிறைய கேஸ் இருக்கு''

இது வைஜெயந்தி

எஸ் பி. உடனேயே சிலிர்ப்பிக் கொண்டு பதில் தந்தார்.

''லுக்...நீங்க பேசற விஷயங்கள் உண்மையா இருந்தாலும் சட்டத்துக்கு இதெல்லாம் துளிகூட பிடிக்காத விஷயங்கள். சட்டத்துக்கு நிதர்சனமான விஷயம்தான் வேணும். அமானுஷ்யமான விஷயம் இல்ல. அண்டர்ஸ்டாண்ட். யார் எவ்வளவு சொன்னாலும் நான் இந்த பூர்வஜென்மம் கத்திரிக்கா வெண்டக்காங்கறதை எல்லாம் ஒத்துக்க மாட்டேன்.''

எஸ். பி. யின் அந்த பதிலைத் தொடர்ந்து அனைவரையும் பின்தள்ளியபடி பாஸ்கர் முன்னால் வந்தான், ''சார் இவங்க ஜீவாதான்கறதை நிருபிக்க ஒருபெரிய சாட்சி இருக்கு. அதைக் காட்டினா ஒத்துப்பீங்களா?'' என்று கேட்டான்.

''இப்ப பிரச்சினை இவங்க ஜீவாவா உமாவாங்கறது கிடையாது. இந்த கல்யாணத்துல இந்தப் பெண்ணுக்கு இஷ்டமா இல்லையாங் கறதுதான்''

''வாஸ்தவம்தான். மணப்பெண் குழப்பத்துனாலையும் பயத்துனாலையும் மயங்கி இருக்கா. வந்துருக்கறது தன் தாய்னு தெரிஞ்சா நிச்சயம் தனக்கு இஷ்டம் இல்லைன்னு சொல்வா, அவளுக்கு தாயோட அன்பும் பராமரிப்பும் இப்ப ரொம்ப அவசியம்.''

''சரி, என்ன அந்த சாட்சி?''

''பட்டநாயக்கர் குடும்பத்தோட உயில் இருக்கற இடம் ஜீவாவுக்கு மட்டும்தான் தெரியும். வேற யாருக்கும் தெரியாது. அது மட்டும் இல்லை சார். பட்டநாயக்கர் குடும்பத்துக்கு சொந்தமான பலகோடி மதிப்புள்ள வைரக் கிரீடமும் ஜீவாவுக்குதான் எங்க இருக்குன்னு தெரியும். அதை இப்ப உமா எடுத்துதந்தா ஜீவாதான்னு ஒப்புக்கிறீங்களா?''

பாஸ்கரின் கேள்வி முன் எல்லோரையும் விட தியாகு தான் அதிகம் அலறித் துடித்தான்.

எஸ். பி. யென்ன ஒத்தக்கறது? நான் ஒத்துக்கறேன். அதை மட்டும் இந்த உமா எடுத்துக் கொடுக்கட்டும்.

தானே இந்த இடத்தைவிட்டு, இந்த பெண்ணை விட்டு தானா வெளிய போயிட்றேன்'' என்றான்.

பாஸ்கரின் பார்வை உமாவைப் பார்த்தது, உமா எல்லோரையும் பார்த்தாள். நேர் எதிரே கம்பீரத் தோற்றத்துடன் செண்பகதேவி. அவளை நோக்கிக் கை கூப்பினாள். கால் செருப்பைக் கழட்டி விட்டு சன்னதியை நோக்கி நடந்து கர்ப்பகிரகத்தை அடைந்தவள் மாடத்து விளக்கைப் பார்த்து அதைத் திருக அம்மன் விக்கிரகம் அசைந்து கொடுத்தது. எல்லோரும் வைத்த கண் வாங்காமல் பார்க்க உமா அசைந்து கொடுத்த விக்கிரகத்தின் கீழுள்ள படிகளில் ஏறி இறங்கத் தொடங்கினாள்.

பாஸ்கர் சன்னதி வாசலில் மிகமிக ஆவலாக அவளை எதிர்பார்த்துக் காத்திருக்க எஸ். பி.க்கு நெற்றியில் ஏகமாய நமைச்சல்.

மலையில் சுரங்கப்பாதை உண்டு ஆனால் எங்கே இருக்கிறது என்பது தெரியாத ஊருக்கு பாதையின் ஆரம்பம் இப்படி அம்பிகையின் பீடத்திலேயே இருக்கும் என்பது நெஞ்சைக் கவ்விய நிஜம்.

பட்டர் வெளியே கைகள் தாளமிட நிற்கிறார்.

ஆனால் தியாகுவோ துளிகூட பதட்டமில்லாமல் அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்தான்.

பல நிமிடங்கள் மௌனத்தில் கரைய உமாவின் தலை மெல்ல திரும்பவும் பீடத்தின் மேலே வெளிப்பட்டது. அவள் முகத்தில் அதிர்ச்சியின் ஒட்டு மொத்த குத்தகையும் அநியாயமானதொரு ஏமாற்றமும் பளிச்சென்று தெரிந்தது.

பாஸ்கர் பதட்டம் கரையாமல் கேட்டான்.

''உமா... என்ன இது வெறும் கையோட?''



''கீழ் சுரங்கப்பாதை அறையில ஒரு தூசு தும்பு கூட இல்லை பாஸ்கர். நாம பார்த்தபோது இருந்த எல்லாமே மாயமாக மறைஞ்ச மாதிரி இருக்கு.'' என்றாள் மிக மிக சோகமாக.

''என்னம்மா கண்ணு. இந்த கோயில்ல சுரங்கப் பாதை இருக்கறத எப்படியோ தெரிஞ்சுகிட்டு எங்க எல்லாரையும் டபாய்க்கலாம்னு பார்த்தியா? பட்டநாய்க்கர் எழுதின உயில், அத்தோட குடும்ப வைரக் கிரீடமும் எல்லாம் காலகாலமா என் கைல பத்ரமா இருக்கச்சே அதை நீ எப்படி எடுத்துத் தர முடியும்?

நீ நிஜமாலுமே ஜீவாவா இருந்திருந்தா இந்நேரம் அது பட்டநாய்க்கர் மாளிகைல லாக்கர்ல இருக்குங்கறது தெரிஞ்சு அங்க போகலாம்னு சொல்லியிருப்பே, இப்படி சுரங்கத்துக்கு இறங்கற மாதிரி இறங்க பூச்சியெல்லாம் காட்ட மாட்டே. நீ ஜீவா இல்ல. உமா! ஜீவாங்கற என் அக்கா மகளைப் பத்தி கேள்விப்பட்டு பட்டநாய்க்கர் சொத்தை பங்கு போட இப்ப எல்லாம் சதி பண்றே. உனக்கு ஒரு கூட்டமும் உடந்தை. உங்களைக் கண்டிக்க வந்த என் சிநேகிதன் பரசுவையும் கீழே தள்ளி பாம்பு களைக் கொத்த விட்டு சாமர்த்தியமாக கொன்னுபிட்டே.

நியாயப்படி பார்த்தா இப்ப கைது செய்யப்பட வேண்டியது உன்னைதான். இந்நேரம் முகூர்த்தம் முடிஞ்சு சாப்பாடு ஆகிவிட்டு இருக்கணும். கல்யாணத்தையும் இங்க வந்து கெடுத்துபிட்டே.

எஸ்.பி. சார் இதுக்கெல்லாம் உங்களோட பதில் என்ன?''

-தியாகு ஆவேசமாக பேசியபடி எஸ்.பி முன் போய் நின்றான். அவரிடம் திகைப்பு. ஊர் மக்களிடமும் அதே நிலை.

''இவன் விலாங்கு மீன். இல்லேன்னாதான் ஜீவாவை தள்ளி விட்டுக் கொன்ற அன்னிக்கே மாட்டியிருப்பானே'' —கூட்டத்தில் ஒருவர் இன்னொருவர் காதில் கிசுகிசுக்கிறார்.

''சண்டாளன் ஒழிஞ்சான்னு நினைச்சேன். கதையை இப்படி திருப்பிட்டானே. இவனுக்கு எதிரா பேசினவங்களை இனி என்ன பண்ணப்ப போறானோ.''

—ஆளாளுக்கு பிரஸ்தாபிக்க தொடங்க அவினாஷ் உமாவை எட்டினான்.

''உமா என்ன இது சொத்தோட உயிலும் வைர கிரீடமும் இருக்கற இடம் எனக்குமட்டும்தான் தெரியும்னு சொல்லிவிட்டு இப்ப இப்படி ஏமாந்து நிக்கறியே? என்ன பேசறோம், ஏது பேசறோம்கறதுல உனக்கே இப்ப பிரக்ஞை இல்லையா? எஸ்.பி. என்னை பார்வையிலேயே கடிக்கிறார் பார்.''

உமா எதுவும் பேசாமல் செண்பக தேவியின் பக்கம் திரும்பினாள். என்னை இங்கே கட்டி இழுத்து வந்து நிறுத்திக் கொண்டு இது என்ன சோதனை? என்று பார்வையாலயே கேட்டாள்.

''டேய் தியாகு... இனியும் என்னடா பேச்சு... கட்டுடா தாலியை—மத்த விஷயத்தை பின்னால பேசிக்கலாம்'' என்றபடி ருத்ரைய்யா தியாகுவை இப்போது முன்னிலே தள்ளி விட்டான்.

செண்பகமோ மயக்கம் தெளியாமலே கிடந்தாள்.

தியாகு தாலிக் கயிற்றோடு அவளை நோக்கி மேடை ஏற ஆரம்பித்தான். எஸ்.பி. முகம் அவனை வெறித்தது. ''மிஸ்டர் தூக்கத்துல, மயக்கத்துல இருக்கறவங்க கழுத்து தாலி கட்டுனா அது செல்லாதுங்கறது உங்களுக்கு தெரியுமா?''-என்று எதிர் கேள்வி கேட்டார்.



உடனேயே செண்பகத்தை மயக்கம் தெளிவிக்க எல்லோரும் படாதபாடு பட்டனர். ஆனால் செண்பகம் கண் விழிப்பதாகத் தெரியவில்லை.

தியாகு கைகளைப் பிசைந்து கொண்டான்.

''எஸ்.பி.ஐ. வெறித்தான்.

''தேவையில்லாம ஒரு சர்ச்சையை உண்டு பண்ணி என் கல்யாணத்தை கெடுக்க நினைச்சுட்டாங்க. நீங்களும் அதுக்கு உடந்தையாயிட்டீங்க... என்று அவரை நோக்கி குரலை ருத்ரப்படுத்தினான்.

ருத்ரைய்யா உடனேயே தியாகுவின் தோளை அழுத்தினான். ''தியாகு...இப்ப என்ன இன்னிக்கு இல்லைன்னா நாளைக்கு, நாளைக்கிலல நாளை மறுநாள் தாலிகட்டிட்டா போகுது. செண்பகத்துக்கு நீதான் மாப்ளை. இதுதான் விதி. ஏன் கவலைப்படறே. எஸ் பி. சார் அவர் டூட்டிய பாக்கறார். அதை குத்தம் சொல்லாதே...'' என்று எஸ். பிக்கும் ஆறுதலாகவே பேசினான்.

எஸ். பியின் கோபப் பார்வை இப்போது அவினாஷ் கணேஷ் பக்கம் திரும்பியது.

''ஒரு பொறுப்புள்ள பத்திரிகை ஆசிரியரா. நிருபரா இருந்துகிட்டு இப்படியா என் நேரத்தை வேஸ்ட் பண்ணுவீங்க. உங்களால ஒரு நல்ல காரியமேல்ல நின்று போச்சு...?'' எஸ். பி. யின் அந்த கோபப் பேச்சை கணேசன் பக்குவமாக எதிர் கொண்டார்

''சார்...அவசரப்பட வேண்டாம்! நேத்து ராத்திரி கூட உமா அந்த உயிலையும், வைர நகையையும் இந்த அம்மன் பீடத்துக்கு கீழே உள்ள சுரங்க அறைல பார்த்துருக்கா. அதுக்கு அப்புறமாதான் ஏதோ நடந்துருக்கு. ...இத்தனை வருஷமா வெளிய தெரியாம இருந்த அத இந்த தியாகுவுக்கு தெரிய வந்து அதை எடுத்துகிட்டான்.

இவன் சாதாரணமான ஆள் இல்ல. மகாமோசமானவன்''

''லுக்...சும்மா வளவளன்னு பேச வேண்டாம். சின்ன குழந்தைக்கு அம்புலிமாமா கதை சொல்ற மாதிரி இருக்கு'' உங்க பேச்சு. முதல்ல இந்த இடத்தை காலி பண்ணுங்க. முதல் தடவைங்கறதால உங்களை சும்மா விட்றேன்''—என்ற எஸ்.பி சவரிமுத்து தியாகு பக்கம் திரும்பினார்.

''மிஸ்டர் தியாகு. இந்த கல்யாணம் இனி தாராளமா நடக்கலாம். ஐ ஆம் வெரி சாரி...''-என்றபடி அங்கிருந்து நடக்கத் தொடங்கினார். நடையில் ஆவேசம் ஏமாற்றம் எல்லாம் தெரிந்தது.

எல்லோருமே இயலாமையில் வெறித்துப் போக உமாவின் கண்களில் நீர்தாரை! அவினாஷுக்கு பெரிதும் அவமானமாகிப் போனது.

மேடையிலோ செண்பகத்திடம் மெல்லிய மயக்கம் நீக்கம். ''உம் தூக்கி உக்கார வைங்க. மூஞ்சியில தண்ணி அடிங்க...''-ருத்ரைய்யா துரிதப்படுத்தினான்.

பட்டர் கேட்டார்.

''முகூர்த்த நாழி போயிடுத்தே...''

''இனி எங்களுக்கு வாழ் நாளெல்லாம் முகூர்த்தம் தான் ஐயிரே...''

''அடுத்த முகூர்த்தத்துல தாலி கட்டப்படாதோ?''

''இப்படியே பேசினா அடுத்த முகூர்த்தத்துல உமக்கு சமாதி கட்டும்படியாயிடும். ஏதோ சுரங்கப்பாதை இருக்கற வழியை கண்டு பிடிச்சு அடையாளம் காட்டுனவர்ங்கறதால உம்ம கிட்ட இந்த அளவு பேசிகிட்டிருக்கேன்.''-தியாகு பட்டரின் காதோரம் மெல்லிய மீசையை நீவியபடி பேசிவிட்டு உமாவை பார்த்தான்.



உமாவையும் அவனது நட்பு வட்டத்தையும் இப்போது அவனது ஆட்கள் வளைத்தபடி நின்று கொண்டிருந்தார்கள்.

அவினாஷும், கணேசனும் ஒரு கைதி போல தென்பட்டார்கள். ஊர்க்கூட்டத்திடம் மூச்சுவிடக் கூட சக்தியற்ற பயம். உமாவை ஜீவா என்று சாதித்தவர்கள் நடுங்க ஆரம்பித்திருந்தார்கள்.

லோக்கல் போலீஸ் இன்ஸ்பெக்டர் அதுவரை வாலறுந்த பல்லியாக தென்பட்டவர் புதிய தெம்போடு இப்போது நிமிர்ந்து விட்டிருந்தார்

தியாகுவை நெருங்கினார்.

சத்தமில்லாமல் செல்லமாகப் பேசினார்.

''யோவ் நல்லதுக்கு காலமில்லேங்கறது எவ்வளவு உண்மை பாத்தியா. நாமெல்லாம் அக்மார்க் திருட்டுப் பசங்க. நடக்கறது எல்லாம் நமக்கே சாதகமா முடியுது பார்த்தியா?

ஆமா எப்படிய்யா உயிலையும், வைரகிரீடத்தையும் கண்டுபிடிச்சே. இருபது வருஷமா இந்த மலையையே குடைஞ்ச ஆள் ஆச்சே நீ. அப்பல்லாம் கிடைக்காதது இப்ப எப்படிய்யா கிடைச்சுச்சு?''

''நேரம் தலைவரே, நேரம் நெஜமா கல்யாணத்தை மட்டும் இந்த மலைக் கோவில்ல வைக்காம கீழ மாளிகைல வெச்சுருந்தேன். இதெல்லாம் நடந்தே இருக்காது.

மலையையே குடைஞ்ச நான் செண்பக தேவியை மட்டும் குடையாம விட்டுட்டேன். அந்த கர்ப்பகிரகத்துல சுரங்கபாதை இருக்குன்னு இந்த மூளைக்கு எட்டாமப் போயிடிச்சு.

கடைசியில பார்த்தா பழம் நழுவி பால்ல விழுந்து அதுவும் நழுவி வாய்ல விழுந்த மாதிரி ஆயிடிச்சு. ஐயர் விளக்கை துடைக்கும் போது பீடம் ஆசைஞ்சு கொடுத்து

விஷயம் தெரிய வந்துருக்கு. இல்லேன்னா இந்நேரம் எஸ்.பி. முன்னால நம் மானம் கப்பலேறியிருக்கும்.

''ஆமா யார் இந்த பொண்ணு ஜீவான்னு ஊரே சொல்லுது. பொண்ணும் பாக்க அம்சமா இருக்காளே. இவ ஜீவாதானா என்ன.''

''அட ஏன் தலைவா நீங்களும் வெட்டிப் பேச்சு பேசிகிட்டு. நம்ம ஊர்ல நம்மளை பிடிக்காதவன் எவனோ இதைத் தூண்டி விட்டு கரெக்டா கல்யாணத்தை நிறுத்த ஏற்பாடு பண்ணிட்டான். இது அந்த ஜீவா மாதிரியே இருக்கு. அதுல எனக்கு சந்தேகமில்லை. ஜீவாவுக்கு தெரிஞ்ச ரகசியம் இதுக்கும் தெரிஞ்சுருக்கு. அதுலையும் சந்தேகமில்ல. ஒருக்கால் இது மறுஜென்மம் எடுத்து ஜீவாவாவே இருந்துட்டு போகட்டும். நமக்கென்ன?

எத்தனை ஜென்மம் எடுத்தாலும் இதுக்கு என்கிட்ட தோல்விதான் தலைவா...''

-தியாகு இன்ஸ்பெக்டரின் காதோரம் குசுகுசுத்துக் கொள்ள மணமேடையில் செண்பகம் தயாராகி விட்டாள். ருத்ரைய்யா தியாகுலை அழைக்கிறான்.

''வாப்பா தியாகு...மளமளன்னு தாலியைக் கட்...'':ராஜநடை போட்டு கிளம்பும் முன் இன்ஸ்பெக்டரிடம் கித்தாப்பாக பேசுகிறான்.

தலைவா...நா இனி சாராயம் காச்ச வேண்டாம். பிராத்தல வேலை பார்க்க வேண்டாம். சண்டித்தனமும் பண்ணவேண்டாம். பட்ட நாயக்கரோட ஆஸ்திபாஸ்தி அவ்வளவும் இனி எனக்கு. எனக்கே எனக்கு!

உயில்ல மனுஷன் தெளிவா எழுதி வெச்சிருக்கான். அந்த ஒரு வைரகிரீடம் போதும். உங்களைப் போல நூறு இன்ஸ்பெக்டரை நான் விலைக்கு வாங்கிடுவேன்.

என்ன...வாலிபத்துலயே வசப்பட வேண்டியது அரைக் கிழவானயிட்ட இந்த வயசுல வந்து சேர்ந்துருக்கு



ஒரு நிமிஷம் பொறுங்க. தாலியை கட்டிட்டு கோடீஸ்வரனா வரேன்.

ராத்திரிக்கு பார்ட்டி உண்டு. ஜமாய்க்கலாம்.''

பேசிவிட்டு ஓடினான். மண மேடை ஏறினான். கைவசம் மஞ்சள் தாலி. பலி ஆடு போல் மணமேடையில் செண்பகம். ஈரம் வறண்ட விழிகள். விதியின் கைப் பொம்மையாகி விட்ட விரக்தியில் என்ன நடக்கிறது என்கிற பிரக்ஞையே இல்லாமல்...

கூட்டம் மனதில் ஐயோ ஐயோ...என்று புலம்பினாலும் உதட்டில் மௌனம் சுமக்கிறது. உமா செண்பக தேவியை வெறிக்கிறாள்.

கால காலமாக நடக்கும் அக்கிரமங்களை வேடிக்கை பார்க்கவென்றே அவன் இருக்கிற மாதிரி மனதில் ஒரு சோர்வு...

தனக்குள் பூர்வஜென்ம நினைவுகளை நெருப்பாய் மூட்டி வேகமாக செயல் பட வைத்து, இப்போது கையாலாகாதவனாக ஆக்கிவிட்ட கொடுமைக்குஏதாவது செய்ய அவள் மனது துடிக்கிறது.

குழந்தையாய் கதறக்கதற அவளைவிட்டு பிரிந்த கொடுமையைவிட இந்த முரண்பட்ட கல்யாணத்தில் கண் எதிரே அதை வேடிக்கை பார்ப்பது சகிக்க முடியாத ஒன்றாக இருக்கிறது பக்கத்திலேயே கருணாகரன்.

அன்று சந்தேகப் பிசாசால் பைத்தியம் ஆனவன். இன்றும் அந்த பைத்தியம் தெளியாமல் வேடிக்கை பார்க்கிறான்.

உமா கருணாகரனை நெருங்கி கத்துகிறாள் ''என்னங்க...போய் அவனை தடுத்து நிறுத்துங்க. நடக்கற அநியாயம் நம்ம பொண்ணுக்குங்க...''—தொண்டை வறள கத்துகிறாள்.

மேடையிலே தியாகுவின் தாலிக்கயிற்றுக் கைகள் செண்பகத்தின் கழுத்தை நெருங்கி விட்டது.

முடிச்சு போட அவன் விரலை அசைத்த போது எங்கிருந்தோ பலத்த சப்தத்தோடு ஒரு தோட்டா வந்தது. அது அவன் தோள்பட்டையை திருக்கியபடி உள்ளே நுழைந்து அவனை அலற விட்டது

அடுத்தடுத்து இரண்டு மூன்று என்று தோட்டாக்கள்... ஒன்று கழுத்து, மற்றொன்று இடுப்பு என்று பாய்ந்தாலும் ஒன்று மட்டும் நெற்றிப் பொட்டை திருகிக் குடைந்து விட்டது.

அந்த மலைக் கோவிலின் வெளியே ஜீவா எந்தப் பாறை மேலிருந்து கீழே விழுந்தானோ அதே பாறை மேலே நீண்ட குழல் துப்பாக்கியோடு ஒரு பெண்.

சற்று உற்றுப் பார்த்த போதுதான் தெரிந்தது அது தியாகுவின் முதல் மனைவி மீனாட்சி...

கண்களில் அனல் பறக்க ஆவேச கதியோடு தியாகுவின் வேட்டைத் துப்பாக்கி சகிதம் கண்ணகி போல் தெரிந்தவளை கூட்டமே பார்த்து விதிர்க்க மலைப்படிகளில் சப்தம் கேட்ட அதிர்வினால் வேகமாக திரும்பி வந்து கொண்டிருந்தார் எஸ்.பி சவரிமுத்து.

மீனாட்சியின் கால் மாட்டில் ஒரு சூட்கேஸ். சூட்கேஸை எடுத்துக் கொண்டு துப்பாக்கியை தூக்கி எறிந்தவள் சலனமில்லாமல் நடந்து வருகிறாள்

மணமேடையில் தியாகு ரத்தத் தோய்ப்பில் விறைத்த சவமாகிவிட்டிருந்தான். கூட்டத்திடம் நரம்பறுந்த மாதிரி ஒரு விதிர்ப்பு.

சூட்கேஸுடன் உமாவை நெருங்கியவள் அதை திறந்து அவள் எதிரே நீட்டியபோது அதில் வைர கிரீடமும் உயிலும் பளபளத்தன.

"உமா, நீ ஜீவாதான். எனக்கு அதுல சந்தேகமல்ல. இந்த உயிலும் கிரீடமும் இன்னிக்கு காலை வரை எங்க இருக்குன்னு என் வீட்டுக்காரருக்கு தெரியாது.



கோயில் பட்டர் சன்னதிக்குள்ள விளக்கை துடைக்கும் பாதுதான் விஷயமே தெரிய வந்தது அதன் பிறகு இது ன் வீட்டுக்காரர் கைக்கு வந்து சேர்ந்துடிச்சு.

ஒரு பெண்ணுக்கு கல்யாணம் பண்ணி வைக்க வேண்டிய வயசுல இன்னொரு பொண்ணுக்கு தாலி ட்டிய கொடுமையை எந்த பொண்ணும் ஜீரணிக்க முடியாது.

இவன் அரக்கன் எந்த வேண்டுகோள்களாலையும் அறிவுரையாலையும் திருத்தம் பெற முடியாத அரக்கன்.

துவம்சம்தான் இவங்களுக்கு முடிவு, வதம்தான். இவங்களுக்குத் தீர்வு.

அதை யார் செய்யறதுங்கற குழப்பத்தாலதான் இருபது வருஷமா இவன் உயிரோட இருக்க முடிஞ்சது. இவனுக்கு கழுத்தை நீட்டின பாவத்துக்கு நானே இதைச் செய்துட்டேன்..."

—அவள் பேசப் பேச உமா விக்கித்துப் போனாள். செண்பகம் எழுந்து வந்து உமாவை அண்டிக் கொண்டு நின்றாள்.

திரும்பி வந்த சவரிமுத்து மீனாட்சியின் பேச்சால் அப்படியே பிரமித்து போய் விட்டிருந்தார்.

"இனியாவது பட்டநாயக்கர் குடும்பம் துலங்கட்டும். கருணாகரனோட பைத்தியம் தெளிய வேண்டிய ஏற்பாடு செய்யுங்க. செண்பகத்துக்கு நல்ல இடத்துல மாப்பிள்ளை பாருங்க...

தர்மத்துக்கு கடைசி நிமிஷத்துல கூட ஜீவன் வந்துடும்கறது நம்ம மூலம் உலகத்துக்கு தெரியட்டும்..."

—மீனாட்சி பேசிக்கொண்டே போகிறாள். எல்லோரும் வாயடைத்து வேடிக்கை பார்க்கின்றனர்.

கணேசன் நடந்த அனைத்தையும் தனது வாரப் பத்திரிகையில உகந்த சாட்சியங்களோடு கட்டுரையாக

எழுத, அவினாஷ் அதை எடுப்பாக வெளியிட, பெரிய பரபரப்பை மூட்டியிருந்தது அந்த பூர்வஜென்ம வரலாறு.

உமா இப்போது வேலமங்கலத்தில்தான் இருக்கிறாள் பட்ட நாயக்கர் மாளிகை அவளை உமாவாகப் பார்க்காமல் ஜீவாவாகவே பார்க்கிறது. செண்பகம் உமாவை அம்மா என்று அழைப்பது உருவத்திற்கு பொருத்தமாக இல்லாவிட்டாலும் உள்ளத்திற்கு மிக பொருத்தமாக உள்ளது.

கருணாகரனும் தேறி வருகிறார்.

செண்பக தேவி மலைக் கோவிலில் மூணு காலமும் இப்போது பூஜை நடக்கிறது. வழக்கம் போல் கூட்டம்.

உமாவால் இன்று புது பிரசித்தி பெற்ற ஆலயமாகி விட்டது.

உமாவை பேட்டி காண மேல் நாட்டில் இருந்தெல்லாம் நிருபர்கள் வருகிறார்கள்.

உமாவை நட்பு வட்டத்தில் பாஸ்கர் மட்டும் அவள் காதலை இழந்து விட்டதுபோல் சோகமாக இருக்கிறான். மாமன் மகன் ராகவ் அதைவிட சோகமாக உள்ளான்.

''உமா உன் எதிர்கால திட்டம் என்ன?''

ஒருநாள் இப்படி கேட்டும் விட்டான்.

''என் கணவரோட தெளிவு என் குழந்தையோட கல்யாணம்...''-என்று துளியும் பதட்டமின்றி அவள் கூறுகிறாள்...

உலகின் அதிசயங்களில் நானும் ஒருத்தி என்று கூறாமல் கூறிச் சிரிக்கிறாள் உமா.

முற்றும்

24186
4097938